

ய்ந்த
லவு
ஜய்சக்தி

# கண்ணுக்கு
# பாய்ந்த நி



1

நல்ல கூட்டம்!

அருமையான வரவே

நகர முடியாமல்
தமிழ்மதி.

''சார்! ஒரே ஒரு
என்று நின்றாள் அந்தப்

கிட்டத்தட்ட அ
குறையாக.

ஒரு நிமிடம் அவன் உடம்பு விரைத்

'இடிக்காமல் நிற்கக் கூடாதா?' என்று

''மேடம்! நான் ஒரு முக்கிய வி
போயிட்டிருக்கேன். இன்னொரு சமயம்

அந்தப் பெண் நகர்வதாயில்லை!

கோபத்தை அடக்கிக் கொண்டு கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டு உதவியாளனைத் தேடினான். அவன் சற்றுத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தவன், தமிழ்மதியின் கோபப் பார்வையைக் கண்டு உடனே ஓடி வந்தான்.

வழி ஏற்படுத்திக் கொடுத்து உள்ளே அழைத்துப் போனான்.

''ஏண்டி! நளினி... அந்த ஆள் மேலே இப்படி விழுந்து புடுங்கறீங்க! அவரும் நம்மைப் போல மனுஷன்தானே...!'' என்று சங்கீதம் பாடியது ஒரு குரல்.

தமிழ்மதி நின்றான்.

திரும்பிப் பார்த்தான்.

இரண்டு பெண்கள் சிரித்துக் கொண்டே நகர்வதைப் பார்த்தான்.

எந்தப் பெண்ணின் குரல் அது என்று தெரியவில்லை.

சிரித்துக் கொண்டான்.

வேகமாக முன்னேறிப் போனான்.

நாடறிந்த எழுத்தாளன்.

ஜிப்பா, தாடி இல்லாமல், 'நான் வித்தியாசமானவன் பார்!' என்ற பார்வை தெரியாத இலகுவான நடை! எளிமையும் இயல்புமான தோற்றம்.

முழுக்கைச் சட்டை! பாண்ட் அணிந்திருந்தான். சுருள் முடி! ஆனால் அதையும் கூட மிரட்டி அடக்கி வைத்திருந்தான் போலும். பாவம்! தேமே என்று படிந்து கிடந்தது.

சிவப்பென்றும் சொல்ல முடியாது! கறுப்பென்றும் சொல்ல முடியாது! இரண்டுக்கும் இடைப்பட்ட நிறம்.



அரும்பு மீசை!

கையில் ஏதோ ஒரு வாரப் பத்திரிகையைச் சுருட்டி மடித்து வைத்துக் கொண்டிருந்தான்.

அலட்டிக் கொள்ளாத நடை.

பார்த்தால் நடையில் வேகம் தெரியவில்லை. ஆனால் கூட அந்த உதவியாளன் ஓடுகிற வேகம் பார்த்தால்தான் தமிழ்மதியின் நடையின் வேகம் புரிந்தது.

அது ஒரு சமூக இலக்கிய அமைப்பின் கூட்டம்.

தமிழ்மதியை உரையாற்ற அழைத்திருந்தார்கள். அவனுக்கென்று ஒரு பெரிய வாசகர் கூட்டமே இருந்தது.

படிக்கிறவர்கள் தாங்களே அந்தப் பாத்திரமாய் மாறிப் போகிற அளவுக்குக் கதைகள் எழுதுவான்.

காதல் கதைகள் என்றால் அதில் காதலைப் பிழிந்தெடுத்து விடுவான்!

தமிழ் நாவலாசிரியர்கள் தொடாத பல பக்கங்களை அவன் தொடுவான்.

துப்பறியும் கதை எழுத வராது என்று அவனைப் பற்றி யாரோ சொன்னார்கள். அந்த வீம்புக்காகவே ஒரு நாவல் எழுதினான். அதை ஒரு தொடர்கதையாகப் போட்டார்கள். அந்தப் பத்திரிகை விற்பனை பிய்த்துக் கொண்டு போனது. ஆனால் அவர்களே மறுபடியும் கேட்டபோது, இரண்டாவது ஒரு கதை எழுத மறுத்து விட்டான்.

சொல்லவே முடியாது!

திடீரென்று ஒரு நாள் அதே பத்திரிகை ஆபீஸுக்கு போன் செய்து.

''ஹலோ! நான் ஒரு துப்பறியும் கதை கொடுக்கிறேன்! போடறீங்களா?'' என்று கேட்பான்.

அப்படியொரு சந்தர்ப்பத்துக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தாற் போல 'லபக்'கென்று வாய்ப்பைப் பற்றிக் கொள்வார்கள்.

போன மாசம்தானே நிர்த்தாட்சண்யமாக. முகத்தில் அறைந்தாற் போல,

''என்னைத் தொந்தரவு செய்யாதீங்க!'' என்று சொன் னான் என்று அவர்களும் நினைக்க மாட்டார்கள். அவனும் அது பற்றிப் பேச மாட்டான்.

''தமிழ்மதி... தானே! காட்டாற்று வெள்ளம் மாதிரி!'' என்று சமாதானம் செய்து கொள்வார்கள்.

''உனக்கும் மூக்குக் கிடையாது. அவர்களுக்கும் மூக்கே கிடையாது!'' என்பான் உதவியாளன் என்ற பெயரில் உடன் ஒட்டிக் கொண்டிருக்கும் விஜயன்.

''ஏன்ப்பா! எத்தனை நல்ல வேலையெல்லாம் கிடைச்சது! போக மாட்டேங்கறே...!'' என்று தமிழ்மதி கேட்டால் விஜயன் சிரிப்பான்.

''என்ன செய்யறது! தமிழ்மதியோட அருகாமைக்கு, அடிக்ட் ஆயிட்டேன்!'' என்று சிரிப்பான்.

தமிழ்மதி தனிக்கட்டை.

இருபத்தாறு வயதைத் தாண்டியிருந்தான்.

எப்போதும் சர்ச்சைகளுக்குள் சிக்கிக் கொள்வது அவன் வழக்கம்.

சூடான சர்ச்சைகள் அவனைச் சுற்றி நடந்து கொண்டிருக் கையில் கையிலே ஒரு கண்டல் பொட்டலத்தை வைத் துக் கொண்டு காலை நீட்டிக் கொண்டு கடற்கரையில் அமர்ந்தபடி கடலலைகளை ஆழமாய் ரசித்துக் கொண் டிருப்பான்.

Uploaded by Naghu



அதுவும் நள்ளிரவில்!

நினைத்தால் நினைத்தபடி!

பணத்தைச் சேமித்து வைத்துக் கொள்ளும் பழக்கமே யில்லை!

எந்தப் பதிப்பகத்தில் அவன் பேரைச் சொன்னாலும் பணம் கொடுத்து விடுவார்கள். ஆனால் கேட்க மாட்டான்!

விஜயன்தான் பார்த்து முயற்சி செய்து அவன் பெயரில் இன்ஷ்யூரன்ஸ், மெடிக்ளெயிம் என்று ஏதாவது செய்து கொண்டிருப்பான்.

விஜயனுக்கு அழகான ஒரு மனைவி! மூன்று வயதில் ஒரு குழந்தை! பெண் குழந்தை! தமிழ்மதியும், விஜய னும் பத்திரிகையாளர்களுக்கான குடியிருப்பில் இருந் தார்கள்.

அருகருகில்.

அதனால் பெரும்பாலான சமயங்களில் தமிழ்மதிக்கு விஜயன் வீட்டிலிருந்து தேவையான உணவு வந்து விடும். அல்லது வெளியில் பார்த்துக் கொள்வான்.

உணவைப் பொறுத்தவரை அவன் பெரிதாகக் கவலைப்படுவதே யில்லை. ஏன், எதைப் பற்றியுமே பெரிதாக அவன் கவலைப்படுவதில்லை.

கிடைத்த நேரம் கிடைத்ததைச் சாப்பிட்டுக் கொள்வான்.

ஒரே ஒரு ஏர் பேக். அதில் தேவைக்கான இரண்டு மூன்று செட் டிரஸ்கள். கையில் கொஞ்சம் பணம். டெபிட் கார்டு என்று கிளம்பினால் போதும், ஊர் உலகமெல்லாம் சுற்றி விட்டு வந்து விடுவான்.

வாழ்க்கையை ரசிப்பான்!

சுற்றுப்புறத்தை ரசிப்பான்!

பட்டாம்பூச்சியை, காட்டுக் குருவியை, அடிக்கடி கூவுகின்ற ஒற்றைக் குயிலை, எவ்வளவுதான் தள்ளி ஒழுங்கு படுத்தினாலும் அடங்காத முன் நெற்றி முடியை, எல்லாவற்றையும் ரசிப்பான்.

பொதுவாகவே எழுத்தாளர்கள் கவிஞர்கள் எல்லாரும் உணர்ச்சி மயமானவர்களாக இருப்பார்கள். சாதாரணமாக வாழ்க்கைக்கு மற்றவர்கள் வைத்திருக்கிற அளவுகோல் அவர்களுக்குக் கிடையாது.

எல்லாரும் பணம், பாதுகாப்பு, சொத்துகள் என்று ஓடிக் கொண்டிருக்கையில், அதைப் பற்றி யெல்லாம் கவலைப் படாமல், வாழ்க்கையை அணு அணுவாக ரசித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பான்.

பெரும்பாலான சமயங்களில் புலமைக்கும் வறுமைக் கும் நெருங்கிய தொடர்பு இருக்கும். ஆனால் தமிழ்மதி அந்த விஷயத்தில் கெட்டி.

தனக்குத் தேவையான அளவுக்கு வைத்துக் கொள் வான். அதற்கு மேல் தனக்குக் கிடைத்தால் விஜயன் பொறுப்பில் விட்டு விடுவான். விஜயன் அதை முறை யாகப் பராமரிப்பான்.

வங்கிக் கணக்கொன்று தமிழ்மதியின் பேரில் ஏற் படுத்திப் போட்டு வைத்திருப்பான். தனக்கென்று மாதம் ஒரு சம்பளம் எடுத்துக் கொள்வான். மற்றப்படி ஏதாவது நல்ல காரியத்துக்குக் கொடுக்க வேண்டியென்றாலும் கொடுப்பான்.

தமிழ்மதிக்குத் தெரிந்தும், தெரியாமலும் அவனுக் கென்று சிறிய அளவில் டெபாசிட்டுகளும் சொத்துக் களும் வாங்கி வைத்திருந்தான்.



"மதி... எங்கயாவது போறதுன்னா... சொல்லு..! நானும் கூட வர்றேன்," என்பான் அக்கறையாக.

"வேண்டாம்! அப்புறம் எனக்குக் கிடைக்க வேண்டிய அனுபவம் கிடைக்காமப் போயிடும்," என்பான்.

"அப்படியில்லடா! சில சமயங்கள்ல நீ ரொம்ப அப்நார்மலா பிஹேவ் பண்றியோன்னு தோணுது. எதுக்கும் நான் கூட இருந்தா?"

"எதுடா... அப்நார்மல் பிஹேவியர்! என்னால யாருக் காவது தொந்தரவு இருக்கா?"

"அதில்லடா... விஷயம்! நீ சாதாரண ஜனங்களோட ஈஸியா கலந்துக்கறே! உன்னால யாருக்கும் தொந்தரவு இல்லே! ஆனா... உன்னால உனக்கே தொந்தரவு வரும்னு எனக்குத் தோணுது. என்ன, நீ உன்னைப் பத்திக் கேரே பண்றதில்லே. அதானே பிரச்சினை!" என்றான் விஜயன்.

குரலில் உண்மையான அக்கறை தொனித்தது.

தமிழ்மதி சிரித்துக் கொள்வான். மறுத்துப் பேச மாட் டான். ஆனால் அடுத்த முறை கிளம்பும்போது, சொல் லாமல்தான் கிளம்புவான். ஆனால் சமீப காலத்தில் தமிழ் நாட்டுக்குள் அவனால் அப்படியெல்லாம் சுற்ற முடிய வில்லை.

ஏதோ ஒரு விஷயம் பற்றி எக்கச் சக்கமாக விமர்சித்து எழுதி விட்டான். அதனால் ஒரு கட்சிக்குக் கோபம் ஏற்பட்டுத் தாக்குதல் முயற்சி நடந்து லேசான அடியும் பட்டு விட்டது. ஆனால் அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் அவன் வாசகர்கள் கொதித்தெழுந்து போராட்டம் நடத்த, எதிர்க்கட்சிகள் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்க, ஒரே களேபரம் ஆகிவிட்டது.

Uploaded by Naghu

அலட்டிக் கொள்ளாமல் அவன் கடைசியில் சொன்னான்.

"விமர்சனங்களைத் துணிவாகக் கொடுக்கிற எழுத்தாளர்கள் இந்த நாட்டின் வரம். ஆனால் விமர்சனங்களை எதிர் கொள்ள முடியாத ஆட்சியாளர்கள் இந்த நாட்டின் சாபம்!" என்று.

எப்படியோ எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் அவன் ஒரு தவிர்க்க முடியாத எழுத்துச் சக்தி என்று புரிந்து போனது. அதனால் முடிந்தவரை அவனைக் கிண்ட மாட்டார்கள்.

இத்தனைக்கும் தமிழ்மதி எப்போதாவதுதான் அரசியல் பற்றி எழுதுவான். அவனது கவனமெல்லாம் சமுதாயப் பிரச்சினைகள் மீதுதான்.

தனி மனிதர்களைச் சிந்திக்கச் செய்வதுதான் அவனது நோக்கமாக இருக்கும்.

நண்பர்களிடம் சொல்வான்: "கட்சிகள் நம்மைக் கைவிட்டு விட்டன. ஆட்சியாளர்கள் தங்களை மட்டுமே பார்க்கிறார்கள். அரசு அதிகாரிகள் தங்களை மட்டுமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அதனால்தான் தனி மனிதர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள எழுதுகிறேன்," என்று.

பொறுக்க முடியாத நேரங்களில் அவனது எழுத்து கத்தி போலப் பாயும் பொழுது, அதைத் தாங்கிக் கொள்கிற சக்தி எதிராளிகளுக்கு இல்லாமல் போய் விடும்போது, ஒரு சின்னப் பிரளயம் நிகழும்.

சக எழுத்தாளர்கள் கூட, "அவரா... அந்த ஆள் கிட்டே பாத்துப் பேசணும். இல்லாட்டி எதுலயாவது இழுத்து விட்டுடுவாரு...!" என்பார்கள். இத்தனைக்கும் இனிமையாகப் பழகுவான்.



எல்லாக் கோபத்தையும் எழுதும்போது மட்டுமே கொட்டுவான். ஆனால் யாரைத் தாக்குகிறோம் என்பதைப் படிக்கிறவர்கள் புரிந்து கொள்கிற மாதிரிச் செய்து விடுவான்.

"எதற்காக என் பின்னாலே சுற்றுகிறீர்கள்? உங்கள் நேரம் பொன்னானது. என் எழுத்தைப் படிக்கிறீர்களா! அதில் ஏதாவது நல்லது இருந்தால் அதைப் பற்றிச் சிந்தியுங்கள். அதை விட்டு விட்டு ஏன் இப்படிப் பின்னாலே அலைகிறீர்கள்? மன்றம் வைக்கிறீர்கள்?" என்று சாடி விடுவான். ஆனாலும் தமிழ் நாட்டு மக்கள் என்னமோ அவனைச் செல்லப் பிள்ளையாக வைத்துக் கொண்டார்கள்.

மிகவும் நேசித்தார்கள்.

தமிழ் நாட்டு மக்களுக்கு நல்ல படங்களை ரசிக்கத் தெரியவில்லை என்பான். ஆனால் கதை எழுதும்போது அவனது தளம் வேறு மாதிரியாக அமையும்.

இலகுவாக எழுதுவான்.

காதல் கதைகளை எழுதும்போது பத்து முறை காதலித்தவன் போல எழுதுவான். பெரும்பாலும் சமுதாயப் பிரச்சினைகளை வைத்து எழுதுவான்.

இன்னொரு முக்கியமான விஷயம். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுத மாட்டான். ஆனாலும் கதையைக் கொண்டு போகிற விதத்தில், கருத்துகளை வைக்கிற விதத்தில், அவனுக்கு நிறையப் பெண் வாசகர்கள் இருந்தார்கள்.

குமுதினியின் தோழி கூட அப்படித்தான்.

"உனக்குப் பிடிக்கலேன்னா... விடுடி... குமுதினி! அந்த எழுத்துல ஒரு மாயக் கவர்ச்சி இருக்கு...! கையில எடுத்துப் பாரு...! கீழே வைக்கவே முடியாது..." என்பாள்.



Uploaded by Naghu

குமுதினியும் அதை ரசித்துக் கொள்வாள். ஆனால் தமிழ்மதியைப் பற்றி அவளுக்கென்று சில கருத்துகள் இருந்தன. அவை பெரிதும் அப்படி நல்ல கருத்துகள் அல்ல. அவை பற்றி அவள் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவும் மாட்டாள். ஆனால் துர்காவுக்குத் தெரியும்.

குமுதினியின் வாயில் இருந்தே தமிழ்மதியைப் பற்றிய அவளுடைய கருத்துகளை வரவழைக்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சிப்பாள். ஆனால் குமுதினி லேசில் வாய் திறக்க மாட்டாள்.

''நான்... அந்த எழுத்தாளரைப் பற்றி என்னவோ நினைச்சுட்டுப் போறேன்.. உனக்கு அவரோட எழுத்து புடிச்சிருக்கா... சந்தோஷமாப் படி! நானும்தான் அவரோட எழுத்தைப் படிக்கறேன்,'' என்பாள்.

''நீ எதுக்குப் படிக்கறே? விமர்சனம் பண்றதுக்குப் படிக்கறே!'' என்பாள் துர்கா, முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டு.

இலக்கியக் கூட்டம் முடித்து விட்டு வெளியே வந்தான்.

தமிழ்மதி இப்போது அவசரமாக வானொலி நிலையம் ஒன்றுக்குப் போய்க் கொண்டிருந்தான். அதில் அவனைப் பேட்டி காண இருந்தார்கள்.

வானொலி நிலைய இயக்குநர் அவனுடைய நண்பர். தேர்ந்த இலக்கியவாதியான அவருடைய அன்புக்குக் கட்டுப்பட்டு அந்தப் பேட்டிக்கு ஒத்துக் கொண்டிருந்தான்.

அவசர அவசரமாகப் போய் ஸ்டுடியோவுக்குள் நுழைந்தான்.



கேள்வி பதில் வேறு நேரலை முறையில் ஒலிபரப்பாக இருந்தது.

''கொஞ்சம் பாத்துப் பதில் சொல்லுங்க...'' என்று வேண்டிக் கொண்டிருந்தார் நிலைய இயக்குநர்.

தன்னுடைய பதில்களில் எதும் வம்பு வராமல் இருக்க வேண்டுமே என்று யோசித்துக் கொண்டே அவன் முழுக்கைச் சட்டையை மடித்துக் கொண்டு அமர அது வேறு விதமாக வந்தது.

கூட இருந்து கேள்வி கேட்கவென்று ஒரு பெண் வந்தாள்.

அவன் ஒரு நிமிடம் துணுக்குற்றான். வந்தவள் இன்று சற்று நேரத்துக்கு முன் பார்த்தானே, அந்த இரண்டு பேரில் ஒருத்தி...

Uploaded by Nagnu



# 2

நிலைய இயக்குநர் முன்பே அவனிடம் கேட்டார். ''சார்! கேள்விகள் எல்லாத்தையும் முன்கூட்டியே கொடுத்தர்லாமா... எப்படி?'' என்று.

தமிழ்மதி அதற்குச் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

''முன் கூட்டியே தயாரித்த பதில்கள்ல எவ்வளவு தூரம் உண்மை இருக்கும்னு தெரியலை! உடனடியாப் பதில் சொன்னாத்தான் உள்ளத்திலிருந்து வரும்,'' என்று.

அவன் இப்படித்தான் பதில் சொல்லப் போகிறான் என்று அவருக்குத் தெரியும். இருந்தாலும் கேட்டு விடுவோம் என்பதற்காகத்தான் கேட்டார்.

இடையிடையே வாசகர் கேள்வி. நடுநடுவே தொகுப்பாளினியின் கேள்வி என்று நிகழ்ச்சியை அமைத்துக் கொள்வதாக ஏற்பாடு.

வெறும் உரை மட்டுமேயாக இருந்தால் ஸ்டுடியோவில் பேசும்போது குழறினாலோ, உளறினாலோ திருத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆனால் இந்த மாதிரி ஒரு பேட்டியில் அதற்கெல்லாம் வாய்ப்புகள் இல்லை. என்றாலும் நிகழ்ச்சி நன்றாகவே போகும் என்று இயக்குநர் நம்பினார்.

தொகுப்பாளினி குமுதினி நிகழ்ச்சியைப் பற்றி அவரிடம் விளக்கினாள். குரலைக் கேட்டபோது, இந்தப் பெண்தான் தன்னைப் பற்றி அப்படிப் பேசியிருக்கிறாள் எனப் புரிந்து கொண்டான். உள்ளே ஒரு கோபம் கிளம்பியது. உடனே மற்றொரு மனது கேட்டது.

"ஏன்... அவள் சொன்னதில் என்ன தவறு? நானும் சாதாரண மனிதன்தானே! அதைத்தானே அவள் குறிப்பிட்டுச் சொன்னாள். எத்தனையோ முறை, "என் பின்னால் வராதீர்கள்! உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்," என்று தானே சொன்னதில்லையா என்று எண்ணிக் கொண்டவுடனே கோபம் அடங்கியது.

லேசான புன்னகை முகத்தில் இழையோடியது. அவனது அந்தப் புன்னகைக்கு அர்த்தம் புரியாத குமுதினி ஒரு கணம் வியப்பாகப் பார்த்தாள்.

லேசாக இமைகள் படபடக்க, அவள் பார்த்த விதம் அவனுக்குள்ளும் ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது போலும்.

"என்ன மேடம்?" என்று கேட்டான்.

Uploaded by Nagnu



"சார்..! ஒன்றுமில்லை.. சார்! நிகழ்ச்சியை ஆரம்பிக்கலாமென்று..." என்றாள்.

"ஓ! ஆரம்பிக்கலாமே...!" என்றான்.

குமுதினி அழகாக ஆரம்பித்தாள். தங்கு தடையில்லாமல் இயல்பான தமிழில், ஆங்கிலம் கலந்து கொச்சைப் படுத்தாமல், தெளிவாக அவன் கேள்விகளை எதிர் கொண்ட விதத்தை அவள் ரசிக்கவே செய்தாள்.

குமுதினியும் நன்றாகவே செய்தாள். "அப்படியா? சரி...! கேள்வியைச் சுருக்கமாகக் கேக்கறீங்களா!" என்று வழி நடத்திய விதமும் சில பேர் கொஞ்சம் அதிக நேரம் எடுத்துக் கொண்டு வளவளவென்று பேசுகையில், "நிறைய பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்," என்று அவர்களை லாவகமாகத் தவிர்த்து விட்டு, அடுத்தவருக்கு வாய்ப்புக் கொடுத்த விதமும் ஆக எல்லாமே நிகழ்வை வெகு நேர்த்தியாகக் கொண்டு போகின்றன என்று அவன் புரிந்து கொண்டான்.

அவனும் ஒத்துழைக்க ஆரம்பித்தான்.

"என் சார்! நீங்க அணுகுவதற்கு ரொம்பக் கஷ்டமான ஆள், 'வெடுக் வெடுக்'கென்று பதில் சொல்வீங்கன்னு சொல்றாங்களே... அப்படியா?" என்று ஒரு வாசகர் கேட்டபோது, குமுதினியே கொஞ்சம் அதிர்ந்துதான் போனாள். எங்கே கோபம் கொண்டு எழுந்து போய் விடுவானோ என்று கவலையோடு பார்த்தாள்.

ஸ்டுடியோவில் கண்ணாடித் தடுப்புக்கு அந்தப் புறமாக இருந்து கவனித்துக் கொண்டிருந்த நிலைய இயக்குநரைப் பார்த்துப் புன்னகைத்தான். பிறகு பதில் சொன்னான்.

"நியாயமான கேள்விகளுக்கு நான் பதில் சொல்ல எப்பவுமே தயங்கினதில்லே! அபத்தமான கேள்விகளுக் கும், உங்களுக்கு மாங்காய் பிடிக்குமா, தேங்காய் பிடிக்குமாங்கற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லத் தயாரில்லே. இன்னும் சொல்லப் போனா உங்களோட நேரத்தை வேஸ்ட் பண்ண நான் தயாரில்லே!" என்றான்.

உடனே வேறொரு நேயர் கேட்டார். "அப்படீன்னா... நமக்குப் பிடித்தவர்களைப் பத்தித் தெரிஞ்சுக்கறதுல என்ன தப்பு?"

"ஒரு தப்புமில்லே! என்னைக் கேட்டா.. எங்களுக்குப் பிடிச்ச விஷயங்கள் என்னன்னு தெரிஞ்சுக்கறதைக் காட்டிலும் இந்த உயரத்தை எட்டிப் பிடிக்க நாங்க எப்படி உழைச்சோம்னு தெரிஞ்சுக்கங்களேன். அது இன்னும் உபயோகமா இருக்கும்! அதை விட்டுட்டு ஒரு தொகுப் பாளினிக்கு போன் பண்ணி, "மேடம்! நீங்க அழகா... இருக் கீங்க! உங்க குரல் நல்லாயிருக்கு!"ன்னு சொல்லிகிட் டிருக்கறதுலயே.. உங்க வாழ்க்கையில எத்தனை நாளை வீணடிப்பீங்க?" என்று கேட்டான்.

பக்கத்திலேயே ஒரு தொகுப்பாளினி அமர்ந்து கொண் டிருக்கிறாள் என்பதைப் பற்றிச் சிறிதும் யோசிக்காமல் அவன் பேசினாலும், பேசினதற்குப் பிறகு அவன் கண்கள் தன்னையறியாமல் குமுதினியைத் திரும்பிப் பார்த்தன.

அதே நேரம் அவன் பதிலால் சற்றும் பாதிக்கப் படாதவள் போல, நிலைய இயக்குநரைப் பார்த்துக் குறும்பாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தாள். நிலைய இயக்குநரும் மௌனமாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தார்.

"இவன் இப்படித்தாம்மா பேசுவான்.. நீ கண்டுக் காதம்மா..." என்ற பதில் அதில் தொனித்தாற் போல் உணர்ந்து கொண்டாள்.



"சார்! உங்க கதைகள்ல எல்லாமே சுபமாகவே முடிக்கறீங்க...! ஆனா.. சோகமா முடிச்சா... கொஞ்சம் மனசுல நிக்குமில்ல!" என்று கேட்டார் ஒருவர்.

"எழுத்துல பலவகை உண்டு. மனதைத் தைக்கிற எழுத்து, மனசுல நிக்கிற எழுத்து.. அப்படின்னு..! சில பேர் நினைக்கறாங்க.. சோகமா.. முடிஞ்சாத்தான் மனசுல நிக்கும்னு..! நான் என்னோட சின்ன வயசுல தீபம் நா. பார்வோட கதைகளை விரும்பிப் படிப்பேன். ஆனா... பெரும்பாலான கதைகள்ல.. கதாநாயகனையோ அல்லது கதாநாயகியையோ சாகடிச்சுடுவாரு. அந்த சோகத்தைத் தாங்க முடியாம வாரக் கணக்கில தவிச்சிருக்கேன். அதனாலதான் நான் என்னோட கதைகளைச் சோகமா முடிக்கறதில்லே! மனசை வதைக்கிற எழுத்து எதுக்கு. கதைகளைக் காட்டிலும் நிஜ வாழ்க்கையில எத்தனை கொடுமைகள். வெற்றிகள் சோகங்கள் எல்லாமும் நம்மைச் சுத்தியும் நடந்துகிட்டேதான் இருக்கு. அதுக்கு நடுவில நானும் ஏன் சோகத்தைக் குடுக்கணும். வாழ்க்கை யின் நிதர்சனங்களைப் புரிஞ்சுகிட்டு ஜெயிச்சுத்தான் பார்ப்போமே!" என்றான்.

முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

அதே சிரிப்புடன் திரும்பி அவளைப் பார்த்தான். இயல்பாகவே புன்னகைத்தான்.

அந்தச் சிரிப்பில் குமுதினி கவரப்பட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தான் கேள்விப்பட்டவரை ஆணவக்காரன், எடுத் தெறிந்து பேசுவான், சமூகத்திலே இருக்கிற எல்லாரைக் காட்டிலும் தான் மேலானவன் என்ற எண்ணத்தோடயே நடமாடுபவன் என்று எண்ணியதெல்லாம் போக, குழந்தையைப் போலச் சிரித்தான்.

குறும்பாகக் கண்கள் மின்னப் பதில் சொன்னான். கொஞ்சம் திகைத்துப் போய்த்தான் அமர்ந்திருந்தாள் குமுதினி.

அடுத்து ஒரு கேள்வி வரப் பூமிக்கு வந்தாள்.

நிகழ்ச்சி ஒரு மணி நேரம் போனது தெரியாமல் போனது. சுவாரசியமாகப் போனது. அது மட்டுமல்ல, நிறையச் செய்திகளும் சொன்னான். ஆனால் ஒரு ஆச்சரியமான விஷயம் கண்டாள்.

மற்ற எழுத்தாளர்களைப் பற்றிக் கேள்விகள் வந்த போது பாராட்டியே பேசினான். அதிலும் ஒரு வாசகர் கேட்டார்.

"சார்! அந்தக் குறிப்பிட்ட எழுத்தாளர் உங்களைப் பற்றி ரொம்ப விமர்சனம் பண்ணியிருக்காரே...!" என்று.

அவன் ஒரு சிரிப்புடன் பதில் சொன்னான்.

''ஒரு படைப்பாளியின் படைப்பு படைக்கப்பட்டு வெளியே வந்து விட்டால் அது பொதுச் சொத்து மாதிரி ஆகி விடுகிறது. யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். ஆனால் நான் எந்தத் தரமான எழுத்தாளரையும் விமர்சித்தது இல்லை. ஏனென்றால் எழுத்தில் வலியும் இருக்கும். சுகமும் இருக்கும். ஒருவர் எழுத்தாளராக இருப்பதே பெரிய விஷயம். அதனால் சக எழுத்தாளர்களை நான் மதிக்கிறேன்,'' என்றான்.

அந்தப் பதிலும் குமுதினியை மிகவும் ஆச்சர்யப் படுத்தியது.

பேட்டி முடிந்ததற்குப் பின், நிலைய இயக்குநரும் அவனும் சற்று நேரம் அளவளாவினார்கள். நிலைய இயக்குநர் சிற்றுண்டி கொடுத்து உபசரிக்க.. மேலும் சற்று நேரம் கழித்தான்.



''மதி..! ஃபோட்டோ எடுக்கணும்..'' என்றார் நிலைய இயக்குநர்.

''வொய் நாட்!'' என்று நின்றான். நிலையத்தில் பணிபுரிபவர்கள் எல்லோரும் அவனுடன் நின்று போட்டோ எடுத்துக் கொள்ள அனுமதித்தான். ஆனால் கடைசியில் சொன்னான்.

''நானும் உங்களைப் போல மனுஷன்தான். எதுக்கு இப்படி அமர்க்களப்படுத்தறீங்கன்னு புரியலே...'' என்று.

குமுதினி மட்டும் அப்படியெல்லாம் நின்று போட்டோ எடுத்துக் கொள்ள அவசரப்படாததைக் கவனித்தான். நெற்றியில் லேசாக ஒரு முடிச்சு விழுந்தது.

''என்ன மேடம்! உங்களோட ஒரு போட்டோ நான் எடுத்துக்கலாமா?'' என்றான்.

குமுதினி இதை எதிர்பார்க்கவில்லை.

''ஆமாம். மேடம்! தமிழைக் கொலை செய்யாம வார்த்தைகளோட அர்த்தத்தைக் கெடுக்காமே அழகா உச்சரிச்சீங்க. அதுவே இந்தக் காலத்துல பெரிய விஷயம். இல்லே! வாங்க.. உங்களோட ஒரு போட்டோ நான் எடுத்துக்கறேன்...'' என்றான்.

குமுதினியின் முகம் லேசாகச் சிவந்து போனது. சக ஊழியர்கள் எல்லாரும் தன்னைக் குறுகுறுவென்று பார்ப்பதை ஒருவித அசௌகரியத்தோடு உணர்ந்தவளாக அவன் அருகில் போய் நின்றாள்.

எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு, நிலைய இயக்குநருடன் அவரது அறைக்குப் போனான்.

புறப்படும்போது மீண்டும் ஒரு முறை குமுதினியை அழைத்து நன்றி சொன்னான்.

''குமுதினி...! வழியனுப்பிட்டு வர்றியாம்மா?'' என்று நிலைய இயக்குநர் கேட்டுக் கொள்ள, அவள் அவனுடன் போனாள்.

நிலையத்தில் இருந்தே காரில் அனுப்புகிறோம் என்றார்கள். மறுத்து விட்டான்.

விஜயனுக்கு போன் செய்தான். ''வண்டி எடுத்துக் கொண்டு வருகிறேன்,'' என்று சொன்னான் போலும்.

இரண்டு பேரும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் நிலையத்தின் முன்னாலேயே காத்துக் கொண்டிருக்க, வண்டி வந்தது.

''என்ன மேடம்! உங்களுக்கு இடையிடையே கேள்விகள் கேட்கறதுக்கு வாய்ப்பே இல்லாமப் போச்சு.. இல்லே! ஆனாலும் அழகாய்ச் சமாளிக்கறீங்க...'' என்றான்.

அவள், புன்னகைத்தாள்.

''இப்ப வேண்ணா.. ஏதாவது கேட்கறதுன்னா கேளுங்க...'' என்றான்.

அவள் தன் மனதில் குறித்து வைத்திருந்த கேள்விகளைக் கேட்டாள். அவன் தயங்காமல் பதில் சொன்னான்.

அவள் கேள்விகள் கேட்டு முடிக்கும் முன்பாகவே பட்பட்டென்று வருகிற பதில்கள் அவளை ஆச்சரியப் படுத்தின. அவன் சொல்கிற பதில்களில் இருந்து அவன் பல விஷயங்கள் குறித்து வைத்திருக்கிறான் என்று தோன்றியது.

''சார்! விமர்சனங்களை எப்படி சார்... இப்படி அலட்டிக்காம எதிர் கொள்றீங்க?'' என்று கேட்டாள்.

''வேற வழியேயில்லை! நான் எதிர்கொள்ளலேன்னா.. கேட்கறதை நிறுத்தவா போறாங்க! அதிலயும் இப்பல்



லாம் தொலைக்காட்சி சானல்கள்ல பாருங்க! எல்லாரையும் வெறுப்பேத்தற மாதிரி கடுப்பேத்தற மாதிரிக் கேள்விகள் கேட்கறாங்க. நம்ம ஊர்ப் பெரிய மனிதர்களும் அரசியல்வாதிகளும் அதுக்குச் சிரிச்சுகிட்டே பதில் சொல்ல வேண்டிய அவசியம் வந்ததே பெரிய விஷயம் தானே...'' என்றான்.

அவள் 'ஆம்' என்பது போல் தலையாட்டினாள். தொடர்ந்து சொன்னாள்.

''ஆனா.. அறிவு ஜீவிகள் வெறும் கேள்விகளோட நிறுத்திக்கறாங்க. ஆனா... வழக்கம் போல நீங்க சொன்ன பெரிய மனுஷங்களும், அரசியல்வாதிகளும், வியாபாரப் புள்ளிகளும், நாட்டைக் கொள்ளையடிச்சுட்டுத்தான் இருக்காங்க.. இல்லே!'' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் அவளை வியப்பாகப் பார்த்தான்.

''குட்! பரவாயில்லையே! பெண்கள் கூட இப்படியெல்லாம் சிந்திக்கறீங்களே!'' என்றான்.

அவள் முகத்தில் எந்த மாற்றமும் இல்லாமல், குரலில் மட்டும் கடுமை சேர்த்துக் கொண்டு சொன்னாள்.

''சார்! நான் இதை ஆட்சேபிக்கிறேன்,'' என்றாள்.

''எதை?'' என்றான் வியப்பாக.

''பெண்கள் கூட அப்படீங்கறீங்களே, அதை!'' என்றாள்.

''ஓ.கே.! உங்களோட ஆட்சேபத்தை நான் மனசுல வாங்கிட்டேன். ஆனா.. ஸ்டேட்மென்டை மாத்துவேன்னு நினைக்காதீங்க,'' என்றான். ஆனால் சட்டென்று சிரித்தான்.

''சரி! நம்ம ரெண்டு பேருக்கும் சண்டை வராத அளவுக்கு வேற ஏதாவது கேளுங்க,'' என்றான் தமிழ்மதி.

அவளும் தயங்காமல் கேட்டாள்.

''அப்ப சரி! இதுக்குப் பதில் சொல்லுங்க!

''எல்லாரும் உங்களுக்குப் பிடிச்ச விஷயங்கள் என்னென்னு கேட்பாங்க...! நான் உங்களுக்குப் பிடிக்காத விஷயங்கள் என்னென்னு கேட்கறேன். ரெண்டு... ரெண்டே விஷயங்கள் மட்டும் சொல்லுங்க,'' என்றாள்.

அந்தக் கேள்வியும். அதனால் வரப் போகிற மோதல் களும் பற்றி அப்போது இருவருக்குமே தெரியவில்லை.

அவன் பதில் சொன்னான். அந்தப் பதில்கள் அவள் நெஞ்சில் கவலை மூட்டின என்றால், அதற்கு அவள் கொடுத்த மறுமொழி மதியின் நெஞ்சில் கனலை மூட்டியது என்றுதான் சொல்ல வேண்டும்.

கோபத்தில் முகம் சிவக்க, அவன் விஜயனின் பைக்கில் ஏறிக் கொண்டு செல்ல, அவளும் அதே கோபச் சிவப் போடு வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''உங்களை விட்ர மாட்டேன், மிஸ்டர் தமிழ்மதி...!'' என்று அவள் கறுவிக் கொண்டாள்.



# 3

எப்போதுமே பைக் பயணங்களை ரசிப்பான் தமிழ்மதி.

முகத்தில் வந்து மோதி அறைகிற காற்று. ஜூலை மாதத்துக் குளிர், வடகோவை மேம்பாலத்தில் வண்டி ஏறி இறங்குகிற போது அவன் வழக்க மாக ரசிக்கிற காட்சிகள்.

தனியாரால் பராமரிக்கப்படுகிற அந்த அழகான பூங்கா மணிக்கூண்டு, வீடியோ கேம்ஸில் பார்க்கிறாற் போலப் படங்களும் கார்களும் பொம்மைகளைப் போல நகர்கிற



அழகு எதுவுமே இன்றைக்கு அவன் மனதில் தைக்கவே யில்லை.

உள்ளுக்குள்ளே ஒரு பெரிய உலையே கொதித்துக் கொண்டிருந்தது.

எப்போதும் போலப் பெண்களிடம் அளவாகப் பேச வேண்டும். அதிலும் அந்தப் பெண் குமுதினியிடம் கண்டிப்பாகச் சுருக்கமாகத்தான் பேசியிருக்க வேண்டும்.

என்னவோ தெரியவில்லை,

வழக்கத்திற்கு மாறாக அந்தப் பெண்ணிடம் கொஞ்சம் இயல்பாகப் பேசினான். ஆனால் கடைசியில் கேட்ட அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தவிர்த்திருக் கலாம். சில நேரங்களில் இடம் பொருள் ஏவல் பார்த்து நடந்து கொள்ள வேண்டும் என்று கசப்பான அனுபவங் கள் நேரிட்ட பிறகுதான் புரிந்து கொள்கிறோம் என்று எண்ணிக் கொண்டான்.

இத்தனைக்கும் குமுதினி சிரித்துக் கொண்டேதான் கேட்டாள்,

''என்.. சார்! எப்பவும் பிடிச்ச விஷயங்கள் என்பது பற்றித்தான் கேள்வி கேட்கிறோம். உங்களைப் போலப் பிரபலமானவங்க பதில் சொல்றீங்க. ஆனா.. நான் இப்ப ஒரு கேள்வி கேட்கப் போறேன்,'' என்றாள்.

''கேளுங்க,'' என்றான் சிரித்துக் கொண்டே.

''உங்களுக்குப் பிடிக்காத ரெண்டு விஷயங்கள் சொல்லுங்களேன்,'' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் அவளை ஆழ்ந்து பார்த்தான். பிறகு சொன்னான்.

''பெண்கள். அப்புறம் குடும்பம்கிற வலை!'' என்றான்.

இப்போது வெறித்துப் பார்ப்பது குமுதினியின் முறையா யிற்று. பிறகு மெல்ல ஏமாற்றம் நிறைந்த குரலில்.

''ஓ!'' என்றாள்.

''ஆமா! ரெண்டுமே ஒரு மனிதரைச் சிறைப்படுத்துகிற விஷயங்கள்.'' குரலில் ஒரு விதமான கேலி இருந்தது.

''பட்டினத்தார் பரம்பரையா... சார்... நீங்க?'' என்றாள்.

அவன் அலட்டிக் கொள்ளாமல் சிரித்தான். பிறகு சொன்னான்.

''எந்தக் கேள்வியையும் கேட்கறதுக்கு முன்னாலே எந்தப் பதில் வந்தாலும் தாங்கற மனப்பான்மையோடதான் கேட்கணும்,'' என்றான்.

அவள் தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்டாள். ''அது அப்படித்தான். ஆனா, பதில்கள்தான் ஒரு ஆளைப் பற்றிய தரத்தை நிர்ணயிக்க உதவுகிறது.'' என்றாள்.

அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

''ஒரு எழுத்தாளனோட தரத்தை நிர்ணயிக்கறதுக்கு உங்களுக்குத் தகுதியிருக்கான்னு பார்த்துக்குங்க,'' என்றான்.

சிரிப்புடன் தொடங்கிய ஒரு உரையாடல் ஒரு வாக்குவாதமாக வளர்வதை இருவருமே உணர்ந்தார்கள். ஆனால் இருவருக்குமே நிறுத்துகிற எண்ணம் தோன்ற வில்லை.

''தமிழ்மதி சார்! சொல்றேன், கேட்டுக்குங்க! இந்த மாதிரிப் பதிலை விடுதியிலயோ ஆதரவில்லாமலோ வளர்ந்த யாராவது சொல்லலாம். ஆனா.. நீங்க... சமு தாயத்துக்குப் புத்தி சொல்ற ஒரு எழுத்தாளர் சொல்லக் கூடாது.''



''நான் எப்பவும் சமுதாயத்துக்குப் புத்தி சொல்ற ஒருத் தரா என்னை நினைச்சுக்கிறதில்லை. இது என்னோட தனிப்பட்ட கருத்து.''

''ஆமா! என்னோட கருத்தும் அப்படித்தான். பெண் களோட அன்புன்னா என்னன்னு தெரியாத சூழ்நிலையில நீங்க வளர்ந்திருக்கீங்கன்னு நினைக்கிறேன். ஒரு குடும்பம் கிடைக்காத ஒரு சூழ்நிலையில நீங்க வளர்ந் திருக்கணும். இல்லாட்டி இப்படியொரு பதிலை நீங்க சொல்லியிருக்க மாட்டீங்க!'' என்றாள்.

மேற்கொண்டு அவன் பதில் சொல்வதற்கு முன்பாக விஜயனின் பைக் வந்தது.

''மேடம்! எனக்கு அவசர வேலை இருக்கு...! கண் டிப்பா... இன்னொரு நாள் இந்த விவாதத்தை வச்சுக்க லாம்,'' என்றான்.

பைக்கில் ஏறிக் கொண்டு புறப்பட்டான். அவன் பைக்கில் ஏறிப் புறப்படும்வரை ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத்தான் தனது இருக் கைக்குச் சென்றார் நிலைய இயக்குநர்.

அதை உணர்ந்தவன் போல, ஜன்னல் ஓரமாக நின் றிருந்த அவரைப் பார்த்து ஒரு புன்னகையுடன் தலை யசைத்து விட்டுப் புறப்பட்டான் தமிழ்மதி.

வண்டியும் அவனும் கண்ணும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்களே ஒழிய, அவன் மனம் அங்கேயே நின்று விட்டது.

என்ன கேள்வி கேட்டாள் அந்தப் பெண்? பின்னே! கேட்காமலா இருப்பாள். ஒரு பெண். அதுவும் எப் போதாவது தான் சந்திக்க நேர்கிற சிந்திக்கத் தெரிந்த பெண்ணிடம் போய் எனக்குப் பெண்களைப் பிடிக்காது

என்று சொன்னால், அவள், ''ஆஹா! அப்படியா...! பேஷ்.. பேஷ்...'' என்றா வரவேற்பாள்?

எதிர்க் கணை விடத்தானே செய்வாள்? எத்தனை முறை எழுத்தாளன் என்ற உரிமையில் (அல்லது மமதையிலோ...!) எடுத்தெறிந்தாற் போலப் பதில் சொல்லியிருக்கிறோம்? மிகவும் 'சென்சிடிவ்' என்று சொல்லப்படுகிற விஷயங்களைப் பற்றிக் கூடத் தாக்குதல் கணை தொடுத்திருக்கிறோம். பதில் கணைகள் பாய்ந்திருக்கின்றன. ஆனால் எதுவுமே இப்படி உள்ளே சென்று படிந்ததில்லையே!

உண்மை என்னவென்றால் தனது தனிப்பட்ட வாழ்க்கை பற்றி யாரிடமுமே அவன் மனம் திறந்ததில்லை. அவனிடம் யாரும் கேட்பதற்கு இதுவரை விழைந்ததுமில்லை.

அவமானப்படுத்தி விடுவார்களோ என்று பயம். ஒருவேளை தொட்டால் வலிக்கிற ஒரு பகுதியை, தான் தொட விரும்பாத ஒரு பகுதியை அந்தப் பெண் தொட்டு விட்டாளோ என்று தோன்றியது.

''அது சரி! எத்தனை நாளைக்கு உண்மைகளில் இருந்து இப்படியே ஓடித் தப்பிப்பாய்?'' என்று இன்னொரு மனது கேட்டது.

வரும்போது வாயை மூடிக் கொண்டாவது வந்திருக்கலாம். ''விவாதம் தொடரும்,'' என்று வேறு சொல்லி விட்டு வந்திருக்கிறோம். அந்தப் பெண் பார்க்கிற பார்வையைப் பார்த்தால் அவள் இத்தோடு விட மாட்டாள் போலிருக்கிறது. என்று கொஞ்சம் தன் மேலேயே சலிப்பு வந்தாற் போல நினைத்துக் கொண்டான்.



அதே நேரத்தில் கிட்டத்தட்ட குமுதினியும் அந்த மாதிரித்தான் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

* * *

எப்போதும் பிரபலங்கள் தங்களது வானொலி நிலையத்துக்கு வரும்போதெல்லாம் அவளுக்கு வழியனுப்பும் பொறுப்புக் கொடுத்தால் வழியனுப்பி விட்டு நிலைய இயக்குநரின் அறைக்குச் சென்று, ''அனுப்பி வச்சுட்டேன்.. சார்!'' என்பாள். சற்று நேரம் வந்து சென்ற பிரபலத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பாள். அவர்களிடம் தான் கண்டு பாராட்டிய விஷயங்களையும் அவர்கள் சொன்னதில் தனக்குப் பிடித்தது - பிடிக்காதது பற்றியும் அளவளாவுவாள். ஆனால் இன்றைக்கு நெஞ்சம் முழுக்கக் கோபமே நிறைந்திருந்தது.

இவ்வளவு பெரிய எழுத்தாளரிடம் இப்படி ஒரு கருத்தை அவள் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. 'இவர்களுக்குச் சமைத்துப் போடுவதற்கு, பிள்ளை பெறுவதற்கு, வீட்டில் எல்லாவற்றிற்கும் ஒரு 'ஸ்டாண்ட் பை' போலப் பெண்கள் கூப்பிடு தூரத்தில் இருக்க வேண்டும். ஆனால் பெண்கள் எதற்கும் லாயக்கற்றவர்கள், பெண்களைப் பிடிக்காது என்று சொல்லிக் கொள்வது ஒரு பெருமை போல!' என்று எண்ண எண்ண ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

'விவாதம் தொடருமாமே! தொடரட்டும்...! தொடரட்டும்...! அதற்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். மிஸ்டர் தமிழ்மதி...' என்று எண்ணிக் கொண்டாள்.

திடீரென்று நினைவு வந்தவள் போல எழுந்து நிலைய இயக்குநரின் அறைக்குப் போனாள்.

''சார்! வழியனுப்பிட்டு வந்துட்டேன்,'' என்றாள்.

அவர் புன்னகையுடன் தலையாட்டினார்.

''என்னம்மா... அதிசயம்! உன்கிட்டே நின்னு பேசினாற் போல இருக்கு. நார்மலா பெண்கள் கிட்டே நின்னு பேசவே மாட்டான்...!'' என்று சிரித்தார்.

''பேசாமயே இருந்திருக்கலாம் போல இருக்கு...'' என்று சொன்னாள், நொந்து போன குரலில்.

நிலைய இயக்குநரின் கண்களில் ஆச்சரியம் தெரிந்தது.

''ஏன்?'' என்றார்.

''ஆமா.. சார்!'' என்று தங்களுக்குள் நடந்த உரை யாடலைப் பற்றிச் சொன்னாள்.

கண்களில் ஆர்வம் தெரிய, சுவாரசியத்துடன் அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்ட நிலைய இயக்குநர் கடகடவென்று சிரித்தார்.

''ம்...!'' என்று இழுத்துக் கொண்டார்.

''அவன் அப்படித்தான் பேசுவான். நீ சீரியஸா எடுத்துக்காதே!'' என்றார்.

''அதெப்படி சார்! யாரோ ரோட்டில போற ஒரு ஆள் அப்படிப் பேசினா... விட்டுட்டுப் போலாம்..! ஆனா.. ஒரு எழுத்தாளர்.. சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய எழுத்தாளர், எடுத்தேன்... கவிழ்த்தேன்னு இப்படி ஒரு கருத்தைச் சொன்னா... சமுதாயத்துல பாதியா இருக்கிற நாங்க எப்படி அதைப் பொறுத்துக்கறது! ஒரு விஷயத்தைச் சொல்றதுக்கு அவருக்கு உரிமையிருக்குதுன்னா... அதை மறுக்கவும்... எதிர்க்கவும்... எங்களுக்கும் உரிமை யிருக்கில்லே...'' என்றாள்.



வானொலி நிலைய இயக்குநர் சற்று நேரம் ஆழ்ந்த மௌனம் சாதித்தார். பிறகு, ''என்ன செய்யப் போறே?'' என்றார்.

''செய்யணும்..! ஏதாது செய்யணும்...!'' என்றாள்.

மறுபடியும் அவர் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''உன்னை அவன்கிட்டே போய்.. யாரு பிடிக்காதது என்னன்னு கேட்கச் சொன்னாங்க? அவனே விவகாரமான ஆளு...!'' என்றார்.

''கேட்டா...! அதுக்கு இப்படிச் சொல்றதா?'' என்றாள், ஆவேசமாக.

''குமுதினி...! இதை இப்படி யோசிச்சிப் பாரு! நீ கேள்வி கேட்டே! உடனே அவன் ஒரு பதில் சொன்னான். அவன் மனசில பட்ட பதிலை, உண்மையான பதிலைச் சொன்னான். உன்னைத் திருப்திப் படுத்தறதுக்காகவோ.. மேம்போக்காகவோ ஒரு பதிலைச் சொல்லியிருக்கலாம், இல்லே...! அவன் மனசுக்கு அவன் உண்மையா இருக்கான்னு. அப்படீன்னு எடுத்துக்கலாமே!''

குமுதினி இப்போது ஒரு நிமிடம் அமைதியானாள்.

''அது உண்மைதான்!'' என்றாள்.

ஒரு நிமிடம் சிந்தனை வசப்பட்டாள். பிறகு கேட்டாள்.

''ஏன்... சார்! பர்ஸனல் லைஃப்ல பெண்களாலே ஏதாவது பாதிக்கப்பட்டிருப்பாரோ...!'' என்றாள்.

''தெரியலம்மா! எனக்கு நல்ல பிரண்டு. வயசுல சின்னவன் அப்படிங்கற முறையில ''வா... போ...'' என்று பேசற அளவுக்கு உறவு. மத்தப்படி அவன்கிட்டே பேசறதுக்கு நிறைய வேற விஷயங்கள் இருக்கும்போது பர்ஸனலா கேக்கணும்னு தோணினதில்லே! எவ்வளவு

நேரம் வேண்ணாலும் அவன் பேசறதைக் கேட்டுக் கிட்டே இருக்கலாம். அவ்வளவு அழகாய்ப் பேசுவான்!'' என்றார். ஒரு வினாடி இடைவெளி விட்டுப் பிறகு சொன்னார். ''இருக்கலாம். பர்ஸனலா... அவனைப் பாதிச்ச விஷயங்கள் ஏதாவது இருக்கலாம்,'' என்றார்.

மேலும் சற்று நேரம் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு,

''சரிங்க...சார்! இப்ப எனக்கு ரெக்கார்டிங் இருக்கு,'' என்று கிளம்பினாள்.

ஏதோ ஒரு பள்ளியிலிருந்து வர இருந்தார்கள் - 'சிறுவர் நிகழ்ச்சி'யில் பங்கு பெற. ஸ்டுடியோவுக்குப் போனாள்.

ரெக்கார்டிங் ஆரம்பித்தார்கள்.

பாட்டு, நாடகம், வில்லுப்பாட்டு என்று ஏதேதோ நிகழ்ச்சிகள் கொடுத்தார்கள்.

அவர்களோடு கூட இருந்து பதிவு செய்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

தவறு செய்த இடங்களில் நிறுத்தி, மறுபடியும் அதே பகுதியைத் தொடரச் செய்து... என்று நேரம் வேகமாக ஓடியது.

குழந்தைகளுக்கெல்லாம் நிகழ்ச்சியின் முடிவில் டீயும், பிஸ்கட்டும் வரவழைத்துக் கொடுத்து, அவர் களோடு கலகலவெனப் பேசிக் கொண்டிருந்து விட்டு மறுபடியும் தனது இருக்கைக்கு வந்தாள்.

''அக்கா! உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. நாங்க எப்பவும் உங்க ப்ரொகிராம் கேட்போம்...'' என்றெல்லாம் குழந்தைகள் பாராட்டிய போதும், உடன் வந்திருந்த ஆசிரியர்கள்,



''மேடம்! மத்த நிகழ்ச்சிகள்ல செய்ற மாதிரி நீங்க தமிழைக் கொலை செய்யறதில்லே! உங்க உச்சரிப்பே அழகா இருக்கு! பொதுவாவே, இப்ப நிறைய டி.வி.யை 'ஆங்கர்' பண்றவங்க கூடத் தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் வித்தியாசம் தெரியாமே உச்சரிக்கறாங்க! அதைவிட ள ல ழ இதுக்கெல்லாம் எந்த வித்தியாசமும் இல்லாமப் பேசறது பெரிய ஸ்டைல்னு நினைச்சுக்கறாங்க! அதுக்கு நடுவில உங்க ப்ரொகிராம் கேட்கறது கொஞ்சம் ஆறுதலா இருக்கு...'' என்றார்கள்.

எல்லாப் பாராட்டுக்களும் அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும், தனது இருக்கைக்கு வந்தவுடன், இடையில் நடந்த எல்லாமும் ஆவியாகிப் போனாற் போல மறைந்து போய், மீண்டும் தமிழ் மதியின் முகமே முன்னால் வந்து நின்றது.

'அந்த எழுத்தாளருக்குள்ளே... ஏதோ... ஒரு பிரச்சினை யிருக்கு,' என்ற எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது.

அதே சிந்தனைதான் தமிழ்மதியின் மனதிலும் ஓடிக் கொண்டிருந்தது.

உண்மைதான்...! இதுவரை தன்னை நோக்கி யாரும் கேட்காத கேள்வியை அந்தப் பெண் கேட்டு விட்டாள்...! எதை யெல்லாம் மறக்க நினைத்திருந்தானோ.. அதெல் லாம்... மீண்டும் மனதுக்குள் படை யெடுத்தது. அருவி போலப் பாய்ந்து கொட்டியது.



# 4

''அண்ணா...! ஸ்கூல் ஃபீஸ் கட்டணும்,'' என்று தயங்கி நின்றான் அந்தப் பத்து வயதுப் பையன் முரு கேசன்.

''ஏண்டா..! இத்தனை நாள் என்னடா பண்ணினே? இப்பத்தான்டா... தண்ணி பில் கட்டினேன்,'' என்றான் குமரவேல். அண்ணன்.

குமரவேலுக்கு இருபத்தெட்டு வயது. முருகேசனுக்குப் பத்து வயது.

இடையிலே இரண்டு பெண்கள். எல்லாரும் கல்யாண மாகிப் போய் விட்டார்கள்.

முருகேசன் அம்மாவின் நாற்பத்தைந்தாவது வயதில் பிறந்த குழந்தை.

சில நேரங்களில் பிறந்திருக்கவே வேண்டாமோ என்று எண்ணிக் கொள்வான் முருகேசன். அப்படித்தான் அவனை எல்லாரும் நடத்தினார்கள்.

அப்பா.. அரசாங்க ஊழியர். இரண்டு வருடங்களுக்கு முன்னால் காலமாகி விட்டார். அதற்குப் பிறகு அம்மா வுக்கு பென்ஷன் வந்தது. அதனால் எல்லாம் பிரச்சினை யில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் அம்மாவும் சென்ற ஆண்டு காலமாகி விட்டார்.

அதற்குப் பிறகுதான் ஆரம்பித்தது அவன் வாழ்க்கைப் போராட்டம்.

யாரோ சொன்னார்கள். பதினெட்டு வயதை எட்டாத குழந்தைக்குக் குடும்ப ஓய்வூதியம் வரும் என்று. அதற்காக அண்ணன் முயற்சித்துக் கொண்டிருந்தான் என்று முருகேசனுக்குத் தெரியும்.

ஒருவேளை அது கிடைத்தாலும் கிடைக்கலாம் என்பதற்காகத்தான் தன்னை வீட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்று தோன்றியது.

''எவ்வளவுடா. ஸ்கூல் ஃபீஸ்?'' என்றான் குமரவேல், கடுப்புடன்.



''டர்ம் ஃபீஸ்ண்ணா...! ஆயிரத்தைந்நூறு,'' என்றான்.

உள்ளே போனான். மனைவி அடுப்படியில் கணவ னுக்கு டிபன் பாக்ஸில் எதையோ போட்டுக் கொண் டிருந்தாள்.

அவளருகில் போய் நின்ற குமரவேல், ''ஏய்! நீ ஏதாவது காசு வச்சிருக்கியா?'' என்றான்.

''வச்சிருக்கேன்...! ஆனா.. இந்தத் துரைக்குக் குடுக்க ணும்னு என்ன இருக்கு...?'' என்றாள்.

குமரவேல் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பதை இங்கிருந்தே புரிந்து கொள்ள முடிந்தது. முருகேசனுக்கு. மனைவி சியாமளா தொடர்ந்தாள்.

''பின்னே.. என்ன? இவன் கெட்ட கேட்டுக்கு இங்கிலீஷ் மீடியம் படிக்கணுமோ?'' என்றாள்.

''நல்லாப் படிக்கிறான். இல்லடி!'' என்றான்.

''படிச்சு... நாளைக்கு நமக்கா சம்பாதிச்சுக் கொட்டப் போறான்!'' என்றாள்.

''சரிடி. அதை அப்புறம் பார்த்துக்கலாம்!'' என்றான்.

கெஞ்சிக் கூத்தாடி மனைவியிடம் அவன் பணம் வாங்கிக் கொடுப்பதை ஒரு ஆழ்ந்த மௌனத்துடன் கவனித்துக் கொண்டிருந்தான் முருகேசன்.

அந்தப் பணத்தைக் கொண்டு போய்க் கட்டுவதற்கே அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் வேறு வழியிருக்க வில்லை. இந்த வருஷத்துக்கு இதுதான் லாஸ்ட் டர்ம்... எப்படியாவது முடித்து விட்டால்... என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அம்மா இருக்கும்வரை அவனை முகம் தடவிக் கொஞ்சுவாள். தொடுகையில் ஒரு ஆதரவு இருக்கும்.

அப்படியெல்லாம் யாரும் அன்போடு தன்னைத் தொட்டு அணைக்கிறவர்களோ, கொஞ்சுபவர்களோ இல்லை என்று எண்ணும்போது, அந்தப் பிஞ்சு நெஞ்சத்தில் ஏக்கம் பொங்கியது.

ஐந்தாவது வகுப்பில் இருந்தான்.

அன்றிரவு.

தனது அந்தச் சின்ன அறையில்... அது அறை என்று சொல்ல முடியாது. சாமான்கள் போட்டு வைப்பதற்கான அறை. அதை ஒதுக்கி அதிலே ஒரு கட்டில் போட்டு வைத்திருந்தார்கள். அதிலேதான் படுத்துக் கொள்வான்.

அந்த அறையில் படுத்துக் கொண்டிருந்தான். திடீரென்று இடி இடித்தது.

இடியென்றால் அவனுக்குப் பயம்! தலையணைக்குள் எட்டிப் பார்த்தான். சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு மணி காட்டியது.

பன்னிரண்டு மணி! பேய்கள் நடமாடும் நேரம் என்று பள்ளிக் கூடத்தில் மாணவர்கள் பேசிக் கொண்டது நினைவு வந்தது.

எழுந்து போய் அண்ணனின் அறைக் கதவைத் தட்டினான்!

கதவு திறப்பதற்கு ஓரிரு நிமிடங்களாகியது. குமரவேல் வெளியே வந்தான்.

அவனை எழுப்பக் கூடாத நேரத்தில் எழுப்பி விட்டோம் என்று முருகேசனுக்குப் புரியவில்லை.

"என்னடா...?" என்றான்.

"அண்ணா... இடிக்குது...! இடிக்குது! பயமா இருக்கு..." என்று கோழிக் குஞ்சு போல் நடுங்கிக் கொண்டு, அவன் அண்ணனைக் கட்டிக் கொண்டான்.



குமரவேல் அணைத்துக் கொண்டான்.

அம்மாவின் மறைவுக்குப் பிறகு, வெகு நாட்களுக்குப் பின் கிடைத்த அந்த இதமான அணைப்பை விட்டு வெளியே வர அவனுக்குப் பிடிக்கவேயில்லை. இறுக்கிக் கட்டிக் கொண்டான்.

குமரவேல் ஒரு விதமான சங்கடத்துடன் திரும்பிப் பார்த்தான்.

அவன் மனைவி அவனைக் கட்டிலில் இருந்து காளி போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அண்ணா... பயமாயிருக்கு!" எனவும், அவன் உள்ளே அழைத்துப் போனான்.

"வா.. என்கிட்டே படுத்துக்க...!" என்று அருகில் படுக்க வைத்துக் கொண்டான். அண்ணி அவசரமாக அடுத்த அறைக்குள் போய்ச் சேலை திருத்திக் கொண்டு வருகிறதை அவன் கவனிக்கவில்லை.

"அண்ணா! பயமாயிருக்கண்ணா..!" என்று குழந்தை கேவவும், அண்ணனின் மனம் இளகியது.

"சரிடா.. சரிடா.. பயப்படாதே... தூங்கு..." என்று தட்டிக் கொடுத்தான்.

அப்படியே அண்ணனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு உறங்கி விட்டான்.

உறக்கத்தில் அண்ணனுக்கும், அண்ணிக்கும் வாக்கு வாதம் நடப்பது புரிந்தது. ஆனால் தான்தான் காரணம் என்று புரியவில்லை.

"பாவம்டி! சின்னக் குழந்தை!" என்று அவன் கெஞ்சுவது தெரிந்தது.

அடுத்த நாள் காலை.

அவன் குளித்து விட்டு வெளியே வரும்போது, அண்ணன் மனைவியைக் கேட்டுக் கொண்டு இருந்தான்.

"ஏன்... சியாமளா! நமக்கும் இன்னும் குழந்தை பிறக்கலே! இவனையே மூத்த மகனா நினைச்சுக்கக் கூடாதா?" என்று.

"இத பாருங்க! அப்படியே நமக்குக் குழந்தை பிறக்காட்டாலும் பரவாயில்லே! இவனை எதுக்குக் குழந்தையா... நினைக்கனும்?" என்று கேட்டுக் கொண் டிருந்தாள் சியாமளா.

அதற்குப் பிறகு அண்ணன் அவனைத் தன் வண்டி யில் அழைத்துக் கொண்டு வருகையில் அண்ணனிடம் கேட்டான்.

"அண்ணா... என்ன வேண்ணா... அக்கா வீட்ல கொண்டு போய் விட்டுடேன்," என்று.

குமரவேலின் முகத்தில் ஆழ்ந்த வேதனை தோன் றியது. அவன் நல்லவன். ஆனால் பெரிய அளவில் தனது கருத்துக்களுக்காக வாதாட வேண்டும் என்ற எண்ணம் இல்லாத கோழை.

மனைவியிடமும் அவனுக்குச் சண்டை போட முடிய வில்லை. இந்த மாதிரி மென்மையான மனோபாவம் படைத் தவர்களிடம் உள்ள பலவீனங்களைப் புரிந்து கொண்டு விட்ட குணமற்ற மனைவிமார் அமைந்தால் என்ன நிகழுமோ, அதுதான் அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது.

சியாமளா அவனை எந்தெந்த விஷயங்களில் வீழ்த்த முடியும் என்று நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாள்.

தனது இனிய வாழ்க்கைக்கு இந்தப் பத்து வருஷக் குழந்தை இடைஞ்சலாக இருப்பதாகவே உணர்ந்தாள்.



அது மட்டுமல்லாமல் அவளது பிறந்த வீட்டில் பெரிய வசதியில்லை. அதனால் பிறந்த வீட்டுக்குப் போகிற துணிவும் அவளுக்கு இல்லை. ஆனால் அதே சமயம் குமரவேலின் மென்மையான குணத்தையும் நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருந்தாள். ஆகவே மெது மெதுவாகக் காய்களை நகர்த்தினாள்.

தனது ஆதிக்கத்தையெல்லாம் அந்தக் குழந்தையின் மேல் காட்டினாள். அன்பு ஒரு இடத்தில் இல்லை என்ற போது, ஒரு நாயும் பூனையும் புரிந்து கொள்கிற உலகத்தில், அனிச்சமலர் போன்ற அந்தக் குழந்தை மனம் உணராதா என்ன!

'அது தன் வீடு அல்ல!' என்ற உணர்வை முருகேச னுக்கு மிக எளிதாக ஏற்படுத்தி விட்டாள் சியாமளா.

'இந்தக் குழந்தைப் பையன் இப்படிக் கேட்டு விட்டானே!' என்ற எண்ணம் குமரவேலின் மனத்தில் தோன்றியது. ஆனால் வர வரத் தன் மனைவிக்கு முருகேச னின் மேல் வெறுப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதும் புரிந்தது.

அன்று மாலை திரும்பி வருவதற்குள்ளாகத் தம்பி சொன்ன யோசனையே நல்ல யோசனை எனத் தோன்றியது.

பெரிய சகோதரிக்கு போன் செய்தான். அப்போது முருகேசனும் அருகில் இருந்தான்.

சியாமளா கோவிலுக்குப் போகிறேன் என்று போயிருந் தாள்.

பெரிய சகோதரி வருத்தமான குரலில் சொன்னாள்.

"அண்ணா..! உனக்குக் குழந்தை இல்லை! எந்தப் பிக்கல் பிடுங்கலும் இல்லை. நீயே வச்சுக்க முடிய

லண்ணா... என்னண்ணா செய்யறது? அதுவும் எங்க மாமியார்க்காரம்மா ஒத்துக்கவே ஒத்துக்காது!'' என்றாள். பிறகு ஏதோ யோசித்தவள் போல,

''அண்ணா...! எப்படியோ சமாளி! வேண்ணா எல்லா லீவுக்கும் நான் கூட்டிட்டு வந்து வச்சுக்கறேன்,'' என்றாள்.

குமரவேலுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. உண்மைதான்! தன் வீட்டில் அவனை வைத்துக் கொள்வதில் ஒரு சிரமமும் இல்லை. எட்டாள் வேலை ஒரு சித்தாள் செய்வான் என்பது போல எத்தனை சின்னச் சின்ன வேலைகளைச் செய்கிறான் இந்தச் சின்னப் பையன். குடும்பக் கஷ்டங்களைப் புரிந்து கொள்கிறான். ஏன் பெண்ணிடம் இப்படியொரு இரட்டைத் தன்மை இருக்கிறது? தன்னிடம் குழைகிறாள் சியாமளா. தன்னை அப்படி விழுந்து விழுந்து பார்த்துக் கொள்கிறாள். ஆனால் அந்தக் குழந்தையை வெறுக்கிறாள். இதைத்தான் 'மாற்றாந்தாய் மனப்பான்மை' என்று சொல்கிறார்களோ!

ஒரு சலிப்புடன் ரிசீவரை வைத்து விட்டுத் தன் தம்பியின் முகம் பார்த்த முருகேசனைப் பார்த்தவுடன், குமரவேலின் மனமெல்லாம் நொறுங்கியது.

தம்பியைக் கட்டிக் கொண்டு அழுதான். முருகேசனும் தேம்பித் தேம்பி அழுதான்.

''என்ணா...?'' என்றான் குழந்தை, தேம்பிக் கொண்டே.

''ஒண்ணும் இல்லைடா...'' என்றான். கண்ணைத் துடைத்துக் கொண்டு. பிறகு குரலில் மெல்லத் தெளிவை வரவழைத்தபடி,

''சின்னக்கா... சரோஜா வீட்டுக்குப் போறியா?'' என்றான்.



''சரி...!'' என்றான் முருகேசன்.

சரோஜாவுக்கு போன் செய்தார்கள். அவள் அந்தப் பக்கம் அழுதாள்.

''அண்ணா! என் பாடே நரகமா இருக்கு. அம்மா.. அப்பா இல்லாத வீட்ல பொண்ணெடுத்ததே தப்புன்னு எங்க வீட்ல போக வரப் பேசறாங்க. கொஞ்ச நாள்ல நானே அங்கே வந்துடுவேன் போல இருக்கு!'' என்றாள்.

''ஐயய்யோ...! வேண்டாம்மா...! உங்க அண்ணி ராட்சஸிகிட்டே வந்து மாட்டிக்காதே. அங்கயே சமாளிம்மா! எப்படியோ பிரசவம் பாத்து விட்டறேம்மா...!'' என்று சொல்லி போனை வைத்தான் குமரவேல்.

குமரவேல் தம்பியை அணைத்துக் கொண்டான். ''கவலைப் படாதடா.. ராஜா...! நான் பாத்துக்கறேன் உன்னை...!'' என்று குளுரைத்தாற் போலச் சொல்லிக் கொண்டான். அன்றிரவு...

''டேய்! முருகேசா...! நீயும் இங்கயே வந்து படுத்துக்கோ...'' என்று அழைக்கவும், சியாமளா பத்ரகாளியாகி விட்டாள்.

''இது பாருங்க! எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சாகணும்! எனக்கு இந்த வீட்ல என்னதான் மதிப்பு...'' என்று சண்டை போட ஆரம்பித்தாள்.

''இது பார்றி! உனக்கு எல்லா மதிப்பும் இருக்கு. நீயும் இதயத்தோட நடந்துக்க. அவனும் ஒண்ணும் சோத்துக்கில்லாம நம்மளோட இருக்கலை. இந்த வீட்ல அவனுக்கும் பங்கு இருக்கு...! அது மட்டும் இல்ல..! ஃபாமிலி பென்ஷன் வேற வரப்போகுது...! அவனும் இங்கதான்

இருப்பான்! வசதிப்பட்டா.. இரு..! இல்லேன்னா... நடையைக் கட்டு...'' என்றான்.

எழுந்தான். ''நீ வாடா!'' என்று அவனை இழுத்துக் கொண்டு, குமரவேல் படுத்துக் கொள்கிற அந்த ஒற்றைக் கட்டிலில் அவனும் படுத்துக் கொண்டான்.

''வேலைக்குப் போயிட்டு வந்த மனுஷனுக்கு, வீட்ல நிம்மதியிருக்கறதில்லை..! சின்னப் பையன். சொந்தத் தம்பி! ரோட்லயா விட முடியும்? பேசறா.. பாரு.. பேச்சு!'' என்று கத்திக் கொண்டே படுத்தான் குமரவேல்.

முருகேசனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தான்தான் இந்த மாதிரியான புயலுக்கு மையப் புள்ளி எனப் புரிந்தது. ஆனால் அதற்கு மேல் பெரிதாக அந்தக் குழந்தைக்கு யோசிக்கத் தெரியவில்லை. அண்ணன் கழுத்தை ஆசையாகக் கட்டிக் கொண்டு எல்லையற்ற நிம்மதியை உணர்ந்தவனாக உறங்கினான்.

அதே சமயம்...

சியாமளா அதிர்ந்து போனாள். தன் கணவனுக்கு இவ்வளவு கோபம் வரும் என்று அவள் எதிர்பாராதது.

திடுக்கிட்டுப் போய் அமர்ந்து விட்டாள். இனிமேல் தன்னுடைய மிரட்டல் செல்லாது என்று புரிந்து கொஞ்சம் உள்ளூரப் பயந்து போனாள்.

வாழ்க்கையிலே தன்னுடைய இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள எத்தனையோ சாகசங்களைச் செய்கிற நிலைமை ஒரு சிலருக்கு ஏற்படுகிறதல்லவா? அதே மாதிரி நிலைமை அவளுக்கும் ஏற்பட்டது.

அண்ணியின் திறமை எதுவரை போகும் என்று அப்போது முருகேசனுக்குப் புரியவில்லை.





# 5

புரண்டு படுத்தான் தமிழ்மதி.

'ச்சே! அந்தப் பெண்ணிடம் வாய் கொடுத்திருக்கவே கூடாது. எனக்குப் பிடிக்காதது என்ன என்று அந்தப் பெண்ணிடம் போய் எதற்காகச் சொல்லி யிருக்க வேண்டும்? பேசாமல் சிரித்து மழுப்பி விட்டுப் போயிருக்க வேண்டியதுதானே! உள்ளே உள்ளே புதைந்து கிடந்த எண்ணங்களெல்லாம் இப்போது குமிழியிட்டுப் பொங்கிக் கொண்டு வெளியே வருகின்றன. இனி இரண்டு மூன்று நாட்களுக்குத் தொடர்ந்த பிரயாணம் இருக்கிறது. இன்றைக்கு ஒரு தூக்கம் போட்டு விட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டிருந்தான். எல்லாத் திட்டங்களும் கெட்டுப் போனது என்று உணர்ந்தபடி திரும்பிப் படுத்தான்.

மீண்டும் பழைய நினைவுகள் படையெடுத்தன.

முதல் நாளிரவு...

கடுகு போல் பொரிந்து கொண்டிருந்த அண்ணன் இன்றைக்குக் காலையிலே சமையலறையே கதி யென்று நிற்பது முருகேசனுக்குப் பாவம் புரியவில்லை.

அண்ணி மட்டும் தலைக்குக் குளித்து ஈர முடிச்சு இடுப்புக்கும் கீழே தொங்கிக் கொண்டிருக்க, பளிச்சென்று மஞ்சள் குங்குமத்தோடு சமையல் கட்டில் நின்று ஏதோ செய்து கொண்டிருக்க, அண்ணன் பக்கத்திலே நின்று ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்.

எப்படி இது சாத்தியம்? அப்போதைய முருகேசனுக்குப் புரியவில்லை. ஆனால் இப்போதைய தமிழ் மதிக்குப் புரிந்தது.

கொஞ்சம் நினைவும் வந்தது.

தன்னருகில் முணுமுணுத்துக் கொண்டே படுத்துக் கொண்டிருந்தான் அண்ணன். ஆனால் நள்ளிரவில் விழித்துப் பார்க்கும் போது பக்கத்தில் இருந்த அண்ணனைக் காணவில்லை. தூக்கக் கலக்கத்தில் புரண்டு படுத்தவன் விழித்துப் பார்த்தான்.

அண்ணி ஏதோ குளித்து விட்டு வெளியே வந்திருந் தாள் போலும். புடவையை அரைகுறையாகச் சுற்றிக் கொண்டு நிற்க, அண்ணன் அண்ணியிடம் ஏதோ மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

தூக்கம் கண்களை அழுத்த மறுபடியும் முருகேசன் தூங்கி விட்டான். அண்ணன் அதற்குப் பிறகு தன்னரு கில் வந்து படுக்கவில்லை என்று புரிந்தது. தலை யணையை இறுகக் கட்டிக் கொண்டான்.

நல்லவேளையாக இடி இடிக்கவில்லை! காலையில் அவன் தயக்கத்துடன் சமையலறை வாசலில் நிற்க, அடுப்பு மேடை மேல் அமர்ந்திருந்த அண்ணன்,

"வாடா... பயலே!" என்று உற்சாகமாக வரவேற்றான்.

அண்ணி குளித்து முடித்து நிற்கிற விதம் பார்த்துப் பாய்ந்து கட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது. ஆனால் அப்படி யெல்லாம் செய்தால் அண்ணிக்குப் பிடிக்காது என்பது அவனுக்குப் புரிந்திருந்தது.

"போடா..! போய் பிரஷ் பண்ணிட்டு வா!" என்றான் அண்ணன்.

முருகேசன் போய்ப் பல் துலக்கிவிட்டு வந்தான்.

குளித்துவிட்டு, அண்ணனோடு கூட டைனிங் டேபிளில் அமர்ந்து சாப்பிட்டான்.



"கண்டிப்பா.. எனக்கு இரட்டை வடம் செயின் செஞ்சு தரீங்கதானே!" என்று கொஞ்சிக் கொண்டிருந்தாள் அண்ணி.

"பின்னே? இவனுக்கு வர வேண்டிய பென்ஷன் அரியர் வரட்டும்..." என்றான், அண்ணன்.

தன்னைச் சுற்றித்தான் எல்லாப் பேச்சுக்களும் என்பது முருகேசனுக்குப் புரியவில்லை.

அவன் பாட்டுக்குப் பள்ளிக்கூடம் போய் வந்து கொண்டிருந்தான்.

திடீரென்று அந்த மாற்றம் நிகழ்ந்தது.

ஒரு நாள்...

அண்ணன் சொன்னான்.

"டேய்! உன்னோட திங்ஸ் எல்லாத்தையும் எடு..." என்று அவனே கூட இருந்து 'பாக்' செய்தான்.

"புறப்படு..." என்றான்.

முருகேசனுக்கு ஒன்றும் புரியவில்லை.

புறப்பட்டான்.

நேராகத் தாமோதரசாமி அய்யாவின் பிரஸ்ஸுக்கு அழைத்துப் போனான்.

"இனிமே நீ இங்கேதான்," என்றான். முருகேசனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"வாடா... பயலே!" என்று அணைத்துக் கொண்டார். அந்தக் கட்டை பிரம்மசாரி... தாமோதரசாமி.

• • •

குமாரவேல் ஒரு மாதிரிப் பிரச்சினைகள் முடிந்து விட்டன என்றுதான் கருதினான். அந்த மாதிரித்தான் சியாமளா நடமாடிக் கொண்டிருந்தாள்.

அன்றைக்கும், அதற்குப் பிறகும் வந்த இரவுகளில் எல்லாம் சியாமளா அழுகையும், காதலும் இழைத்து அவனை வசப்படுத்தி விட்டாள்.

"சட்டுன்னு வெளியே போன்னு சொல்லிட்டீங்களே! நான் மட்டும் எங்கம்மா வீட்டுக்குப் போயிட்டு உயிரோட இருப்பேன்னு நினைச்சீங்களா?" என்று அழுதாள்.

குமரவேலின் மனம் உருகிப் போனது. அடுத்த அஸ்திரமாக அவன் விருப்பத்தையெல்லாம் நிறைவேற்றினாள்.

"சரி... இப்ப... என்ன? முருகேசன் இருக்கணும். அவ்வளவுதானே! இருக்கட்டும்!" என்றாள்.

மெதுவாக அடுத்த கட்டத்துக்குத் தாவினாள்.

"முருகேசனைச் சாதாரண ஸ்கூல்ல சேர்க்கக் கூடாதா?" என்று.

அப்போது மறுபடியும் குமரவேல் முகம் சிவந்தது.

"இங்க... பார் சியாமளா! அவனுக்கு என்ன செய்யணும் கறதை நான் பாத்துக்கறேன். அவன் விஷயத்துல தலை யிடாதே! ஆனா, அவன் குழந்தை! அவனுக்கு எந்தவித மான இடைஞ்சலும் இருக்கக் கூடாது! பதினெட்டு வயசாகட்டும்! நானே அவனுக்கு வேற ஏற்பாடு செஞ்சுக்கறேன்," என்றான்.

சியாமளா வாயடைத்துப் போனாள். அந்தச் சமயத்தில்தான் ஒரு பத்திரிகைச் செய்தியை அவன் படிக்க நேர்ந்தது.

அன்றைக்கு உள்ளூர் டி.வி.யிலும் அந்த நிகழ்வைக் காட்டினார்கள்.

ரொம்பவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்தச் செய்தி.

ஒரு சின்னக் குழந்தையை முட் புதருக்குள்ளிருந்து எடுத்தார்களாம்.



இரண்டாவதோ... மூன்றாவதோ படித்துக் கொண்டிருந்ததாம்.

அந்தக் குழந்தைக்குத் தாய் இல்லையாம். சித்தியிடம் தான் வளர்ந்ததாம்.

கேள்வி கேட்டார்கள். கேட்க, அந்தக் குழந்தை அப்படியே நடித்துக் காட்டியது.

குழந்தை இருந்தால் கணவன் தன் மீது அன்பு செலுத்த மாட்டான் என்ற எண்ணம் சித்திக்கு இருந்து கொண்டே இருந்திருக்கிறது. இத்தனைக்கும் இது நாள் வரைக்கும் குழந்தைக்குச் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் அந்தப் பெண்தான் செய்து கொண்டிருந்திருக்கிறாள்.

ஆனால் அன்றைக்குக் குழந்தையின் மார்பின் மீது தனது காலை வைத்து அழுத்தி மூச்சுத் திணறச் செய்து குழந்தை இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டு போய் ஒரு குழியில் போட்டு விட்டு வந்து விட்டாள். ஆனால் விழித்துக் கொண்டு அழுத குழந்தையின் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தவர்கள் காப்பாற்றி வீடு கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார்கள்.

அந்தக் குழந்தை தனது மழலை மொழியில் நடந்ததைச் சொல்ல, கணவன் கொதித்துப் போய் போலீஸில் புகார் கொடுத்து விட்டான்.

அந்தக் குழந்தை போலீஸாரிடம் மழலை மாறாத குரலில் சொல்கிறது.

"எங்க சித்தி.. பாவம்! விட்டுடுங்க. அவங்களைக் கூட்டிட்டுப் போயிட்டீங்கனா, அப்புறம் யாரு என்னை ஸ்கூலுக்குக் கூட்டிட்டுப் போவாங்க?" என்று.

அந்தப் பெண்ணைப் பேட்டி எடுத்தார்கள். அதில் சொல்கிறாள்.

''எப்பவும் குழந்தைக்குத்தான் முக்கியத்துவம். என்கிட்டே கலகலப்பாய்ப் பேசறது கூட இல்லை!'' என்று.

அந்தச் செய்தியைப் பார்த்த குமரவேல் உள்ளூரக் கொஞ்சம் பயந்து போனான்.

அதற்குப் பிறகு மனைவியைக் கண்காணிக்க ஆரம்பித்தான்.

தான் இருக்கும்போது மட்டும் அவனைக் கவனிக் கிறாள் என்பதும், இல்லாத போது அவனைச் சரியாகக் கவனிப்பதில்லை என்பதும் புரிந்தது. அதனால் முடிந்தவரை தம்பி தன்னோடு உணவருந்துகிற மாதிரிப் பார்த்துக் கொண்டான்.

அன்றைக்குச் சீக்கிரம் ஆபீஸில் இருந்து வந்து விட்டான்.

அப்போது தான் அந்தக் கொடிய காட்சியைக் கண் டான். சற்றே ஒதுங்கியிருந்து கவனிக்க ஆரம்பித்தான்.

முருகேசன் ஒரு பெரிய குடத்தில் தண்ணீர் இருக்க, அதைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டிருந்தான்.

''அண்ணி! தூக்க முடியலே!'' என்று குரல் கொடுத் தான்.

''எல்லாம் தூக்க முடியும்..! தூக்கிட்டு வாடா! திங்கற தண்டச் சோத்துக்கு என்ன வேலை!'' என்று பதில் குரல் வந்தது.

முருகேசன் தூக்க முடியாமல் திணறுவது தெரிந்தது. சட்டென்று குடம் நழுவியது. தண்ணீர் கீழே பாய்ந்தது.

தடதடவென்று வெளியே வந்தாள் சியாமளா. அந்தக் கோபத்திலும் கூட நின்று சுற்று முற்றும் யாராவது கவனிக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டாள்.



குமரவேல் இன்னும் உள்ளே தள்ளி நின்று கொண் டான்.

''சனியனே! இந்த வேலை கூட உன்னால முடியாதா?'' என்று நாலு அடி வைத்தாள்.

குமரவேலுக்குக் கோபம் பொங்கியது. ஆனாலும் எந்த அளவுக்குப் போகிறாள் என்று பார்ப்பதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றான்.

''அண்ணி! என்னாலே தூக்க முடியலே...!'' என்று அந்தக் குழந்தை கள்ளமில்லாமல் நிற்பதைக் கண்டு அவன் மனமே உருகியது. ஆனால் சியாமளா இளக வில்லை.

''ஏண்டா... நீ உசிரோட இருக்கே! உன்னாலதான்டா... என்னை வீட்டை விட்டுத் துரத்தற அளவுக்குப் பேசறாரு..! எல்லாருக்கும் கிடைச்ச மாதிரி வாழ்க்கை ஏன் எனக்குக் கிடைக்கலே?'' என்று புலம்பிக் கொண்டே, குடத்தை நிமிர்த்தினாள்.

''பாரு! ஒரு பக்கம் ஒடுக்காயிருச்சு...! இப்படிப் பண்ணிட்டியேடா!'' என்று மறுபடியும் கை ஓங்க, குமரவேலின் கை அவளைத் தடுத்தது.

பீதியுடன் பார்த்தாள்.

நிலைமையைச் சமாளிக்க வேறு தந்திரம் செய்தாள்.

உள்ளே ஓடிப் போய் மண்ணெண்ணெய் பாட்டிலை எடுத்துக் கொண்டு மேலே ஊற்றிக் கொள்கிறாற் போல நின்றாள்.

குமரவேல் வெறுப்பு மண்ட அயராமல் பார்த்தான்.

''ஊத்திக்கடி! கூடவே நானும் ஊத்திக்கறேன்!'' என்றான்.

அவள் திகைத்து விட்டாள்.

உட்கார்ந்து அழுதாள்.

"நீ சரியில்லடி! பொம்பளைங்கன்னா... தாய் போலம்பாங்க! ஒரு பத்து வயசுப் பையனை எதிரியாவே நினைக்கற... உனக்கு என்னோட அன்பு மேல நம்பிக்கை யில்லடி! ஐயோ! சாகசக்காரி. ராட்சஸி... நீ பிளாக்மெயில் செஞ்சே என்னைத் தின்னுடுவே!" என்று புலம்பினான்.

"புறப்படு...!" என்றான்.

அவள் திகைத்தாள்.

"புறப்படுடி! இல்லேன்னா... என்னையும் தம்பியை யும் கொல்லப் பார்த்தேன்னு போலீஸ்ல புகார் குடுப் பேன்!" என்றான்.

சியாமளா பயந்து போனாள். புறப்பட்டாள். நேராக அவள் பெற்றோரிடம் கொண்டு சேர்ப்பித்தான். பிறகு சொன்னான்.

"மாமா! கேவலம்... இந்தச் சின்னப் பையன்! அவனை எதிரியா நினைக்கிறா...! கொடுமைப் படுத்தறா...! இப்படிப் பெண் எனக்கு வேண்டவே வேண்டாம்! கட்டின கடமைக்கு மாசம் பணம் அனுப்பறேன். ஆளை விடுங்க!" என்று கும்பிடு போட்டு விட்டு வந்தான்.

வீட்டுக்கு வந்தவன் தம்பியையும் கிளப்பித் தாமோதர சாமியிடம் கொண்டு போய் விட்டான்.

"அய்யா! ஃபேமிலி பென்ஷன் தொகை வரும்! எனக்கு அந்த ராட்சசிப் பெண்டாட்டி வேண்டாம். இவனை வளர்க்க எனக்குத் தெம்பில்லே! நீங்க வளர்த்துடுங்க. உங்களுக்கும் ஒரு ஆதரவு..! அவனுக்கும் பாதுகாப்பு!"

அவர் சிரித்தார்.



"நான் சொல்றப்ப எல்லாம் நம்ப மாட்டேன்னு சொல்லு வியே! பொம்பளைங்க சாகசக்காரி! இதுக்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? சைக்காலஜி! உன்கிட்ட காட்ட முடியாத கோபத்தை இந்தக் குழந்தை மேல காட்டறா! என்னா... எதிர்க்கத் தெரியாத குழந்தை! இதுவே அவ குழந்தையா இருந்தா உயிரைக் குடுப்பா! போ... நிம்மதியாயிரு!" என்று அவனை அனுப்பி வைத்தார்.

"டேய்... மாமான்னு கூப்பிடு..." என்றார்.

முருகேசனும் அப்படியே கூப்பிட்டான். அப்போதும் அவனுக்குப் புரியாத விஷயம் ஒன்று இருந்தது.

பெண்களையே பிடிக்காத தாமோதர மாமாவை நிறையப் பெண்கள் வந்து பார்த்துப் போவார்கள்.

அப்படி யாராவது வரும்போது, அச்சகத்து ஆட்கள் அவனை எங்காவது வெளியே அழைத்துச் சென்று விடுவார்கள்.

"அது யாரு மாமா?" என்பான் முருகேசன்.

கலகலவென்று சிரிப்பார்.

"ம்.. அத்தை!" என்பார்.

"நேத்து ஒரு அத்தை வந்துதே..." என்பான் முருகேசன்.

மறுபடியும் சிரிப்பார்.

"அது பெரியத்தை...!" என்பார்.

"ஓ.. இது சின்னத்தையா!" என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொள்வான்.

"இன்னும் நிறைய அத்தை இருக்காங்க!" என்று மறுபடியும் சிரிப்பார். ஆனால் ஒரு விஷயம் அவனுக்குப் புரியவே இல்லை. ஒரு தடவை வந்த அத்தை மறுபடியும் வருவதே இல்லை.

அதையும் கேட்டான். அதற்கும் அந்தக் கடகடச் சிரிப்புத்தான்.

"ரொம்ப யோசிக்காதடா.. ஹோம் வொர்க் பண்ணு." என்று மிரட்டினார்.

பதிமூணு பதினாறு வயசு ஆகும்போது லேசாகப் புரிகிறாற் போல இருந்தது. ஒரு நாள் யாரோ ஒரு பெண் வந்தபோது,

"மாமா! புதுசா ஒரு அத்தை வந்திருக்குதே! நான் வெளியே போகணுமா?" என்று அவன் கேட்டான். தாமோதரசாமி வெறித்துப் பார்த்தார்.

அதற்குப் பிறகு என்ன நடந்ததோ தெரியவில்லை.

பெண்கள் யாரும் அச்சகத்துக்கு அவரைத் தேடி வரவில்லை.

அந்த நினைவெல்லாம் இப்போது வரப் புரண்டு படுத்த தமிழ் மதியின் முகத்தில் வாஞ்சையான புன்னகை ஒன்று மலர்ந்தது.



# 6

அச்சகம் முழுக்க ஆண்கள்தான்!

பொழுது முழுக்க ஆண்கள்தான். சுற்றிலும் ஆண்களோடு இருந்தான் என்பதால் பெண்களோடு இயல்பாகப் பழகுகிற பழக்கம் இருக்கவில்லை. ஆனால் பெண்கள் ஏதோ ஒரு விதத்தில் ஆண்களை மசியச் செய்து விடுகிறார்கள் என்ற எண்ணம் இருந்தது.

மிகவும் கோபமாகப் பேசிய அண்ணன் கூட அடுத்த நாளே சமையலறையில் அண்ணியிடம் சிரித்துப் பேசிய காட்சி அவன் மனதில் பதிந்து கிடந்தது.



சகோதரனின் பிரியத்தின் மேல் அவனுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. அது மனைவியின் வலையை மீறிக் கொண்டு வெளியே வர முடியவில்லை என்பதனால் ஏற்பட்ட ஆழ்ந்த வருத்தம் அந்தக் குழந்தை மனதிலேயே பதிந்து கிடந்தது. ஆனால் அண்ணன் வேறொரு விதமாகத் தன் கோபத்தை வெளிப்படுத்தி விட்டான்.

மனைவியைக் கொண்டு போய்ப் பிறந்த வீட்டில் விட்டு விட்டு வந்து விட்டான். ஆறு மாதம் கழித்துத் தாமோதரசாமி அண்ணனிடம் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டான்.

"இந்தா! குமரவேல்... நான்தான் உன் தம்பியைப் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டேனே! அப்பறமும் எதுக்கு சம்சாரத்தை அங்க விட்டு வச்சிருக்கறே?" என்று.

அண்ணன் ஆழ்ந்த வருத்தத்தோடு சொன்னான். "மாமா! நேரடியாச் சண்டை போடற பொண்ணு ராட்சசியா இருந்தாக் கூட நம்பலாம். ஆனா... இந்த மாதிரி நடிக்கிற பொண்ணுகளை நம்பக் கூடாது. என்னால எப்படி நிம்மதியா அவளோட வாழ முடியும்? பாக்கறப்போ எல்லாம் ஒரு சின்னக் குழந்தையை நம்மோட இருக்க முடியாமப் பண்ணிட்டாளேன்னு கோபம்தான் வரும்," என்றான்.

"அப்ப.. சரி! இவளை வேண்ணாக் கூடக் கொண்டு போய் வச்சுக்க."

"இல்ல மாமா! ஏதோ ஒரு நேரம்... இவன் இருக்கப் போய்த்தானே எல்லாக் குழப்பம்னு நினைச்சேன்னா... அதை வேற எப்படியாவது செயல்ல காட்டிட்டேன்னா... பாவம்! அந்தக் குழந்தை தாங்குவானா?" என்றான்.

தாமு கொஞ்சம் திகைத்துத்தான் போனார்.

''அது மட்டுமில்லீங்க... மாமா! இவனை வச்சுக் கவனிக்கவும் தெரியாது. உங்களுக்குன்னா... இங்க ஆட்கள் இருக்காங்க,'' என்று மறுத்து விட்டான்.

ஐந்து ஆண்டுகள்!

முருகேசனை அடிக்கடி வந்து பார்த்துக் கொள்வான். முருகேசனுக்கு முதலில் புரியவில்லை. ஒன்பதாம் வகுப்பில் இருந்தபோது, மெதுவாகப் புரிய ஆரம்பித்தது.

அண்ணனும், அண்ணியும் பிரிந்திருப்பதால் தனக்கும் எந்த விதத்திலும் பெரிய நன்மையில்லை. அவர்களுக்கும் அதனால் எதுவும் ஆகப் போவதில்லை என்று.

ஒரு நாள் சொன்னான்.

''அண்ணா! நான் இங்க நிம்மதியா இருக்கேன். தாமு மாமா என்னை நல்லாப் பாத்துக்கறாரு. நீ போய் அண்ணியைப் பாத்து வாண்ணா.. கூட்டிட்டு வா..!'' என்று.

''வேண்டாம்பா!'' என்றான். முதன் முதலில் சொல்லும்போது வீம்பாகச் சொன்னான். அடிக்கடி அவன் திரும்பத் திரும்பச் சொல்லும்போது அவனுடைய வேகம் குறைந்தாற் போல இருந்தது.

பத்தாம் வகுப்புத் துவக்கத்தில் இருந்தபோது, அண்ணனை அழைத்துக் கொண்டு, அண்ணியின் ஊருக்குப் போய், அண்ணியின் வீட்டுக்கு வெளியே நின்று கொண்டான்.

குமரவேல் போய்ப் பார்த்து விட்டு வந்தான். வரும் போது முகம் மலர்ந்து கிடந்தது. அண்ணியின் வீட்டுக்கு அருகில் உள்ள பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தான் முருகேசன்.

அண்ணி அண்ணனோடு கூடவே அவனைப் பார்க்க வந்து விட்டாள்.



''முருகேசு!'' என்று கண் கலங்கினாள்.

''அண்ணி! அண்ணன் தனியாக் கஷ்டப் படறாங்க! நீங்க வந்துடுங்க!'' என்றான் வாஞ்சையாக.

அண்ணன் சகோதரனை ஆழமாகப் பார்த்துக் கொண்டு சொன்னான்.

''அவங்க அப்பா... எங்கேயோ வெளியூர் போயிருக்காராம்... வரட்டும்! இரண்டு நாள் கழிச்சு வந்து கூட்டிட்டுப் போலாம்..'' என்றான்.

முருகேசன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, அவர்கள் வீட்டுக்கும் கூடப் போய் விட்டு வந்தான்.

அடுத்த வாரத்தில் அண்ணிவந்து விட்டாள். இரண்டு பேரும் வருந்தி வருந்தி அழைத்தும் கூட முருகேசன் போகவில்லை.

தாமு அய்யா இதைக் கவனித்துக் கொண்டிருந்தார். தலையிடவில்லை.

அண்ணனும், அண்ணியும் போனதற்குப் பிறகு சொன்னார்.

''ஏன்டா... முருகேசு! உங்க அண்ணிதான் அப்படி வருந்தி வருந்திக் கூப்பிடறாளே! போயிருக்கலாமில்லை...!'' என்றார்.

''வேண்டாங்கய்யா! அந்த வீட்டுக்கு ஒரு அடிமையே போதும்!'' என்றான்.

தாமு கடகடவென்று சிரித்தார்.

''டேய்..!'' என்று ஏதோ ஆரம்பிக்க,

''தெரியும் மாமா! என்ன சொல்வீங்கன்னு தெரியும்! பொம்பளை இல்லாம ஆம்பளை வாழ முடியாதுன்னு...! அதனாலதான்... பாவம்.. நமக்காக அண்ணியைப்

பிரிஞ்சிருக்காரேன்னுதான் சேத்து வச்சேன். நான் இங்க சுதந்திரமா இருக்கேன்.. அப்படியே இருந்துக்கறேன்...'' என்றான்.

தாமு விட்டு விட்டார்.

'கணவனும், மனைவியும் பல நாட்களுக்குப் பிறகு ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். முன்னே பின்னே இருப்பார்கள். வயசுப் பையன் அங்கே வேண்டாம்' என்றுதான் அவரும் நினைத்தார்.

ஒருவேளை முருகேசனுக்குப் போக வேண்டும் என்று விருப்பம் இருந்தால் போகட்டும் என்று நினைத்துத்தான் கேட்டார்.

பத்தாம் வகுப்பில் மாவட்டத்தில் முதலாவதாக வந்தான்.

குமரவேலுக்கு மிகவும் மகிழ்ச்சி. அண்ணியும் அண்ணனும் அவனைக் கொண்டாடிக் கொண்டார்கள். அப்போதுதான் அவன் அந்தக் காரியம் செய்தான்.

தனக்கென்று வந்து கொண்டிருந்த குடும்ப ஓய்வூதியத் தொகையை அப்படியே சேமிப்பில் வைத்திருந்தான். தாமு அந்தத் தொகையை வாங்கிக் கொள்வதில்லை. அவனைத் தன் மகன் போலவே வளர்த்தார்.

தொகை அப்படியே இருந்தது. முருகேசன் சேமிப்பில் இருந்த தொகையில் எடுத்து ஒரு இரட்டை வடச் சங்லி அண்ணிக்கு வாங்கிக் கொடுத்தான்.

எப்போதோ அண்ணன் தன்னை வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக அண்ணிக்கு இரட்டை வடச் சங்கிலி வாங்கித் தருகிறேன் என்று ஆசை காட்டியது நினைவில் இருந்தது. தன்னை வீட்டில் வைத்துக் கொள்ள அண்ணன் பட்ட பாட்டுக்கு நன்றி



செலுத்தும் விதமாகவோ என்னவோ, அதை வாங்கிக் கொடுத்தான்.

''தம்பி! நீ எதையுமே மறக்கலே...!'' என்று கண்ணீர் விட்டான் குமரவேலு.

''அண்ணா..! நான் மறக்கலே! மறக்கவும் மாட்டேன். ஏன்னா.. இந்தப் பிரச்சினைகளுக்குப் பின்னாலே எனக்கு ஒரு விஷயம் படிப்பினை. இன்னொன்று புரிதல். உனக்கு என் மேலே இருந்த பிரியம் ஒன்று. இன்னொன்று பெண்கள் பெரிய மாயக்காரிகள்.. அவங்ககிட்டே சிக்கவே கூடாதுங்கறது இன்னொரு படிப்பினை..'' என்றான்.

குமரவேல் திகைத்துப் போனான்.

''தம்பி.. தம்பி..'' என்று ஏதோ விளக்கம் சொல்ல வந்தான்.

''வேண்டாண்ணா...! எந்த விளக்கமும் வேண்டாம். இனிமே உன் வாழ்க்கையைப் பாரு! எனக்காக நீ இழந்த அஞ்சு வருஷங்களுக்கு விலை மதிப்பே கிடையாது!'' என்றான்.

இருவர் கண்களிலும் கண்ணீர் திரண்டது.

''அண்ணா! சீக்கிரமா ஒரு குழந்தைக்கு வழியைப் பாரு! எந்தப் பெண்ணுமே ஒரு மோசமான சித்தியாவோ, மோசமான அண்ணியாவோ இருக்கலாம்.. ஆனா.. யாருமே ஒரு மோசமான தாயா இருந்ததில்லை..!'' என்றான்.

* * *

குமரவேல் சகோதரனை ஒரு வித வியப்புடன் கவனிக்க ஆரம்பித்தான்.

கல்லூரிக்குப் போகிற பருவத்தில் தம்பியிடம் தெரிந்த மாற்றங்கள் கண்டு வெகுவாய்ப் பயந்து போனான் குமரவேல்.

கல்லூரிக் காலத்திலேயே முருகேசன் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்து விட்டான்.

அச்சகத்தில் வளர்ந்ததாலோ என்னவோ எப்போதும் புத்தகங்களுக்கு நடுவிலேதான் இருந்தான். தாமுவோடு எப்போதும் இருந்ததால் உலகப் பொருளாதாரம், நடைமுறைகள் குறித்துப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

மாலை நேரங்களில் ஒரு சிறுவர் பட்டாளத்தைச் சுற்றிலும் வைத்துக் கொண்டு மாலை நேர வகுப்புகள் எடுப்பான்.

அச்சகம் கலகலப்பாக இருக்கும். வேலையாட்களுடன் வேடிக்கை பேசிக் கொண்டு வேலைகள் செய்து கொண் டிருப்பான்.

குமரவேலும் அவ்வப்போது வந்து கலந்து கொள்வான். அவனது எழுத்துக்களையும் படிப்பான் குமரவேல். உள்ளூரக் குமரவேலுக்கு ஒரு கவலை தோன்றியது.

தம்பியின் எழுத்துக்களில் அளவுக்கு மீறிய அலசல் கள் இருக்கிறதோ, குடும்பம் என்ற அமைப்பு குறித்த எதிர்ப்பு இருக்கிறதோ.. பெண்களைப் பற்றிய எதிர்ப் புணர்வு இருக்கிறதோ என்ற பயம். ஆனால் இது குறித்துத் தம்பியிடம் பேசவும் பயமாக இருந்தது.

இப்போதெல்லாம் தம்பியின் சிந்தனை வீச்சே வேறு விதமாக இருக்கிறாற் போலத் தோன்றியது. நிறைய விஷயங்கள் தெரிந்து வைத்திருந்தான். தாமு மாமாவிடம் அவன் உலக விவகாரங்கள் பேசும் போதும், இலக் கியங்கள் குறித்து விவாதிக்கும் போதும், குமரவேலுக்குப் பத்து வயதில் இடியோசை கேட்டதற்குப் பயந்து தன்னுடைய கழுத்தைக் கட்டிக் கொண்ட குழந்தையல்ல இவன் என்று தோன்றியது.

பிரமிப்பாகவும் இருந்தது.

கல்லூரியில் படிக்கும்போதே, அவனது வாசகர்கள் அவனைத் தேடி வருவார்கள். அவர்களின் கண்களில் தெரிகிற வியப்பும், மரியாதையும் பார்க்கப் பார்க்கச் சில நேரங்களில் குமரவேலுக்கே பயம் ஏற்பட்டது.



அவ்வப்போது அவனது நண்பர்களிடம் தம்பியைப் பற்றி விசாரிப்பான்.

அவர்கள் வியப்பும், மரியாதையுமாகத்தான் அவனைப் பற்றிச் சொல்வார்கள். அதெல்லாம் கேட்கக் கேட்கக் குமரவேலுக்கும் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால் ஒரு விஷயம் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

வலிந்து வந்து பேசுகிற பெண்களைப் பேச்சிலேயே காயப்படுத்தி விடுவானாம்.

நண்பர்கள் எல்லாம் அவனுக்கு 'விசுவாமித்திரர்... பட்டினத்தார்' என்றெல்லாம் பட்டப் பெயர் வைத்திருந் தார்கள். அதைப் பற்றி அறிந்திருந்தாலும், தம்பி அதைப் பெருமையாகவே எடுத்துக் கொண்டான் என்பதும் அண்ணனுக்குக் கவலையாக இருந்தது.

அத்தனை வெறுப்புக்குக் காரணம் தன் மனைவியோ என்ற குற்ற உணர்வும் இருந்தது. அது மட்டுமே காரணம் அல்ல, தாமுவும் ஒரு காரணம் என்பது சில நாட்களில் அவனுக்குப் புரிந்தது.

தாமு அடிக்கடி தம்பியிடம், 'உலகத்திலேயே மிகவும் எளிதாகக் கிடைக்கக் கூடியவர்கள் பெண்கள்!' என்ற எண் ணத்தை ஏற்படுத்தியிருந்தார் என்று அச்சகப் பணியாளர்கள் மூலம் தெரிந்தபோது இன்னும் கவலையாகிப் போனது.

தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்பதெல்லாம் அவர்கள் விஷயத்தில் செல்லுபடியாகவில்லை. பேச வேண்டும் என்று நினைத்த விஷயத்தைக் குமரவேல் பேசவே முடியவில்லை.

எப்போது குமரவேல் பேச ஆரம்பித்தாலும் நழுவிக் கொள்ளும் சாமர்த்தியம் தம்பியிடம் இருந்தது.

அப்போதெல்லாம் பெண்கள் பற்றி அதிகம் பேச வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்கவும் இல்லை.

கல்லூரிப் படிப்பு, எழுத்து என்று நாட்கள் போதாமல் இருந்தது.

பட்டப்படிப்பை முடித்துப் பட்ட மேற்படிப்புக்குப் போனான், அதையும் முடித்தான். அப்போதுதான் அவன் வாழ்வில் அவனுக்கு மறக்க முடியாத அந்த அடி நேர்ந்தது.

தாமோதரன் ஐயாவுக்கு உடல் நலம் இல்லாமல் போனது.

கல்லூரி நேரம் போக மற்ற எல்லா நேரமும் உடன் இருந்து கவனித்துக் கொண்டான்.

தாமோதரன் நோய், வலி என்று எதை உணர்ந்தாலும் சரி, தனிமையை உணரவேயில்லை. அவ்வளவு அருமையாகத் தமிழ்மதி அவரைக் கவனித்துக் கொண்டான்.

அப்போது ஒரு நாள் தாமோதரன் சொன்னார்.

"டேய்! முழுக்க நான் தப்புப் பண்ணிட்டேனோன்னு கொஞ்ச காலமா நினைச்சுகிட்டிருந்தேன். எனக்குக் குடும்பம் குழந்தைகள்னு இருந்திருந்தா நல்லா இருந்திருக்குமோன்னு நினைச்சதுண்டு. ஆனா, மகனைப் போல நீ இருந்ததனாலே எனக்குத் தனிமை தெரியலை. ஆனா... குடும்பம்னு ஒண்ணு வேணும்தான் போல இருக்கு..." என்றார்.

தமிழ்மதி சிரித்தான்.

"மாமா! உங்களுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லே. உடம்பு சரியில்லாத நேரத்துல இந்த மாதிரியெல்லாம் மனசுல பயம் வர்றதுதான். ஒரே வாரம்தான். எழுந்திருச்சு நடமாடுவீங்க... பாருங்க..." என்றான்.

சொல்லும்போதே அவனுக்குத் தெரியும், தான் ஆறுதலுக்காகச் சொல்கிறோம் என்று. என்னதான் பெரிய தைரியசாலியாகத் தன்னைக் கருதிக் கொண்டாலும்



தாமுவின் மறைவுக்குப் பிறகு தனிமையை உணரத் தொடங்கினான்.



# 7

அப்போதுதான் அந்த வலியில் சிக்கினான். இப்போதும் கூட அந்த வலியை மறவாத அளவுக்கு வலி.

தமிழ்மதி மெதுவாகப் புரண்டு படுத்தான்.

கிட்டத்தட்ட பழைய நாட்களுக்கே போய் விட்டான்.

வாழ்க்கையில் பாடம் கற்றுக் கொண்ட காலம்! கல்லூரிப் பாடம் மட்டுமா?

அனுபவப் பாடம்!

அந்த வயதுக்குண்டான குழந்தைகளெல்லாம் குழந்தைகளாக நடமாடிக் கொண்டிருக்கையில், குழந்தையாக இல்லாமல், பழுத்த பிஞ்சு போல நடமாடிக் கொண்டிருந்த காலம்!

தாமு மாமா இருந்தவரை வாழ்க்கையில் வேறு விதமான கஷ்டங்கள் இருக்கவில்லை.

எளிமையான வாழ்க்கை!

மறுபடியும் புரண்டு படுத்தான்.

தலைமாட்டில் வைத்திருந்த வாட்சை எடுத்துப் பார்த்தான்.

மணி மூன்றாகி இருந்தது.

'சே! இப்படியே மனசை விட்டா என்ன ஆகறது? வேறு விஷயங்களில் செலுத்த வேண்டும். ஏதோ ஒரு பெண் தன்னைச் சீண்டி விட்டாள் என்பதற்காக இப்படித் தன்னைத் தானே வருத்திக் கொள்ள வேண்டுமா என்ன?' என்று தோன்றியது.

எழுந்தான்!

விளக்கைப் போட்டான்!

புத்தக அலமாரியைப் புரட்டி ஒரு புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டான். கொஞ்ச நேரம் புத்தகத்தில் ஆழ்ந்து விடவே மனம் சமனப்பட்டது.

மெல்ல உறக்கம் கண்களைத் தழுவியது.

* * *

''ஹலோ!'' என்ற குரல் கேட்கவும், மெல்லக் கண்களை விழித்துப் பார்த்தான்.

விஜயன் நின்று கொண்டிருந்தான்.

''என்னடா?'' என்று புரண்டு படுத்தான்.

''என்னடா காலைல மூணு மணிக்கு லைட் எரிஞ்சுக் கிட்டிருந்துச்சு...?'' என்று கேட்டான்.

''ஆமா! படிச்சுகிட்டிருந்தேன்...'' என்றான்.

விஜயன் சிரித்தான்.

''ஒரு வகையில் உன்னைப் பாத்தா பொறாமையா யிருக்குடா! நினைச்ச நேரத்துக்குத் தூங்கி... நினைச்ச நேரத்துக்குச் சாப்பிட்டு... பிடிச்ச வாழ்க்கை வாழறடா..!''

தமிழ்மதியின் கண்களிலும் சிரிப்பு மலர்ந்தது.

''அது சரி! என் ரூம்ல மூணு மணிக்கு லைட் எரிஞ்சது எப்படித் தெரிஞ்சது...?'' என்று கேட்டான்.

''நம்ம இளவரசி... முழிச்சாப்ல! அதைக் கொஞ்சம் சரி செய்ய வேண்டியிருந்தது.'' என்றான்.

ஏதோ சொல்ல வாயெடுத்த தமிழ்மதி 'கப்'பென்று வாயை மூடிக் கொண்டான்.

விஜயன் மறுபடியும் சிரித்தான்.



''தெரியும்! என்ன சொல்ல வந்தேன்னு தெரியும்..! இதுக் குத்தான் குடும்ப வலையில சிக்கிக்காம இருக்கேன்னு சொல்லுவே. அதெல்லாம் உனக்குப் புரியாதுடா..!'' என்றான்.

கூடவே, 'உனக்குப் புரிய வைக்கிறதுக்குன்னு ஒருத்தி பொறக்காமப் போயிருவாளா.. என்ன?' என்றும் எண்ணிக் கொண்டான்.

அவன் முகத்தைப் பார்த்தே அவன் மனதுக்குள் என்ன ஓடுகிறதென்று புரிந்து கொண்ட தமிழ்மதியும் சிரித்தான்.

''அப்படியெல்லாம் யாரும் வந்து எங்களுக்குப் புரிய வைக்க வேண்டியதில்லே! எங்களுக்கே தேவையான அளவு அறிவும், தெளிவும் இருக்கு..!'' என்றான்.

''உன்னோட பெரிய தொல்லைடா! மனசுல நினைக் கறதைக் கூடக் கண்டு பிடிச்சர்றே!'' என்று முனகிக் கொண்டான் விஜயன்.

''சரி.. காபி கொண்டு வரட்டுமா?'' என்று போனான் விஜயன்.

விஜயனுக்கே புரியாத விஷயம் என்னவென்றால் இப்படியெல்லாம் குடும்ப அமைப்பை விமர்சிக்கிறவன் தன் குழந்தையிடம் விளையாடும்போது ஆளே மாறி விடுவான்.

குழந்தையோடு சரிக்குச் சரியாக விளையாடுவான். வீடு முழுக்க ஓடுவார்கள். 'காச்'-'மூச்' சென்று ஒரே சத்தமாக இருக்கும்.

''அடேய்... அடேய்!'' என்று விஜயன் சிரித்தால்,

''டேய்! குழந்தைங்க இன்னைக்குப் பூத்த மலர் மாதிரி. அவங்க சிரிப்பும் சரி, கோபமும் சரி.. உண்மையானது.

கள்ளமில்லாதது. அதனாலதான் ஐ என்ஜாய் யுவர் டாட்டர்'ஸ் கம்பெனி!'' என்பான்.

விஜயன், ''என்னமோ... ஒன்னுமே புரியலே!'' என்றால்,

''வாழ்க்கையில எல்லாத்தையும் புரிஞ்சுகிட்டா செய்யறோம். விடு...'' என்பான்.

விஜயனுடைய மனைவியிடம் மிகவும் இயல்பாக ஆனால் நாகரிகமாக நடந்து கொள்வான்.

விஜயன் பெண்களைப் பற்றிய தனது நண்பனின் கருத்தைத் தன் மனைவியிடம் சொன்னதில்லை. ஆனால் அவள் புரிந்து கொண்டுதான் இருந்தாள்.

''அதெல்லாம்... இப்படிப் பேசறவங்களைத்தான் நம்பவே கூடாது. உங்க பிரண்டோட வாழ்க்கையையும் புரட்டிப் போடறதுக்கு ஒரு பொண்ணு வருவா. அப்ப நான் அவர்கிட்டே பேசிக்கறேன். இப்பப் பேசவே மாட்டேன்,'' என்று சொல்வாள்.

மஞ்சுளா என்பது விஜயனின் மனைவியின் பெயர். அவர்களுக்கு ஒரு அழகான பெண் குழந்தை. கலைச் செல்வி என்று பெயர் வைத்திருந்தான்.

விஜயன் தன்னுடைய மனைவி இப்படிச் சொல்கிறாள் என்று கூடத் தமிழ்மதியிடம் சொன்னதுண்டு.

தமிழ்மதி லேசான ஒரு சிரிப்புடன் அந்தக் கருத்தை எதிர் கொள்வானே தவிர எந்த விளக்கமும் சொல்ல மாட்டான்.

விஜயன் கொண்டு வந்த காபியைச் சுவைத்து ரசித்துக் குடித்தான் தமிழ்மதி.

''மாமா!'' என்று ஓடி வந்தாள் கலைச்செல்வி.



''ஹாய்...! கலை!'' என்று அள்ளிக் கொண்டான். முத்தமிடப் போனான்.

''குளிச்சயா... மாமா? நான் குளிச்சுட்டு வந்திருக்கேன்.. நீ போய்க் குளிச்சுட்டு வா..!'' என்றாள்.

''சே..! கவுத்துட்டாடா!'' என்று கலகலவெனச் சிரித்தான் தமிழ்மதி.

''மாமா! ஆமா.. மாமா! நான் ஸ்கூல் போறேன். மாமா... நீ அழுக்குப் பண்ணுவே...! குளிச்சுட்டு வா...'' என்றாள் மழலையில்.

தமிழ்மதி எழுந்து போய்க் குளித்துவிட்டு வந்தான்.

அதற்குள்ளாக விஜயன் தன் வீட்டுக்குப் போய்க் குழந்தைக்கு வேறு உடை அணிவித்துப் பள்ளிக்குப் போகத் தயாராய் அழைத்து வந்தான்.

தமிழ்மதி குளித்து விட்டுச் சுறுசுறுப்பாகத் தலை சீவிக் கொண்டிருந்தான்.

குழந்தை அந்த யூனிஃபார்மில் அழகாக இருந்தாள். அழகாக மடிக்கப்பட்ட கர்சீப் வேறு சட்டையில் குத்தப்பட்டிருந்தது.

''உங்க அப்பன் எதுக்குத்தான் உனக்குக் கலைன்னு பேரு வச்சானோ...! இப்படிப் போட்டு மனசைக் கலைக் கறியேடி... செல்லம்மா...'' என்று தமிழ்மதி கொஞ்சி முத்தமிட, ''மாமா! நான் நல்ல பாப்பா.. நான் ஒண்ணும் கலைக்கலையே..!'' என்று குழந்தை கொஞ்சம் கவலையோடு சொல்ல, விஜயனும் தமிழ்மதியும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

தமிழ்மதி மறுபடியும் கொஞ்சினான். ''உங்கப்பனை விட அறிவாளிதான்... நீ...'' என்று கொஞ்ச,

''மாமா.. டீ போட்டுப் பேசாதே!'' என்றாள் செல்வி கறாராக.

''சரிடா.. இனிமே.. டா போட்டுப் பேசறேன்,'' என்றான் தமிழ்மதி.

ஒரு நிமிடம் கன்னத்தில் ஆட்காட்டிவிரலைத் தட்டிக் கொண்டு யோசித்தவள், ''சரி.. பரவால்லே! டா.. போட்டுப் பேசு...'' என்றாள்.

தமிழ்மதி ரசித்துச் சிரித்தான்.

குழந்தைக்கென்று சிறு சிறு பொருட்கள் வாங்கி வைத்திருப்பான்.

அன்றைக்கு கிரேயான் பென்சில் பாக்கெட் ஒன்று கொடுத்து வழியனுப்பி விட்டு வந்தான்.

''என்ன ஆச்சு! அய்யா நேரத்தில் இருந்தே கொஞ்சம் மூட் அவுட்ல இருக்கிற மாதிரி இருக்கு.'' என்றான் விஜயன்.

''ம்..'' என்று இழுத்த தமிழ்மதி, தன் நாக்கால் மெல்ல உதடுகளைத் தடவிக் கொண்டான்.

விஜயன் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான், ''மதி..!'' என்றான்.

''இல்லே... விஜய்! நேத்து ஸ்டேஷன்ல பாத்தமே.. அந்தப் பொண்ணு கொஞ்சம் மெண்ட்டலா டிஸ்டர்ப் பண்ணிருக்க...'' என்றான்.

விஜயனின் முகம் மலர்ந்தது. ''ம்.. அப்படியா சொல்றே?'' என்றான்.

விஜயன் தான் சொன்னதை வேறு விதமாகப் புரிந்து கொண்டான் என்பது தெரிய, தமிழ்மதிக்கு முகம் இறுகியது.



''சேச்சே...! நீ நினைக்கிற மாதிரி இல்லே! பேசிட்டிருந்தோம். அது வாக்கு வாதமா மாறிக் கடைசியில் சாலஞ்ச் மாதிரி ஆயிடுச்சு...'' என்றான்.

விஜயனின் முகத்தில் சுவாரசியம் தெரிந்தது.

''அப்படியா? உன்கிட்டே ரகளைக்கு நிற்க ஒரு பொண்ணா?'' என்றான்.

''ஆமடா! ரொம்ப ஷார்ப்பான கேள்வியெல்லாம் கேட்டுடுச்சு...'' என்றான்.

''ஓ!'' என்றான் விஜயன், சற்றே அடங்கிய குரலில்.

''ஆமடா! உனக்குக் குடும்பம்னா என்னன்னு தெரியுமா? குடும்பத்தில் வளர்ந்திருக்கியா, நீ..? அப்படீங்கிற மாதிரி...'' என்று நிறுத்தினான்.

முகத்தில் வேதனை தெரிந்தது.

''மதி...!'' என்றான் விஜயன், கவலை தொனிக்கும் குரலில்.

தமிழ்மதி ஒன்றும் பேசவில்லை.

விஜயன், ''விட்றா..! எங்கேயோ ஒரு பொண்ணு.. ஒரு நாள் சந்திப்புல எதையோ கேட்டாளாம்..! அதுக்காகக் கவலைப் படறானாம்...'' என்றான் அலட்சியம் போல.

தமிழ்மதி தன் வலக்கையால் இடத்தோளை நீவிக் கொண்டான்.

''இல்லடா! அவங்க கேட்ட கேள்வியில அர்த்தம் இருக்கிற மாதிரிதான் தெரியுது. ஆத்துக்கு வெளியில உட்கார்ந்துகிட்டு நீந்தறதென்ன பிரமாதமான்னு கேட்கற மாதிரி இருக்கு நீங்க பேசறது. அப்படீன்னுச்சு அந்தப் பொண்ணு. உதாரணம் அருமையான உதாரணம். அது மட்டுமில்ல.. அந்தக் கேள்வியிலயும் நியாயம் இருக்கு.

அதுக்காக நான் என்னோட கருத்தை மாத்திக்க முடியுமா...?'' என்றான்.

''அதானே..!'' என்றான் விஜயன். பிறகு அவனே தொடர்ந்து,

''சரி... விடப்பா! இன்னைக்கென்ன ப்ரோகிராம்.. அதை யோசிப்போம்,'' என்றான்.

''ஆமா.. சொல்லு...'' என்றான் தமிழ்மதி.

''இன்னைக்குக் காலையில அந்தக் கல்லூரியில ஒரு ஸ்பீச் குடுக்கறே...!'' என்றான் விஜயன்.

''ம்...!''

''அப்புறம்...! அங்கயே பிற்பகல்ல உன்னோட எழுத்துக்கள் பற்றி ஒரு விவாதம் இருக்கு...!''

''ம்..! என்றான் உற்சாகமாக.

எல்லா எழுத்தாளர்களையும் போலக் கல்லூரி மாணவர்களைச் சந்திப்பதிலும் அவர்களோடு அளவளாவுவதிலும் அவனுக்கு மகிழ்ச்சி அதிகம்.

''சரி... தலைப்பு ஏதும் குடுத்திருக்காங்களா?'' என்றான்.

''ஆமா... எழுத்தும், சமுதாய சீர்திருத்தமும்...'' என்றான் விஜயன்.

''என்டா..! இப்படித் தலைப்பெல்லாம் குடுக்கறாங்க..! எழுத்தைப் படிச்சுத் திருந்திடுவாங்களா என்ன, நம்ம ஜனங்க...'' என்றான் சிரிப்போடு.

''அப்படிச் சொல்லாதப்பா! எழுத்துக்கும் கலைக்கும்... நம்ம மக்கள் மயங்கிப் போறவங்க! ஆட்சியையே கூடத் தூக்கிக் கொடுப்பாங்க..!'' என்று புன்னகைத்தான் விஜயன்.



''கரெக்ட்...! சரியான வார்த்தை போட்டே! மயங்கித்தான் தூக்கிக் குடுப்பாங்களே ஒழிய... சிந்திச்சுத் தூக்கிக் கொடுக்க மாட்டாங்க!'' என்றான் தமிழ்மதி.

அழகாக 'டிரிம்'மாக உடையுடுத்துக் கொண்டு புறப்பட்ட தமிழ்மதியைச் சற்றுப் பார்த்த விஜயன் கண்ணம் வழிக்கிறாற் போல நடித்தான்.

''எனக்கே... கிறக்கமா இருக்கு போல இருக்கு! பெண் வாசகிகள் ஏன் மேலே விழுந்து பிடுங்கறாங்கன்னு இப்பத்தானே புரியுது..!'' என்றான்.

தமிழ்மதி முறைத்தான்.

''ஆகற வேலையைப் பார்க்கலாமா? வாகனத்தை எடு...'' என்றான்.

''மதி..! அவங்களே கார் கொண்டு வர்றாங்க!'' என்றான்.

''ஐயோ! அது வம்பாச்சே! எப்படா கொண்டு வந்து டிராப் பண்ணுவாங்கன்னு காத்துக் கிடக்கணுமே,'' என்றான்.

''இல்லல்லே! நம்ம டிஸ்போஸல்ல ஒரு கார்! நான் எல்லா விவரமும் சொல்லிட்டேன்...'' என்றான்.

புறப்பட்டார்கள்.

அங்கேயும் அதிர்ச்சி காத்திருந்தது தமிழ்மதிக்கு அப்போது புரியவில்லை.



## 8

''சார்.. நீங்க ஒரு மேல் ஷாவனிஸ்ட்டுன்னு நான் சொல்றேன்...!'' என்றாள் ஒரு மாணவி.

தமிழ்மதி புன்னகைத்தான்.

''அது உங்க கருத்து. அப்படி ஒரு கருத்து வச்சுக்க உங்களுக்கும் சுதந்திரம் இருக்கு,'' என்றான்.

''அழகாத் தப்பிக்கறீங்க!'' என்று புன்னகைத்தாள், அந்தப் பெண்... தொடர்ந்து,

''உங்களுக்குக் கோபம் வரும்ன்னு நினைச்சேன்,'' என்றாள்.

''எனக்குக் கோபம் வர்றதுக்கு என்ன இருக்கு. இப்பவும் என்னோட கருத்து இதுதான். பெண்கள் அடிமைப் படுத்தப் படறாங்க. இதுல ரெண்டு கருத்துக்கு இடமே இல்லை! ஆனா, அந்த அடிமைத் தனத்துக்கு எதிராக நேரடியாகப் போராடாம மறைமுகமான வழிகளைப் பயன்படுத்தித் தங்கள் பலத்தை, ஒருவேளை பலவீனத் தையோ... நிரூபிக்கப் பாக்கறாங்கன்னுதான் நான் நினைக்கிறேன்,'' என்றான்.

அந்தக் கருத்துக் குறித்துக் காரசாரமான விவாதங்கள் நடந்தன.

குமுதினி அந்த நிகழ்வைப் பதிவு செய்தபடியே ஆழ்ந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள்.

உணர்ச்சி வசப்படாமல் எல்லா விதமான விமர்சனங் களையும் தமிழ்மதி எதிர் கொண்டது குறித்து அவளுக்கு ஒரு ஆச்சரியம் தோன்றியது.

தமிழ்மதி சொன்ன கருத்தை அவளும் படித்திருக் கிறாள். அது மட்டுமல்லாமல், தமிழ்மதி பெண்களின் வாழ்வைப் பற்றி வேத காலத்தில் இருந்து எடுத்து ஆராய்ந்து அவளுக்குப் பல செய்திகளைச் சொன்னான்.

''வேத காலத்தில் பெண்கள் சுதந்திரமாகத்தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் இடைக்காலத்தில்தான்



பெண் என்பவள் ஆணுக்கு அடிமையாக இருக்க வேண்டுமென்றும் வீட்டை விட்டு வெளியில போகக் கூடாது என்றும் கொண்டு வந்திருக்கிறார்கள். படிப்படியாகக் கட்டுப்பாடுகள் அவள் மீது திணிக்கப்பட்டன,'' என்று சொன்னவன், மேலும் சில ஜீரணிக்க முடியாத விளக்கங் களையும் சொன்னான்.

''பெண் வேறு வழியில்லாமல் அடிமையானவள். வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் தனது ஆளுமையை மிகத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டாள். அதில் அன்பு, காமம் போன்ற முறையில் ஆணைத் தன் பிடிக்குள் வைக்கிறாள். இரண்டாம் தரப் பிரஜைகளாக மாமியாரும், மருமகளும் சண்டை போட்டுக் கொண்டிருப் பதை விட்டு விட்டு உங்கள் மன வளர்ச்சிக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் எப்போது வெளிப் படையாகப் போராடப் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

குமுதினிக்கு ஒன்று புரிந்தது. அவன் ஏதோ ஒரு சிலரைப் போலப் பெண்களைக் கீழ்மட்டப் பிறவிகளாக நினைப்பவனல்ல. ஆனால் பெண்களே தங்களைக் கீழாக நடத்த அனுமதித்துக் கொள்கிறார்கள் என்ற கோபமும், கேலியுணர்வும் அவனுக்குள் இருந்தது புரிந்தது.

'உண்மைதானோ! தமிழ்மதி சொல்கிற கருத்துக்களில் உண்மையிருக்கிறதோ..! பெண்கள் தங்களின் உண்மை யான பலம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமல், கேவலம் நகைக்கும் பட்டுக்கும் ஆடம்பரத்துக்கும் ஆசைப்பட்டுக் கொண்டு தங்களைத் தாங்களே கீழ்மைப்படுத்திக் கொள்கிறார்களோ..!' என்ற எண்ணம் தோன்றியது.

இன்றைக்குத் தமிழ்மதியின் பேச்சைப் பதிவு செய்வதற்கு அவளுக்குத்தான் 'டியூட்டி' போட்டிருக்கிறது என்றவுடனே அவளுக்குக் கொஞ்சம் தயக்கம்தான்.

நேற்றே தமிழ்மதி கொஞ்சம் எரிச்சலுடன் புறப்பட்டுப் போன மாதிரி இருந்தது. இன்று மறுபடியும் அந்த ஆளைப் பார்க்க வேண்டுமா என்றிருந்தது. ஆனால் எப்போதுமே அலுவலகத்தில் கொடுத்த வேலையை அவள் மறுத்ததே கிடையாது. அதிலும் நிலைய இயக்குநர் பெண்களுக்கு என்று டியூட்டி கொடுக்கும்போது அவரே தேர்ந்தெடுத்துத் தகுந்த பாதுகாப்புடன்தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பார். அப்படியிருக்கையில் மறுப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை என்று நினைத்தாள்.

'பார்க்கலாம்! அவர்தான் விவாதம் தொடரும்,' என்று சொல்லியிருக்கிறாரே! மிகவும் புகழ் பெற்ற ஒரு எழுத்தாளருடன் விவாதம் என்றால் அது சுவையாகத்தானே இருக்கும் என்று தயாராகிக் கொண்டு வந்தாள். ஆனால் அந்த மாதிரிச் சமாதானங்களுக்கெல்லாம் அவசியம் இருக்கவில்லை.

குமுதினிக்கு ஒன்று புரிந்தது. 'தமிழ்மதி எப்படிப் பட்டவராக இருந்தாலும்.. சரி..! உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை அள்ளி வீசுகிற வெத்து வேட்டு ஆசாமி இல்லை. தமிழ்மதியுடன் சண்டை போட்டால் கூட அது சுவாரசியமாகத்தான் இருக்கும்!' என்று.

''ஹலோ.. மிஸ் குமுதினி!'' என்று அழகாக அவளைப் பார்த்துச் சிரித்தான். தானாக வந்து அவளிடம் பேசினான்.

''மேடம்! கொஞ்ச நேரம் நேத்து தூங்க விடாமல் பண்ணிட்டீங்க..!'' என்றான்.



இப்படியொரு வாக்கியத்தை எதிர்பார்க்காத குமுதினி கொஞ்சம் திணறிப் போனாள். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அவன் முகம் பார்த்தாள்.

''ஆமா... மேடம்! நமக்குள்ள நடந்த வாக்குவாதத்தால சிந்தனை எங்கெங்கயோ போயிடுச்சு..! தூக்க நேரத்துல சிந்தனை வரக் கூடாதில்லே..! தூக்கம் போச்சு!'' என்றான்.

''அப்ப... நான் ரொம்பவே பெருமைப்பட்டுக்கலாம்... இல்ல.. சார்!'' என்றாள், அவளும் குறும்புப் புன்னகையுடன்.

''எதுக்கு?'' என்றான், கேள்விப் பார்வையுடன்.

''மிகப் பெரிய சிந்தனையாளரே தூக்கத்தைக் கெடுத்துக்கிட்டுச் சிந்திக்கிற அளவுக்கு ஏதோ பொறி கிளப்பியிருக்கேன்.... இல்லே...!'' என்றாள்.

அவன் அதற்கும் புன்னகைத்தான்.

''தட்ஸ் ட்ரூ! ரொம்பவும் உண்மை!'' என்றான்.

குமுதினியிடம் தானாகச் சென்று அவன் பேசுவதைக் கல்லூரிப் பெண்கள் எல்லாரும் லேசான ஒரு பொறாமையுடன் கவனித்தார்கள். குமுதினிக்கு ஏனோ ஒருவிதத்தில் பெருமையாகவும் இருந்தது.

அதற்குள் விழா அமைப்பாளர்கள் வந்து அழைத்தார்கள். மேடைக்குப் போனான். சரியாக அரை மணி நேரம் "ஆண் - பெண்" உறவுகள் என்பது பற்றிப் பேசினான்.

''ஆண் பெண் உறவுகள் இங்கே பல நேரங்களில் கொச்சைப் படுத்தப்படுகின்றது,'' என்று சாடு சாடு என்று சாடினான். ''உண்மையான காதல் என்பது எது?'' என்றெல்லாம் அவன் பேசும்போது, குமுதினி பெண்கள் அமர்ந்திருந்த பக்கம் கவனித்தாள்.

பல பெண்களின் கண்கள் அவன் உருவத்தை விழுங்கிக் கொண்டிருக்கையில், ஒரு சில பெண்கள் ஒரு விதப் பிரமிப்போடு அவன் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வதையும் பார்த்தாள். அவளுக்குமே அவன் பேச்சு பிரமிப்பாகத்தான் இருந்தது.

'இந்த வயசுக்குள் இத்தனை சிந்தனையா?' என நெட்டி முறிக்க வேண்டும் போல இருந்தது. கண்களில் அவன் மேல் மதிப்புத் தெரிய இயல்பாக அவன் பக்கம் திரும்பிய அவள் பார்வை ஒரு நிமிடம் நிலைத்து மின்னியது.

அவளுக்கு ஏனோ உள்ளுக்குள் படபடப்பாகி அடங்கியது. இப்படி நேர்ந்தது என்பது அவனுக்குத் தெரிந்தால் கூட அவளுக்கு இளக்காரமாகத் தோன்றிவிடும்.

பேசி முடித்து அமர்ந்தான். அந்த அமர்வை ஏற்பாடு செய்திருந்த இளைஞன் மாணவ மாணவிகளிடம் மேற்கொண்டு கேள்விகள் கேட்கலாம் என்கிற இடைவெளியில் அவன் அமர்ந்திருந்த தோற்றத்தை ஆழ்ந்து கவனித்தாள் குமுதினி.

நெற்றியில் முத்தாக அரும்பிய வியர்வையைத் துடைத்தபடி அமர்ந்திருந்தான். எப்போதும் நினைத்ததைப் பேசுகிற வெளிப்படையான தன்மை இருந்ததாலோ என்னவோ அவன் கண்களில் ஒருவிதமான ஒளி இருந்தது.

சிரித்தாலும் கூட வரிசைப் பற்கள் தெரியப் 'பளிச்' என்று சிரித்தான். மாணவிகளில் ஒருத்தி கூடக் கேட்டாள்.

"சார்! உங்களுக்கு சினிமா சான்ஸ் எதும் வரலையா?" என்று.



அவன் புன்னகையுடன், 'சுதந்திரத்தைப் பறிக்க நான் அனுமதிக்கறதில்லே..." என்றான்.

அவன் எதைப் பேசினாலும், ஏதோ பொறுக்கி எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு பேசுகிறவர்களைப் போல, அவர்களிடம் தெரிந்த ரசிகத் தன்மை குமுதினிக்கு வியப்பூட்டியது. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

விவாதங்கள் முடிந்த பிறகு பகலுணவு நேரத்தில் குமுதினியும், அவனும் அருகருகில் அமர வேண்டி வந்தது.

அமர்ந்தார்கள்.

சாப்பாட்டை அவன் ரசித்து உண்பதை அவள் கவனித்தாள்.

"பேச்சு எப்படி இருந்துச்சு... மேடம்?" என்றான் தமிழ்மதி.

"சார்! பெண்களைப் பத்தி நீங்க சொன்னதெல்லாம் நான் ஒத்துக்கறேன். ஏதோ ஒரு ஆதிக்க மனப்பான்மை யோட நீங்க கருத்துச் சொல்றீங்களோன்னுதான் இதுவரை நினைச்சிட்டிருந்தேன். ஆனா... பெண்களைப் பத்தின ஒரு உள்ளார்ந்த கவலை இருக்குன்னு நான் புரிஞ்சுக் கிட்டேன்," என்றாள்.

"தாங்க்ஸ்...!" என்றான். தொடர்ந்து "அடடா!" என்றான்.

"என் சார்?" என்று அவள் ஆர்வமாகப் பார்க்க -

"நானும் நீங்களும் சண்டை போட்டுக்கிட்டாத்தான் நல்லா இருக்கும்!" என்றான். அவள் புன்னகைத்தாள்.

"போடணும்.. சார்! நிறையப் போட வேண்டியிருக்கு!" என்றாள்.

அவன் கண்களில் மின்னல் மின்னியது. "ரியலி?" என்றான்.

''ஆமா.. சார்!'' என்றாள், அவளும் சளைக்காமல்.

பிற்பகலிலும் விவாதம் தொடர்ந்தது. சில மாணவர்கள் அவள் முன்னால் தங்கள் கவிதைகளைப் படித்துக் காட்ட வேண்டும் என்று விரும்பினார்கள்.

''ஓ... தாராளமா!'' என்று அமர்ந்து கேட்டாள்.

நகைச்சுவை வெடிகளுக்குக் குறைவில்லாமல் அவள் அளித்த விளக்கங்கள் துணுக்குகள் என்று அன்றைய நாளில் குமுதினி நிறையத் தெரிந்து கொண்டாள்.

அவள் மேல் மதிப்புக் கூடுகிற அதே சமயத்தில், 'விவாதம்.. தொடரும்!' என்ற தங்களுக்குள் இருக்கிற நிலைப்பாடு குறித்து அவளுக்கு யோசனையாகவும் இருந்தது.

மாலையில் கொஞ்சம் களைத்துப் போனவள் போல அவள் புறப்பட்ட போது, அவளுக்குள் ஏனோ பரிவு கிளம்பியது. அப்போதுதான் அவள் மனதில் அந்த எண்ணம் தோன்றியது.

'இவரு மனத்துக்குள் ஏதோ காயம் இருக்கிறது. அதுதான் அவர் குடும்பங்களைப் பற்றி மட்டமாக எண்ண வைக்கிறது.'

'குடும்பம்னா... என்ன? அவரவர்கள் சௌகரியத்துக் காக ஒன்று கூடிக் கொள்கிற ஒரு சுயநல அமைப்பு!' என்று சொன்ன கருத்து அவள் உள்ளத்தில் ஒரு நெருடலை ஏற்படுத்தி இருந்தது.

''ஆமா... பின்னே? பெண்ணுக்குச் சம்பாதிச்சுப்போட ஒரு ஆண் தேவையிருக்கு...! ஆணுக்கு... நினைத்த நேரத்தில் அவன் தேவைகள் எல்லாவற்றையுமே நிறை



வேற்ற ஒரு பெண் தேவையிருக்கு... தட்ஸ் ஆல்..!'' என்று கேலியாகச் சிரித்தது நினைவுக்கு வந்தது.

''அப்புறம்..! காதலைப் பத்தி மட்டும் பிழிஞ்சு பிழிஞ்சு எழுதறீங்க?'' என்றாள்.

''ஆமா...! ஆனா... என் நாயகனும் நாயகியும் கல் யாணம் செஞ்சுக்கற மாதிரி நான் முடிக்கவே மாட்டேன், தெரியுமா? ஏன்னா... எப்போ கல்யாணம்னு பண்றாங் களோ.. அப்போக் காதல் செத்துப் போகுது. அதுக்கப் புறம்... ஒரு யுத்தம் நடக்குது. அதுல அவன் அவளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப் போராடறான். மனைவி எந்நேரமும் கணவனைத் தன் கைப்பிடிக்குள் வைக்கப் போராடறா! அப்புறம்... காதல்... ப்பூ! அவ்வளவுதான்...!'' என்று சிரித்தது நினைவு வந்தது.

அப்போதுதான் அந்தக் காரியத்தைச் செய்தாள்.

காரில் ஏறுவதற்கு நிற்கிற அவளிடம் போனாள். விஜயன் அருகில் நின்று கொண்டிருந்தான்.

''சார்! என்ன இன்னைக்கும் தப்பிச்சுட்டுப் போறீங்க! விவாதம் எப்பத் தொடரும்?'' என்றாள்.

தமிழ்மதி ஒரு நிமிடம் விழித்துப் பார்த்தாள். பிறகு பளிரென்று சிரித்தாள்.

''தப்பிச்சுப் போறது நம்ம வழக்கமே இல்லை! டேட் நீங்க பிக்ஸ் பண்ணுங்க. என் கருத்தை எப்படி நிரூபிக் கணும்னு சொல்லுங்க... நிரூபிக்கறேன்...'' என்றாள்.

''ம்... அது...'' என்றாள் குமுதினி.

அவள் காரில் ஏறிப் போவதை யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



# 9

கார் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

தமிழ்மதியின் முகத்தில் ஒரு விதமான புன்னகை நிலைத்திருந்தது.

விஜயன் குறுகுறுவென்று பார்த்தான்.

அதற்குள் தமிழ்மதியே திரும்பி அவனைப் பார்த்துச் சிரித்தான்.

''ஏண்டா! அந்தப் பொண்ணு நம்மளை விடாது போல இருக்கு...'' என்றான்.

''தட்ஸ் குட்!'' என்றான் விஜயன்.

''வாட்ஸ் குட்?'' என்று கேட்டான் தமிழ்மதி, வியப்போடு.

''உன்னையும் ஒரு பொண்ணு மிரட்டுதே!'' என்று புன்னகைத்தான் விஜயன்.

''ஆமா! ஆனா... தலைக்குள்ளே மசாலா இருக்கற பொண்ணு..!''

விஜயன் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. அழுத்தமாக அமர்ந்து கொண்டான்.

சற்று நேரம் கழித்துத் தமிழ்மதி கேட்டான். ''என்ன பண்ணலாம்.. சொல்லு.''

''இத பாரு! யாராலே கெட்டா? நோராலே கெட்டான்னு ஒரு பழமொழி இருக்கு, தெரியுமா? அன்னைக்குப் பிரச்சினை நடந்தது. ரெண்டு பேரும் பேசிக்கிட்டீங்க. ஓ.கே. அதோட விட வேண்டியதுதானே! அப்புறம் எதுக்கு... அதுவும் பைக்கில் ஏறினதுக்கப்புறம்... 'விவாதம் தொடரும்!' அப்படீன்னு உன்னைப் பந்தா பண்ணச் சொன்னா?' என்று கேட்டான் விஜயன்.



''அதானே!'' என்று தமிழ்மதியும் கூடச் சேர்ந்து கொள்ளவும், விஜயன் திகைத்துப் போனான். மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்தான்.

''அதான்டா! நானும் வாயைக் குடுத்துட்டு இப்படித்தான்டா.... முழிக்கறேன்!'' என்றான் தமிழ்மதி.

இருவரும் சிரித்தார்கள்.

''சரி... என்ன பண்ணப் போறே?'' என்றான் விஜயன்.

''என்ன பண்றது? நோ கோயிங் பேக். முன்ன வச்ச காலைப் பின்ன வைக்கறதுங்கறது இல்லே..! நான் அந்தப் பொண்ணைச் சந்திச்சு மறுபடி பேசப் போறேன்,'' என்றான்.

அப்போது கூட அவன் உள்மனது கேட்டது. ''இதற்கெல்லாம் என்ன அவசியம்?'' என்று. அதற்குப் பதிலைப் போலவும், விஜயனுக்குச் சொல்வது போலவும், அவன் சொன்னான்.

''ஏனோ தெரியலை! எதுவோ என்னை உந்தித் தள்ளுது! உனக்குத் தெரியும் விஜி! இதுவரைக்கும் நான் என் ஆழ்மனசு என்ன சொல்லுச்சோ, அதுபடித்தான் வாழ்ந்திருக்கேன். இப்ப என் மனசு, தப்போ ரைட்டோ.. ஒரு விஷயத்தை ஆரம்பிச்சுட்டே! தொடர்ந்து போ, அப்படீங்குது...'' என்றான்.

விஜயன் ஒன்றும் பேசவில்லை. பேசிப் பயனில்லை என்று அவனுக்குத் தெரியும். இதுநாள் வரையில் அவன் பழகிய தமிழ்மதி இப்படித்தான்.

எது தனக்குச் சரியோ... அதைச் செய்வான். ஆனால் வழக்கமாகத் தன் விருப்பம் போல வாழ்கிறவர்கள் எல்லாரும் படிப்படியாகப் பல விஷயங்களுக்கு அடிமையாக

நேர்வதை அவன் கண்டிருக்கிறான். ஆனால் தமிழ்மதி எல்லாவற்றிலும் தெளிவாக இருப்பான்.

"போடா! வாழ்க்கையே ஒரு த்ரில்லான சமாச்சாரம் தான்! அதை அனுபவிச்சு வாழ்ந்தால் பத்தாதா? அதுக்குத் தடையா இருக்கற எதுவுமே வேண்டான்னுதானே நான் குடும்பத்தையே வெறுக்கறேன்," என்று சொல்லுவான்.

அந்த நேரம் விஜயனுக்குத் தோணும். "குடும்பங்கற தையும் அனுபவிச்சுப் பாத்துத்தானே முடிவு கட்டணும்..." என்று கேட்க வேண்டுமென்று. ஆனால் ஏனோ அவன் கேட்பதில்லை.

அன்று மாலை மனைவியிடம் இந்தப் பேச்சைப் பகிர்ந்து கொண்டான். அவள் கண்களில் ஏனோ குறும்பு மின்னியது. உடனே சொன்னாள்.

"நான் இன்னையிலிருந்தே நாப்பத்தெட்டு நாளைக்கு அம்மன் கோவிலுக்கு விளக்கு வைக்கப் போறேன்..." என்றாள்.

"எதுக்கு?" என்றான் விஜயன்.

"முடியட்டும், சொல்றேன்..!" என்றாள்.

* * *

இரவு முழுவதும் கனவுகள் நிறைந்த உறக்கம்!

முகந் தெரியாத பெண்கள்!

அப்படியே மிதந்தாற் போல வந்து அவன் மேல் லேசாக உரசிவிட்டுக் காற்றாகக் கரைந்து போகிறார்கள். கொஞ்சமே தெரிந்த பெண்கள்!

கொஞ்சம் நன்றாகப் பழகிய பெண்கள் எல்லாருடைய முகங்களும் அலையில் மிதக்கிறாற் போல வந்து 'ஷாம்பூ' விளம்பரம் போலத் தலைமுடி காற்றில் மிதக்க வந்து காட்சி கொடுத்து விட்டுப் போனார்கள்!



கடைசியாகக்

குமுதினியின் அழகிய முகம்!

"தின்பதற்காக அல்லாமல் தின்னப்படுவதற்காகவே அமைந்த வரிசைப் பற்கள்..!" என்று தீபம் நா.பார்த்தசாரதி வர்ணித்தாற்போல, அழகிய வரிசைப் பற்கள் தெரிய மலர்ந்த சிரிப்புடன் வெகு அருகில் வந்து சென்றாள்.

தமிழ்மதி சட்டென்று விழித்தான்.

எழுந்து அமர்ந்து கொண்டான்.

'சே! இந்த விஷயத்தை முடித்து விட வேண்டும்!' என்று எண்ணிக் கொண்டான்.

'ஏன்... அப்படி என்ன நடந்து விட்டது? ஒரு பெண் சவால் விடுகிறாள். ஏற்றுக் கொள்ள விருப்பமிருந்தால் ஏத்துக்க! இல்லாட்டி... தோல்வியை ஒப்புக்கிடு...'

'தோல்வியா? ஒப்புக்கறதா? நோ... நெவர்!' என்று தலையைக் குலுக்கிக் கொண்டான்.

அப்படியொரு முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் உறக்கம் வந்தது.

நிம்மதியாக உறங்கினான்.

மறுநாள் காலை.

விஜயன் வந்தவுடனே கேட்டான்.

"ஏன்... விஜி! இன்னைக்குக் காலையில ஏதாவது ப்ரொகிராம் இருக்கா?" என்று.

"இல்லடா! ஆனா... ஒரு புத்தக வெளியீட்டு விழா வுக்குச் சும்மா போலாம்னு சொல்லிகிட்டிருந்தியே.."

"ஆமடா...! போகணும்...! ஆனா..." என்று இழுத்தான்.

''இல்ல...! அந்த மேட்டரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தர்லாம்னு இருக்கேன்...'' என்றான்.

''எந்த மேட்டரை?''

''அதான்டா.. அந்த சாலன்ஜ்...! குமுதினி சொன்னது...'' என்றான்.

''ஓ...!''

அப்போதுதான் அந்த யோசனை பிறந்தது.

''டேய்! எஸ்.டி. கிட்ட கேளு..! இன்னைக்கு எப்படியும் அந்தப் புத்தக வெளியீட்டு விழாவைப் பதிவு பண்ணு வாங்க! யாரு பதிவு பண்ண வராங்கன்னு கேளு.'' என்றான்.

விஜயன் அவன் முகத்தை ஒருவிதமாகப் பார்த்துக் கொண்டே போன் போட்டுக் கேட்டான்.

பிறகு சொன்னான்.

''குமுதினிதான் வருதாம்..!''

''நல்லதாய்ப் போச்சு! அங்கேயே வச்சுப் பேசி முடிச்சிடுவோம்!'' என்றான் தமிழ்மதி.

காலை புறப்படும்போதே விஜயனின் மனைவி சொல்லியனுப்பியிருந்தாள்.

''பாருங்கத்தான்! இந்த விஷயத்துல உங்க எழுத்தாளர் அண்ணாவே முடிவெடுக்கட்டும்! நீங்க எதுவும் சொல்லா தீங்க...'' என்று சொல்லியனுப்பியிருந்தாள். அதனால் விஜயன் தமிழ்மதி சொன்னதற்குத் தலையாட்டிக் கொண்டானே தவிர, எதுவும் பேசவில்லை.

லேசான பரபரப்புடன் தமிழ்மதி இருந்தாற் போல இருந்தது.

விஜயன் கவனிக்காதவன் போல இருந்து கொண்டான்.



விழாவுக்குப் போனார்கள். வெளியீட்டு விழாவில் அவர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது.

குமுதினி வரவில்லை.

அந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் புத்தகத்தை எழுதியவரும் சரி, வெளியிட்டவரும் சரி, தமிழ்நாட்டில் வெகுவாக அறியப்பட்ட இலக்கியவாதிகள்.

தமிழ்மதி உள்ளே நுழைந்ததும் கொஞ்சம் சலசலப்பு ஏற்பட்டது. அவன் இயல்பாக எல்லாருக்கும் வணக்கம் சொன்னான்.

முதல் வரிசையில் இடம் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். விஜயன் இரண்டு மூன்று வரிசைகள் பின் தள்ளி அமர்ந்து கொண்டான்.

தமிழ்மதி அமர்ந்ததற்குப் பின்புதான் நிகழ்ச்சி தொடர்ந்தது. நகைச்சுவைச் செய்திகள் பரிமாறப்படும் பொழுது குழந்தையைப் போல ரசித்துச் சிரிப்பான் தமிழ்மதி.

சற்றுக் கழித்து மெதுவாக வானொலி நிலையத்தில் இருந்து வந்து பதிவு செய்பவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் பார்த்தான்.

அங்கே வேறு யாரோ இருந்தார்கள்.

லேசாக முகம் விழுந்து விட்டது!

'குமுதினி வரவில்லையே!' என்று நினைக்கும் போது - மேடையில் இருந்து எதற்காகவோ அவனை அழைத்தார்கள்.

பொன்னாடை போர்த்த வேண்டுமாம்.

போனான்.

ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினான். நாசுக்காகக் கழன்று கொண்டு வந்து விட்டான்.

கீழேயே அமர்ந்து கொண்டான். ஆனால் மனம் மட்டும் நிலை கொள்ளவில்லை.

விழா முடிகிற வரை இருக்க வேண்டும் என்று கடமைக்காக இருந்தான்.

''தமிழு! மேடையில மைக்கைப் பிடிச்சயே! அப்ப உள்ளக்குள்ளே கொஞ்சம் உதறல்தான். எந்த வெடியை எப்படிப் போடுவியோன்னு...'' என்று சிரித்தார் பேச்சாளர்.

வழக்கமாக ஏதாவது இடக்காகப் பதில் சொல்வான் தமிழ்மதி. இன்றைக்கு லேசாகப் புன்னகைத்துக் கொண்டான்.

''என்னப்பா ஆச்சு... உனக்கு?'' என்று ஆச்சரியமாகப் பார்த்தார் இலக்கியவாதி.

''ஒண்ணுமில்லண்ணா..! லைட்டா காய்ச்சல்..!'' என்று சமாளித்தான்.

தமிழகத்தின் நல்ல இலக்கியவாதிகள் எல்லாரும் அவனைப் புரிந்து கொண்டிருந்தார்கள். மனதளவில் யார் மேலும் வஞ்சம் வைக்க மாட்டான் என்பதும், எதைத் தப்பு என்று நினைக்கிறானோ, அதை அங்கேயே சொல்லிவிடுவதும், தனக்குப் பிடிக்கிற ஒரு விஷயம் என்றால் மனம் திறந்து பாராட்டுவதும் அவன் இயல்பு என்று புரிந்து வைத்திருந்தார்கள்.

ஒருவருடைய படைப்பைப் பற்றிக் கடுமையாக விமர்சனம் செய்வான். ஆனால் அடுத்து எங்காவது விழாவில் பார்க்கும்போது சிரித்தும் பேசுவான்.

''சார்! புரிஞ்சுக்குங்க! உங்களோட அந்தக் குறிப்பிட்ட படைப்பைப் பற்றி மட்டும்தான் நான் விமர்சனம் செய்தேன். உங்களையல்ல!'' என்பான்.

அப்படித்தான் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றாலும், அதற்காக அவன் பெரிதும் கவலைப்பட மாட்டான்.



சற்று நேரம் எல்லாருடனும் அளவளாவிட்டுப் பகலுணவை அங்கேயே முடித்துக் கொண்டான்.

தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்த்தான். ஆனால் விட மாட்டேன் என்று வற்புறுத்தினார்கள். அதனால் சாப்பாட்டை முடித்துக் கொண்டான்.

பைக்கை எடுக்கும்போது, ''டேய்..! நான் ஓட்டறேன்,'' என்றான் தமிழ்மதி.

விஜயன் பின்னால் ஏறிக் கொண்டான். அந்த இலக்கியக் கூட்டம் நகரத்தில் இருந்து மூன்று நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடத்தில் நடந்திருந்தது.

நடுவில் ஒரு மேம்பாலம் தாண்டி வர வேண்டியிருந்தது. எப்போதும் இது மாதிரிப் பயணங்களை ரசிப்பான் தமிழ்மதி.

பைக் நகருக்குள் நுழையாமல் வேறு பக்கம் திரும்பியது.

''எங்கடா?'' என்றான் விஜயன்.

''ஒரு சஸ்பென்ஸ்தான்!'' என்றான் தமிழ்மதி.

சற்றுக் கழித்ததும் விஜயனுக்கு விஷயம் புரிகிற மாதிரி இருந்தது.

ஏதோ சுவாரசியமாக நடக்கப் போகிறது என்று தெரிந்தது.

அவன் நினைத்த மாதிரி வானொலி நிலையப் பாதையில்தான் 'பைக்' போனது.

உள்ளே போனார்கள்.

வழக்கம் போல வரவேற்புத்தான்!

சற்று நேரம் நிலைய இயக்குநரிடம் பேசினான். பிறகு மெதுவாகக் கேட்டான்.

''குமுதினி மேடம் வேலைக்கு வந்தார்களா?'' என்று.

புரிகிறாற் போல இருந்தது.

''வந்திருக்கே! இப்ப ஏதோ ரெக்கார்டிங்ல இருக்கு!'' என்று யாரையோ அழைத்து விசாரித்தார்.

''பத்து நிமிஷத்துல ஸ்டுடியோவில் இருந்து வரும்,'' என்றார்கள்.

''ஓ.கே...! நான் அவங்க ரூம்ல வெயிட் பண்றேன்,'' என்றான்.

நிலைய இயக்குநர் வியப்பாகப் பார்க்க, அவன் புன்னகையுடன் ஒரு பதில் சொன்னான்.

நிலைய இயக்குநர் முகத்தில் வாய் கொள்ளாச் சிரிப்பு.

எந்தவிதத் தயக்கமுமில்லாமல் தமிழ்மதி 'டியூட்டி ரூம்' என்ற அந்த அறைக்குப் போய் அமர்ந்து கொண்டான்.

கையில் இருந்த ஏதோ பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

சற்றுக் கழித்து அங்கே வந்த குமுதினி தமிழ்மதியைச் சுத்தமாக எதிர்பார்க்கவில்லை.

''சார்! வாங்க! வாங்க!'' என்றாள் பரபரப்பாக.

அவன் சேரில் சாய்ந்து அமர்ந்து புன்னகைத்தான்.

குமுதினி வந்து அவளது இருக்கையில் அமரும்வரை அவகாசம் கொடுத்தான்.

அவள் அமர்ந்து, ''சொல்லுங்க... சார்!'' என்றாள்.

சொன்னான். நிலைய இயக்குநரிடம் சொன்ன அந்தப் பதிலையே அவளுக்கும் சொன்னான்.

''மேடம்..! குமுதினி..! உங்களோட விவாதத்தைத் தொடரலாம்னு முடிவுல வந்திருக்கேன்,'' என்றான்.

அவள் நம்ப முடியாதவள் போல அவ

தமிழகத்தின் மிகவும் மதிக்கப் படு
தாளன் தன்னைத் தேடி வந்து கேட்கி
அவளால் மறுக்கவே முடியவில்லை!

இருவருக்குமே இப்படி ஒரு விவாத
மிருக்கவே வேண்டாமோ என்று யோ
ஒன்று வரும் என்று இருவருமே எதிர்பா



## 10

தன்னுடைய பொரு
லாம் இரண்டு அறைகளு
படுத்தினான் தமிழ்மதி.

விஜயனும் உதவி
டிருந்தான் கூடவே.

''இது வேண்டாத வே
என்று பொரிந்து கொண்டிருந்தான் விஜய

தமிழ்மதிக்கும் கூட அப்படித்தான் தோன்
ஒரு விஷயத்தில் இறங்கி விட்ட பிறகு அ
பித்தோடுவது என்பது அவனுடைய வழ

வேற வழியே இல்லாமல்தான் இந்தச்
ஏற்றுக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

போன வாரத்தில் தானே வானொலி நி
தேடிச் சென்று குமுதினியிடம் விவாதம் ப
நினைவுக்கு வந்தது.

அதன் விளைவுதான் இப்போது இங்கே

''விவாதம் தானே.. சார்! எங்கே வேண்ணா
வச்சுக்கலாம்...'' என்றாள் குமுதினி, தென

தமிழ்மதிக்கு உசுப்பி விட்டாற் போல ஆகிவிட்டது.

காரசாரமாக இரண்டு பேரும் பேசிக் கொள்வதை அந்தப் பூங்காவில் அவர்கள் இருவரோடு கூட அமர்ந்து கொண்டு பார்வையாளனாகப் பார்த்துக் கொண்டிருந்தான் விஜயன்.

"சார்! நான் இப்பவும் சொல்றேன்... நீங்க குடும்பத் தோட இருக்கலை! அதனாலதான் உங்க பேச்சில ஒரு கடுமை தெரியுது. எதிராளியைக் காயப் படுத்தணுங்கற ஒரு ஆவேசம் தெரியுது," என்றாள்.

தமிழ்மதி மௌனமாகப் பார்த்தான். அவனுக்கே தன்னைப் பற்றி அந்த மாதிரிச் சந்தேகங்கள் உண்டு.

"அதுவே குடும்பத்துல இருந்து விட்டுக் குடுத்துப் பழகினவர்களுக்கு எதையும் நாசுக்காகச் சொல்லத் தெரியும். நளினமா சொல்லத் தெரியும்," என்றாள் குமுதினி ஆவேசமாக.

"அதுக்கென்ன இப்ப! நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க?" என்றான் தமிழ்மதி.

"சார்! எப்ப நீங்க ஒரு விஷயத்தைப் பத்தி நேரடி அனுபவமும் பெறலையோ அதைப்பத்திப் பேசாதீங்க!"

"அதுசரி! நான் தண்ணி போடறதில்லே. அதுக்காக தண்ணி போடற மாதிரி ஒரு கேரக்டரை என் கதையில படைக்கக் கூடாதா என்ன?"

"சார்! நீங்க கதையில என்ன படைக்கறீங்க என்பது வேற விஷயம்! ஆனா... உங்க கதையில என்ன சொல்ல வர்றீங்கன்றதுதான் முக்கியம். ஏதோ குடும்பங்கறது வலை! பெண்கள்ன்னா... வலைகள்ங்கற மாதிரி ஒரு கருத்தை வைக்கறதைத்தான் நான் எதிர்க்கறேன். ஏன்,



இப்படிச் செஞ்சு பாருங்களேன்...! ஏதோ ஒரு குடும்பத் தோட ஒரு வருஷம் இருந்து பாருங்களேன். அப்பத் தெரியும், குடும்பம்ன்னா என்னன்னு."

"ஹலோ...! நான் இப்ப என்ன காட்டுலயா இருக்கேன்? நாட்டுக்குள்ளே... குடும்பங்களுக்கு நடுவிலதான் இருக்கேன்..." என்றான் தமிழ்மதி, கிண்டலான ஒரு புன்னகையுடன்.

"அதுல என்ன இருக்கு? வெளியில இருந்து பாத்தா என்ன தெரியும்? உங்க நண்பன் விஜயன் வீட்டில எத்தனை பேரு?"

விஜயன் சொன்னான்.

"நான், என் வைஃப், ஒரு குழந்தை."

குமுதினி ஒரு நிமிடம் யோசித்து விட்டுச் சொன்னாள்.

"ம்ஹூம்..! அந்த மாதிரி ஒரு சின்ன ஃபாமிலியிலே நீங்க நுழையவும் முடியாது. எதையும் தெரிஞ்சுக்கவும் முடியாது."

"அப்புறம்?" என்றான் விஜயன்.

தமிழ்மதியும், விஜயனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சட்டென்று தமிழ்மதி கேட்டான்.

"அப்ப உங்க குடும்பத்தோட வந்து ஒரு வருஷம் இருக்கட்டா?"

குமுதினி திடுக்கிட்டுப் போனாள்.

தமிழ்மதி மறுபடியும் கிண்டலாகச் சிரித்தான். "என்ன மேடம்? இலவசமா ஆலோசனைகள் அள்ளி வீசறீங்க. ஆனா... அது நம்ம கிட்டே வரும்போது பின் வாங்கறீங்க!" என்றான்.

"உங்க ஃபாமிலியில எத்தனை பேரு?" என்றான் விஜயன்.

குமுதினி குழப்பத்துடன் விஜயனைப் பார்த்தாள். ஆனால் பதில் சொன்னாள்.

"எங்க அம்மா, அப்பா, நான், என் சிஸ்டர். அப்புறம் பிரசவத்துக்காக வந்திருக்கிற என் தங்கை..." என்றாள்.

"ஓ...! உங்க வீட்ல அவரு?" என்றான் விஜயன்.

"இல்லே! எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலே! எனக்குக் குடும்பத்துல சில பொறுப்புகள் இருக்கு. அதனால இப்பக் கல்யாணம் பண்ணிக்கலே!" என்றாள்.

'அது உங்க விஷயம்,' என்பது போலத் தோள்களைக் குலுக்கினான் தமிழ்மதி.

"சவால் விட்டீங்க! இப்ப என்னவோ யோசிக்கறீங்க?" என்றான் தமிழ்மதி.

"எனக்கொண்ணும் அப்ஜக்ஷன் இல்லே! ஆனா... எங்கப்பா ஒத்துக்குவாரோ என்னவோ, தெரியலை..." என்று இழுத்தாள்.

"ம்..!" என்று முகவாய்க் கட்டையை நீவிக் கொண்ட தமிழ்மதி,

"அவரு என்னவா இருக்காரு?" என்று கேட்டான்.

"அவரா..? அவரு..." என்று ஏதோ சொல்ல வந்த குமுதினி, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். கொஞ்சம் அடங்கிய குரலில்,

"அவரு... அவரு... சும்மாதான் இருக்காரு..." என்றாள்.

"மேடம்! சவால்னு இவ்வளவு தூ
தாச்சு..! உங்கப்பாவைக் கன்வின்ஸ் பண்ண
என் பொறுப்பு! நீங்க ஒத்துக்கறீங்களா?"

குமுதினிக்கு வேறு வழியே இருக்கவி
கொண்டுதானே ஆக வேண்டும்.

"ம்...!" என்றாள் அரை மனதாக.

தமிழ்மதியும், குமுதினியும் ஒருவிதமான
தில் தவிக்க, விஜயன்தான் இந்தச்
ரொம்பவும் ரசிக்கிறாற் போல இருந்தது.

"சரிடா, தமிழ்! நாம போய் அவ
சந்திக்கிறோம்," என்றான்.

கொஞ்சம் கறுப்பாக, குண்டாக ஈஸி சே
கொண்டிருந்தார், குமுதினியின் அப்பா ச

"வாங்க! வாங்க!" என்று வரவேற்றாள்

குமுதினியின் அம்மா மீனாட்சி பின்னா

"வாங்க!" என்று வரவேற்றார்.

எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று
விஜயனும் முன்னாலேயே ஒத்திகை பார்
அதனால் விஜயன் மெதுவாக ஆரம்பித்தா

"சார்! வணக்கம்!" என்றான் பவ்யமாக.

"வணக்கம்... உட்காருங்க!" என்றார் ச

"இது எழுத்தாளர் தமிழ்மதி...!" என்று
அறிமுகப்படுத்தினான்.

"ஓஹோ! என்னடா முகம் பரிச்சயமா
பார்த்தேன். அடிக்கடி பத்திரிகையில வருத
மக சொன்னா.. விஷயத்தைச் சொல்லுங்க,

விஜயன் மெதுவாகச் சொன்னான்.

''சார்! தமிழ்மதி கொஞ்சம் ஃபேமஸ்! இப்பக் குடியிருக்கற இடத்துல... அடிக்கடி வாசகர்கள், பேட்டின்னு யாராவது வந்தர்றாங்க. இப்ப அவரு ஒரு பெரிய சரித்திரத் தொடர் எழுதிக்கிட்டிருக்காரு! அதனால அந்த இடத்தை விட்டுட்டு எங்காவது பேயிங்கெஸ்ட்டா இருக்கலாம்னு ஒரு ஐடியா! அப்ப நம்ம வானொலி நிலைய இயக்குநர் தான் உங்க வீட்டை ரெகமண்ட் பண்ணினாரு.'' என்றான்.

''நிலைய இயக்குநர் சொன்னார்னு சொல்லுங்க.. அப்பத்தான் எங்க அப்பா எதிர்க்க மாட்டாரு...'' என்று குமுதினிதான் ஐடியா கொடுத்திருந்தாள்.

''ம்..!'' என்று ரொம்பவும் யோசிப்பவர் போல நடித்தார், சுந்தரலிங்கம்.

குமுதினி லேசான கடுப்பில் இருந்தாற் போல இருந்தது.

''என்னடி மீனாட்சி... நீ என்ன சொல்றே?'' என்றார் மனைவியைப் பார்த்துக் கெத்தாக.

''குமுதினியைக் கேளுங்க,'' என்றாள் அவள்.

''என்னம்மா?'' என்றார் குமுதினியைப் பார்த்து.

''எனக்கொண்ணும் அப்ஜெக்ஷன் இல்லே! நமக்கும் ஹெல்ஃபுல்லாத்தான் இருக்கும்...'' என்றாள்.

வீட்டைப் பிரித்து எப்படி வைத்துக் கொள்வது என்று யோசித்தார்கள்.

அந்தக் காலத்து வீடு.

நுழைந்தவுடன் ஒரு பெரிய சிட் அவுட்! அதன் பக்கவாட்டில் ஒரு கதவு. அங்கே ஒரு அறை இருந்தது. அதன் உள்ளே போனால் அதன் தொடர்ச்சியாக ஒரு அறை இருந்தது.



இது தவிர சிட் அவுட்டிலிருந்து உள்ளே போனால் ஒரு பெரிய கூடம் இருந்தது. கூடத்தில் இருந்து நுழைகிறாற் போல் இடது புறத்தில் ஒரு அறை இருந்தது.

கூடத்தில் வாயில் கதவுக்கு நேராக ஒரு கதவு இருந்தது. அதில் நுழைந்தால் சமையல் கம் ஸ்டோர் இருந்தது. கூடத்திலேயே வருகிற மாதிரி முன்புற அறையும், நேர் எதிரே இன்னொரு அறையும் இருந்தது.

கட்டடத்தின் வலது புறத்தில் இரண்டு அறைகளை மட்டும் தனியாக ஒதுக்கி விடலாம் என்று திட்டம் போட்டார்கள்.

கூடத்தில் இருந்து நுழைவு கதவை மூடிவிட்டால் இரண்டு அறைகளும் தமிழ் மதிக்குப் புழங்கிக் கொள்ள வசதியாக இருக்கும் என்று தோன்றியது.

இதற்குள்ளாக விஜயன் அப்பாவிடம் தனியாக ஏதோ கிசுகிசுத்தான். அதற்குப் பிறகு சுந்தரலிங்கத்தின் தோரணையே மாறிப் போனது.

''தாராளமா... வாங்க தம்பி! நான் ஒருத்தன் மட்டும் ஆண் துணையா நடமாடிக்கிட்டிருக்கேன்! எனக்கும் பேச்சுத் துணையா இருக்கும்,'' என்றார்.

தமிழ்மதி கண்ணாலேயே, ''என்னய்யா மந்திரம் போட்டே?'' என்று கேட்க,

''அப்புறம் சொல்றேன்பா!'' என்று கண்ணாலேயே பதில் சொன்னான்.

''இரண்டாயிரம் ரூபா வாடகை குடுத்துர்றோம்! அது போகச் சாப்பாட்டுக்குன்னு ஒரு தொகை...'' என்றான் விஜயன்.

அதற்குப் பிறகு திட்டங்கள் எல்லாம் வேகமாகப் போடப்பட்டன!

பத்திரிகையாளர் குடியிருப்பில் உள்ள வீட்டை அலு வலகம் போல வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள். அன்றைக்குப் பேசி முடித்து விட்டுப் போகிற போது வழியில் கேட்டான் தமிழ்மதி.

''ஏண்டா! சுந்தரலிங்கம் என்ன ஒரேயடியா பல்டி அடிச்சுட்டாரு!'' என்றான்.

விஜயன் ஒரு பெருமூச்சுடன் சொன்னான்.

''தமிழு! சுந்தரலிங்கம் பழைய பெருங்காய டப்பா! குடும்ப பாரத்தை முழுக்கக் குமுதினிதான் சுமக்குது! அப்பாவுக்கு அப்பப்ப கொஞ்சம் தீர்த்தம் வேணும்போல இருக்கு! அதெல்லாம் தமிழ்மதி ஈஸியா செஞ்சு குடுப்பார்! உங்களுக்குன்னு தனியா கைச்செலவுக்கு ஒரு அமௌண்ட் குடுக்கறோம்னேன். அவ்வளவுதான். அப்பா பேசற தோரணையே மாறிப் போச்சு..!'' என்றான்.

தமிழ்மதிக்கு ஏனோ குமுதினிதான் குடும்ப பாரம் முழுக்கச் சுமக்கிறாள் என்ற வார்த்தைகள்தான் மனதைத் தாக்கியது.

நிஜமாகவே அந்தக் குடும்பத்தோடு இருப்பது தமிழுக்கு ஒரு அனுபவமாக இருக்கும் என்று விஜயனுக்குத் தோன்றியது.

குமுதினியின் மேல் இனம் புரியாத ஒரு மரியாதை உணர்வு ஏற்பட்டது. அதற்குப் பிறகு சந்தித்த போதெல் லாம் குமுதினியிடம் மரியாதையுடனே பேசினான்.

நண்பர்கள் உறவினர்கள் எல்லோரிடமும் ஏற்கெனவே இருக்கிற இடத்தில் எழுதுவதற்குத் தேவையான அமைதி யான சூழ்நிலை கிடைக்க மாட்டேன் என்கிறது. அதனால் தான் இந்த ஏற்பாடு என்றே சொல்லி விட்டார்கள்.

சொன்னார்கள். அவர் சிரித்துக் கொண்டார்

இப்போது குடித்தனமும் வந்தாகி விட்ட
யாளர் குடியிருப்புக்கு வெகு அருகில்த
விஜயனுக்கும் சௌகரியமாகத்தான் இருந்

''சார்! காபி சார்!'' என்று கொண்டு வந்த

மீனாட்சியம்மாள் புன்னகையுடன் உ
பாந்தமும், பக்குவமும் ஜொலிக்க. அந்த
குங்குமம் வைத்துக் கொண்டிருந்த விதம்
அவனுடைய அம்மாவை நினைவு படுத்தி

தாயின் நினைவு அடி வயிற்றிலிருந்
கொண்டு வந்தது. வாஞ்சையாக அவ
கொண்டிருந்தான்.

காபி வெகு சுவையாக இருந்தது. அ
உள்ளே இறங்கியது.



## 11

''என்ன மேடம்,
வேண்டாம்னு சொ
என்றான் தமிழ்மதி.

அன்றைக்குத்தானே
குடியேறியிருக்கிறோம்
அவன் எங்கும் போகவில்
களைக் கொண்டு வந்து சேர்ப்பதும், ஒ
வதுமாக வேலை நெட்டி வாங்கிவிட்ட
மாலையில் ஓய்வாக அமர்ந்து இருந்தார்கள்

விஜயனும், அவனும் எதிரெதிரே
அமர்ந்திருந்தார்கள். கவனமாகத் தங்கள் ே

பக்க வாட்டில் இரண்டு கூடைச் சேர்கள் போட்டு அமர்ந்திருந்தார்கள்.

''டேய் விஜி! அண்ணனுக்குச் சொன்னாயாடா?'' என்றான் தமிழ்மதி.

''அண்ணன் இப்ப வருவாங்க...!'' என்றான் விஜயன். தொடர்ந்து. ''அண்ணனுக்குக் கொஞ்சம் வருத்தம்தான்,'' என்றான்.

''ஏன்?'' என்றான் தமிழ்மதி, ஆச்சரியமாக.

''ஏன்... தம்பியே இதை என்கிட்ட சொல்லி இருக்கலாமில்லே! இப்ப வீடு மாற என்ன அவசியம்? அப்படீன்னெல்லாம் கேட்டாரு..!'' என்றான் விஜயன்.

''இல்லடா! அவர்கிட்டே என்ன காரணம் சொல்றதுன்னு தெரியலை. முடிவு எடுத்த அப்புறம்தானே நீ சரியான காரணத்தை உருவாக்கினே..!'' என்றான்.

''ஏன்... இன்னொரு வீடு எதுக்கு? அப்படி அவனுக்குத் தனிமை தேவைன்னா... பிரஸ்ஸுக்குப் பின்னாலேயே ஒரு ரூம் அவனுக்குன்னு இருக்கு. அப்படீங்கறாரு..! கத்தறாரு...'' என்றான்.

''கத்தட்டும். விடு! நம்மளுக்கும்தான் அப்படிக் கத்தறதுக்கு யாரு இருக்கா?'' என்று சிரித்தான் தமிழ்மதி.

''தமிழு! அண்ணனுக்கு உள்ளூர ஒரு வருத்தம். நீ அவரோட ஒட்டறதே இல்லையாம். நான் ஒரு மாதிரிச் சமாதானம் சொன்னேன்.''

''என்ன சொல்லியிருப்பே! 'எழுத்தாளர்னாலே ஒரு மாதிரி இருப்பாங்க. பாசம் எல்லாம் இருக்கு! இல்லாட்டி அச்சகத்தை உங்களுக்குக் குடுத்திருப்பானா?' அப்படீன்னுருப்பே. அவரும் குளிர்ந்து போயிருப்பாரு...'' என்று சிரித்தான் தமிழ்மதி.

விஜயன்.

உண்மைதான்.

தாமோதர மாமா மறைந்த வுடனே அ
கைக்கு வந்தது. தாமோதரன் தெளிவாக
ருக்கு எழுதி வைத்திருந்தார். ஆனால்
அப்படி ஒரு இடத்தில் முடங்கிக் கொள்
இல்லை. அப்போது சகோதரனுக்கும் அ
பார்த்துக் கொண்டிருந்த கம்பெனியில்
பிரச்சினை. 'ஒண்ணும் சரியில்லைடா...
புலம்பிக் கொண்டிருந்தார். ஒரே முடிவாகப்
அச்சகத்தைப் பார்த்துக் கொள்ளச் செய்தான்

அச்சகத்தை அவருக்கென்றே கொடுத்
குமாரவேலுக்கு அது மிகவும் உதவிகரம
ஆனால் தம்பி தன் அன்பை வெளி
காட்டுவதில்லை என்ற வருத்தமும் இருந்

விஜயனும், அவனும் தனது சகோதர
பேசிக் கொண்டிருக்கையிலேயே, குமுதி
லிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

''ஹலோ...!'' என்று சிரித்தாள்.

''வாங்க மேடம்! உட்காருங்க!'' என்
கூடைச் சேரைப் போட்டான் விஜயன்.

குமுதினிக்குக் களைப்பாக இருந்த
அழைத்த மரியாதைக்காகக் கொஞ்ச நேர
என்று அமர்ந்தாள்.

அப்போதுதான் தமிழ்மதி கேட்டான். ''
அட்வான்ஸ் வேண்டாம்னு சொல்லிட்டீங்

"சார்! என் சம்பளம் குடும்பச் செலவுக்குச் சரியா இருக்கு. உங்ககிட்டே பத்தாயிரம் பதினைந்தாயிரம்ன்னு வாங்கி அது செலவாய்ப் போச்சுன்னு வைங்க..! அப்புறம் லோன்... கீன்னு போட்டுப் புரட்டணும்.. எதுக்கு?" என்றாள்.

தமிழ்மதி சிரித்துக் கொண்டே சொன்னான். "இல்லே! நான் வேற மாதிரி நினைச்சேன். எந்த நிமிஷம் நானோ நீங்களோ தோத்தாச்சுன்னு முடிவாச்சுன்னு வைங்க. அப்பவே மூட்டையைக் கட்டிட்டுப் போகலாம்னு, அனுப்பிரலாம்னு யோசிச்சீங்களோன்னு நினைச்சேன்," என்றான்.

குமுதினி குறும்பாகப் பார்த்தாள்.

"இவ்வளவு யோசிக்கறதுனாலதான் நீங்க எழுத்தாளரா இருக்கீங்க. சார்! கவலைப்படாதீங்க! எப்படியும் மூட்டை கட்டறதுக்கு மூணு மாசம் டைம் குடுப்போம். இப்ப 'டெனன்ட்'ன்னு ஆயிட்டீங்களே! உலக வழக்கப்படி நடந்துக்குவோம்," என்றாள்.

"ஆனா.... உலக வழக்கப்படி அட்வான்ஸ் வாங்கிக்க மாட்டேங்கறீங்க. ஓ.கே. ஒண்ணு செய்வோம். வாடகைப் பணம் ரெண்டாயிரத்தையும் முதல்லயே ஒண்ணாந்தேதி குடுத்தர்றோம். வீட்டுச் செலவுக்குப் பணம் மாசக் கடைசியா குடுக்கறோம்," என்றான் தமிழ்மதி.

குமுதினி ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, "ஓ.கே. சார்! அதுவும் நல்லதுதான்," என்று எழுந்து போனாள்.

சற்று நேரத்தில் குமரவேல் வந்தான்.

"என்னடா... தம்பி! பேசாம நீ நம்ம வீட்டுக்கு வந்திருக்கலாமே!" என்றான் வருத்தத்துடன்.

"அண்ணா... கோபிச்சுக்காதே! நான் சுதந்திரமா இருந்து பழகிட்டேன். இனிமேயெல்லாம் வந்து

செய்யறேன்... ஞாயிற்றுக்கிழமை நான் ச
அங்கே வந்தர்றேன். அதுவும் ஊரில இ
இலக்கியக் கூட்டத்துக்கும் போகாம இருந்தா

குமரவேல் மகிழ்ந்து போனான். ஆ
உள்ளூரச் சிரித்துக் கொண்டான். ஏதோ வ
போகிறான் போலத் தமிழ்மதி சொல்கி
குமரவேல் மகிழ்ந்து போனான். ஆனா
மாதத்தில் ஓரிரு ஞாயிற்றுக்கிழமைகள்தான்
மாதிரி வீட்டில் இருப்பான் என்பது அவனுக்
அண்ணனைத் திருப்திப்படுத்தினாற் பே
தன்னுடைய சுதந்திரத்தையும் காப்பாற்றி
போல ஆயிற்று என்று எண்ணிச் சிரித்துக்

எட்டு மணியளவில் விஜயன் கிளம்பின
போது குமுதினியின் குடும்பத்தாரிட
கொண்டான்.

"இருங்க சார்! இங்க டிபன் சாப்பிட்டு
களாம்!" என்றாள் குமுதினி.

"இல்ல மேடம்! இன்னைக்குக் கா
வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கவே இல்லை
கூடப் பேசாம இருப்பா! ஆனா.. என் மக வா
இப்பவே போய் அவ முன்னால தோ
போடணும்," என்று சொல்ல, 'உங்களுக்கு
பிரண்டா?' என்று தமிழ்மதியைப் பார்த்தா

"நீங்க வேற... நான் அந்த மாதிரியெல்
கரணம் போடறதாவே இல்லையே!
சிக்கிக்கலை!" என்று அழகாகப் பதில் வை
டிருந்தான் தமிழ்மதி.

குடுங்கடா! அப்புறம் தொடரலாம்,'' என்று கிளம்பினான் விஜயன்.

சிரித்துக் கொண்டே திரும்பிய தமிழ்மதி,

''கலை.. ரொம்ப ஸ்மார்ட்!'' என்றான்.

''அது யாரு.. கலை?'' என்றாள் குமுதினி.

''விஜியோட குழந்தை! நம்ம பிரண்ட்!'' என்றான்.

''வாண்ணா! உள்ளே போலாம்!'' என்று குமரவேலை உள்ளே அழைத்துப் போனான் தமிழ்மணி.

குமுதினியின் தங்கை அமுதாவின் குழந்தைக்கு இன்னும் பெயரிடப் படாததால் 'பாப்ஸ்' என்று அழைத் தார்கள். சிணுங்குகிற குரல் கேட்டுக் குமுதினி உள்ளே போனாள்.

குமுதினியின் இளைய தங்கை கீதாலட்சுமி தனது இரட்டைப் பின்னலை ஆட்டியபடி அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

கையில் கொஞ்சம் ஸ்வீட்டும். காரமும் கொண்ட இரு தட்டுகள் வைத்திருந்தாள். ''வரலாமா?'' என்றாள்.

''வாம்மா..!'' என்றான் தமிழ்மதி.

சுவாதீனமாக உள்ளே நுழைந்து டீபாயின் மேல் வைத்தாள்.

''சார்..! காபியா பாலா... என்ன சாப்பிடறீங்கன்னு அம்மா கேட்கச் சொன்னாங்க!'' என்றாள். பிறகு அவளே பெரிய மனுஷியைப் போல,

''காபி வேண்டாம் சார்! தூக்கத்தைக் கெடுத்துடும். பால் சாப்பிடறீங்களா? இல்லே, டிபனே சாப்பிடுங் களேன்...'' என்றாள்.

இல்லம்மா...! நான் டிபன் சாப்பிட நே
குடுங்க...! இவனுக்கு வேண்ணா. டி
என்றான் குமரவேல்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தா
போலத் தனது ஆதங்கங்களையெல்ல
தீர்த்தான் குமரவேல்.

''பங்கஜமும், சரோஜாவும் ரொம்ப வரு
நல்ல நாள், பொல்லா நாள்ன்னு இந்தப் பை
வந்து எட்டிப் பாத்தா... என்ன? ஏன் இ
இருக்கான்... புலம்பல்! உங்க அண்ண
மென்ன.. 'தம்பி! பழசையெல்லாம் மறக்க
மறந்திருந்தா நம்ம வீட்டுல வந்து ஏதோ
தங்கும்'ங்கறா,'' என்றான் குமரவேல்.

தமிழ்மதி, ''வரக்கூடாதுன்னு இல்லண்ண
வேலை வந்துடுது. அடுத்த புத்தகம், அடுத்
பதிப்பாளர்கள் பிடுங்கி எடுக்கறாங்க!
இலக்கியக் கூட்டம் அது இதுன்னு...'' என்
வேல் குறுக்காகப் புகுந்தான்.

''இத பார் தம்பி! என் மனசுல எங்க
வெறுப்பு இருக்கோன்னு எனக்கும் கவலை
சிஸ்டர்ஸ் வீட்டுக்குப் போறதையும் ஏ
கூட்டத்துக்குப் போற மாதிரி நினைச்சுக்க!
பொண்ணு ஸ்கூல் ஃபர்ஸ்ட் வந்தப்ப
மட்டும் அனுப்பினியாம்! மாமா மட்டு
வந்திருந்தா.. மாமா கூட ஒரு போட்டே
லாருக்கும் பெருமையாக் காட்டியிருப்பேன்
புலம்பிக்கிட்டேயிருக்காளாம்.''

''சரிண்ணா! ரொம்ப வருத்தப்படா
மாசத்துல இருந்து சொந்தக்காரங்க

ஒரு நாலு நாள் ஓடிவிட்டேன்," என்றான் தமிழ்மதி.

அப்போதைக்குத் தப்பிப்பதற்காகத் தம்பி அப்படிச் சொல்கிறான் என்று புரிந்து கொள்ளாத குமரவேல் மகிழ்ச்சியானான்.

''நாளைக்கு அண்ணி வர்றேன்னா... உன்னைப் பார்க்கணுமாம்! அந்தச் சின்னக் குட்டி இளவரசி சித்தப்பாவைப் பார்க்கணும்னு ஒரே அடம்!'' என்றான்.

''சரிண்ணா! வர்றதுக்கு முன்னாலே ஒரு கால் போடச் சொல்லுங்க..!'' என்றான் தமிழ்மதி.

அண்ணனை வழியனுப்பி விட்டுத் திரும்பினான். குமுதினி நின்று கொண்டிருந்தாள்.

''சார்! இன்னைக்கு ஒரு நாள் எங்களோடு சாப்பிடுங்க...'' என்றாள்.

போனான்.

பழைய வீடு. கூரை கூட மெட்ராஸ் சி.ஆர். என்பார்களே, அது மாதிரித்தான். ஆனால் துப்புரவாக வைத்திருந்தார்கள்.

ஆர்.எஸ். புரத்தின் கடைக் கோடியில் இருந்தது அந்த இடம்.

அந்தக் காலத்து வீடு என்றாலும் சுற்றிலும் இடம் இருந்தது.

நந்தியாவட்டை, செம்பருத்தி, தென்னை என்று சுற்றிலும் வைத்திருந்தார்கள்.

கூடத்தில் தூண்களில் மஞ்சள் பூசி, அதன் மேல் குங்குமப் பொட்டு வைத்து அழகாக வைத்திருந்தார்கள்.

பெரிய டைனிங் டேபிள்!

குமுதினியின் அப்பா அந்த டைனி
தட்டிச் சொன்னார்.

''இந்தக் காலத்துல இப்படி மரத்தைப் ப
எங்க தாத்தா காலத்துது. நாலு வேலி
சாவூருக்குப் பக்கத்துல! ஆர்.எஸ்.புரத்து
வீடு.''

சமையலறையில் எதையோ எடுக்கப்
வந்தவுடன் 'டக்' என்று பேச்சை நிறுத்தி

கீதா கையால் வாயைப் பொத்திக் கொ
குமுதினி இதையெல்லாம் கவனித்தாளே
முகம் கொஞ்சம் இறுக்கமாக இருந்தாற்

தமிழ்மதியும் எதையும் காட்டிக் கொ
கொண்டான்.

''சார்! இட்லி சட்னி..!'' என்று பரிம
சாப்பாட்டுக்கே மீனாட்சியம்மா கேசரி
இப்போதும் அதைக் கொஞ்சம் வைத்தார்

''இட்டிலிப் பொடி... வைக்கட்டு
மீனாட்சியம்மாள்.

''ம்.. வைங்க! அதெல்லாம் வெட்டு
புன்னகைத்தான் தமிழ்மதி.

வீட்டு இட்லியும், அப்போதே சு
கொடுத்த தோசையும் அமிர்தமாக இறங்க

சாப்பிட்டு விட்டுத் தன் போர்ஷ
தமிழ்மதி.

சற்று நேரம் ஏதோ படித்துக் கொ
குமுதினி வீட்டுக்குள் விளக்குகள் அணை
தெரிந்தது.

அவன் புத்தகத்தைத் தொடர்ந்து படித்தான். அப்போது குமுதினியின் தந்தை சுந்தரலிங்கம் எட்டிப் பார்த்தார்.

அவன் புத்தகத்தை மூடி வைத்து விட்டு, "வாங்க... சார்," என்றான்.

வந்தார். தயங்கினாற் போல் சேரில் அமர்ந்தார்.

"இல்லே! எனக்கும் தனியா ஏதோ பாக்கெட் மணி மாதிரித் தரேன்னு சொன்னீங்களாம்!" என்றார்.

"ஓ!" என்று எழுந்த தமிழ்மதி தன் பீரோவைத் திறந்து ஐந்நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தான்.

உற்சாகமாகக் கையிலிருந்து பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டார் சற்று நேரம் சளசளவென்று பேசினார்.

'பெருங்காய டப்பா!' என்று விஜயன் சொன்னது நினைவு வர, மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

அவன் கொடுத்த ஐந்நூறு ரூபாயால் அடுத்த நாள் எவ்வளவு பெரிய பிரளயம் வரப் போகிறது என்று அப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

## 12

பத்திரிகையாளர் குடியிருப்பில் இருந்த அந்த வீட்டை அது சொந்த வீடென்பதால் இந்த இடைக்கால ஏற்பாட்டுக்காக விட்டு விட விரும்பவில்லை தமிழ்மதி.

எந்த நேரமும் தான் குமுதினியின் வீட்டில் இருந்து வெளியேறுகிற சூழ்நிலை வந்தாலும் அதற்குத் தான் தயாராக இருக்க வேண்டும் என்று



எண்ணினான். அதற்கேற்ப காலனி வீடு தன் பொறுப்பில் இருக்க வேண்டும் என்று விரும்பினான்.

அதிலும் இரண்டும் பெட்ரூம் இருந்தது. சின்னதாய் ஒரு கூடம் இருந்தது. அமைதியான சூழல். அழகான தனி வீடு. சிறிய வீடென்றாலும் ஒண்டுக் குடித்தனங்கள் போல கசகசப்பாக இராது. விஜயனின் மனைவி வீட்டைச் சுற்றிலும் செடிகள் போட்டுப் பராமரித்து வந்தாள்.

விஜயன் வீட்டிலும் தன் வீட்டிலுமாக வளர்கிற காய் கறிகளே வீட்டுக்குப் போதுமான அளவில் இருக்கிறாற் போலப் பார்த்துக் கொண்டாள். தண்டுக்கீரை பசலைக் கீரை என்று கீரை வகைகள் வேறு.

பசலைக் கொடி அடர்ந்து படர்ந்திருந்ததாலேயே தமிழ்மதி காம்பவுண்ட் கூடக் கட்டவில்லை. தனது வீட்டையும் சேர்த்துப் பராமரிக்கிற விஜயனின் மனைவி மஞ்சுளாவின் மேல் அவனுக்கு மதிப்பு.

ஒரு சகோதரனைப் போலத் தன்னிடம் அன்பு செலுத்துகிற விதம், இங்கிதம் தெரிந்து தனக்கும் விஜயனுக்குமான நட்பில் சுதந்திரம் கொடுப்பது என்று மஞ்சுளாவின் பக்குவமான நடத்தையில் அவனுக்குத் திருப்தி. இப்படிப் பெண்களும் இருக்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றியதனாலோ என்னவோ மஞ்சுளாவைப் பொறுத்தவரை பெண்களின் மேல் மதிப்புக் குறைவு என்ற தன் எண்ணத்தை அவன் காட்டவேயில்லை. மிகவும் அன்புடனும், மரியாதையுடனும் நடத்தினான். ஆனால் மஞ்சுளாவின் கண்களில் சில நேரம் தன்னைப் பார்க்கும்போது குறும்பு மின்னுகிறாற் போலத் தோன்றும்.

தமிழ்மதி கவனித்திருக்கிறான்.

அதிலும் குறிப்பாகக் கலைச் செல்வியின் முகத்தில்
கன்னம் தேய்த்துக் கொஞ்சி விளையாடும் போது அந்தக் குறும்புப் பார்வை மின்னி மறைகிறாற் போலத் தோன்றும். ஒரு நாள் விஜயனிடம் கேட்டான்.

''டேய்! கேக்கறேன்னு தப்பா நினைக்காத! அதென்ன... கலையைக் கொஞ்சி விளையாடும் போதெல்லாம் உன் வைஃப் கண்ல குறும்பு..!'' என்று.

விஜயன் கடகடவென்று சிரித்தான்.

''கண்டு பிடிச்சிட்டியா?'' என்று வேறு கேட்டான். அப்போது தோன்றியது தமிழ்மதிக்கு. மஞ்சுளாவுக்குத் தன்னைப் பற்றி வலுவான கருத்து ஏதோ இருக்கிறது என்று.

விஜயன் சொன்னான்.

''ஆமாடா! மஞ்சுளா அடிக்கடி சொல்வாப்ல. அண்ணன் கலைச்செல்வியைக் கொஞ்சுவதைப் பார்த்தாலே தெரியும். குழந்தைங்க மேலே இத்தனை அன்பு செலுத்தறவங்களுக்கு கண்டிப்பா இதயம் இருக்குதாம். அந்த இதயத்துல காதல் வருமாம். வரும் போது சும்மா புயல் மாதிரி வருமாம்!'' என்று விஜயன் மறுபடி சிரித்தான்.

''அது சரி! என்னோட இதயத்தை நீங்க ரெண்டு பேரும் அக்கு வேறா ஆணி வேறா அலசுவீங்களாட்ட இருக்கு!'' என்று கேலி பேசித் தன் வெட்கத்தை மறைத்துக் கொண்டான் தமிழ்மதி.

தமிழ்மதியும், விஜயனும் யோசித்து ஒரு முடிவு செய்தார்கள். அதன்படி காலனி வீட்டை அலுவலகமாக வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்துக் கொண்டார்கள். அதன்படி காலையில் பத்து மணிக்கு அந்த வீட்டுக்கு வந்து விடுவான் தமிழ்மதி.

இரவு எட்டு மணி வரை இருந்து விட்
போல வைத்துக் கொள்ளலாம் என்றான்

விஜயன் யோசித்தான்.

''அப்படியெல்லாம் ஸ்ட்ரிக்ட் டைமி
காலைல கரெக்டா வந்துரு. ஈவ்னிங் கொ
கூடப் போலாம்,'' என்றான்.

இதற்கு நடுவே வெளியூர் அழைப்புக
என்று திட்டமிட்டுக் கொண்டான்.

நல்லவேளையாக இந்த வாரத்தில் கூட்
இல்லை. அதனால் இரண்டு வீட்டிலும்
யும் ஒழுங்கு படுத்தி விடலாம் என்று எ

அன்றிரவு ஏழு மணி வரையிலும் க
இருந்து விட்டுப் புறப்பட்டார்கள்.

தனக்கென்று அவன் ஒரு பைக் வை
விஜயனுக்கென்று ஒரு பைக் கொடுத்தி
வேளையாக விஜயனைப் போன்ற உதவி
தால் அவன் வாழ்க்கை பிழைத்தது.

பொதுவாக எழுத்தை நம்பிப் பெரிதா
விட முடியாது என்பார்கள். ஆனால் விஜய
அந்த விஷயங்களைக் கையாண்டான்.

கல்லூரிகள், மற்ற இடங்கள் என்று அ
கறாராக ஒரு தொகை பேசி விடுவான்.

''டேய்! எதுக்குடா இப்படியெல்லாம்
கறே?'' என்று தமிழ் மதி கேட்டால்,

''நீ இந்த விஷயத்துல இருந்து ஒதுங்கு
மையை எட்டறதுக்கு நீ எவ்வளவு உழைச்சிரு

''டேய்! இது எனக்குத் தொழில் இல்லடா!'' என்பான் தமிழ்மதி.

''யார் சொன்னா? எழுத்து ஒரு கலைதான். ஆனா, எழுத்தாளனுக்கு ஒரு வயிறு இருக்கு! அது மட்டுமல்ல, நான் பணம் கேட்கிற இடங்களைக் கவனிச்சுப் பாரு! வசதியான இடங்கள்லதான் பணம் கேட்பேன். போன வாரம் அந்த அனாதை விடுதியில கூப்பிட்டாங்க. பணம் கேட்டேனா! நாம கைச் செலவு செஞ்சுகிட்டுப் போனோம். நம்ம செலவுல ஸ்வீட், காரம் வாங்கிக் குடுத்துட்டு வந்தோம்,'' என்பான்.

விஜயன் செய்கிற வாதங்களில் நியாயம் இருக்கிற மாதிரித் தெரியும். விட்டு விடுவான். புத்தகங்களிலும் சரி, சரியான சன்மானம் தருகிற பதிப்பகங்களைத் தேர்ந்தெடுப்பதும் விஜயன்தான்.

''பாரு! தமிழே! உன்னோட மதிப்பைப் புரிஞ்சுக்க! உன்னோட புகழையும், அறிவையும் வச்சு யாரோ என் கேஷ் பண்ணிவிடக்கூடாதில்லே! நமக்கு உரிமையுள் ளதை விட்டுக் கொடுக்கவே கூடாது,'' என்பான்.

விஜயன் இருப்பது தமிழ்மதிக்கும் சௌகரியமாக இருந்தது.

''பண விஷயம்லாம் நான் பாக்கறது இல்லே! விஜியைக் கேளுங்க..'' என்று கழன்று கொள்வான். ஆனால் வாரம் ஒரு முறை பைசா விடாமல் கணக்கெழுதி ஒப்படைப்பான் விஜயன்.

''நான் என்னத்தைடா பாக்கறது,'' என்பான் தமிழ்மதி.

''தப்புப் பண்ணாதே தமிழு! கணக்கு என்னன்னு பாரு! கணக்குக் கேளு! அப்படி நாலு தடவை நீ பாக்காம விட்டேன்னா... எனக்கும் சுருட்டத் தோணும். அப்புறம்



நம்ம நட்புக் கெட்டுப் போகும். நம்ம நட்பு எப்பவ நிலைக்கணும்னா... பணத்துல கரெக்டா இருப்போம் என்பான்.

தமிழ்மதி அதை யெல்லாம் ஒத்துக் கொள்வா திருமணத்திற்குப் பிறகுதான் விஜயன் அவனிட வந்தான். ஒரு முறை தமிழ்மதியைப் பார்க்க வந்தான்.

ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனியில் வேலையி இருந்தான். ''வெறும் இரண்டாயிரம் ரூபாய் குடுத்துட்டு பிழியறாங்கடா...'' என்று புலம்பினான்.

''பேசாம எனக்கு செக்ரட்டரியா வந்துரு...'' என் விளையாட்டாகப் பேச ஆரம்பித்ததுதான். அதற்கு பிறகு தமிழ்மதியின் கணக்கு வழக்குகள் ஆராய்ந்தவன்

''என்னடா இப்படிச் சொதப்பி வச்சிருக்கறே!'' என் அங்கலாய்த்தான்.

விடுமுறை நாட்களில் மட்டும் வந்து உத செய்கிறேன் என்று வந்தவன், வாசகர் கடிதங்க பதிப்பாளர்களுக்கு எழுத வேண்டிய கடிதங்கள், இது தவ கணக்கு வழக்கென்று நிறைய வேலைகள் இருந்தை பார்த்தான். இதைத் தவிர நிறையத் தொலைபே அழைப்பும் வேறு.

சில நேரங்களில் தமிழ்மதி கடுப்புடன் ரிசீவ எடுத்து வைத்து விடுவதைக் கண்டான். ''அந்த நேர களில் முக்கியமான அழைப்புகள் வந்தால் என் செய்வது?'' என்று கேட்டான்.

''என்ன செய்யறது? நான் எத்தனையப் பாக்கறது! என்றான் தமிழ்மதி கடுப்புடன்.

''சரிடா! நானே உனக்கு உதவியாளரா வந்தர்றேன், என்றான்.

தமிழ்மதி விடுபட்டாற் போல உணர்ந்தான். அதற்குப் பிறகு விஜயன் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டான்.

விஜயனுக்கு என்று ஒதுக்கிய சம்பளத்தை மட்டும் மாத முதல் வாரத்திலேயே வாங்கிக் கொள்வான். மற்றப்படி பத்துப் பைசா செலவுக்குக் கூட அவனிடம் கணக்குக் கொடுத்து விடுவான். அது மட்டுமல்லாமல், தமிழ்மதியின் புகழைப் பயன்படுத்திக் கொண்டு காக பண்ணுகிறவர்களை இனம் கண்டு கொண்டு சரியாகத் தமிழ்மதிக்கு வர வேண்டிய தொகையை வசூலித்து விடுவான். அதனாலோ என்னவோ தமிழ்மதி, 'வறுமையும் புலமையும் சேர்ந்தே இருக்கும்!' என்ற இலக்கணத்துக்கு மாறாக இருந்தான்.

தமிழ்மதியும் தனக்குக் கிடைக்கிற "காம்ப்ளிமெண்ட்ஸ்" வகைகளில் குடும்பத்துக்குப் பயன்படக் கூடிய விஷயங்களை விஜயனுக்குக் கொடுத்து விடுவான்.

நட்புறவு அடிப்படையிலான உறவு என்பதால் எல்லாமே சிறப்பாகப் போய்க் கொண்டிருந்தது.

பைக்கில் தனது புது வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்போதே நண்பன் விஜயனை நன்றியுடன் நினைத்துக் கொண்டேதான் போனான் தமிழ்மதி. ஆனால் அவனும் கூட, "தமிழு! நீ இப்படியொரு சவாலை ஏத்துக்கிட்டே ஆகணும்," என்று வற்புறுத்தியபோது தமிழ்மதிக்குச் சற்று ஆச்சரியம்தான்.

பைக் காம்பவுண்டுக்குள் நுழையும்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டான்.

ஒரு கூடைச் சேரில் ஏதோ நிறுத்தி வைத்தாற் போன்ற தோற்றத்துடன் குமுதினியின் அப்பா சுந்தரலிங்கம் அமர்ந்திருந்தார்.



கண்கள் செருகினாற் போல இருந்தது. குமுதினி இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு கிட்டத்தட்ட பத்ரகாளி போல் நின்று கொண்டிருந்தாள்.

மீனாட்சியம்மா மகளையும், கணவரையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் கைகளைப் பிசைந்தபடி நின்று கொண்டிருந்தார்.

தமிழ்மதி கூடச் சுந்தரலிங்கம் மயக்கம் கியக்கம் போட்டு விட்டாரோ என்று எண்ணிக் கொண்டு அருகில் போனான்.

அவன் வருவதைக் கண்டவுடனே குமுதினி இடுப்பில் இருந்து கைகளை எடுத்து விட்டாள். ஆனால் கோபம் குறையாமல் நின்றாள்.

அப்போதுதான் கவனித்தான்.

கீதாலட்சுமி குனிந்து தரையில் எதையோ கழுவிக் கொண்டிருந்தாள்.

அருகில் போனவுடன் தெரிந்தது. மதுவின் வாடை.

சுந்தரலிங்கம் திடீரென்று விழித்தார்.

"நூறு வேலி நிலம்டா! மிராசுதார் பரம்பரை...! இப்ப பத்து ரூபாய்க்கு உன் பொண்ணுகிட்டே கையேந்தணுமா? என்னடி மீனாட்சி..." என்று குழறலாகவும், சத்தமாகவும் ஒரு குரல் கொடுத்தார். எழுவதற்கு முயற்சி செய்தார். மறுபடியும் சரிந்து விழுந்தார்.

"அம்மா... இவருக்கு ஏது பணம்?" என்று அம்மாவைக் கேட்டாள் குமுதினி.

தமிழ்மதி சூழ்நிலையைப் புரிந்து கொண்டான். "நான் ஹெல்ப் பண்ணலாமா?" என்று அவரை நகர்த்திக் கொண்டு போய்ப் படுக்கையில் உதவி செய்தான்.

நாற்றம் தாங்கவில்லை. மீனாட்சிம்மா புலம்பிக் கொண்டே அவருக்கு உடைகளை மாற்றி விட்டார்.

தனது அறைக்குப் போவதற்கு முன்பாகத் தமிழ்மதி நின்று குமுதினியிடம் சொன்னான்.

"மேடம்! நான்தான் ஐந்நூறு ரூபாய் குடுத்தேன். வீட்டு வாடகை பேசும்போது அவருகிட்டே ஐந்நூறு குடுக்கணும்னு பேச்சுன்னு விஜிதான் சொன்னான்..." என்றான்.

''உங்களுக்கு எதுக்கு சார் இந்த வேலை?'' என்றாள் குமுதினி, காட்டமாக.

தமிழ்மதி இப்படியொன்றை எதிர்பார்க்கவில்லை.

''ஏன்?'' என்றான்.

''பாருங்க! நீங்க குடுத்த ஐந்நூறு ரூபாய்க்கும் குடிச்சுட்டு வந்திருக்கார். வீடு பூரா நாறடிச்சுட்டார். இந்த வேலை செய்வாருன்னுதான் அவருக்கு ஒரு நாளைக்குப் பத்து ரூபாய்க்கு மேலே நான் குடுக்க மாட்டேன்...'' என்றாள் குமுதினி.

கண்டனமும்; வேதனையும் கலந்து தொனித்த அந்தக் குரல் தமிழ்மதியை என்னவோ செய்தது.

''ஐ'ம் சாரி! நான் இப்படி எதிர்பார்க்கலை,'' என்றான் அவமானம் படிந்த முகத்துடன்.

சரேலென்று தனது அறைக்குப் போய் விட்டான். குமுதினியின் மூத்த தங்கை கையில் குழந்தையை ஏந்திக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றவள், தன் அறைக்குப்போனாள்.

குமுதினி தன் அறை நோக்கி வருவதும், அவள் பின்னாலேயே வந்த மீனாட்சி, அவள் காதுபட

எதுவும் போடாதே! பொறுப்பான ஆம்ப
கிடைச்சிருக்குன்னு இப்பத்தான் கொஞ்
இருக்கேன். உங்கப்பாவைப் பத்தி அவ
தெரியும்?'' என்று பதறிக் கொண்டு சொல்

இப்படியொரு இக்கட்டை எதிர்பார்க்
என்ன செய்வது எப்படிச் சமாளிப்பது என்ற
ஆழ்ந்திருக்கும்போதே, குமுதினி தனது அ
வந்து நிற்பதைக் கண்டான்.

வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு
உறுத்தல் முகத்தில் தெரிய, அந்த இளம்
பார்த்துக் கொண்டு நின்றான்.

## 13

தமிழ்மதியின் முகத்தி
குற்ற உணர்வைப் புரி
டாளோ என்னவோ,
முகத்தில் ஒரு மென்மை

தமிழ்மதியும் மறுப
னான்.

''ஐ'ம் சாரி குமுதினி மேடம். நான் இ
கலை...! அவருக்கும் ஏதோ பாக்கெட்
இருக்கட்டும்னு நினைச்சேன்,'' என்றான்.

''தீர்த்தம் வேணுங்கற ஆசாமி... அ
விதமா அவரை மடக்கினேன்!'' என்று விஜ
உள்ளே ஓடிக் கொண்டிருக்க, உறுத்தல
ஆனால் மறைத்துக் கொண்டான். ஏன் இ
யெல்லாம் சொல்லுகிறோம் என்ற என்

தேவது. ஆனால் தெரிந்து கொடுத்தோம் என்று சொன்னால் குமுதினி சண்டைக்கு வந்தால் கூடப் பரவாயில்லை. அவள் முகத்தில் படியும் வேதனையைத் தன்னால் பார்க்க முடியாது எனத் தோன்றியது.

நன்றாகச் சண்டை போட வேண்டும் என்று வந்த குமுதினி, சட்டென்று அமைதியாகி விட்டாள்.

அவனது அறைக்குள் வந்தாள்.

''உட்காருங்க ப்ளீஸ்!'' என்று ஒரு சேரை இழுத்துப் போட்டான்.

அமர்ந்தாள்.

ஒரு விதமான வேதனையுடனும், சங்கடத்துடனும் அவனைப் பார்த்தாள்.

''சார்! அப்பா கையில காசு குடுக்காதீங்க! போன தலைமுறையில பெரிய மிட்டா மிராசுதார் குடும்பமாம். வெட்டிப் பந்தாவுலயே எல்லாம் தொலைச்சட்டாரு. போயிட்டிருந்த வேலையிலிருந்தும் வாலன்டரி ரிடையர்மென்ட் வாங்கிட்டாரு. வந்த பணம் பூராவும் கரைச்சுட்டாரு! இப்பக் கையில பணம் இல்லை! கொஞ்சம் ஒழுங்கா இருக்காரு. எனக்கு மட்டும்தான் பயப்படுவாரு! எனக்கும் வேற வழியில்ல! கொஞ்சம் மிரட்டித்தான் வச்சிருக்கேன்,'' என்றாள்.

ஒரு நிமிடம் அவள் முகம் பார்த்தான்.

லேசாக மனம் கரைந்தவனாக எதிரில் ஒரு சேரில் அமர்ந்து அவள் சொல்வதை ஆழ்ந்து கேட்கலானான் தமிழ்மதி.

''சார்! தினமும் இப்படித் தண்ணியைப் போட்டுகிட்டு குப்புற அடிச்சுப் படுத்துகிட்டா மீதி நாங்க இருக்கற

அத்தனை பேரும் பெண்கள், என்ன பாடுக
சொல்லுங்க!'' என்றாள்.

தமிழ்மதி ஒரு பெருமூச்சு விட்டான்.

''அது உண்மைதான்,'' என்றான்.

அவள் குனிந்து தனது கைவிரல் நகங்க
கொண்டாள். பிறகு சொன்னாள்.

''சாரி.. சார்! அதனாலதான் உங்ககிட்
என்று இழுத்தாள்.

அவன் சட்டென்று புன்னகைத்தான்.

''நோ பிராப்ளம்..! குமுதினி மே
புரியுது!'' என்றான்.

ஒரு நிமிடம் சங்கடமான மௌனத்தில்

பிறகு சொன்னான்.

''மேடம்! நான் சொல்றேன்னு அடிக்க
இந்தப் பழக்கம் பழகினவங்களால இது இ
முடியாது. எனக்கு எவனெவனோ நல்ல
கொண்டு வந்து குடுப்பானுக. ஹலே
பாக்காதீங்க...! எனக்கு அந்தப் பழக்கம் எ
நான் வேணுமானா மாசத்துக்கு ஒன்று
என்னோட மேற்பார்வையிலேயே கி
கொண்டு வந்து குடுக்கறேன்,'' என்றான்.

''இது தேவையா?'' என்றாள்.

அவன் இழுத்து ஒரு பெருமூச்சு விட்ட

''என்ன செய்யறது? அவரு எந்தக் கு
மையை மறைக்கறதுக்காக இந்தப் பழக்
னாரோ... அவருக்கும் ஒரு அவுட்லெட்
என்றான்.

"சார்! நீங்க ஒரு சிந்தனையாளர். உங்களுடைய நடத்தை மேலயும், நேர்மை மேலயும் இருக்கிற நம்பிக்கையி னாலதான் இங்க எங்களோடு தங்கற அளவுக்கு நான் பர்மிட் பண்ணியிருக்கேன். அதுக்கு மேல நீங்க என்ன முடிவெடுத்தாலும் சரி.. சார்!" என்றாள்.

"கவலையே படாதங்க! யு கேன் ரிலை ஆன் மி!" என்றான் தமிழ்மதி.

"அதுசரி! நீங்க மூணு பேருமே பெண்கள்தானா?" என்றான்.

"இருக்கான் சார்! ஒரு தம்பி இருக்கான்! கீதாவுக்கு முன்னாலே அவன். ஆனா... இப்ப அவன் எங்களோட இல்லை!" என்றாள்.

"எங்கே?" என்பது போலப் பார்த்தான்.

"ஓடிப் போயிட்டான். எங்கப்பா பெருங்காய டப்பா மாதிரிப் பழைய காலத்தைப் பத்தியே பேசிகிட்டு ஒரு கன வுலகத்துல இருக்காரு. அவனுக்குத் திடீர்ப் பணக்காரனா கணும். அதனால பொய், புரட்டு, தில்லு முல்லு நிறைய விஷயங்கள். என்ன உதவி செஞ்சும் அறிவுரை கூறியும் திருத்த முடியலே! திடீர்னு ஒரு நாள் இருபதாயிரத் துக்கும் மேலே இருந்த பணத்தை எடுத்துக்கிட்டு ஆளே அப்ஸ்காண்ட் ஆயிட்டான்!" என்றாள்.

பேசப் பேசச் சட்டென்று நிறுத்தினாள்.

"சார்! பொதுவா.. என் குடும்பக் கஷ்டங்களை யார் கிட்டேயும் சொல்றதில்லே! ஆனா உங்ககிட்டே போய்... அதுவும் பெண்களைப் பத்தி நல்ல ஒபீனியனே இல்லாத உங்ககிட்டே போய்..." என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.

தான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பது புரியத் திடுக்கிட்டுப் போய் நிறுத்தினாள்.



அவன் புரிந்து கொண்டவன் போலப் புன்னகைத்தான்.

"மேடம்! எழுத்தாளன்கிற முறையில என்னோட கருத்துக்கள் வேறாக இருக்கலாம். ஆனா, ரத்தமும் சதையும், இதயமும் உள்ள ஒரு மனுஷனா நீங்க உங்க குடும்பத்துக்காகப் போராடறீங்கங்கறதை நான் புரிஞ்சுக் கறேன். ஐ அப்ரிஷியேட் யூ. என்னோட கருத்து எதுவாக இருந்தாலும் சரி... மத்தவங்க என்னை நம்பிச் சொல்ற விஷயங்களை நான் வெளியிடறதில்லை., முடிஞ்ச உதவிகளைச் செய்வேன். என்னோட கருத்துக்களையும் மீறி நான் கொஞ்சம் நல்லவன்தான்!" என்றான்.

இருவரும் சட்டென்று சிரித்தார்கள்.

"தட்ஸ் குட்!" என்றாள்.

"ஓ.கே.! மறுபடியும் ஐ அப்ரிஷியேட். இனிமே நான் உங்க அப்பாவுக்கு இப்படி உதவியெல்லாம் பண்ண மாட்டேன். நிஜம்மாவே உங்க மதர் சொன்ன மாதிரி இந்தக் குடும்பத்துக்கு ஒரு நல்ல நண்பனா... ஒரு ஆம் பளைத் துணையா இருப்பேன். போதுமா?" என்றான்.

குமுதினியின் முகம் மலர்வதை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

குமுதினி விடைபெற்றுப் போனாள்.

போனவள் சற்று நேரத்திலேயே வந்தாள். கையில் ஒரு டம்ளரில் சூடான பால்.

"சார்! ஏதோ தொண்டை கம்மினாற் போலப் பேசறீங்க! அதான் குறுமிளகு போட்டுக் கொண்டு வந்தேன்," என்றாள்.

அவன் ஆச்சரியமாகப் பார்த்தான். ஆனால் வாங்கிக் கொண்டான்.

"தாங்க்ஸ்!" என்றான்.

"என்ன நீங்களே கொண்டு வந்துட்டீங்க!" என்றாள் தமிழ்மதி.

"பெண்களையே பிடிக்காத ஒரு எழுத்தாளர்கிட்டேயிருந்து பாராட்டு வாங்கியிருக்கேனே, அந்தச் சந்தோஷம்தான்," என்றாள்.

கலகலவென்று சிரித்தாள். அவன் குடித்து முடிக்கும் வரை நின்று டம்ளரை வாங்கிக் கொண்டு நகர்ந்தாள்.

குமுதினி மகிழ்ச்சியோடு போவதை அவன் ஒருவித ஆர்வத்தோடு பார்த்தான். பிறகு வாஷ்பேசினில் கை கழுவிவிட்டு உடனடியாக விஜயனுக்கு போன் செய்து தனது இன்றைய அனுபவத்தைச் சொன்னான்.

"டேய்! உனக்கும் எனக்கும் அவர் தண்ணி போடுவாருங்கற விஷயமே தெரியாதுன்னு சொல்லியிருக்கேன். நீயும் அதையே மெயின்டெயின் பண்ணிக்க," என்றான்.

"சரி... சரி..!" என்றான் விஜயன்.

கடைசியில், "டேய்! குமுதினி உண்மையிலேயே பாவம்டா! எத்தனை ரெஸ்பான்ஸிபிலிட்டியைச் சுமக்குது!" என்றான்.

"ஆமடா...!" பாவம்தான்!" என்று ஒத்து ஊதினான் விஜயன்.

போனை வைக்கும்போது ஒரு விதமான புன்னகையுடன் போனை வைத்தான் விஜயன்.

* * *

குமுதினிக்குள் சிந்தனைகள் புரண்டு ஓடிக் கொண்டிருந்தன.



சட்டென்று தமிழ்மதி மன்னிப்புக் கேட்பாள் என்று அவள் எதிர்பார்க்காதது. அது மட்டுமல்ல. பொதுவாக அவள் யாரிடமும் தன்னுடைய பிரச்சினைகளைச் சொல்ல மாட்டாள்.

ஒவ்வொரு நேரத்துக்கு 'இந்தக் குடும்பத்துக்கு இவ்வளவு உழைக்க வேண்டுமா!' என்று தோன்றும். அதிலும் குடும்பத்துக்காகத் தான் செய்கிற ஒவ்வொரு முயற்சியையும் பழம் பெருமை பேசிக் கொண்டு அப்பா கெடுத்து வைக்கும்போதெல்லாம் அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரும். ஆனால் படிப்புமில்லாமல் பெரிய அளவில் சுய சிந்தனையும் இல்லாமல் பிறந்த வீட்டில் இருந்து தான் கொண்டு வந்த சொத்துக்களையும் சேர்த்துக் கணவர் தொலைப்பதை ஒருவிதக் கையாலாகாத் தனத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்குள் பரிதாபம் மீறிட்டெழும்.

பெரிய சகோதரி அமுதாவின் திருமணத்தின்போது அப்பா செய்த கலாட்டாவெல்லாம் நினைவுக்கு வந்தது.

கலாட்டாவா அது? பெரிய களேபரம் அல்லவா நிகழ்த்திக் காட்டினார்.

"அம்மா..! முதல்ல எனக்குக் கல்யாணம் வேண்டாம். அமுதாவுக்குப் பண்ணிப் பிரசவம், கிரசவம்னு பாத்து முடிச்சா.. கீதா ரெடியாயிடுவா. அதுக்கப்புறம் நான் பண்ணிக்கறேன். அப்படியும் இல்லாட்டி உங்களோடவே இருந்துக்கறேன்," என்று சொல்லும்போதெல்லாம் அம்மா அதற்கும் வேறு அழுவார்.

"நான் பாவி! இந்த ஆளை நம்பி நான் இத்தனை குழந்தைகளைப் பெத்திருக்கக் கூடாது!" என்று.

குமுதினி, "அம்மா! முடிஞ்சு போன விஷயங்களைப் பத்தி இப்ப யோசிச்சு என்ன செய்ய? கௌரவமா எல்லாரையும் கரையேத்தி வைக்கப் பார்க்கலாம்," என்று சமாதானப் படுத்தினாள்.

தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லி ஒரு வரன் அமுதவல்லிக்கு வந்தது.

குமுதினியும், அம்மாவும் போய் நேரில் பேசினார்கள்.

குமுதினி மாப்பிள்ளையின் பெற்றோரிடம் விவரமாகச் சொன்னாள். தங்கள் குடும்ப நிலையை வெளிப்படையாக எடுத்துச் சொன்னாள்.

இருபது பவுன் நகை வேண்டும் என்றார்கள். "சார்! நகை போட்டர்றோம். கல்யாணச் செலவு பண்ணிட றோம். ஆனா.. ஒரே ஒரு வேண்டுகோள். எங்கப்பாவைக் கொஞ்சம் பொறுத்துக்கணும். அந்தக் காலத்து விஷயமே பேசி நடைமுறை உலகம் புரியாம இருக்காரு. நீங்கதான் பொறுத்துப் போகணும்," என்று கைகூப்பி வேண்டிக் கொண்டாள்.

"பரவால்லே! இப்படி ஒரு பொறுப்பான பெண்ணைப் பெத்திருக்கீங்களே!" என்று பாராட்டிக் கொண்டார்கள். ஆனால் ஒரு தவறு செய்து விட்டார்கள்.

தாங்கள் அவர்கள் வீட்டுக்கு வரப் போகிற நாளை முன் கூட்டியே தெரிவிக்கவில்லை.

அந்த நேரம்!

குமுதினி இருக்கவில்லை. கீதாவும் கல்லூரிக்குப் போய் விட்டாள்.

மாப்பிள்ளை கோமகனின் தந்தையார் மட்டும் ஒரு நண்பரை அழைத்துக் கொண்டு வந்திருந்தார்.

காலாட்டிக் கொண்டு டி.வி. பார்த்துக் சுந்தரலிங்கம்தான் கண்ணில் பட்டார்.

"வாங்க! உங்களுக்கு யார் வேணு வேற்றார்.

மீனாட்சியம்மாள் யாரென்று புரிந்து வேற்று அமரச் செய்தார்.

"மீனாட்சி! பலகாரம் கொண்டு வா," மிட்ட கணவரை ஒருவிதக் கையாலா பார்த்துவிட்டு உள்ளே போனார்.

அமுதாவை அழைத்துக் காபி போடச் வெளியே வருகிற ஐந்து நிமிட இடை சுந்தரலிங்கம் தான் யாரென்று காட்டிவி

"ம்.. நீங்க யாரு? என்ன விஷயமா என்று கேட்டார் கெத்தாக.

கோமகனின் தந்தையும், அவரது நண் யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

விஷயம் சொன்னார்கள்.

"ஓஹோ..! ஆபீஸ்ல கிளார்க்கா இரு புள்ளையாண்டானா..?" என்றவர், அதோ லாம். மேலும் சொன்னார்.

"என்ன செய்வது? நூறு வேலி நில பரம்பரை. ஆனா.. இன்னைக்குக் கிளார்க் என்றார்.

கோமகனின் தந்தை சட்டென்று எழு

அதற்குள்ளாக மீனாட்சி வரவே, அவ கெஞ்சுவதைப் பார்த்து அமர்ந்தார்.

''அய்யா! ஒரு காலத்துல நிறையச் சொத்து இருந்து என்னங்க பண்றது? அதெல்லாம் எங்களுக்கும் இல்லை! ஆனா... பொண்ணைக் கண் கலங்காமப் பார்த்துக்கற வரன் கிடைக்கறதே, எங்களுக்கு அதிர்ஷ்டம்ங்க...!'' என்று சமாதானம் போலப் பேசினார்.

நன்றாக உபதேசித்தார். ஆனாலும் சோமசுனின் தந்தைக்குச் சுந்தரலிங்கம் பேசிய விதத்தில் கொஞ்சம் அதிருப்திதான்.

அன்று மாலை!

குமுதினியிடம் மீனாட்சி நடந்ததையெல்லாம் கூற, குமுதினிக்குக் கோபம் பொங்கியது. ''ஒருத்தருக்கொருத்தர் கைதூக்கி விட்டர்லாம்னு பாத்தா இப்படிக் கெடுத்து வைக்கறீங்களே...!'' என்று கடிந்து கொண்டு விட்டுக் சோமசுனின் தந்தைக்கு போன் செய்தாள்.

''அம்மா! எனக்கென்னமோ இந்தச் சம்பந்தம் நடக்கற மாதிரித் தெரியலே! உங்கப்பா பேசற விதத்தைப் பார்த்தா.. ஒண்ணும் சரியில்லையேம்மா...'' என்று லாவகமாகத் துண்டித்துக் கொள்ளவும், குமுதினி வெகுவாகத் திகைத்துப் போனாள்.

ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டு, அலுவலகம் போனால், ட்யூட்டி முடிகிற நேரம் போன் வந்தது.

அதிர்ந்து போய் நின்றாள்.



14

''ஏண்டி... பைத்தியமா.. உனக்கு? நானில்லையா..? உனக்கு வேணுங்கறதைச் செய்ய மாட்டேனா..?'' என்று பொரிகிற



அக்காவை ஒரு கையாலாகாத்தனத்துடனும், ஒரு வித வேதனையுடனும் பார்த்தாள் அமுதா.

''அக்கா! நியாயப்படி... உனக்குக் கல்யாணம் பேசணும். அத விட்டுட்டு எனக்குக் கல்யாணம் பேசறே! உனக்குப் பொறுப்புக் கழிஞ்சா.. அதுக்கப்புறமாவது நீ நிம்மதியா இருப்பியேன்னுதான் நான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன். ஆனா... இந்தப் பொறுப்பில்லாத அப்பா... இப்படி வந்த சம்பந்தத்தைக் கலைச்சு விட்டா... நாம என்னக்கா செய்வோம்?'' என்று புலம்புவதைப் பார்த்த அம்மா, தன் அக்கினிப் பார்வையால் அப்பாவை எரித்தார். ஆனால் அவரோ, 'நான் என்ன செய்தேன்? உள்ளதைத்தானே சொன்னேன்,' என்பது போல நின்று கொண்டிருந்தார்.

''அதுக்கு... தூக்க மாத்திரை சாப்பிடப் போறியா நீ! நல்ல வேளை, அம்மா பார்த்திருக்காங்க. இல்லேன்னா...'' என்று கண் கலங்கிய அக்காவை மறுபடியும் அதே வேதனையுடன் பார்த்தாள் அமுதா.

குமுதினி அவள் அருகில் போய் அமர்ந்தாள். ''பாரு... அமுதா. எனக்கு ஏதாவது நல்லது செய்யணும்னு நினைச்சா... என்னோட ஏற்பாடுகளுக்குத் துணையா இருக்க! ஒண்ணும் பிரச்சினையில்லே! இப்ப உனக்குப் பத்தொன்பது வயசு. எனக்கு என்ன... இருபத்தொன்று! உன் கல்யாணம் முடிச்சு... நிமிர்றதுக்குள்ளே.. சின்னது ரெடியாகிடும். அவளுக்கும் கல்யாணம் பண்ணிடுவேன். எல்லாத்தையும் அஞ்சாறு வருஷத்துக்குள்ள முடிச்சுட்டு கண்டிப்பா நான் கல்யாணம் பண்ணிக்கறேன். ஏதோ நான் தியாகம் செய்யறதா நினைச்சு நீங்க உருக வேண்டாம். புரியுதா? அது மட்டுமில்லே! இந்த வரன்

போனா என்ன! வேற வரன் பிடிப்போம்.. தெரியுதா?'' என்று தேற்றினாள்.

அப்போதுதான் வாழ்க்கையிலேயே இதுவரை இல்லாத விதமாக மீனாட்சி வெடித்தார்.

''இத பார்றி! நியாயப்படி பார்த்தா நான் எப்பவோ மண்டையப் போட்டிருக்கணும்! ஆனா மூணு பெண் குழந்தைகளைப் பெத்திருக்கேனே! அப்பாவும் பொறுப்பில்லாத ஆளு! ஏதோ பொண்ணுங்க பிறந்த வீட்டுக்கு வரும் போது பிரசவம் கிரசவம்னு பாத்து அனுப்ப அம்மாவும் இல்லேன்னா.. பொண்ணெடுக்கறவங்க யோசிப்பாங்களேன்னுதான் இந்த உசுரைப் பிடிச்சு வச்சிருக்கேன்,'' என்றவர், திரும்பிக் கணவரைப் பார்த்தார்.

கோபமாகச் சொன்னார்.

''இத பாருங்க! உங்களாலே உபகாரம் இல்லேன்னாப் பரவால்லே! தயவு செய்து உபத்திரவம் செய்யாதீங்க. மூன்று தலைமுறைக்கு முன்னாலே நூறு வேலி நிலம் இருந்து என்ன பண்ண? இன்னைக்குப் பூவாவுக்கு, வீடு வீடாப் பிச்சைக்குப் போகலாமா? எந்தப் பிறவியில புண்ணியம் பண்ணினீங்களோ... இந்த மாதிரி ஒரு மக கிடைச்சிருக்கா. அவளைக் கொண்டு இந்தக் குடும்பத்தை உருப்படி பண்ணிக்குங்க...'' என்று பொரிந்து தள்ளி விட்டார்.

சுந்தரலிங்கம் கொஞ்சம் அரண்டு போனார். அதே சமயம் வாயில் புறத்தில், ''சார்...! உள்ளே வரலாமா?'' எனக் குரல் கேட்டது.

எட்டிப் பார்த்தார்.

அமுதாவைப் பெண் பார்த்துவிட்டுப் போன கோமகன் நின்று கொண்டிருந்தான். அவனோடு கூட அவனுடைய தாயாரும் நின்று கொண்டிருந்தார்.



குமுதினியும், மீனாட்சியம்மாவும் பரபரப்பானார்கள். அமுதாவிடம் போய்,

''ஏய்... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்திருக்காங்க...'' என்று சொல்லி விட்டு உபசரிக்க ஓடினார்கள்.

இந்த முறை அடிக் குரலில் அப்பாவிடம், ''அப்பா... தயவு செய்து வாயைத் திறக்காதீங்க!'' என்று எச்சரித்தாள் குமுதினி.

நடந்த விஷயங்கள் அவர் மனத்தையும் தாக்கியிருந்தது போலும். சுந்தரலிங்கம், ''வாங்க வாங்க!'' என்று கேட்டு விட்டு, அமைதியாக ஒரு புறம் போய் அமர்ந்து கொண்டார்.

''வாங்க!'' என்றாள் குமுதினி.

கோமகனின் அம்மா சுகுமாரி பேசினார்.

''இல்லே! இவங்கப்பா... வந்திருந்தார் போல இருக்கு.. அப்பா ஏதோ சரியா நடத்தலேன்னு கொஞ்சம் கோபம்...'' என்று இழுத்தார்.

சட்டென்று குமுதினி சொன்னாள்.

''அம்மா! எங்கப்பாவுக்குப் பேசத் தெரியாது. இன்னும் அவர் பழைய காலத்து விஷயங்களையே பேசிக்கிட்டு... அதே நினைப்புல இருக்கார் அவரு ஏதாவது தப்பாய்ப் பேசியிருந்தா மன்னிச்சுக்குங்க...'' என்று கை கூப்பினாள்.

சுகுமாரி பதைத்துப் போனார். அவசரமாகச் சொன்னார்.

''சேச்சே... என்னம்மா... நீ பெரிய வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு..'' என்று குமுதினியின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''அதான் நாங்க வந்துட்டமே! ம்.. உட்காருங்க! வந்த விஷயத்தைச் சொல்லிடறேன். எங்க கோமகனுக்கு உங்க

பொண்ணை ரொம்பப் பிடிச்சது. அது மட்டுமில்ல. அவனுக்கு ஒரு பாலிஸி தான் முத முதலாப் பொண்ணு பாக்கற பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கு வேன்னு சொல்லிக்கிட்டிருந்தான். அதுலயும் அமுதாவை அவனுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அதான் நானும் அவனும் வந்தோம்! எல்லாத்தைக் காட்டிலும் இந்த ஃபேமிலியில பொறுப்பெடுத்துக்கிட்டுச் செய்யற குமுதினி யோட பொறுப்புணர்ச்சி அவனுக்கு ரொம்பப் பிடிச் சிருச்சு..!'' என்றார்.

கோமகன் குமுதினியைப் பார்த்து இயல்பாகப் புன்னகைத்தான்.

''ஆமா... மேடம்! எங்கப்பா கொஞ்சம் படபடப் பானவரு..! அதனால உங்ககிட்டே ஏதோ கோபமாகப் பேசிட்டாரு...'' என்று சமாதானம் சொன்னான்.

''பரவாயில்ல! யார் அந்த இடத்தில் இருந்தாலும் கோபம் வரத்தானே செய்யும்?'' என்றாள்.

மீனாட்சி மகிழ்ச்சியுடன் காபி தயாரிக்கப் போனார்.

அமுதா அவசர அவசரமாகச் சிற்றுண்டி எடுத்து வந்து வைத்து விட்டுக் கோமகனை ஓரக்கண்ணால் பார்த்து விட்டுப் போனாள்.

சுந்தரலிங்கம் சட்டென்று யாரும் எதிர்பாராத காரி யத்தைச் செய்தார்.

கோமகனிடம் சொன்னார்.

''மாப்பிளே! நான் ஒரு உளறுவாயன். ஏதோ உளறிக் கிட்டிருப்பேன். உங்கப்பாவும், உங்க மனுஷங்களும் பெருசா எடுத்துக்காதீங்க!'' என்றார்.

''பரவால்லே.. மாமா...'' என்று கோமகன் சமாதானம் சொன்னான்.



என்ன சொல்லப் போகிறாரோ என்று கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த குமுதினி நிம்மதியானாள்.

அதற்குப் பிறகு பேச்சு வார்த்தைகள் நடந்தன.

''இருபது பவுன் போடறோம். கல்யாணச் செலவு...'' என்று குமுதினி ஆரம்பிக்க... கோமகன் இடையில் புகுந்தான்.

''மேடம்! எங்க வீட்ல நகை, பணம்னு யாரும் பேச மாட்டாங்க.. சிம்பிளா ஒரு ஐம்பது அறுபது பேரை மட்டும் வச்சுகிட்டு கோயில்ல கல்யாணம் பண்ணிடலாம். ஒரு ரிசப்ஷன் வச்சுக்லாம்...'' என்றான்.

''இல்ல... சார்! என்ன இருந்தாலும் நீங்க ஒரே பையன். உங்களோட கல்யாணத்தை கிராண்டா நடத்தணும்னு ஒரு ஆசை உங்க பேரண்ட்ஸுக்கு இருக்கும். எங்களுக்கு ஒண்ணும் பிரச்சினையில்லே...! வேண்டு மட்டும் சேமிப்பு இருக்கு!'' என்றாள் குமுதினி.

''ஓ.கே..! அப்ப.. நாங்க பாதிச் செலவு.. நீங்க பாதிச் செலவு!'' என்றான் கோமகன். மேலும் தொடர்ந்து.

''ம்... அப்ப.. நீங்க நகைச் செலவைக் குறைச்சுடுங்க..! என் வைஃப்புக்கு நகை வாங்கி இழைக்கிற அளவுக்கு எனக்குத் தெம்பிருக்கு...'' என்றான். திரும்பி அம்மாவிடம் சொன்னான்.

''உன்னோட ஷேர் உனக்கும் உண்டு...'' என்று.

எல்லாரும் சிரித்தார்கள்.

ட்யூஷனுக்குப் போயிருந்த கீதாவும் வந்து விட்டாள். ''மாமா...'' என்று அழைத்துப் பேசினாள்.

''மாமா..! அக்காகிட்டே தனியாப் பேசலையா?'' என்றாள்.

எல்லாரும் ஒரு நிமிடம் அமைதியானார்கள். குமுதினி அம்மாவையும், அப்பாவையும் தடை சொல்லாதீங்க என்று பார்வையாலேயே எச்சரித்து விட்டு, ''போங்க, மாப்பிள்ளை... சார்! பேசிட்டு வாங்க...'' என்றாள்.

கோமகன் எட்டிப் பார்த்தான்.

''வர்லாமா?'' என்றான்.

அமுதா படபடப்பாக நின்றாள்.

''வாங்க...!'' என்றாள்.

உள்ளே நுழைந்தவுடன் தேம்பிக் கொண்டு, அவன் மார்பில் சாய்ந்தாள்.

கோமகன் இதை எதிர்பார்க்கவில்லை... ''என்ன... என்னம்மா... ஆச்சு?'' என்றான்.

''இல்லே! உங்கப்பா கல்யாணம் கேன்சல்னு சொன்னவுடனே நான் தூக்க மாத்திரை சாப்பிடப் போய்...'' என்று மறுபடியும் தேம்பினாள்.

அதிர்ச்சியடைந்தாற்போல் அவளை ஒரு கணம் இறுக அணைத்துக் கொண்டான்.

''அசடு... அசடு..! அப்படி நான் இல்லேன்னா... இன்னொரு மாப்பிள்ளை...'' என்று முடிக்கு முன்னே,

''ம்ஹூம்...! உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்றாள்.

''அதான் வந்துட்டேன்... இல்லே! இனிமே.. என்ன?'' என்று தேற்றினான்.

''அதான்! ஏதோ ஒரு மனசு என்னை இப்பவே போ... இப்பவே போன்னு தள்ளிகிட்டு வந்துச்சே! அம்மா கூட நாளைக்குப் போலாம்னாங்க! இல்லம்மா குடும்ப



வேதனையில இருப்பாங்க..! நாம இப்பவே போய்ப் பேசவோம்னு கூட்டிட்டு வந்தேன்,'' என்றான்.

அவள் தலையைக் கோதிக் கொடுத்தான்.

''இனிமே என்ன? நான் வந்துட்டேன்.. இல்ல... எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன்...'' என்றான்.

தாங்கள் இருந்த நிலையை அப்போதுதான் உணர்ந் தாற் போலச் சரேலென்று விலகினாள்.

முகம் சிவக்கக் கண்ணைத் துடைத்துக் கொண்டு தலையாட்டினாள்.

''ம்..!'' என்றாள்.

சிவந்து கிடந்த கன்னத்தில் ஒற்றை விரலால் தட்டி விட்டுச் சிரித்தான்.

''ம்.. வெட்கத்தைப் பார்!'' என்று புன்னகைத்து விட்டு வெளியே போனான்.

அதற்குப் பிறகு திருமணம் வேகமாக முடிந்தது.

குமுதினியின் சுமையைப் பகிர்ந்து கொள்வதில் கோமகன் எல்லா விதத்திலும் உதவியாக இருந்தான். ஆனாலும் மீனாட்சியம்மாவுக்குக் கவலை.

''ஏன்டி... குமுதினி... நீ பாட்டுக்கு கிராண்டா கல்யாணம்னு சொல்லிட்டியேடி!'' என்றாள்.

''அம்மா! அவங்கப்பா அரை மனசாத்தான் ஒத்துக்கிட்டிருக்காரு. அதனால... நாம ரொம்ப சுருக்கிப் பிடிச்சா... அவருக்கு இளக்காரமாய்ப் போயிடும். அதனாலதான் நான் அப்படிச் சொன்னேன். கவலைப் படாதீங்க! வீட்டு மேல கடன் வாங்கலாம்! மூணு வருஷத்துல சிறுகச் சிறுக அடைச்சர்லாம்! அதுக்குள்ளே சீதாக்குட்டி ரெடியாயிடுவா!'' என்றாள் குமுதினி.

றியே யோசிக்கிற மகளைப் பார்க்கும்போது, மீனாட்சியம்மாவுக்கு அடி வயிறெல்லாம் பிசைந்தது.

தன்னால் இயன்றதைச் செய்வோம் என்று வீட்டுப் பொறுப்பெல்லாம் பொறுப்பாகப் பார்த்துக் கொண்டாள்.

திருமணச் செலவிலேயே கொஞ்சம் மிச்சம் பிடித்துப் பிரசவச் செலவுக்கென்று வைத்திருந்தாள் குமுதினி. அதனால் இப்போது கொஞ்சம் சிரமம் இல்லாமல் இருக்க முடிகிறது.

உண்மையிலேயே தமிழ்மதியின் வாடகைப் பணம் கண்டிப்பாக உதவியாகத்தான் இருக்கும் என்று எண்ணிக் கொண்டபோதே, அவன் தன்னிடம் மன்னிப்புக் கேட்டது நினைவுக்கு வந்தது.

முகத்தில் புன்னகை மலர்ந்தது.

திரும்பிப் படுத்தாள். மணி பதினொன்றாகி இருந்தது.

மெல்லக் கண்ணயர்ந்தாள்.

தமிழ்மதியும் அப்போதுதான் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டுக் கண்ணயர்ந்தான். ஆனால் திடீரென்று விழிப்புத் தட்டியது.

அமுதாவின் குழந்தை வீறிட்டு அழுதது. படபடவென்று எல்லா விளக்குகளும் எரிந்தன.

பேச்சுக் குரல்கள் கேட்டன.

"என்னடீ... குடுத்தே குழந்தைக்கு?" என்று குமுதினி அமுதாவை அதட்டுவது தெரிந்தது.

"வழக்கமாய்க் குடுக்கறதுதானேக்கா..!" விழித்தாள் அமுதா.

கூடத்தின் வாயிலில் இருந்து எட்டிப் பார்



# 15

குமுதினிக்கு அ
சிரிப்பு வந்தது.

தமிழ்மதி எட்டிப் ப
உதவி வேணுமா?" என்
பார்த்துத்தான் அப்படி
ஆனால் வெளிப்படை
கொள்ளவில்லை.

காட்டினால் வருத்தப்பட்டு விடுவா

"ஒண்ணும் தேவையிருக்காதுன்னு
கிறேன். இவன் இப்படித்தான் அழு
நேரத்துல சரியாயிடுவான்," என்று சொ

புன்னகைத்தாள்!

தமிழ்மதி "சரி"யென்று தன்னை
விட்டான்.

குழந்தையின் அழுகை ஒருபுறம் ஒலி
இருந்தது. அவனுக்கு நெருடலாக இரு
அதற்குத் தான் என்ன செய்வது என்றும்

ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துக்
அமர்ந்து விட்டான். ஆனால் குழந்
நிறுத்தவேயில்லை.

குமுதினி, மற்றும் அமுதாவின் குர
போர்ஷனுக்கு முன்னே கேட்டன.

"டீ.. தனியாவா போறீங்க? அப்பாவை
போங்கடி.." என்று சொல்லிக் கொண்டிருந்த

ஆமா! அப்பாவைப் போய்ப் பாரு! மனுஷன் கையைக் காலை பரப்பிட்டுத் தூங்கறாரு.'' என்றாள் குமுதினி. அந்த வார்த்தைகள் காதில் விழுந்தவுடன் தமிழ்மதி வெளியே வந்தாள். தன்னால்தானே என்ற குற்ற உணர்வு தோன்றியது.

''மேடம்! நான் வேண்ணா துணைக்கு வரட்டா..?'' என்றான்.

குமுதினியும், அமுதாவும் ஒருவரை யொருவர் பார்த்தார்கள்.

''நான் வரேன்!'' என்று உள்ளே போய்ச் சட்டையை மாட்டிக் கொண்டான்.

தெருக் கோடியில் போய் ஒரு ஆட்டோ பிடித்து வந்தான்.

இரண்டு தெரு தள்ளி லேடி டாக்டர் ஒருவர் இருந்தார்.

நள்ளிரவில் போய்க் கதவைத் தட்டினாலும், கோபமில்லாமல் வந்து பார்த்தார். ஆனால் என்ன ஆச்சரியம்!

குழந்தை அங்கே போனவுடன் சிரித்தான்.

குழந்தையின் வயிற்றை கையைக் காலை என்று அமுக்கிப் பார்த்தார். குழந்தையைப் பார்த்துக் கொஞ்சிக் கொண்டே ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்த்தார்.

''ஏண்டா பயலே! எல்லாருடைய தூக்கத்தையும் கெடுத்துட்டு... இங்க வந்து சிரிக்கறியா?'' என்று சிரித்தார்.

பொக்கை வாயைத் திறந்து கொண்டு குழந்தை சிரிப்பதைப் பார்க்கக் கொள்ளை அழகாக இருந்தது.

அப்போதுதான் டாக்டர் தமிழ்மதியைக் கவனித்தார்.

''ஹலோ! நீங்க தமிழ்மதி இல்லே?'' என்றார்.

''ஆமாங்க.. மேடம்!'' என்று சிரித்தான்

''நீங்க...!'' என்று டாக்டர் இழுக்கவும், கு

னாள்.

''எங்க வீட்ல டெனன்டா... வந்திருக்கா

''அப்படியா? குமுதினி... என்ன ஆச்சரிய

புயலையே டப்பாவுக்குள் அடக்கிப் போட்ட

இவரு உங்க டெனன்ட்டா...?'' என்றார் அ

வாய் பேசிக் கொண்டிருந்தாலும், கைக

குழந்தையைப் பரிசோதித்துக் கொண்டிரு

''ஒண்ணும் இல்லை அமுதா...! வெ

டுக்குப் போய்க் கொஞ்சம் கிரைப்வாட்டர் கு

அழுதானோ... என்னவோ...'' என்றார்.

திரும்பி வந்தார்கள்.

வழியெல்லாம் குழந்தை துறுதுறுவென்

பார்த்துக் கொண்டு வந்தான்.

''இப்ப.. மொட்டு மொட்டுன்னு முழிச்சுட்

பாரு!'' என்று திட்டினாற் போலவே

அம்மாவைப் பார்த்து அழகாகச் சிரித்தான்.

வீட்டுக்கு வந்து தொட்டிலில் படுத்த

யும் அழுகை.

அப்போதுதான் மீனாட்சியம்மா தூளியை

இரண்டு மூன்று எறும்புகள் ஊர்ந்து கொ

வேறு தூளியை மாற்றிப் படுக்க வை

பிறகுதான், குழந்தை அமைதியானான்.

தமிழ்மதியும் விடைபெற்றுக் கொண்டு

குப் போனான்.

குமுதனி குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பாடுவது கேட்டது.

மெல்லிய குரலில் பாடல் ஒலிக்க, அவனும் இரவு விளக்கை ஏற்றி விட்டுப் ப்டுத்தான்.

தாலாட்டின் ஒலியில் அவனது மனமும் அமைதி யடைந்தது போலும் - நன்றாகத் தூங்கினான்.

ஏதோ தூரத்தில் சிறு வயதில் பாடிய தாயார் தாலாட் டொலி கேட்டது.

தாயின் முகம் மங்கலாக வந்து போனது. இந்த வீட்டுக்கு வந்த இரண்டு நாளாகத் தாயின் முகம் அடிக்கடி நினைவுக்கு வந்தது புரிந்தது

* * *

மறுநாள் காலை!

விழிக்கும் போதே மணி எட்டாகியிருந்தது. கொஞ்சம் பதறிக் கொண்டு எழுந்தான்.

பல் தேய்த்துவிட்டு, மெதுவாக நாற்காலியில் அமர்ந்து பேப்பரைக் கையில் எடுத்தான்.

''ஹல்லோ! குட்மார்னிங்!'' என்று கீதாலட்சுமியின் குரல் கேட்டது.

''குட்மார்னிங்!'' என்றான். புன்னகைத்தான்.

சுடிதாரில் ரெடியாக ஆனால் துறுதுறுவென்று இருந் தாள் கீதாலட்சுமி.

அப்போதுதான் நினைவுக்கு வந்தது. நேற்றிரவு அத்தனை பிரச்சினையின் போதும் கீதாலட்சுமி எழுந்திருக்க வேயில்லை என்று.

''ஹல்லோ! நேத்து நைட் உங்க வீட்டுக் குட்டி இளவரசன் வீட்டையே ரெண்டு படுத்தினான். நீங்க ஆனா.. எழுந்திருக்கவே இல்லை!'' என்றான்.

''நானா?'' என்னையெல்லாம் நடுராத் ணும்னா... குடத்திலே தண்ணியை ெ ணும்!'' என்று சிரித்துக் கொண்டாள்.

தனக்குத் தானே அவள் சிரிப்பதை னுக்கும் சிரிப்பு வந்தது.

''இப்ப என்ன பண்றாரு?'' என்று கே

''இப்பவா... நல்லாத் தூங்கறான்,'' என்ற

''சார்... இது வேண்டாம்!'' என்றாள்.

''எது...?'' என்றான்.

''தி கிரேட் தமிழ்மதி என்னைப் போய கன்னு பேசறது!'' என்றாள்.

அவன் சிரித்தான். பேசிக் கொண்டே காபியை வாங்கிக் கொண்டான்.

''சரி... ஓ.கே.! எதுக்காக இல்லேன்ன தமிழ்மதின்னு சொன்னியே. அதுக்கா வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

''சார்... வெறுமே காபியைக் குடிக்கறீங் மொறு மொறுன்னு ஒரு கடி ஜோக் செ என்றாள்.

தமிழ்மதியின் கண்களில் சிரிப்பு சொல்லு...!'' என்றான்.

அவள் இரண்டு மூன்று கடி ஜோக்கு விட்டாள்.

அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

கிட்டத்தட்டப் புரையேறி விட்டது.

அதே நேரம் அங்கு வந்த மீனாட்சியம்

''ஏண்டி... அந்தத் தம்பியைக் காலங்காத்தால தொல்லை பண்றே!'' என்றார்.

தமிழ்மதி புரையேறியதால் இருமுவதைப் பார்த்த அவர், சட்டென்று அவன் தலையைத் தன் வலக்கையால் தட்டிக் கொடுத்தார்.

அந்தப் பூங்கரங்களின் மென்மையான ஸ்பரிசத்தால் தமிழ்மதி கொஞ்சம் திணறிப் போனான்.

'போடி!'' என்று கீதாவை விரட்ட, அவள் அம்மாவைப் பார்த்துப் பழித்துக் காட்டியபடி போனாள்.

மீனாட்சியம்மா தமிழ்மதியைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''ரெட்டை வாலு..! வானரம்! ஆனா.. நல்லா படிக்கறா... தம்பி! நல்ல மார்க் வாங்கறா!'' என்றார்.

ஒரு நிமிடம் அவன் தலையைத் தடவிக் கொடுத்து விட்டுக் கையை எடுத்துக் கொண்டார்.

''அம்மா... அந்தக் கையைக் கொஞ்ச நேரம் அப்படியே வைங்க...!'' என்று சொல்ல வேண்டும் போல இருந்தது தமிழ்மதிக்கு.

''சரிப்பா! காபியைக் குடி! இன்னைக்குக் காலமே உப்புமா பண்ணியிருக்கேன். உப்புமா சாப்பிடுவே யில்லே...!'' என்றார்.

''வொய் நாட்! எதுன்னாலும் சரி...!'' என்று புன்னகைத் தான்.

அவர் அறையைத் தாண்டு முன்னே,

''அம்மா! குமுதினி.. மேடம்!'' என்று இழுத்தான்.

''அவளுக்கு இன்னைக்கு இயர்லி மார்னிங் ட்யூட்டி போயிட்டா!'' என்றார்.



போய்விட்டார்!

இரவு இரண்டு மணி வரை குழந்தையுடன் போராடி விட்டு, அதிகாலையே கிளம்பிப் போய் விட்டாளே என்று எண்ணிக் கொண்டான்.

அப்போதுதான் அவனுக்கு உறைத்தது.

வெகு நாட்களுக்குப் பின்... ஒரு பெண்ணின் ஸ்பரிசம்! அதுவும் தாய்மையோடு கூடிய ஒரு ஸ்பரிசம்...

எப்போதோ படித்த நேருஜியின் சுயசரிதம் நினைவுக்கு வந்தது.

தனிமைச் சிறையில் ஏழெட்டு மாதங்கள் அடைத்து வைத்திருந்தார்களாம்.

ஒரு நாள்.

வெளியே காலார நடந்து வர அனுமதிக்கப்பட்டாராம்.

வெளியே என்றால் சிறை வளாகத்துக்குள்ளாக... அப்படி நடந்து கொண்டிருக்கும்போது சுற்றுச் சுவருக்கு வெளியே ஒரு நாய் குரைக்கும் ஓசை கேட்டதாம்.

அப்படி ஒரு இயற்கையான குரலைக் கேட்டு எத்தனை நாளாயிற்று என்று எண்ணிக் கொண்டாராம்.

சாதாரணமாகத் தெருவில் நடக்கும்போது கேட்கிற ஒலி! அது கூடக் கிடைக்காமல் ஒரு தனிமைச் சிறை!

அந்தப் பகுதியைப் படிக்கும்போது எப்போதும் அவனது மனம் நெகிழ்ந்து விடும்.

அதுபோல ஒரு பெண்ணின் தொடுகை. அதுவும் ஒரு தாயன்போடு கூடிய தொடுகை.

பத்து வயதில் அம்மா இருந்தவரை கிடைத்தது. அதற்குப் பிறகு அண்ணன் அவ்வப்போது அணைத்துக் கொண்டான்.

பாசத்தைப் பொழிவார். ஆனால் தாயின் அன்புக்கான ஒரு ஏக்கம் அவன் மனதுக்குள் இருந்து கொண்டே இருந்தது போலும்.

கூடவே இன்னொரு எண்ணமும் தோன்றியது. இந்தக் குடும்பத்துக்கு மூத்த மகளாகப் பொறுப்பேற்றுக் கொண்டு தோளில் சுமக்கிற குமுதினி.

இரண்டு நாட்களுக்குள் அவனுக்கு ஒன்று புரிந்திருந்தது.

கண்டிப்பாக அமுதாவின் திருமணத்தையும் குமுதினி தான் பொறுப்பெடுத்து நடத்தியிருப்பாள் என்று.

குமுதினிக்குத் தன் மேல் கோபம் வந்ததில் நியாயம் இருக்கிறாற் போலத் தோன்றியது.

ஒன்பது மணி வாக்கில்

சுந்தரலிங்கம் எழுந்து வந்தார்.

''குட் மார்னிங்...!'' என்று அவனைப் பார்த்துச் சிரித்தபடி வந்தார்.

தமிழ்மதிக்கு உள்ளுக்குள் கோபம் கிளம்பியது. ஆனால் நேற்று நடந்த விவகாரத்தில் தனக்கும் பங்கிருக்கிறது என்று தோன்றியது.

''என்னது! பேரன் கலாட்டா பண்ணினானாமே, உங்களுக்கும் தொந்தரவாப் போச்சாம்...'' என்றார்.

''அதெல்லாம்.. ஒண்ணுமில்லை! குழந்தைகன்னா, இருக்கறதுதான்!'' என்றான், பெரிய மனிதத் தோரணையில்.

அமுதா அப்போது குழந்தையின் கண்களில் எண்ணெய் விட்டுச் சற்று நேரம் சூரிய ஒளியில் காட்டிக் கொண்டிருந்தாள்.

மேடம்! சாருக்கு எத்தனை மாசம்?'' என்றா

''ஆறு மாசம்ங்க...!''

''நான் எடுத்துக்கட்டுமா?'' என்றான், ஆ

''சார்! குழந்தைய ஏந்தி எடுத்துக்கத் என்றவள்,

''முதல்ல மடியில வச்சப் பழகிக்குங்க... அவன் எழுந்து கட்டிலின் மேல் அமர்ந்தா

குழந்தை கையைக் கால்களை ஆட்டி தலையைத் திருப்பிப் பார்த்தான்.

''என்னன்னு கூப்பிடறீங்க?'' என்றான்.

''இப்போதைக்குக் 'குட்டிப் பையன்'தான் கூப்புடுவோம். அவங்கப்பா இன்னும் பண்ணலே,'' என்றாள்.

அவனுக்கு எப்படிக் கொஞ்சுவது எ வில்லை.

அப்போது வந்த சீதாலட்சுமி, ''ஜிக்க செல்லக் கண்ணா!'' என்று கொஞ்ச,

'ம்ஹூம்! இந்தப் பாஷை நமக்கு வ எண்ணியவன்,

'குட்டிப் பையா! எதுக்கு அந்தக் கலாட்டா என்று குழந்தையிடம் பேச ஆரம்பித்தான்.

அதே நேரம்!

அறைக்குள் நுழைந்த விஜயன் திடுமகே போனான்.

மடியில் குழந்தையுடன் தமிழ்மதி அவ்வளவு பாந்தமாக இருந்தது.

தமிழ்மதியும் சிரித்தான்.

## 16

"என்னம்மா... கண்ல ஒரு சிரிப் போடவே நடமாடிக்கிட்டிருக்கே...!" என்றார் நிலைய இயக்குநர்.

குமுதினி நின்று அவரைப் பார்த் தாள்.

"சார்.. தலை கீழ் மாற்றம்னு கேள்விப் பட்டிருக்கீங்களா? உங்க பிரண்டு விஷயத்துல நடக்குது..." என்றாள் குமுதினி.

"என் பிரண்ட்டா? ஓ... தமிழ்மதியா?" என்றார்.

சுவாரசியமாகக் கவனிக்க ஆரம்பித்தார்.

"நேத்து மட்டும் நீங்க எங்க வீட்டுக்கு வந்திருந்தீங்கன்னா... அருமையான காட்சியைப் பார்த்திருக்கலாம்..." என்றாள்.

"ம்..." என்றார், கண்களில் ஆர்வம் மின்ன.

"என் சிஸ்டர் அமுதாவோட குழந்தையை எடுத்து மடியில வச்சுக்கிட்டிருந்தார்," என்றாள்.

"அப்படியா?" என்று ஆச்சரியப்பட்டார்.

"ஆமா! ஆனா.. பாவம்... வந்த முதல் நாளே குழந்தை நைட்ல ஒரே அழுகை. ஆஸ்பத்திரிக்கு எங்களோட அலைய வேண்டியதாப் போச்சு! நான் நினைக்கிறேன். குடும்பம்னா இவ்வளவு பிடுங்கலான்னுட்டு ஒரு வேளை அவருக்கு வெறுப்பு அதிகமாகலாம்," என்றாள்.

நிலைய இயக்குநர் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

எப்ப எது பேசுவாங்கன்னு சொல்ல முடியா
தமிழ்மதியைப் பத்திச் சொல்லவே முடியாத

அதே நேரம்.

தமிழ் மதியிடம் விஜயன் அவனது கா
வைத்து அதைத்தான் பேசிக் கொண்
இல்லையில்லை. கேலி செய்து கொண்டிரு

"தமிழு! என்னப்பா... இது...! ஒரே தலை
நான் ஆனாலும் இப்படி எதிர்பார்க்கலே
கைக்குழந்தையை மடியில் வச்சுக் கொஞ்
தாப்லே..." என்று சிரித்தான்.

"டேய்! அநியாயத்துக்குப் பேசாதே! நீ
பாத்தா... நான் என்னமோ காட்டு மனுஷ
மனுஷங்களோட பழகறதுக்குத் தெரியா
இல்லே... தோனிக்குது. உன் டாட்டர் கலைக
நான் அவளுக்கு எவ்வளவு தூரம் பிரண்டு
லுவா!" என்றான் தமிழ்மதி, புகார் சொல்லு

விஜயன் ஒத்துக் கொண்டான்.

"அதென்னமோ நிஜம்தான். என் வைஃ
யண்ணா இவளுக்கு ரொம்பச் செல்லம் குடு
புலம்பிக்கிட்டிருப்பாப்ல...! அதுமட்டுமில்ல
பொண்ணு இருக்காளே! அதுக்கு மேலே!
வாங்கித் தர்றியா... இல்லியா? இல்லேன்னா
நான் தமிழ்மதி அங்கிள்கிட்டே கேட்டுக்க
மிரட்டறா..." என்று சிரித்தான்.

"அப்புறம்.. பின்னே சொல்றே?" என்றா

இரண்டு பேரும் ஒரு நிமிடம் மௌனமாக
அதற்குப் பிறகு தமிழ்மதி மெல்லிய குரலில்

வச்சுகிட்டா... என் ஐடியா மாறிடுமா..? அதுக்கு வலுவான ஆதாரங்கள் வேண்டும்,'' என்றான்.

''தமிழு! உனக்கு நேர்ந்த கசப்பான அனுபவங்களால ஒரு விதமான முடிவுல இருக்கே! பார்க்கலாம்! குமுதினியும் ஸ்ட்ராங்கான பர்ஸனாலிட்டி மாதிரித்தான் தெரியுது. எனக்கு ரொம்ப சுவாரசியமாய் இருக்குப்பா!'' என்றான் விஜயன்.

''அது எப்படியோ ஆகட்டும்! எனக்குக் குமுதினியோட அம்மாவைப் பார்த்தவுடனே எங்க மதரோட ஞாபகம் வந்துருச்சு,'' என்றான்.

உணர்வுகள் உள்ளே பொங்கிப் பிரவாகமெடுப்பது புரிய, சற்று நேரம் அமைதி காத்தான்.

கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டான். விட்டால் கண்களில் கண்ணீர் திரண்டு விடும் போல இருந்தது.

மெல்லிய தழுதழுத்த குரலில் சொன்னான். ''அம்மான்னா... அம்மாதான்!'' என்றான்.

கேலி செய்வதற்கான நேரம் இதுவல்ல என்று உணர்ந்த விஜயனும் அமைதியாக அவன் முகம் பார்த்தான். அந்த முகத்தில் ஓடிய உணர்வுகள் அவன் நெஞ்சைத் தொட்டன.

தமிழ்மதி முதன் முதலாகத் தன் மனம் திறக்கின்றான் என்று தோன்றியது. இத்தனை நாள் நெருங்கிய நண்பர்களாக இருந்திருக்கிறார்கள். தாமோதரன், குமரவேல் எல்லாரைப் பற்றியும் பேசிக் கொள்வார்கள்.

தமிழ்மதிக்கு நேர்ந்த அனுபவங்கள் பற்றிக் குமரவேல் தான் ஜாடை மாடையாகச் சொல்லியிருக்கிறாரே தவிர, தமிழ்மதி ஒரு நாளும் சொன்னதில்லை. அப்படியே

எப்போதாவது அதைப் பற்றிப் பேசினாலு
லாமல் அந்த விஷயங்களைத் தொட்
என்பது போல, வேறு விஷயங்களுக்குத் த

விஜயனுக்கும் எதையும் துருவித் துரு
பழக்கம் இல்லை. நாகரிகம் அறிந்தவன்
தமிழ்மதிக்கும், அவனுக்கும் இடையே
வளர்ந்தது.

இருவரும் ஒருவருடைய சுதந்திரத்
மதித்தார்கள். ஆனால் இப்போது தமிழ்ம
மனம் விட்டுப் பேச விரும்புகிறான் என்று
புரிந்தது. அவனும் கேட்கத் தயாரானான்.

''விஜி! நான் வறுமையிலயோ, சோத்து
கஷ்டப்பட்டதேயில்லை. ஆனா, ஏனோ ஒ
பொருளாக வந்து இந்தப் பூமியில விழுந்து
எண்ணத்தை எனக்கு உறவுக்காரங்க உருவ

''டேய்! டேய்! ஏன்டா... அப்படிச் செ
கண்ணன் உனக்காக வைஃபையே அஞ்
அம்மா வீட்டுக்கு அனுப்பலையா?'' என்ற

''ஆமா! அனுப்பினாரு! ஆனா, என்னை
வச்சு வளர்த்தாரா? இல்லையே! அண்ணி
னாலும் என்னை வளர்த்திருந்தா... என
செஞ்சிருப்பாரு! அப்படியில்லாம என்
வுட்டுட்டு அண்ணியைக் கூட வச்சிரு
ணிக்கு நியாயம் செஞ்சிருப்பாரு! அப்ப
ரெண்டு பேருமே வேண்டான்னு உட்கா
அது எந்த விதத்துல நியாயம்?'' என்றான்

விஜயனுக்கு என்ன பேசுவது என்று தெ

அதனால நடந்ததென்ன...! மூன்று பேருக்கும் கஷ்டம் தான்! அதனாலதான் நான் சிந்திக்க ஆரம்பிச்சவுடனே போய் அண்ணியை அழைச்சுட்டு வந்தேன்,'' என்றான்.

''......''

''ஆனா.. ஒரு விஷயம்... நல்லதா என் வாழ்க்கையில நடந்துச்சு! தாமோதரன் மாமா உறவு. சொந்த மகனா வளர்த்தார். சுதந்திரமா வளர்த்தார். சமுதாயப் பொறுப்புள்ள சிந்தனைகளை எனக்குள்ளே விதைத்தார்...''

''அதெல்லாம் சரிதான்! ஆனா... உனக்குள்ளே பெண்கள் மேலே ஒரு வெறுப்பை வளர்த்து விட்டுட்டாரு!''

தமிழ்மதி சிரித்தான்.

''விஜி! நீ கூட என்னைச் சரியாய்ப் புரிஞ்சுக்கலயா! அது வெறுப்பு இல்ல...! கோபம்! இங்கே குடும்பங்கற அமைப்பு வர வர ஒரு நிர்ப்பந்தமா போயிட்டிருக்கோங்கற கோபம்..!''

''ஆமா! நீ இப்படிச் சொல்றே! ஆனா உலகம் முழுதும் நம்மளோட குடும்ப அமைப்பைப் பத்தி அப்படிப் பாராட்டிப் பேசறாங்க...''

''ஓ.கே.! ஓ.கே.! இந்த டிஸ்கஷன்ஸை இன்னொரு நாளைக்கு வச்சுடுவோம். வர்ற ஞாயிற்றுக்கிழமை எனக்கு என்ன ப்ரோகிராம்னு பாரு...'' என்றான்.

''அதிசயமாய் அந்த வாரம் ஊர்ல இருக்கே! ஆனா.. அன்னைக்கும் முற்போக்கு எழுத்தாளர்கள் சங்க மீட்டிங் இருக்கு.''

''ஓ.கே.! அதுதான் மத்தியானத்துக்குள்ள முடிஞ்சுடுமே! ஃபார் யுவர் இன்பர்மேஷன், இந்த வாரம் நான் அண்ணன் வீட்ல போய்த் தங்கப் போறேன்.''

விஜயன் கண்கள் தெறித்து விழு
பார்த்தான்.

''சரி.. சரி..! ஓவராய் ஆக்ட் பண்ணா
ளுக்கு நான் வர்றதில்லே, தங்கறதில்லே
வருத்தம். அதனால வெள்ளிக்கிழமை நை
போயிட வேண்டியதுதான். சனி, ஞாயிறு
போட்ற வேண்டியதுதான்.''

''தமிழு! உனக்கு என்னவோ ஆயிடுச்சு!

''ஹலோ! ரொம்ப மாறிட்டேன்னு நி
சின்ன மாற்றம். அவ்வளவுதான்!

''என்ன மாற்றம்!''

''இனிமே குடும்பங்களுக்குள்ளே
புறப்படறது. ஆனாலும் குடும்பஸ்தனாக
முடிவு...!'' என்றான்.

ஏதோ சொல்ல வாயெடுத்த விஜயன்
கொண்டான்.

தமிழ்மதிக்குள்ளே ஏதோ மாற்றங்கள் நி
நல்லதற்கா கெட்டதற்கா என்று தெரியவில்
அவன் போக்கிலேயே போய் ஏதோ ஒ
வரட்டும் என்று எண்ணிக் கொண்டான்.

''அது சரி! நான் விஷயத்தை அ
சொல்லவா... வேண்டாமா?'' என்றவன்
''ஐயோ! வேண்டாம்ப்பா! நீயே சொல்லி
தடவையே வீடு மாத்தினப்பவே... ''ஏ
வுக்குப் பெரியவனாயிட்டானா? நேரடி
சொல்லக் கூடாதா...'' அப்படீன்னு வருத்
என்றான்.

சொன்னான்.

சொன்னவுடனே அண்ணன் முகத்தில் தோன்றப் போகும் மகிழ்ச்சியையும், முகமாற்றங்களையும் கற்பனையில் கண்டு கொஞ்சம் மகிழ்ந்துதான் போனான்.

* * *

''சார்! நீங்க... ஸ்கூல்ல ஃபர்ஸ்ட்டா வந்தீங்களாம்!'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

''ஹலோ! வெறும் ஸ்கூல் ஃபர்ஸ்ட் மட்டுமில்லே! டிஸ்ட்ரிக்ட் ஃபர்ஸ்ட்...! அது மட்டுமில்லே... ஸ்டேட் ஃபர்ஸ்ட்டுக்கும் என் மார்க்குக்கும் வெறும் நாலு மார்க்தான் டிபரஃன்ஸ்...'' என்றான்.

மீசையை நீவி விட்டுக் கொண்டான். அதைப் பார்த்துக் கீதாலட்சுமி... கலகலவென்று சிரித்தாள்.

தமிழ்மதிக்கு ஏனோ அந்தப் பெண்ணை மிகவும் பிடித்தது.

கலகலவென்று சிரிப்பதும்... கள்ளமில்லாமல் நடமாடுவதும்... அடிக்கடி கடிஜோக் சொல்லுவதும் என்று இளமை ததும்ப நடமாடுகிறாள்.

நல்ல வேளை!

இந்தப் பெண் இந்த வீட்டில் இருப்பதால் கொஞ்சம் சுவாரசியம் தட்டுகிறது என்று எண்ணிக் கொண்டான்.

கீதாலட்சுமி சிரித்து முடித்து விட்டுக் கேட்டாள்.

''அது சரி! நீங்க எந்த அளவுக்கு டேலன்ட்ன்னு எனக்கு எப்படி நிரூபிக்கப் போறீங்க?'' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் குறும்பாகப் பார்த்தான்.

''எதுக்கு நிரூபிக்கணும்?'' என்றான்.

''அப்புறம்.. நான் எப்படி நம்பறதாம்?''

''நீ நம்பாட்டிப் போ..!''

''ம்ஹூம்...!'' என்று சிணுங்கினாள்.

அப்போதுதான் அந்தப் பெண் எத போடுகிறாள் என்று புரிந்தது.

''ஹலோ...! இந்தக் காதைச் சுத்தி மூக்கை எல்லாம் விட்டுட்டு... என்ன வேணும் என்றான்.

''ம்... அப்பாடா! விஷயம் புரிஞ்சுதா? ஒ இந்தக் கணக்கு வழக்கு வரவே மா சனியன்!'' என்றாள்.

''அப்படிப் போடு!'' என்று சிரித்தான்.

''ஏன்..? உங்கக்கா... ஜீனியஸ் இ அவங்ககிட்டே கேட்க வேண்டியதுதானே

அவள் சீரியஸாகச் சொன்னாள்.

''அக்கா... ஜீனியஸ்தான்! ஆனா... அ கெனவே நிறையப் பொறுப்புக்கள். நான் செய்யணுமான்னு இருக்கு! அது மட்டுமில் ஹெல்ப் இல்லாமயே நான் நல்ல மா அவளுக்கு இன்னும் சந்தோஷமா இ அட்லீஸ்ட்.. அக்காவுக்கு நான் இந்த வி பண்ணலாமில்லே!'' என்றாள்.

தமிழ்மதி அந்தச் சின்னப் பெண்ணி தெரிந்த கவலையைப் பார்த்தான்.

சட்டென்று சொன்னான்.

சொல்லித் தரேன்..!" என்றான்.

கீதாலட்சுமியின் முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

"சரி சார்!" என்று மகிழ்ச்சியானாள்.

"அப்புறம்... அது இல்லையா?" என்றான்.

"எது?" என்றாள் கீதாலட்சுமி, கேள்விக் குறியாக.

"கடி ஜோக்!"

"அதானே..! கண்டிப்பா... சொல்றன்!" என்று இரண்டு மூன்று கடிஜோக்குகள் சொன்னாள்.

தமிழ்மதியும், அவளும் கலகலவென்று சிரித்தார்கள்.

அதே நேரம்!

குமுதினி வீட்டுக்குள் நுழைந்தவள் திரும்பி அந்தக் காட்சியைப் பார்த்தாள்.

மேலோட்டமாகப் பார்ப்பது போல் பார்த்தாலும், அவள் கண்களில் இருந்து ஏதோ ஒரு செய்தி தங்கைக்குப் போனாற்போல இருந்தது.

தமிழ்மதியின் கண்களில் குறும்பு மின்னியது.



## 17

"அம்மா... நான் புறப்படணும்!" என்று கூடத்தில் குமுதினி சொல்லிக் கொண்டிருந்தது தமிழ்மதியின் காதுகளில் விழுந்தது.

சில வேளைகளில் கூடத்தில் பேசுவது அவனுக்குக் கேட்பதுண்டு.

காலனியிலும் கூட அது போல எதிர் வீட்டுக்காரர்கள் உரக்கப் பேசினால் காதில் விழுவதுண்டு.

சில நேரங்களில் அது போலக் க
சுகமாகத்தான் இருக்கும். அந்த மாதிரிப் பே
விழும்போது தனது தனிமை உணர்வு ம
உணர்வான்.

அப்போதுதான் நேற்று விஜயனிடம்
டிருந்தபோது தான் அண்ணன் வீட்
உத்தேசித்திருப்பதைச் சொன்னது நினை

திரும்பிக் காலண்டரைப் பார்த்தான்.

இன்றைக்கு வியாழக் கிழமை ஆகிவி
மாலை போவதாக உத்தேசித்திருக்கி
எண்ணிக் கொண்டான். செல்போனை
ணன் வீட்டுக்கு அழைத்தான்.

"அண்ணா..! நான் நாளைக்குச் சாய
வீட்டுக்கு வரதா இருக்கேன். திங்கட்
அங்கேதான்..!" என்றான்.

குமரவேலின் மனதுக்குள் குப்பெ
பொங்கியது.

"டேய்.. தம்பி! நிஜம்மாவா சொல்றே?

"ஆமண்ணா! இதுல விளையாட
இருக்கு?" என்று புன்னகையுடன் சொன்

"அதானே!" என்றவர், "ம்..! சியாமளா!
வரானாம். ரெண்டு மூணு நாள் இங்கே
என்று குரலெடுத்துக் கத்தினான்.

காதுக்குள் விரலை விட்டு ஒரு சுழ
கொண்ட தமிழ்மதி சிரித்தான்.

"அண்ணா! என்னண்ணா... இந்
என்றான்.

"சந்தோஷம்பா... தம்பி! சந்தோஷம்!" என்று அண்ணன் மறுபடியும் உற்சாகமாக, அவனுக்குள்ளே ஏதோ நகர்கிறாற்போல இருந்தது.

"அண்ணா! தடபுடல் பண்ணாதே! இருக்கிற வாக்கில் உங்களோட இருந்துட்டு வரேன். சரியா!" என்று ஆஃப் செய்தான்.

குமரவேலின் உற்சாகம் குறித்துச் சிரித்துக் கொண்டே போய்க் குளித்து விட்டு வந்தான். அப்போதுதான் அது நினைவுக்கு வந்தது.

நேற்றுக் கீதாலட்சுமிக்குத் தான் பாடம் சொல்லிக் கொடுத்ததும், அப்போது சிரித்துக் கொண்டிருக்கையில் குமுதினி அவனைக் கண் பார்வையிலேயே கண்டித்து விட்டுப் போனதும்...

"ஆஹா...! இந்தக் குமுதினிப் பெண் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண் பாவம்... சின்னப் பெண், அவளோடு பேசிக் கொண்டிருந்தால் கூடத் தப்பா! தான் இருக்கிற இடம் தெரிந்து நடந்து கொள்ளத் தெரியாதவன் என்று நினைக்கிறாளா! இல்லை... தங்கையின் மேல் நம்பிக்கையில்லையா? அட... ராமா! போயும்.. போயும்... அந்தச் சின்னப் பெண்ணிடம் பேசுவதைக் கூட..." என்று சிரித்தவுடனே உள்ளுக்குள் ஒரு கோபம் தோன்றியது.

கூடவே ஒரு எண்ணமும்.

குளித்து விட்டு வெளியே வந்தவன் தலை துவட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

சுருள் முடியில் லேசாக நீர் திரண்டிருக்க... அப் போதுதான் குளித்து விட்டு வந்திருந்த பளபளப்பு

குமுதினி நின்றாள்.

ஒரு நிமிடம் தயங்கினாள்.

கையில் காபி டம்ளர்.

எப்போதும் 'டண்டடய்ங் டொய்ங்!''

லேயே வாத்தியம் வாசித்தபடி நுழைவது கீ

தான் இருக்கும். ஆனால் இன்றைக்கு

தேவியாரே தரிசனம் என்று எண்ணிக் கெ

இதழ்களில் ஒரு கேலிச் சிரிப்பு மலர்ந்

"சார்... காபி!" என்று நின்றாள் குமுதி

"வாங்க... குமுதினி! உள்ள வாங்க!

அஞ்சு நிமிஷம் போயிருந்தா நானே

களைக்குள்ளே நுழைஞ்சிருப்பேன்," என்

அவன் புன்னகைத்தான்.

"என்ன கீதாவைக் காணோம்? நீங்க

கீங்க?" என்றான் வியப்புடன்.

"நேத்தென்னவோ.. ரொம்ப நேரம் கண

கிட்டிருந்தா போல.. காலைல எழுந்தி

ஸ்கூல்ல ஸ்பெஷல் கிளாஸ் இருக்காம்.

என்றாள்.

காபியை டவராவில் ஊற்றிச் சுவைத்து

வேண்டுமென்றே சொன்னான்.

"உங்க கீதாவை எனக்கு ரொம்பப் பிடி

குமுதினி கொஞ்சம் திடுக்கிட்டாற் போ

ஒருவேளை அவன் பிரமையோ என்னவே

"ஓ...!" என்றாள்.

''நல்ல பொண்ணு! ரொம்பப் பொறுப்பா... சிந்திக்கறா...'' என்றான்.

''அவளா...!'' என்பது போலக் குமுதினி பார்க்க, அவன் முகத்தில் மென்மையான பாவம் தோன்றி நிறைய, அவன் சொன்னான்.

''ஆமா..! நான் அவளுக்குக் கணக்குச் சொல்லித் தாணுமாம். நீங்க இந்தக் குடும்பத்துக்காக ரொம்ப உழைக்கிறீங்களாம்! உங்களுக்கு ஏதாவது ஒரு விதத்துல உதவி செய்யணும்னா, அது நல்ல மார்க் எடுக்கறது மூலமாத்தானாம்!'' என்றான்.

வேண்டுமென்றே அந்தச் செய்தியைச் சொன்னான். நீ நினைத்தபடி அளவுக்கு ஒண்ணும் உன் தங்கை முட்டாள் இல்லை என்றும், சின்னப் பிள்ளைக்குள்ள வித்தியாசம் தனக்குத் தெரியும் என்றும் காட்டுவது அவனுடைய நோக்கமாக இருந்ததுவோ என்னவோ!

குமுதினிக்கும் அது புரிந்தது போலும்! மனதில் பெரிய விடுதலை புணர்வு தோன்ற அவனைப் பார்த்து ஆத்மார்த்தமாகப் புன்னகைத்தாள். அவன் தொடர்ந்தான்.

''ஆமா! நான் கூட அவள் இவ்வளவுக்கு யோசிக்கிற பொண்ணுன்னு நினைக்கலே. நீங்க அவளைப் பத்திக் கவலைப்பட வேண்டியதில்லே..'' என்றான்.

'அவள் என்னோட பேசறதைப் பத்திக்கூட!' என்ற செய்தியும் அவளுக்கு அதன் மூலமாகச் சொல்லப்பட்டது.

குமுதினியின் முகம் சிவந்து போனது. மிக நாசூக்காக அவன் தனக்குப் பதிலடி கொடுத்து விட்டான் என்று தோன்றியது.

''தமிழ்மதி சார்! என் கவலை உங்களுக்குப் புரியும்னு நினைக்கிறேன். எதைப் பத்தியும் கவலைப்படாத



அப்பா...! இவளோ வயசுப் பொண்ணு. எதுலயும் சிக்கி காத அளவுக்கு அவளைப் பாதுகாத்துக் கரை சேர்க்கணும்! என்றாள்.

''ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட்,'' என்றான் தமிழ்மதி.

பூரணமான புரிந்து கொள்ளல் உணர்வு அதி இருந்தது.

குமுதினியின் மனதில் நிம்மதியுணர்வு தோன்றியது அது முகத்தில் தெரிய, அவனைப் பார்த்துப் புன்னகைத் விட்டு நகர்ந்தாள்.

''ஏன்... மேடம்!'' என்ற அவன் குரல் அவளை தடுத்து நிறுத்தியது.

நின்றாள்... திரும்பிப் பார்த்தாள்.

''இல்லே! எனக்கு ஒரு சந்தேகம்!'' என்றான்.

''என்ன சந்தேகம்?'' என்றாள்.

''இல்லே! தங்கையைப் பத்தின பாதுகாப்புணர் மட்டும்தானா... இல்லே...'' என்றவன் தான் சொல் வந்ததை நிறுத்திக் கொண்டான்.

''இல்லே! உங்க மேல அவநம்பிக்கையான்னு கேக்றீங்களா?'' என்றாள்.

''ம் ஆ... ஆமா!''

''உங்க மேல அவநம்பிக்கைன்னு இல்லே. யா கேர்ள்ஸ்க்கு உங்க மேலே எவ்வளவு கிரேஸ் இருக் குன்னு உங்களுக்குப் புரியலே...!'' என்றாள்.

குறும்பாகச் சிரித்தாள்.

சட்டென்று நகர்ந்து விட்டாள்.

இப்படியொரு பதிலைக் குமுதினியிடம் அவன் எதி பார்க்கவில்லை. முகம் சிவக்கச் சிரித்து விட்டு உள்ளே போனான்.

"பொறாமையோ!" என்று தான் கேட்க நினைத்தான். ஆனால் அப்படிக் கேட்டால் எல்லை மீறினாற் போல இருக்குமோ என்று தோன்றவே நிறுத்திக் கொண்டான். நல்ல வேளை! குமுதினி வேறு விதமாகப் புரிந்து கொண்டாள்.

அதுவும் நல்லதாகப் போயிற்று என்று எண்ணிக் கொண்டான்.

மறக்காமல் நடந்த விஷயத்தை விஜயனிடம் பகிர்ந்து கொண்டான். விஜயன் கூட யோசனையில் ஆழ்ந்தவன்,

"இருக்கலாம்...! பொறாமையாக் கூட இருக்கலாம்," என்றான்.

"அடப்போடா! குமுதினிக்காவது பொறாமையாவது! அதுக்கு ஏற்கெனவே என்னைப் பத்தி ஏதோ கோகுல கிருஷ்ணன்கிற மாதிரி நினைப்பு!" என்றான்.

விஜயன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான். அப்போதைக்கொரு முடிவும் எடுத்துக் கொண்டான். ஆனால் அதைத் தமிழ்மதியிடம் சொல்லவில்லை.

"சரி... நீ எப்ப உங்கண்ணன் வீட்டுக்குப் போகப் போறே?" என்றான்.

'வெள்ளிக் கிழமை சாயங்காலம்,' என்றான்.

* * *

பைக்கைக் கொண்டுபோய் விட்டு அந்தச் சின்ன ஏர்பேக்கைத் தோளில் மாட்டிக் கொண்டு நடந்தபோது மொத்த வீடும் தமிழ் மதியை வரவேற்பதற்கு வந்தது.

சகோதரிகள் இருவரும் குழந்தைகளோடு வந்திருந் தார்கள்.

குமரவேலும், சியாமளாவும் வெளியே வந்து பரபரப் பாக வரவேற்றார்கள்.



"தம்பி! ரொம்பவும் சந்தோஷம்!" என்று சியாமள உருகி உருகிச் சொன்னதைக் கேட்டு, அவனுக்கும் மன கொஞ்சம் நெகிழ்ந்துதான் போயிருந்தது. அவனுக்கென்ற சின்ன அறையைத் தயார் செய்து வைத்திருந்தார்கள்.

தான் தங்கியிருந்த... இல்லையில்லை, ஒதுங்கியிருந் அதே அறை!

இப்போது சுத்தம் செய்து ஒரு கட்டில் போட்டு வைத்திருந்தார்கள்.

சிரித்துக் கொண்டான்.

பழைய தட்டு முட்டுச் சாமான்களோடு தானுமா ஒண்டியிருந்த அறை.

சகோதரிகள் இருவரும் இரண்டு பக்கமும் அமர்ந் கொண்டார்கள்.

"டேய் தம்பி! நாங்க தப்புப் பண்ணிட்டோம்பா உன்னை அந்தத் தாமு மாமா வீட்ல வளர விட்டிருக்க கூடாது! உனக்கு ஒட்டுதலே இல்லாமப் போச்சு...!" என்றாள் பங்கஜம்.

தமிழ்மதி பொறுமையாகப் புன்னகைத்தான். "அதை இப்ப யோசிச்சு என்ன பண்றது! நான் சந்தோஷமாத்தான் இருந்தேன்," என்றவன், பார்வை மெதுவாகத் திரும்புகை யில் சியாமளாவின் முகம் வாடியிருப்பதைப் பார்த்தான்.

சகோதரி இங்கிதமில்லாமல் பழைய விஷயங்களை கிளறியிருக்க வேண்டாம் என்று தோன்றியது.

சட்டென்று எழுந்து அண்ணி இருந்த சமையலறை நோக்கிச் சென்றான்.

"அண்ணி! சூடா ஒரு காபி போடுங்க," என்றான்.

சற்று நேரம் அண்ணியிடம் சிரித்துப் பேசினான்.

ஜோக்குகள் சொல்லி அண்ணியைச் சிரிக்க வைத்தான்.

பங்கஜம் தன் தம்பி தன் நடத்தையின் மூலமாக அண்ணியின் மேல் தனக்கு எந்தக் கோபமும் இல்லை என்று காட்டுகிறான் என்று புரிந்து கொண்டாள். அதற்குப் பிறகு யாருமே நடந்து போன விஷயங்களைப் பற்றிப் பேசவில்லை.

மாறாக அவரவர்கள் குடும்பம் பற்றி, கணவன்மார் பற்றி, குழந்தைகள் பற்றிப் பகிர்ந்து கொண்டார்கள்.

அப்போதுதான் கவனித்தான்.

ஒரு இளம் வயதுப் பெண் ஒதுங்கி ஒதுங்கி நிற்பதை.

"அக்கா... இது..." என்று இழுத்தான்.

"டேய், தெரியலையாடா! இது துர்காடா! என் பொண்ணு! இருபத்தோரு வயசை முழுங்கிட்டு... இப்படி ஒதுங்கி ஒதுங்கி நிக்கறா..!" என்றாள்.

ஆஹா! தான் சின்ன வயதில் பார்த்த அக்கா... மகள்!

"ஹலோ! துர்கா... தாய் மாமன்கிட்டே என்ன வெட்கம்!" என்று கேலி செய்து வெளியே வரவழைத்தான்.

பதினெட்டு ஆண்டுகளாக ஒட்டாமலே இருந்து விட்டு இப்போது குடும்பத்துக்குள் நுழைகையில் எல்லாருமே பொழிகிற பாசம் அவனுக்குக் கொஞ்சம் வித்தியாசமாகத்தான் இருந்தது.

குமரவேல் அண்ணனின் மகள் பத்து வயதில் இருந்தாள்!

சித்தப்பா... சித்தப்பா... என்று மேலே விழுந்து பிடுங்கியது சுகமாகத்தான் இருந்தது.

சொல்லிக் கொண்டிருக்க.. அரட்டையும்
இருக்க, ஏதோ தபாலில் அவன் கையெழுத்
தற்காக வந்த விஜயன் கொஞ்சம்... கொ
நிறையவே மலைத்துத்தான் போனான்.



## 18

"குமுதினி! நம்பவே
உறவுக்காரங்க புடைசூழ
திருந்தாரு நம்ம தமிழ்மதி.

"அப்படியா?" என்றாள்

"ஆமாங்க.. குமுதி
அவன் தன்னோட கு
நோக்கிப் பார்வையைத் திருப்புவதற்கு ஒரு
நீங்க காரணமோன்னு எனக்குத் தோணுது
விஜயன்.

"நானா?" என்றாள் ஆச்சரியமாக.

"ஆமா! குடும்பங்கற ஒரு அமைப்பு போ
அமைப்பு! சமூக சௌகரியம்! இப்படித்த
இதுவரைக்கும் நினைச்சுக்கிட்டிருந்தான். ஆ
பங்கிற கான்செப்ட் மேலே கவனம் செலுத்
உங்களோட ஏற்பட்ட அந்த கான்ட்ரவர்சிக்
தோண ஆரம்பிச்சிருக்கு..." என்றான் விஜய

"சார்! இப்ப அது பற்றி யோசிக்கறதுக்கு
நான் காரணமா இருந்திருக்கலாம். ஆனா..
யோசிக்காம இருந்ததுக்கு நான் காரண
அவருடைய வளர்ப்பு முறையிலயோ அல்ல
முறையிலயோ ஏதோ ஒரு உறவு

குமுதினி.

விஜயன் ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான்.

''உண்மைக்குக் கிட்டக்க வந்துட்டீங்க மேடம்! ஆனா அது பற்றி இப்ப நான் பேசலாமா இல்லையா... தெரியலே...! டைம் வரும்.. கண்டிப்பாய்ப் பேசறேன்...'' என்றான் விஜயன்.

குமுதினியும் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள். பிறகு சொன்னாள்.

''ஆமா... பேசணும்! அதுக்கப்புறம்தான் அந்த வெறுப்பையோ... இல்லே, வேறேதோ ஒரு விஷயமோ அதைக் கெல்லி எடுக்க முடியும்,'' என்றாள்.

விஜயன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

''ஆமாங்க சார்! மேம்போக்கான பழக்கத்திலே, பேச்சிலே பழகும்போது தமிழ்மதி ஒரு சுவாரசியமான மனிதராத் தெரிந்தார். ஆனா.. எனக்கென்னவோ உள்ளே உயிர்த்தெழ வேண்டிய ஒரு சாஃப்ட் கார்னர் இருக்குன்னு தோணுது... என்றாள் குமுதினி.

இந்தப் பெண் தமிழ்மதியைச் சரியாகப் புரிந்து கொண்டாள் என்று தோன்றியது விஜயனுக்கு. முழுமையாகத் தமிழ்மதியைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்ற ஆவல் கிளர்ந்தெழுந்தது. ஆனால், 'குடியிருக்கிறோம் என்று இந்த வீட்டுக்கு வந்தே கொஞ்ச நாட்கள்தான் ஆகியிருந்தது. அதற்குள்ளாகத் தமிழ்மதியின் வாழ்க்கைப் பிரச்சினைகளை எல்லாம் இந்தப் பெண்ணிற்குச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா? அதுவும் தமிழ்மதியின் அனுமதியில்லாமல்!' என்று எண்ணினான். தமிழ்மதியின் இளமைக் காலப் பிரச்சினைகளையெல்லாம் சொல்லுகிற

சொல்லுவதற்கான ஒரு நேரமும் வந்தது.

* * *

மூன்று மாதங்கள் ஓடியிருந்தன.

தமிழ்மதி அன்றைக்குக் காலனி வீட்டுக்குப்
ஏனோ பிற்பகலில் தலை வலிக்கிறாற் போல்
வீட்டுக்கு வந்து விட்டான்.

ஒரு சில நாட்கள் விஜயன் வீட்டில் இருந்
வந்து விடும். சில நாட்கள் காலையில் புறப்ப
மீனாட்சியம்மா சாப்பாடு கட்டிக் கொடுத்து
அதற்குத் தகுந்த ஹாட்பேக் வாங்கியிருந்தான்
பெரும்பாலான நாட்கள் வீட்டுச் சாப்பாடுதான்

மீனாட்சியம்மாவின் கைமணம் கலந்த
அவனுக்கு மிகவும் பிடித்தது. பாரபட்சம்
அவரது தாயன்பு அவனுக்குள் இருந்த தாய் உ
ஏக்கத்தை விசிறி விடுவதும், ஆர்வத்தைத் தூ
ஆகிய காரியங்களை ஒரு சேரச் செய்து கொ

இன்றைக்குக் கொண்டு போன சாப்
சாப்பிடாமலே கொண்டு வந்து விட்டான்.

முகம் வாடி வந்த அவனைக் கண்
மீனாட்சியம்மா பரபரப்பாய் வந்தார்.

''என்ன தம்பி! உடம்பு சரியில்லையா?'' எ

''ஆமாம்மா! கொஞ்சம் தலைவலியா இருக்
வந்துட்டேன்,'' என்றான்.

''சாப்பிட்டியா?''

''இல்லம்மா!'' என்றான்.

சார் அந்தப் பாத்திரத்தைக் குடு! எல்லாத்தையும் சூடு பண்ணிக் கொண்டு வந்து தர்றேன்,'' என்று உள்ளே போனார்.

ஐந்து நிமிடங்களில் எல்லாவற்றையும் சுட வைத்துக் கொண்டு வந்தார்.

அவனது அறையிலேயே இருந்த சின்ன மேஜையில் தட்டு வைத்துப் பரிமாறினார்.

அந்த நேரத்துக்கு அந்த உபசரிப்பு இதமாக இருந்தது.

சென்ற முறை தன் அண்ணன் வீட்டுக்குப் போன போது, அண்ணி கூட இப்படித்தான் பக்கத்திலேயே நின்று பரிமாறினார்.

'என்ன இது! திடீரென்று நமக்கு ராசிபலன் மாறி விட்டதா? யோக காலம் கூடி விட்டதா? பெண்களின் கவனிப்பு அதிகமாக இருக்கிறதே!' என்று எண்ணிக் கொண்டான்.

நன்றாக ரசித்து ருசித்தும் சாப்பிட்டான். உடனடியாகப் படுக்க வேண்டாம் என்ற எண்ணத்தோடு ஒரு அரை மணி நேரம் எதையோ படித்துக் கொண்டிருந்து விட்டுக் 'கப்' பென்று போர்த்துக் கொண்டு படுத்தான்.

அயர்ந்து உறங்கி விட்டான்.

இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆழ்ந்த உறக்கம்!

''இந்தாடி... இதைப் பிடி! தண்ணி கீழே போகுது... பார்..!'' என்ற குரல்கள் கேட்கவும் எழுந்தான்.

முகம் கழுவி வெளியே வந்தான்.

எப்போதும் முண்டா பனியன் அல்லது டீ ஷர்ட் அணிந்து கொண்டுதான் இந்த வீட்டில் நடமாடுவான்.

வெளியே வந்து பார்த்தான்.

மீனாட்சியம்மா பைப்படியிலிருந்து
தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்து கொடுக்க,
அதை வாங்கித் தொட்டியில் ஊற்றிக் கொண்

''என்ன! தண்ணி பிடிக்கறீங்களா?'' என்று
எட்டிப் பார்த்தான். அது அகன்று ஆழ
பிளந்தது.

''யப்பா! நூறு குடம் பிடிக்கும் போல
என்றான்.

''ஆமா! ஒரு நாள் விட்டு ஒரு நாள்தா
வருது! புழங்கறதுக்கு வேணுமே. அதில
உங்களுக்கும் தண்ணி வேணும்...'' என்றாள்

''ம்..!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே
டீ ஷர்ட்டை மாட்டிக் கொண்டான். வெளியே

''தள்ளுங்கம்மா! உள்ளே தடிப் பயல்
குறட்டை போட்டுட்டுத் தூங்கிட்டிருக்கே
யிருக்கலாமில்லே...'' என்றான்.

''இல்லப்பா! இதெல்லாம் உனக்கு
இல்லே..!'' என்று தயங்க,

''நகருங்க..! நகருங்க..! இதுக்கென்ன
எடுக்கணுமா?'' என்று குடத்தைக் கையி
கொண்டான்.

அவனும் கீதாலட்சுமியுமாகத் தண்ணீர்
மாற்றி மாற்றிக் குடத்தைப் பிடித்துக் கொண்
வேலையும் ஆயிற்று.

ஒரு குடத்தை வலக்கையால் தூக்கிக் கொ
டியை நோக்கி வந்து கொண்டிருக்கையில்
பார்வையைச் சந்தித்தான்.

தலைவலி என்று வந்தானே, எப்படியிருக்காரோ என்று பார்க்க வந்திருந்தான்.

"தமிழு...!" என்ன இது!" என்று அவனும் குடத்தில் தண்ணீர் எடுக்கிற வேலையில் பங்கு கொண்டான்.

வேலை நடக்க நடக்கவே, "எம்மா... இத்தனை பாட்டுக்கு பைப்பைத் தொட்டியோரமாகக் கொணடு போய்ப் போட்டு... ஒரு ஹாஃப் எச். பி. மோட்டார் வச்சாப் போச்சு...! என்றான் அவன்.

கீதாலட்சுமி சட்டென்று சிரித்தாள்.

மீனாட்சி மகளைப் பார்த்து முறைத்தார்.

"எதுக்குடி சிரிக்கறே?" என்று மிரட்டினார் மீனாட்சி.

"பின்னே? ஹாஃப் எச்.பி. மோட்டார் இருந்துச்சு...! அது அப்பாவுக்குத் தேவையானப்ப காயலான் கடைக்குப் போய்ப் பத்து நாள் அப்பாவுக்கு தீர்த்தமாகறதுக்குச் சரியாப் போச்சுன்னு உடைச்சுச் சொல்லவா முடியும்?" என்றாள்.

மீனாட்சியம்மாள், மகள் சொல்லவா முடியும் என்று கேட்டுக் கொண்டே விஷயங்களைச் சொல்லி விட்டதனால், சற்றுச் சங்கடமானவர், "இருங்கப்பா! காபி போட்டுட்டு வந்துர்றேன்," என்று உள்ளே நகர்ந்தார்.

கீதாலட்சுமியைப் பார்த்துத் தமிழ்மதியும் விஜயனும் சிரித்தார்கள்.

கீதாலட்சுமியும் சிரித்தாள்.

"விவரமான ஆளம்மா.. நீ!" என்று சிரித்தான் விஜயன்.

அம்மா போன திசையைப் பார்த்துக் கொண்டே கீதாலட்சுமி சொன்னாள்.

"வீட்டுக்காரரைப் பற்றி ஏதாவது சொன்னா மட்டும் எவ்வளவு சங்கடம் பாருங்க!" என்றாள்.

"அவங்க.. பாவம்மா! யாருக்குன்னு ...
என்றான் விஜயன்.

"ஆமா இப்ப என்னத்தைப் பேச முடியும்
இத்தனை குழந்தைங்க பிறக்கற இடை...
ஓரளவுக்குப் புத்திசாலித்தனமா பேசியிருந்...
இந்த வம்பே வந்திருக்காது..." என்றாள் கீதா...

"ஏய்! வயசுக்கு மீறிப் பேசாதே..." என்று...
தமிழ்மதி.

"பேசாம இருங்க... அங்கிள்! அம்மா ...
என்றாள்.

சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள்.

தமிழ் மதி குடத்தைத் தூக்கிக் கொண்டு ...
நேரம் குமுதினி நுழைந்தாள்.

"ஐயோ...! என்ன சார்.. நீங்க குடம் தூக்கிட்...
பதறினாள் குமுதினி.

"ஏன்... ஏன்...! நாங்க குடம் தூக்கக் கூட...
சொன்னா? விட்டா நாங்க பளு தூக்கும் ...
ஆயிருப்போம் இல்லே...!" என்று சிரித்து...
குடத்தைத் தூக்கித் தொட்டியில் தண்ணீரை...

அதற்குள்ளாகக் காபி கொண்டு வந்த மீனா...

"போதும்.. தம்பி! தொட்டி முக்கால் வாசி ...
என்று சொல்லவும், கொண்டு வந்த...
தண்ணீரைத் தொட்டியில் ஊற்றி விட்டுக்...
கீழே வைத்தான் விஜயன்.

குமுதினி வரும் வழியில் முறுக்கு வா...
தாள். நெய் முறுக்கும், காராசேவும் தட்டி...
வந்து கொடுத்தார் மீனாட்சியம்மாள்.

அமர்ந்து நால்வரும் அந்தப் பலகாரங்களை உண்டு முடித்தார்கள்.

காபி தேவலோகத்து அமிர்தமாக இருந்தது. ருசித்துக் குடித்தார்கள்.

''எவ்வளவு முயற்சி செய்தும் இந்த பாண்ட்டை நனையாமக் காப்பாத்த முடியலை!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்த தமிழ்மதி, விஜயனிடம் கண்ணைக் காட்டி விட்டுத் தனது அறைக்குப் போனான்.

விஜயனும் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வந்தான்.

அறைக்கு வந்ததற்குப் பிறகு சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான் தமிழ்மதி.

''என்ன... மதி...?'' என்றான் விஜயன்.

''இல்லடா.. விஜி..! எனக்குப் பழைய ஞாபகம் எல்லாம் வந்துருச்சு...'' என்றான் தமிழ்மதி.

விஜி ஆழமாகவும் ஆர்வமாகவும் நண்பனின் முகத்தைப் பார்த்தான்.

தமிழ்மதி தனக்குள் பேசிக் கொள்வது போலச் சொன்னான்.

''இல்லடா, விஜி! அண்ணன் என்னை நல்லா வச்சுக் கணும். இல்லே... உன்னை வீட்டுக்கு அனுப்பிடுவேன்னு மிரட்டினாரு போல! அண்ணி.. அண்ணன் இருக்கற வரைக்கும் என்னை நல்லாப் பார்த்துக்குவாங்க! அவரு அந்தப் பக்கம் போனதுக்கப்புறம் அத்தனை கோபத்தையும் என் மேல காட்டி...'' என்றான்.

பெருமூச்சை இழுத்து நிறுத்தினான்.

''பெண்ணுக்குள்ளே தெய்வமும் இருக்
இருக்கும் போல இருக்கு...! சின்னப்
அப்படீன்னு நினைக்கலே! என்னைப்
நினைச்சாங்க! பெரிய குடத்தைக் குடுத்து அ
எடுக்கச் சொல்வாங்க...! ஒரு நாள் குடம் க
உடைஞ்சு போய்! அடி..! கரெக்டா அண்
யெல்லாம் பாத்துட்டாரு. அப்புறம்தான் அ
கொண்டு போய்ப் பிறந்த வீட்ல விட்டுட்டா
ஏற்பட்ட குற்ற மனப்பான்மையைப் போக்கிக்
கொண்டு போய்த் தாமு மாமாகிட்டே வி
கேவலம்.. இந்தக் குடம் என் வாழ்க்கைப் ப
மாற்றிருச்சு...!'' என்றான்.

ஒரு சின்னப் பையன் ஒரு குடத்
முடியாமல் தூக்கிக் கொண்டு தடுமாறுவ
போட்டு விடுவதையும், அதன் விளைவ
கணவன் மனைவி ரகளையையும், விஜயன
செய்து பார்க்க முடிந்தது.

அதே நேரம்...

சற்று முன் ஏதோ சொல்வதற்காக வந்த
கதவுக்கப்புறம் நின்று இந்தக் கதை முழுவதை
விட்டு வந்த சுவடு தெரியாமல் போய் விட்
அவர்களுக்குப் புரியவில்லை.

தமிழ்மதி குபீரென்று சிரித்தான்.

''ஏன்... விஜி! சீதா நல்லாத்தான்
ஒவ்வொரு குழந்தைக்கும் இடையே இடை
கும்போது அம்மா அப்பாவைப் பேசிச்
யிருக்கலாமில்ல... அப்படீன்னு...! எங்க
ரொம்ப இடைவெளி விட்டதுதான் தப்பா

"ஆமடா! உண்மையாவே யோசிச்சிருக்கணும்," என்றான்.

அந்த விஷயத்தின் கனம் தாங்காதவன் போலவோ என்னவோ, தமிழ்மதி பேச்சை மாற்றினான்.

"டேய் விஜி! ஒரு ஹாஃப்.எச்.பி. மோட்டார் ஃபிட் பண்ணிடணும். பாவம்! அந்த ஆன்ட்டி தண்ணீர் சுமக்கறாங்க. எப்படியும் பொருள் நம்முளுதுன்னு தெரிஞ்சதுன்னா... வீட்டுத் தலைவர் கையை வைக்க மாட்டாரு..." என்றான் தமிழ்மதி.

தமிழ்மதி தன்னைப் பற்றிச் சொன்ன விஷயங்களிலேயே மனம் ஆழ்ந்திருந்தான். லேசான ஒரு புன்னகையை இழையோட விட்டான்.

போன் ஒலித்தது. எடுத்த தமிழ்மதி, "ஆஹா... வம்பு வந்திருச்சு..." என்றான்.



## 19

இன்றைக்கு ஜெனரல் ட்யூட்டி குமுதினிக்கு!

மூன்று மணிக்குப் பிற்பகல் ஒலிபரப்பு முடிந்தது.

"இத்துடன் இந்த ஒலிபரப்பு முடிவடைந்தது," என்று அறிவித்து வணக்கம் சொல்லி வெளியே வந்தாள்.

மறுநாள் சேவைச் செய்திகள் எழுதி வைக்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகு ரெக்கார்டிங் அறைக்குப் போனாள். அந்தப் பிரபல நாவலாசிரியரின் நாவல்

இரண்டு அத்தியாயங்கள் படித்து ஒலிப
கொடுத்து விட்டு வெளியே வந்தாள்.

மணி நாலரை ஆகி இருந்தது.

நூலகத்தில் போய் இடையிடையே செ
சிறிய துணுக்குகள் போலவும் செய்திக
சேகரித்து வைத்தாள்.

இன்றைக்கு நியாயப்படி அவளுக்கு இ
தான். ஆனால் ஜெனரல் ட்யூட்டியில் இருந்
டாக்டரிடம் செக் அப்புக்குப் போக வே
சரியென மாற்றிக் கொண்டாள். 'பாவம்!
கிறாள். இந்த உதவி கூடச் செய்யாவிட்ட
என்று எண்ணிக் கொண்டாள்.

சீனியர் அனவுன்ஸர், ட்யூட்டி ஆபீஸ
அவளிடம் சொல்லுவார்கள்: "குமுதினி, எ
நல்லா எல்லாரும் உன்னை ஏமாத்தற
கேட்டாலும் ட்யூட்டி மாத்த ஒத்துக்கறே..!"

"இருக்கட்டும் சார்! எனக்கு வீட்டைப் பெ
அம்மா எல்லாம் பார்த்துக்குவாங்க. என்ன
ஹெல்ப்தானே கேக்கறாங்க. செய்யறதுல எ
முடியலேன்னா, சாரின்னு சொல்லிடப்
என்பாள்.

அவர்கள் இருவரும் மறுபடியும் ஒருவ
பார்த்துக் கொண்டு சிரிப்பார்கள்.

"என்னவோ நீ இதுவரைக்கும் யாருக்கும்
மாதிரித் தெரியலே..!" என்றார்கள்.

"பரவால்லே... சார்!" என்பாள். நேரம்
ப்ரொகிராம் எக்ஸிக்யூட்டிவுக்கு உதவிகரமா

அதனால் எல்லாருக்கும் அவளைப் பிடிக்கும். அது மட்டுமல்ல, அவளுக்குத் தேவை ஏற்படும்போது, ஆளாளுக்கு உதவி செய்வார்கள்.

ட்யூட்டி நேரம் முடிந்து எஃப்.எம்ல் ட்யூட்டி பார்க்க வந்த பெண்ணிடம் தான் சேகரித்து வைத்திருக்கும் செய்திகளைக் கொடுத்தாள்.

''ஐயோ.... நீங்க ரொம்ப ஸ்வீட் அக்கா!'' என்று கொஞ்சிக் கொண்டாள் அவள்.

கிளம்பி வெளியே வரலாம் என்று நகர்ந்தபோது முதல் தளத்திலிருந்து வருகிற படிகளில் தமிழ்மதி இறங்கிக் கொண்டிருந்தான்.

''ஹாய்!'' என்று சிரித்தான்.

''ஹலோ!'' என்று முகம் மலர்ந்தாள்.

''சும்மா உங்க எஸ்.டி.யைப் பார்க்க வந்தேன். ஒரு சரித்திர நாவல் எழுதறேன். அது சம்பந்தமான செய்திகள் சேகரிக்கணும். ஒரு அருமையான புத்தகம் எஸ்.டி.கிட்டே இருக்கு. அதான் அதை இரவல் கேட்க வந்தேன்,'' என்றான்.

''ஓ...!''

''எதைப் பத்தி நாவல்?'' என்றாள்.

''வரீங்களா? லிஃப்ட் தரேன்,'' என்றான். கண்களில் குறும்பு மின்னியது.

யோசிப்பாளோ, வர மாட்டேன் என்று காரணம் சொல்லிவிடுவாளா என்று குறுகுறுவென்று பார்த்தான் தமிழ்மதி.

''ஓ.எஸ்? வரேன்!'' என்றாள். பைக்கில் அமர்ந்து கொண்

விளக்கம் போலச் சொன்னான்.

''தாங்க்ஸ்... தமிழ்மதி சார்! இந்த நேரத்
பஸ்ல கூட்டம்!'' என்றாள்.

''ஆமா..! உங்களுக்கு எப்பத் தேவைன்
போன் அடிச்சுடுங்க. நானோ இல்லேன்
வந்து பிக் அப் குடுப்போம்,'' என்றான் தமி

'தாங்க்ஸ்.. பார் தி ஆஃபர்! தேவை
கண்டிப்பாகக் கேட்பேன்...'' என்றாள் குமு

தமிழ்மதி மறுபடியும் சொன்னான்.

''ஏறும்போது என்னமோ கேட்டீங்களே?

''இல்லே! சரித்திர நாவல்னு சொன்னீங்
கால கட்டம், எந்த ஏரியான்னு கேட்டேன்,''

''கொங்கு நாட்டை வச்சுத்தான் எழுத
கேன்,'' என்றான்.

''ம்ஹூம், அப்படியா?''

''ஆமா! கொங்கு நாட்டிலும் பெரிய
இருக்கு! நம்ம பேரூர் கோயில், அவிநாசி
கோயில் அப்படீன்னு... அதுகளைப் பத்தி
ஒரு ஆசை...'' என்றான்.

''ஓ..!''

''உங்களுக்குத் தெரியுமா? இப்ப தரும
சொல்ற நகரம் அப்பக் கொங்கு நாட்லதா
அப்பத் தகடூர்னு பேரு. அது மட்டுமில்ல
வள்ளல்கள் கூடக் கொஞ்சம் பேர் கொ
காரங்கறாங்க.. அதியமான், பேகன் இ
கொங்கு நாட்டுக்காரங்கதான். இவர்களைப்

போகும் இல்லே! நான் நினைப்பேன்...! இந்த ஆண்கள் எல்லாம் குடுத்து வச்சவங்க. ''சும்மா ஒரு ஜோல்னாப் பையை மாட்டிகிட்டு எங்க வேண்ணா எப்ப வேண்ணா கிளம்பிரலாம். வாழ்க்கையை அனுபவிக்கலாம். இல்லே..! பெண்கள்ன்னா மட்டும் எத்தனை ரெஸ்ட்ரிக்‌ஷன்கள்?'' என்றாள்.

தமிழ்மதி ஒன்றும் பேசவில்லை. ஒரு நிமிடத்துக்குப் பிறகு சொன்னான்.

''பெண்களுக்குத்தான் இந்த மாதிரி வலைகள் ரொம்பப் பிடிக்குதே! அதுக்குள்ளேயே சௌகரியமா சிறைப்பட்டு அதையும் அனுபவிக்கறாங்களே.''

''அப்படி இல்ல சார்! பாதுகாப்புங்கற பேர்லயும், அன்புங்கற பேர்லயும் அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாத்திக்கறாங்க...'' என்றாள்.

தமிழ்மதி தலையாட்டி ஒத்துக் கொண்டான்.

''பாத்தீங்களா? இப்ப நீங்களே பெண்களை விமர்சிக்கிறீங்க...! அப்ப நீங்க பெண்களுக்கு எதிரின்னு அர்த்தமா?''

குமுதினி இதை எதிர்பார்க்கவில்லை. விழித்தாள்.

அவள் விழிப்பதை அவன் பக்கக் கண்ணாடியில் பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

''ஆமா... குமுதினி! நான் பெண்களை எதிரியா நினைக்கலை. இவங்க தங்களைத் தாங்களே ஏமாத்திக்கிட்டு ஒரு வாழ்க்கை வாழறாங்களே. அதைத்தான் நான் எதிர்க்கறேன். இயல்பா வாழற பெண்கள் ரொம்பக் கம்மி, குமுதினி...'' என்றான்.

வில்லை. மாறாக,

''ஏன்.. அப்படிச் சொல்றீங்க?'' என்றாள்.

''பாருங்க, குமுதினி! பெண்கள் எல்லா தங்களை எக்ஸ்பிளாய்ட் பண்ண அனும ஒன்று அன்புங்கற பேரில தங்களோட சுய சி மழுங்கடிச்சர்றாங்க. தங்களோட இன்டிவி யையே மறந்தர்றாங்க. இல்லே! தங்களோட சாகசம் பண்றாங்க. ஒரு ஆணோட அன் வச்சுக்கறதுக்காக ஒரு பக்கம் மாமியாராயும், பக்கம் மருமகளாயும் போராடிக்கிட்டிருக்காங்

''ஹலோ! ஆண்கள் அதை ரொம்ப பண்றாங்க, தெரியுமா?''

''ம்.. அதுவும் இருக்கு! ஆனா.. நீ மகனா இரு! ஹஸ்பெண்டா இருக்கியா, இருன் இயல்பா எடுத்துக்கிட்டுத் தங்களோட வாழ் அவங்க வாழணும், குமுதினி...'' என்றான்.

''அது முடியாது... மதி...!'' என்றாள் குமுதி

மதி என்று அவள் இயல்பாய் முதன் அழைத்தது அவனுக்குள் ஒரு புன்னகை வித்தது.

''ஏன் முடியாதுன்னு சொல்லுங்க.''

''ஏன்னா, பொருளாதாரச் சுதந்திரம் முக்கால்வாசிப் பெண்கள் பொருளாதாரச் காகத்தான் ஆண்களின் அன்புக்காகப் போரா காங்க... தெரியுமா?''

களே!''

''நிலைமை ஒண்ணும் பெரிசா மாறிடலே. மதி...! சம்பளத்தை வாங்கிக் கொண்டு போய் அப்படியே அப்பாகிட்டேயோ, கணவன்கிட்டேயோ குடுத்துட்டுச் செலவுக்குக் கெஞ்சிகிட்டு நின்னாத்தான் நல்ல மகள். இல்லேன்னா... நல்ல மனைவி..''

''ம்... அதுவும் கரெக்ட்டுதான்.''

''பெண்கள் மட்டும் மாறினாப் பத்தாது, மதி. ஆண்களும் மாறணும். ஆண்களும் பெண்களைச் சக மனுஷி என்கிற அளவிலே ஏத்துக்கணும்.''

''அது கரெக்ட்தான்! இரண்டு பேருமே தனி மனுஷன், மனுஷின்னு நடந்துக்கிட்டா... நீங்க ரொம்ப புகழ்ற குடும்பம் எப்படி நடக்கறது?''

''குடும்பன்னா என்ன தெரியுங்களா? இருவருமே ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுக்கற இடம். தன்னையே விட்டுக் கொடுக்கற ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலே ரசனைகளை விட்டுக் கொடுக்கறதா பெரிய கஷ்டம்? அந்தப் புரிதல் இல்லேன்னா வாழ்க்கை கொஞ்சம் கஷ்டம்தான்!

''வெல்ஸெட் குமுதினி! எப்படியோ உங்களுக்கு அமையற ஹஸ்பெண்ட் நல்ல லக்கியான ஆளாத்தான் இருக்கப் போறார்!'' என்று சிரித்தான்.

குமுதினியின் முகம் சிவந்தது. ஒரு கனமான மௌனம் நிலவியது. அதை மாற்றுவதற்காகவோ என்னவோ,

''சார்! உங்க சிஸ்டர் எல்லாம் வர்றாங்கன்னு சொன்னீங்களே!'' என்றாள்.

எதுக்குச் சிரமம்ன்னு காலனி வீட்லயே த
லாம்னு பாக்கறேன்,'' என்றான்.

''வேண்டாம் சார்! இங்கயே தங்கட்டும்! எ
ஒரு மாறுதலா இருக்கும்...''

''இப்பவே நான் எச்சரிக்கை பண்ணிடறேன்
அப்புறம் என்கிட்டே எந்தக் கம்ப்ளெயி
கூடாது. நான் உங்களுக்கு ஆறுதல் சொ
மைக்குக் கொண்டு வந்துடாதீங்க,'' என்றான்

''வராது.. மதி..! நான் பாத்துக்கறேன்.''

''அப்ப சரி! ஆனா ஒன் கண்டிஷன். எங்
சமையல் பண்ணிக்கறோம். பாவம் உங்கம்
களுக்கு ரொம்ப பர்டன் குடுக்கக் கூடாது.
ளறையிலே சம்மைச்சுக்கறோம்,'' என்றான்.

''அடுப்பு மேடையில்லையே!'' என்றாள்.

''பரவால்லே! டோன்ட் வொரி. நான் அ
ணிக்கறேன். அப்புறம் வீட்டுக்காரம்மாகி
ணொரு விண்ணப்பம்...!'' என்றான்.

வீட்டுக்காரம்மா என்று அவன் சொன்னது
ஒரு மாதிரியாக இருந்தது. ஒரு வித அசௌ
கேட்டாள்.

''என்ன?''

''இல்லே! ஹாப்எச்.பி. மோட்டார் ஒன்
பண்ணச் சொல்லி விஜிகிட்டே சொல்லிய
நாளைக்குப் பண்றோம். உங்க கிச்சன் ரூ
பைப் போட்டுடச் சொல்லியிருக்கேன். இப்
ரூம்லயும் சின்னதா ஒரு மேடை கட்டி சி
பண்ணினா சரியாயிடும்,'' என்றான்.

''ஆமா..! உங்கம்மா பாவம்! குடம் குடமாத் தண்ணீர் சுமக்கறாங்க... சிரமமில்லே!'' என்றான்.

''இல்லே, நான் மோட்டார் பிக்ஸ் பண்ணினேன். அப்பா...''

''ஓ.கே...! ஓ.கே.! அதை விடுங்க! இப்ப நான் ஃபிக்ஸ் பண்றதால ஆபத்து வராதுன்னு நினைக்கிறேன்..!'' என்றான்.

குமுதினிக்கு வேறு வழியிருக்கவில்லை. இறங்கும் போது, ''தாங்க்ஸ் குமுதினி!'' என்றான்.

''எதுக்கு? அரிசி மூட்டை மாதிரி பின்னால உட்கார்ந்துகிட்டு வந்ததுக்கா?'' என்றாள், கண்களைப் படபட வென்று அடித்துக் கொண்டு.

அவன் சிரித்தான். ''இல்லே! மதின்னு அழகாக் கூப்பிட்டுப் பேசினீங்களே. அதுக்கு.''

அவள் விழித்தாள். ''அப்படிக் கூப்பிட்டேனா.. என்ன?'' என்பது போன்ற முக பாவத்தைக் கண்டு, அவன் குறும்பாகச் சிரிக்க, முகம் சிவந்து போனது.

''அது ஒண்ணும் இ.பி.கோ.. செக்‌ஷன் 460இன் கீழ்க் குற்றம் இல்லே... குமுதினி!'' என்றான்.

அவள் முகத்தை இயல்பாக்கிக் கொண்டு புன்னகைத் தாள்.

''மறுபடியும் புயல் எச்சரிக்கை மேடம்! நாளைக்குப் புயல் வருது.''

அவள் விழித்தாள்.

''எங்க வீட்டுக் கும்பல் வந்து இறங்குது!'' என்றான்.

சொல்றீங்க? எங்க வீட்டு மனுஷங்கன்னு

களேன்,'' என்றாள்.

''எழுத்தாளனுக்கு உலகமே சொந்தம்தான்

உள்ளே போனான்.

சரியாகக் காபி கொண்டு வருகிற மீனாட்சிய

பரிவுடன் பார்த்தான்.

அதே நேரம்!

''இப்படிக் கூட ஜாலியாகப் பேசுவாரா ம

ஆச்சரியத்துடன் உள்ளே போனாள், குமு

னுடைய உறவுக்காரர்களை அழைப்பதன் மூல

கொரு பெரிய தலைவலி... வரவழைத்துக் கெ

என்று அப்போது அவளுக்குப் புரியவில்லை



20

கிட்டத்தட்ட கல்யாண

ருந்தது வீடு.

தமிழ்மதியின் சகோதரிகள்

சரோஜா இருவரும் தங்கள்

களுடன் தங்கினார்கள். க

இருவரும் ஒரு நாள் மட்

விட்டுப் புறப்பட்டார்கள்.

குமரவேலும், சியாமளாவும் குழந்தையு

தங்கினார்கள்.

சரோஜாவின் மகளுக்குத் தமிழ்மதியின் மே

கலந்த மரியாதை.

''மாமா! தமிழ்மதி என்னோட மாமான்னு

என் ஃபிரண்ட்ஸ் எல்லாருக்கும் ஒரே ஆச்சரி

''ம்...!''

''சிரிக்காதீங்க மாமா! நான் நிஜமாத்தான் சொல்றேன்.''

''ம்...!''

''என் பிரண்ட்ஸ் கேக்கறாங்க. ஏண்டி... உங்க மாமாவுக்குப் பயமே கிடையாதா? எதைப் பத்தி வேண்ணாலும் தைரியமா எழுதறாரு... அப்படீங்கறாங்க,'' என்றாள்.

''அதுவா... எழுத்தாளன்னா எழுதறதுதானே வேலை!'' என்றான்.

''மாமா! புத்தகம் நிறையப் படிப்பீங்களா? நான் கூட...'' என்றாள்.

தமிழ்மதியின் கண்களில் ஆர்வம் கூடியது.

''அப்படியா? படிப்பியா?'' என்றான்.

'அப்பாடா! மாமாவை இம்ப்ரெஸ் செய்து விட்டோம்!' என்ற பெருமை தோன்ற,

''ஆமா... மாமா! எங்க லைப்ரரியில புக்ஸ் நிறைய எடுக்கற ஆள் நான்தான். எங்க ஹில்டா மிஸ்தான் லைப்ரரிக்கு இன்சார்ஜ். ஏண்டி, இப்படிக் குடையறேன்னு சிரிப்பாங்க. ஆனா பொறுமையா வந்து எடுத்துக் குடுப்பாங்க,'' என்றாள்.

''குட்...! புக்ஸ் படிக்கறது நம்ம சிந்தனையை ஒழுங்கு படுத்தும். சுய சிந்தனையை வளர்க்கும்.''

''அது மட்டுமில்லே! பரீட்சையில கூட நிறைய மேற்கோள் எல்லாம் காட்டுவேன். அதனால எனக்கு மதிப்பெண்கள் கூடுதலா கிடைக்கும்!'' என்றாள் வாஸந்தி.

''குட்!'' என்றான். வாஸந்தியை அவனுக்குப் பிடித்துப் போனது. அவளிடத்திலே ஒரு தேடல் இருந்தது அவனுக்கும் புரிந்தது.

''வாஸந்தி...! எப்ப எந்த ஹெல்ப் வே...
கேளு... என்ன புக்ஸ் வேண்ணாலும் கேளு.''

எப்படிப் பொது அறிவைப் பெருக்கிக் கொ...
ஆலோசனைகள் சொன்னான். கணக்கிலும் ...
திலும் இன்னும் அதிக மதிப்பெண்கள் பெ...
குறுக்கு வழிகள் சொன்னான்.

ஆங்கிலத்திலும், இலக்கணம் பற்றிச் ...
கொடுத்தான்.

''மாமா! நீங்க நிஜம்மாவே ஜீனியஸ்தா...
மலைத்தாள் மருமகள், குறும்பாய்க் கண்ணை...
படி.

''நான் மட்டும் கொஞ்சம் பெரியவ...
உங்களைக் கொத்திட்டுப் போயிடுவே...
என்றாள்.

தமிழ்மதி வாய்விட்டுச் சிரித்தான்.

அவள் தலையைக் கலைத்து விட்டாற்...
விட்டுச் சொன்னான்.

''நல்லவேளை, நான் தப்பிச்சேன்!'' என்...

அவள் சோகமானாள்.

''போங்க... மாமா!'' என்று சிணுங்கின...
மறுபடியும் சிரித்தான்.

''நல்லவேளை, நீயும் தப்பிச்சே! எழுத்...
வாழறது ரொம்பக் கஷ்டம், கண்ணம்மா...!''

''ஆமா... பாரதியாரோட வாழ்க்கை வர...
படிச்சிருக்கேன். பக்கத்து வீட்ல அரிசி க...
வச்சிருந்தாங்களாம் செல்லம்மா. இவரு ...

பார்த்துட்டிருந்தாராம்!'' என்றாள் வாஸந்தி.

தமிழ்மதிக்கு அந்த விஷயம் தெரியுமென்றாலும், சகோதரி மகளுக்காக அதைப் புதிதாகக் கேட்பவன் போல ரசித்துக் கேட்டுக் கொண்டான்.

குமரவேலிடம், ''அண்ணா! நம்ம வாஸந்தி ரொம்ப பிரில்லியன்ட்!'' என்று பாராட்டினான்.

''அப்ப நானு, சித்தப்பா..'' என்று கவலை கொண்ட ஹேமலதாவைக் கட்டிக் கொண்டான்.

''நீயும்தான்டா..'' என்றான். திடீரென்று நினைவு வந்தாற்போல,

''துர்கா எங்கே?'' என்றான்.

துர்கா மெல்லத் தலை நீட்டினாள்.

''வா துர்கா! எதுக்கு ஒதுங்கி ஒதுங்கி நிக்கறே. ''வா.. சீட்டாட்டம் ஆடலாம்னு இருக்கோம்..! ஒரு கை போடு,'' என்று அழைத்தான்.

பங்கஜத்தின் முகம் மலர்ந்தது. பங்கஜமும் சரோஜாவும் ஒருவரையொருவர் முகம் மலரப் பார்த்துக் கொண்டார்கள்.

அவர்களுக்குள் ஏதோ செய்தி பரிமாறிக் கொள்ளப் படுவதை அவன் கவனிக்கவில்லை. ஆனால் வாஸந்தி கவனித்துக் கொண்டாள்.

* * *

''ஹலோ... வரலாமா?'' என்று எட்டிப் பார்த்தாள் கீதாலட்சுமி.

''வாங்க!'' என்று வரவேற்றாள் துர்கா.

சொல்ல, துர்கா வாங்கினாள்.

''என்னது?'' என்று வந்தாள் பங்கஜம்.

''மாங்காய்ப் பாயசம்!''

''மாங்காய்ப் பாயசமா!'' என்று இவர்கள் ஆ

''கேரளா மாடல்ல செஞ்சது!'' என்று

போனாள்.

ஆளாளுக்கு ரசித்து ருசித்துச் சாப்பிட்டா

பிற்பகலில் அவர்கள் வீட்டுக்கு வந்த

மாவிடம் நன்றி சொன்னான் தமிழ்மதி.

''ஐயோ! அது நான் பண்ணியதில்ல

குமுதினி செஞ்சா! விருந்தாளிங்க வந்திரு

முறையில செஞ்சதா இருக்கட்டும்னு செஞ்

மீனாட்சியம்மாள்.

''அப்படீன்னா...! அவர்களுக்குத் தே

ணுமே...'' என்றான் தமிழ்மதி.

''இன்னைக்கு நைட் டியூட்டி. கிளம்பிப்

என்றார்.

தமிழ்மதியும் அதற்குப் பிறகு அதை மறந்

ஆனால் மறுநாள் ஞாபகமாகக் குமுதினி

சொன்னபோது, அவள் ஒரு பெரிய குண்ட

போட்டாள்.

''என்ன சார்! குடும்பத்துக் கூட ஒட்டமே

னீங்க! இப்பக் கல்யாண லெவலுக்குப்

என்றாள்.

''என்ன சொல்றீங்க?'' என்றான், கண்கள

குமுதினி விவரமாகச் சொன்னாள்.

அன்று காலை!

அம்மாவும் பங்கஜமும் கோயிலுக்குப் போயிருந் தார்கள்.

இரவு லேட்டாக வந்தாலும் பெரும்பாலும் காலையில் எழுந்து விடுவாள் குமுதினி.

அம்மாவுக்குக் காலையில் கூடமாட ஒத்தாசை செய்து விட்டு உறங்கப் போவாள்.

ஒரு மணி நேரம் உறங்கினாலும் போதும். ஃப்ரெஷ் ஷாகி விடுவாள்.

அது போல இன்றைக்கும் சமையல் முடித்து விட்டுக் குளித்து விட்டு வந்தாள்.

செய்தித்தாள் படித்து விட்டுத் தூங்கப் போகலாம் என்று யோசித்திருந்தாள். இன்னைக்கு செகன்ட் டிரான்ஸ்மிஷன் ட்யூட்டி வாங்கியிருந்தாள். அதனால் நேரம் இருந்தது.

அப்போது சரோஜா மெல்ல எட்டிப் பார்த்தாள்.

"வாங்க... வாங்க!" என்று வரவேற்றாள், உற்சாகமாக - குமுதினி.

"அக்காவும், உங்கம்மாவும் பொண்ணுகளும் கோவிலுக்குப் போறேன்னு போனாங்க! நான் வீட்ல இருக்கலாம்னு இருந்தேன். போரடிச்சது. அதான் எட்டிப் பார்த்தேன்," என்றாள்.

"வாங்க! உள்ளே வாங்க!" என்றாள்.

சரோஜா வந்தார்.

கொஞ்ச நேரம் பொதுப்படையாகப் பேசினார்கள். பேச்சுக்கு நடுவே,

"பரவாலலைங்க... குமுதினி! உங்க வீட்
வந்தப்புறம்தான் தம்பி எல்லார்கிட்டயும் ந
ஆரம்பிச்சிருக்கான். விஜயன் கூட அ
சொன்னான்," என்றாள், பாராட்டுவதுபோல

குமுதினி புன்னகைத்தாள்.

"ஒருவேளை இப்பத்தான் அவரு
கிடைச்சதோ என்னமோ?" என்றாள்.

"என்னமோம்மா! எது எப்படின்னாலும்
தம்பியைக் குடும்பத்தோட கட்டிப் போ
முடிவு..." என்றார் சரோஜா.

"ஆமா! அவரை ஒரேயடியாத் தனிய
கூடாது," என்றாள் குமுதினி.

"அதாம்மா...! நானும் பங்கஜக்காவும் ஒ
பண்ணியிருக்கோம். துர்காவைத் தமிழ்மதிக்கு
பண்ணிடலாம்னு இருக்கோம்!" என்ற
உற்சாகமாக.

"ஓ! அவர் கிட்டே பேசிட்டீங்களா?"

"அதெல்லாம் ஒத்துக்குவான்! குமரவே
இனிமேத்தான் பேசணும்," என்றார்.

பிறகு வேறு பேச்சுக்குத் தாவினார்கள்.
நேரம் இருந்து விட்டு, சரோஜா கிளம்ப,
என்னவோ குமுதினிக்கு உறக்கமே பிடிக்க

தமிழ்மதி இந்த வீட்டில் குடியேறிய
தனக்குப் பாதுகாப்புப் போல உணர்ந்த
லாமல், எப்போதும் அவன் தங்களோ
போகிறாற் போலவே நினைக்க ஆரம்பித்த

தமிழ்மதியின் வாழ்வில் ஒரு பெண் வரக்கூடும் என்றே எண்ணவில்லை.

'அது சரி! வந்து மூணு மாதம்தானே ஆகிறது! அதற்குள்ளாக என்ன பெரிய மாற்றம் எதிர்பார்க்க முடியும்?' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் சகோதரிகள் வந்து சேர்ந்தவுடனே பெரிய திட்டமெல்லாம் போடுகிறார்களே என்று சிரிப்பாகவும் இருந்தது. ஏனோ அந்த யோசனையே அவளுக்குப் பெரிதாக ரசிக்கவில்லை. அது பற்றி அவளுக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது.

அது மட்டுமல்லாமல், தமிழ்மதியின் ஒரு சகோதரி பகிர்ந்து கொண்ட அந்தக் கருத்தை எதற்காகத் தமிழ்மதியிடம் இப்போது கனகாரியமாக ஒப்பித்துக் கொண்டிருக்கிறோம் என்பதும் அவளுக்குப் புரியவில்லை.

தமிழ்மதி தன் புருவங்களை உயர்த்தும் போதெல்லாம் ஒவ்வொரு சமயம் அதற்கு ஒவ்வொரு விதமான பொருள் இருப்பதை உணர்ந்திருக்கிறாள். இப்போது, ''அப்படியா!'' என்ற ஆச்சரியக் குறி அந்தப் புருவ நெளிப்பில் தெரிந்தது.

''ஆமா.. சார்!''

''ஹலோ.. மதின்னே கூப்பிடுங்க! சார்னா என்னவோ ரொம்பத் தள்ளி நிற்க வச்சு, யார் சார் நீங்கன்னு கேக்கற மாதிரி இருக்கு!''

அவன் நாடக பாணி பார்த்து அவள் கலகலவென்று சிரித்தாள்.

''விஷயத்துக்கு வாங்க.. குமுதினி,'' என்றான்.

''இல்லே! உங்க சரோஜாக்கா நேத்து என்கிட்டே பேசிக்கிட்டிருந்தாங்க. பெரியக்காவோட பொண்ணு

துர்க்காவை உங்களுக்குக் கல்யாணம் செ
இருக்கும் போல இருக்கு.'' என்றாள்.

அவனை ஆழ்ந்து பார்த்தாள். அவனது
என்ன என்பதை அறிய. எதற்காக இப்ப
போகிறோம் என்று அவளுக்குப் புரியவில்

அப்படிச் சொல்லும்போது குமுதினியி
என்ன என்பதை அவனும் பார்க்க முயல்கிற
அவளுக்குப் புரியவில்லை.

முகத்தில் எந்த பாவமும் காட்டாமல்
கேட்டான்,'' நீங்க என்ன நினைக்கறீங்க?''

''நான் என்ன நினைக்கறது, மதி? உங்க கு
இப்பத்தான் ஒட்டறீங்களாம். அதனால உ
மேலும் இறுக்கிப் பிடிக்கணும்னு நினைக்க
இருக்கு.''

''ம்..!'' என்றான்.

''இதுக்குத்தான் ஒதுங்கியிருக்கறத
இருக்கறேன்னு இருக்க, அப்புறம் மு
ஆயிடக் கூடாது இல்லே?''

''அவங்க ஆதங்கம் அவங்களை அப்ப
வைக்குது. உங்களுக்கு வர்றவ நாளைக்கு ஒ
செஞ்சுட்டா..?''

தமிழ்மதி சிந்தனையில் ஆழ்ந்தான். தன
கும், தனக்கும் இடையில் அண்ணன் ,
நினைவுக்கு வந்தது.

''அதுக்குத்தான் குமுதினி! குடும்பமே
கறது.''

''அதெப்படி? குடும்பத்தில கிடைக்கிற

"ஆமா..! இப்ப உங்க குடும்பத்தையே எடுத்துக் குங்க...! எனக்கென்னமோ எல்லாரும் உங்களை எக்ஸ்பிளாயிட் பண்ற மாதிரித் தெரியுது!"

"ஹலோ.. ஹலோ! இந்தத் தாக்குதல் எல்லாம் இங்கே வேண்டாம். என் சின்னத் தங்கை எனக்காக உருகறான்னு நீங்கதானே சொன்னீங்க."

"ஆமா! அவளுக்கு நீங்க எவ்வளவோ செய்யறீங்க. உருகறா. இல்லேன்னா..."

குமுதினி பெருமூச்செறிந்தாள்.

"வேண்டாம் மதி...! இது ரொம்பத் தப்பான ஆட்டிட் யூட். நான் என் குடும்பத்தை எந்த நிபந்தனையுமில்லாம நேசிக்கறேன். இந்த அன்பும், நேசமும் ஒருவேளை பொய்யாவே இருந்தாக் கூட நான் அதை நம்பத் தயா ரில்லே. அன்பு கூடப் பிரார்த்தனைதான்கறார் ஒரு ஞானி. அந்த நம்பிக்கையே சுகமா இருக்கு. நல்லா இருக்கு!" என்றாள்.

தமிழ்மதி அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந் தான். அவன் முகத்தில் ஒரு விசித்திரமான புன்னகை தவழ்ந்திருந்தது.

ஏதோ சொல்ல வாய் திறந்தவன், பிறகு தன் மனத்தை மாற்றிக் கொண்டவன் போலக் கேட்டான்.

"சரி.. இப்ப நான் என்ன செய்யட்டும். சொல்லுங்க..!"

"ஐயோ.. அது உங்க குடும்ப விஷயம்."

"இருக்கட்டும். பரவால்லே...! குடும்ப உறவுகள் பற்றி என்னை விட உங்களுக்குத்தான் நல்லாத் தெரியும். நீங்களே சொல்லுங்க."

"அது சரி! நான் என்ன சொன்னாலும் மு
எடுக்கணும்," என்றாள் குமுதினி.

"ஓ.கே.!" என்றான்.

தன் மனத்தில் ஒரு தெளிவான முடிவு இ
எதற்காகக் குமுதினியிடம் ஆலோசனை
என்று தமிழ்மதிக்குத் தன்னைக் குறித்
இருந்தது.



# 21

"நீ குமுதினிகிட்டே
கேட்டியா?" என்று சிரித்த

நண்பனை ஆழமாகப்

"ஆமா.. ஏன்? கேட்கக்

"ஐயய்யோ... கேக்கக்
யாரப்பா.. சொல்றது! தி கிரேட் தமி
ஆலோசனை கேட்கறதா?"

"இல்லப்பா! எனக்கு இந்த விஷயம் ஒத்
தெரியும். பெரியக்காவும், சின்னக்காவும் எ
வலைக்குள்ள அமுக்கற மாதிரி பிளான்
அவங்களோட ஆசை அவங்களுக்கு.
அண்ணன்கிட்டே சொல்லி பிரேக் பண்
ஆனா... குமுதினி என்ன சொல்லுதுன்னு
என்றான்.

முகமெல்லாம் சிரிப்பு.

விஜயனும் புன்னகைத்தான்.

சரி.. ஒருவேளை குமுதினி கல்யாணம் பண்ணிக்குங்கன்னு சொல்லுச்சுன்னா... செஞ்சுக்குவியா?''

தமிழ்மதி சிரித்தான்.

''சொல்லாது.''

''ஏன் அப்படி?''

''தெரியலே..! கண்டிப்பா குமுதினி இந்தக் கல்யாணம் வேண்டாம்னுதான் சொல்லும்!''

''என்ன காரணம் சொல்லும்?''

''வேறென்ன சொல்லும்? தாய்மாமனும் மருமகளும் கல்யாணம் பண்ணக் கூடாது. குழந்தைகளுக்குப் பிரச்னை வரும்னு சொல்லும்.''

''அது உனக்கே தெரியுமேடா! அப்புறம் எதுக்கு அதுக்கிட்டே போய் ஆலோசனை கேக்கறது.''

''சும்மாத்தான்..! ஒரு ஜாலிக்குத்தான்!'' என்று சொல்லிய நண்பனை விஜயன் ஆழ்ந்து பார்த்தான்.

சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போனபோது,

மனைவியிடம் பகிர்ந்து கொண்டான். மஞ்சுளா சிரித்தாள்.

சில ஆலோசனைகள் சொன்னாள். ''அப்படீங்கறே...!'' என்று ஆச்சரியப்பட்டுப் போனான்.

தமிழ்மதியும் வீட்டுக்குச் சாப்பிடப் போய் விட்டு வந்தான். உறவினர்கள் இருப்பதால் சாப்பிடப் போய் விடுகிறான்.

வேண்டுமென்றே அன்று பிற்பகல் துர்காவிடம் வம்பிழுத்தான்.

''என்ன துர்கா... வாயே திறக்க மாட்டேங்கறே.''

வாஸந்தி சிரித்தாள்.

''துரைக்கண்ணு எங்கே?''

துரைக்கண்ணு துர்காவின் தம்பி. கல்லூரி இருந்தான்.

''அது எங்கேயோ ஊரைச் சுத்திட்டு போச்சு...'' என்றாள் துர்கா.

''அதுவா...?'' என்றான் ஆச்சரியமாக.

''அந்த மரியாதையே அதுக்குப் பெருசு... துர்கா.

''அது சரி... தம்பிக்கு இப்படி மரியா ஹஸ்பெண்டுக்கு எப்படி மரியாதையோ?''

''மாமா.. நானும் உங்களை மாதிரித்தா வரைக்கும் கல்யாணம் லேட்டாத்தான் செ என்றாள்.

''ஏன்?''

''சுதந்திரம் வேணும் மாமா!''

''அப்படிப் போடு..!''

''அப்படியே செஞ்சாலும் வாத்தியார் ம தான்.''

''ஏன்?''

''காலையில வேலைக்குப் போனா.. ச ஒழுங்கா வீடு வந்துடுவாரு..!'' என்றாள்.

தமிழ்மதி ரசித்துச் சிரித்தான்.

''ஏம்மா... இந்த எழுத்தாளர்... கவிஞர் இப்படின்னு.''

''மாமா! எழுத்தாளர்களோட எழுத்தைப் படிக்கலாம். ஆனா அவங்களோட குடும்பம் நடத்த முடியாது. புயலையெல்லாம் பொட்டிக்குள்ள அடக்க முடியுமா? எப்படா வருவாங்கன்னு கவா கவான்னு காத்துட்டு கிடக்கணும்.''

''இப்படித் தாக்கிட்டியே துர்கா...!'' என்று சிரித்தபடி கிளம்பினான்.

நல்ல வேளையாகத் துர்காவின் மனத்தில் தன்னைப் பற்றிய நினைவுகள் எதுவும் விதைக்கப்படவில்லை என்று மனது தெளிவானது.

''அப்பாடா!'' என்று பெரிய விடுதலையுணர்வு தோன்றியது.

அன்று மாலை!

விரைவிலேயே புறப்பட்டான்.

வழக்கமாக ஏழு மணி, எட்டு மணி என்றுதான் வீட்டுக்குப் போவான்.

இப்போது உறவினர்கள் எல்லாம் இருப்பதால், ஐந்து மணி வாக்கிலேயே புறப்பட்டு விடுகிறான்.

''விஜி! நீயும் வாயேன்டா! என் சிஸ்டர்ஸ் எல்லாம் ஏன் ரெண்டு நாளா உன்னைக் காணோம்கறாங்க,'' என்றான்.

''இல்லே.. நீங்க ஏதோ ஃப்ரீயா பேசுவீங்க!''

''ஆமா.. நாங்க பெரிய ஃபைவ் இயர் பிளான் போடறோம். நீ வர்றதுனால டிஸ்டர்பன்ஸ் ஆயிடுமாக்கும்!'' என்றான்.

புறப்பட்டார்கள்!

போகிற வழியில் கவனித்தார்கள்.

கொண்டிருந்தான்.

கீதலட்சுமி ஏதோ ஒரு தவிப்புடன் நிற்
இருந்தது. ஆனால் நின்று பேசிக் கொண்டிரு

''விஜி, அது கீதா இல்லே!'' என்றான் தமிழ்

''ஆமா!'' என்றான் உள்ளடங்கிய குரலில்.
மெதுவாகச் சொன்னான்.

''தமிழு! நேத்தும் இந்தப் பையன் க
பேசிக்கிட்டிருந்தான்.''

''ம..! அது சரி..! சும்மா நின்னு பேசறதா
ஆயிடும்?''

''இல்லடா! குமுதினி கேள்விப்பட்டா..
படுமோ..?''

''பாக்கலாம் விஜி! நம்ம தேவைன்னு ஒ
லாம... நாம இதுல நுழையக் கூடாது. கண்டிப்ப
படும்போது கீதா நம்மகிட்டே ஹெல்ப் '
என்றான்.

அவர்கள் பைக் கடக்கும்போது கீதா அ
பார்த்தாள். விழித்தாள்.

''சார்!'' என்று கையசைத்தாள்.

தமிழ்மதி வண்டியை நிறுத்தினான்.

''சார்! நான் உங்களோட வர்றேன்,'' என்
கொண்டாள்.

அந்தப் பையன் தட்டுத் தடுமாறி விட
திசையில் நடக்கலானான்.

தமிழ்மதி அவன் யார் என்ன என்று கேட்க

களுக்குள்ளாகவே வீடு வந்து சேர்ந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் சரோஜாவும், பங்கஜமும் உற்சாகமாகப் பேச ஆரம்பித்து விடவே, கீதாலட்சுமி ஒரு விதத் தயக்கத்துடனேயே உள்ளே போனாள்.

* * *

''தம்பி! உன்கிட்டே ஒரு நல்ல விஷயம் பேசணும்,'' என்றாள் பங்கஜம்.

''பேசலாங்கா! சாயங்காலம் பேசலாம். இல்லேன்னா.. நைட் விச்ராந்தியாய்ப் பேசலாம். எந்த விஷயம்னாலும் அண்ணன் இருக்கும்போது பேசலாம் இல்லே.. அண்ணன் வரட்டும்.. பேசிடலாம்,'' என்றான்.

பங்கஜம் சரோஜாவைப் பார்த்தாள். பிறகு முகம் மலரச் சொன்னாள்.

''ஆமா! அது கூட நல்ல யோசனைதான்!'' என்றார்கள்.

''மத்தவங்க எல்லாம் எங்கே?''

''சிறுசுக எல்லாம் நம்ம சியாமளா கூடக் கோவிலுக்குப் போச்சுங்க... இங்க பக்கத்துக் கோயில்தான். ஏதோ பாட்டுக் கச்சேரிதான். நாங்க நீ வந்ததுக்கப்புறம் உனக்குச் சிறு தீனியும், காப்பித் தண்ணியும் குடுத்துட்டுப் போலாம்னு இருந்தோம்.''

''சரி... அந்தக் காப்பித் தண்ணியைக் குடுங்க...'' என்றான், உள்ளே ஒரு சிரிப்புடன்.

மெதுவாக அவர்களைக் கிளப்பினான். அவனுக்கே புரியவில்லை. தான் குமுதினியின் வருகைக்காகக் காத்திருக்கிறோம் என்று. அவன் திருமண உத்தேசம் குறித்துக் கிட்டத்தட்ட முடிவெடுத்து விட்டான். ஆனால்

குமுதினி அது பற்றி என்ன சொல்கிறாள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தான்.

குமுதினி அன்று ஆறு மணி வாக்கில் வந்

தனது அறையில் அமர்ந்து ஏதோ புத்

கையில் வைத்துக் கொண்டிருந்த தமிழ்மதி

பார்த்தவுடன், ''ஹாய்!'' என்றான்.

''ஹலோ... சார்!'' என்று அவளும் புன்

உள்ளே வந்தாள்.

''குமுதினி! நான் இன்னைக்கு நைட் இவ

பதில் சொல்லணும் போல இருக்கு. ஒ

பதினைந்து நிமிஷம் பேசலாமா?'' என்றான்.

''ஓ..! வரேன் சார்! பேசலாம்!'' என்றாள்.

பத்துப் பதினைந்து நிமிடத்தில் வந்தாள்.

''மதி சார்! எங்க வீட்லயும் ரெண்டு ந

விசேஷம். குழந்தைக்குப் பேர் வைக்கணு

வோட புகுந்த வீட்டு மனுஷங்கள் எல்லாரும்

சாயங்காலம் ஒரு நடை வராங்க!'' என்றாள்.

''அப்படியா... நல்ல விஷயமாச்சே!'' என்

''அப்புறம்... சொல்லுங்க.. சார்!'' என்றாள்.

தமிழ்மதி ஒரு கணம் தயங்கியவன், பிறகு

''இல்ல குமுதா! பெரியக்கா... இப்பவே

ஒரு நல்ல விஷயம் பேசணும்டான்னு அடிப் பே

''ஏன் மதி?'' என்று கவலையுடன் ஏறிட்ட

''ம்.. சொல்லுங்க.''

''இல்லே... துர்கா மனசுல அந்த மாதிரி

உருவேத்தியிருந்கா...''

அவன் விடுதலையுணர்வோடு சொன்னான். "நல்ல வேளை... இல்லை..! நேத்தே துர்காகிட்டே பேசிப் பாத்தேன். எழுத்தாளர்களோட வாழ்க்கை நடத்தறது கஷ்டம்ங்கறா..." என்றான், முகத்தை ஒரு விதமாக வைத்துக் கொண்டு.

குமுதினி குபீரென்று சிரித்தபடி சொன்னாள்.

"பரவால்லே! அவளுக்குப் புரிஞ்சிருக்கு."

"அது சரி! என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணில்லே அதைப் பத்திக் கவலைப் படணும்," என்றான்.

குமுதினி ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"ஆக... நான் ஜெயிச்சுட்டேன் போல இருக்கே!"

"எப்படி?"

"கல்யாணம் குடும்பம்னெல்லாம் பேச ஆரம்பிச்சுட்டீங்க."

"ஹலோ... ஹலோ... அப்படி ரொம்பப் பெருமைப் பட்டுக்க வேண்டாம். இப்ப நான் எதுக்குத் தெரியுமா ஆலோசனை கேட்டுக்கிட்டிருக்கேன். குடும்பங்கற அமைப்பில எப்படிச் சிக்காம இருக்கறதுங்கறதுக்குத் தான்!"

"சே.. காலை வாரி விட்டுட்டீங்க சார்!" என்று சோகமானாள்.

அவன் சிரித்தான். பிறகு,

"ப்ளீஸ்! விஷயத்துக்கு வருவோமே," என்றான்.

"ம்.. வருவோமே..!" என்றாள்.

அவன் கண்களில் சிரிப்பு இழையோடச் சொன்னான்.

யோசனை சொல்லப் போறாங்க. அதை
எப்படி?"

"ஆமா! இப்பத்தான் நீங்க எல்லாருமே ஒ
சிருக்கீங்க! விரிசல் வராம நாசுக்கா
எப்படி?" என்று யோசித்தாள். பிறகு சொன்

"இப்படிச் சொல்லுங்க..! 'அக்கா..! நான்
கல்யாணம்னு ஒண்ணு பண்ணத்தான் வே
துர்காவைப் பண்ணிக்கிறதுல பெரிய பிரச்சி
இல்லே. ஆனா... இப்ப டாக்டர்ஸ் எல்லாம்
தெரியுமா? நெருங்கின சொந்தத்துல.. அதி
மாமனைப் பண்ணிக்கவே கூடாதாம். என்ன
குழந்தைங்க மனநிலை குன்றியவங்க
வாய்ப்பிருக்கு. எனக்கு அந்த மாதிரி ரெண்டு
தெரியும். முதல் குழந்தை மூளை வளர்ச்சி
பொறந்து ரொம்பக் கஷ்டப்பட்டுக் கடைசி
ஆகலை...'னு சொல்லுங்க," என்றாள்.

தமிழ்மதி அவளை ஆழமாகப் பார்த்தா
குமுதினி..?" என்றான்.

"ஆமா... மதி...! என் ஃபிரண்ட்ஸ் ரெண்
நடந்த விஷயம் இது. நிஜம்மாவே அது ந

"ம்!" என்று இழுத்தான். "ரொம்பத் தாங்க்
ரொம்பத் தாங்க்ஸ்! இந்த மாதிரி ஒட்டுத
வேற. ஆனா... ஒரு வகையில போய்ச்
தேவையில்லாததுதானே."

"ஏன் சார்! இன்னமும் குடும்பம்னா
நினைக்கறீங்க!"

"பின்னே? பாருங்க.. உங்களோட உழைப்பை உங்க வீட்ல உறிஞ்சறாங்க! இது ஒன் சைட் லவ் மாதிரி. சுமைகள் பூராவும் உங்க பக்கம்தானே இருக்கு! என்னோட விஷயத்துல கூட நான் இந்த அளவுக்கு எஸ்டாபிளிஷ் ஆகலேன்னா... என் உறவை முக்கியமா நினைப்பாங் களான்னு எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்குது."

"உங்க மனசல ரொம்ப அழுக்குப் படிஞ்சிருக்கு..! மதி.." என்றாள் குமுதினி.

அவன் கனகாரியமாகத் தனது இரண்டு கைகளாலும் இதயத்தை எடுத்து அவளிடம் கொடுப்பது போலப் பாவனை செய்தான்.

குமுதினி ஒன்றும் புரியாமல் பார்த்துக் கொண்டிருக் கையிலேயே சொன்னான்.

"பிடிங்க.. குமுதினி.. என்னோட மனசு..!" என்றான்.

தானும் இரு கைகளிலும் நீட்டி அதை வாங்கிக் கொள்வதைப் போலப் பாவனை செய்வது பார்த்துத் தன் மீதே அவளுக்கும் ஆச்சரியம் தோன்றியது.

"இந்தாங்க.. குடுத்துட்டேன். அதுல இருக்கற அழுக்குப் பூராவையும் துடைச்சுச் சுத்தப் படுத்துங்க. அப்புறம் உங்களோட கருத்தை ஏத்துக்கறேன்," என்றான்.

சிரித்துக் கொண்டே போனான்.

ஏதோ அவனது இதயத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருப்பது போலவே பாவனையுடன் நின்று கொண்டிருந்த குமுதினி சட்டென்று கையைக் கீழே போட்டாள்.

இதோடு இரண்டாவது முறையாக, "உன் குடும்பம் உன்னை எக்ஸ்பிளாய்ட் செய்கிறது!" என்று சொல்லி விட்டான்.

'இல்லை'யென்று எப்படி நிரூபிப்பது?
உள்ளே போனாள். இரண்டு நாட்களில் அ
பதிலும் கிடைத்தது.



## 22

சகோதரிகளின் குடு
வழியனுப்பி விட்டு வந்த
வேலும், தமிழ்மதியும்.

"ஏன்டா.. முருகேசா!
வந்திருந்தது நல்லா இருந்
என்றான் குமரவேல்.

"ஆமாண்ணா... குழந்தைகளுக்கும் ஒரு
என்றவன், லேசாகப் பெருமூச்சு விட்டு வி
சொன்னான்.

"அண்ணா... நீ சொன்னதும் சரிதா
ஒட்டலேன்னாலும் ஏதோ அப்பப்ப 'டச்' வ

"தம்பி! உனக்கு அவங்க மேல கோப
உனக்குத் தேவையான நேரத்துல அவங்
வச்சுக்கலே. ஆனா, நீ இந்த விஷயத்துலே
எடுத்துக்க..! ஒருவேளை அவங்க வீடுகள்ல
தாலும், ஏதோ அன்னிய இடத்துல வளர்ந்த
இருந்திருப்பே. ஒரு தாழ்வு மனப்பான்மை
கும். இப்படி ஒரு பெரிய எழுத்தாளனா
மாட்டே! தாமு மாமாகிட்டே ஏன் கொ
விட்டேன் தெரியுமா? அவரும் தனிமையி
அவரு கூட இருந்தா உனக்கும் அறி
தோழமை கிடைக்கும்னுதான்," என்றான்.

தமிழ்மதிக்கு ஏனோ தினம் தினம் வந்து போய்க் கொண்டிருந்த 'அத்தை'களின் நினைவு வந்தது. லேசான புன்னகை இழையோடியது. அதைப் புரிந்து கொண்டாற் போலக் குமரவேல் சொன்னான்.

"ஆமா.. அது ஒண்ணுதான் அவரு வீக்னஸ். ஆனா... நீ ஏதோ ஒரு நாள் என்னமோ கேட்டியாமே! அன்னையோட எல்லாத்துக்கும் 'ஃபுல்ஸ்டாப்' வச்சுட்டாரு.."

"ஆமா... அந்த சுருட்டுப் பிடிக்கற வழக்கம் மட்டும் விட மாட்டேன்னுட்டாரு...! அது இல்லாம இருந்தா இன்னும் கொஞ்ச நாள் வாழ்ந்திருப்பாரு..." என்றான். மேலும் சொன்னான்.

"அண்ணா! நான் போனதெல்லாம் மறந்துடதுங்கற முடிவுக்கு வந்துட்டேன்... குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லைங்கறாங்க. இந்தக் குமுதினிப் பொண்ணு பாருங்க! சுத்தியும் குத்தமுள்ளவங்களை வச்சிருக்குது. ஆனா... குடும்பத்தை அவ்வளவு நேசிக்குது. அதைப் பாத்துத்தான் நான் ஒண்ணு புரிஞ்சுகிட்டேன். வாழ்க்கையை எப்பவுமே விமர்சனம் பண்ணணும்னு அவசியமில்லே! தியாகம் செஞ்சுகூட ரசிச்சு வாழலாம்னு..." என்றான்.

குமரவேலுக்கு அந்தக் கணத்தில் குமுதினியின் மேல் மதிப்பான எண்ணம் தோன்றியது.

அதற்கேற்றாற்போல் அன்று வேறு ஒன்றும் நடந்தது.

குமரவேலும், விஜயனும், தமிழ்மதியும் அந்த வீட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

மீனாட்சியம்மாள் வந்தார். கூடவே இன்னொரு இளைஞனும் வந்தான்.

"தம்பி! இதுதான் அமுதா மாப்பிள்ள
அறிமுகம் செய்து வைத்தார் மீனாட்சியம்ம

"வாங்க.. வாங்க!" என்று வரவேற்றான்

"சார்! நான் உங்க எழுத்துக்களைத் தீவிர
ஆள்!" என்று ஒருவிதப் பிரமிப்போடு அவ
கொண்டிருந்தான் கோமகன்.

பேச்சுக்கு நடுவே, "சார்! அமுதாவே
குமுதினி இருக்காங்களே! அவங்க உங்
அறிவு ஜீவி! ஆனா... அவங்கதான் இந்
சுமையையே சுமக்கிறாங்கன்னா... ப
அவங்க பண்பாடு புடிச்சுப் போய்த்தான்
தாவையே கல்யாணம் பண்ணினேன்," என்

தமிழ்மதிக்கு ஏனோ பெருமையாக இருந்
சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போ

அப்போது குமரவேல் தமிழ்மதியிடம் கே

"முருகேசு! என்னமோ எல்லாரும் அந்தப்
எக்ஸ்பிளாயிட் பண்றாங்கன்னு சொன்
அந்தப் பொண்ணை எல்லாரும் மனசுல க
என்றான்.

"நான்கூட!" என்ற எண்ணம் அந்த நி
மனதில் தோன்றியது. திடுக்கிட்டுப் போன

ஐயோ! இது வேண்டாத வம்பு என்று தே

தன் மன உணர்வுகளை வெளிக்காட்டி
விருக்கப் பெரும் பாடு பட்டு விட்டான்.

விஜயன் மட்டும் அவனை ஆழ்ந்து பார்

சற்று நேரம் போயிருக்கும்.

விஜயனும், குமரவேலும் கிளம்பிப் போய் விட்டார்கள்.

"மதி சார்! பாருங்க... சார்!" என்று புகார் சொல்லுவது போல வந்தாள் குமுதினி.

தமிழ்மதி தன்னுடைய லேப்டாப்பில் ஏதோ புத்தகத்தைப் படித்துத் திருத்தங்கள் செய்து கொண்டிருந்தான்.

"என்ன குமுதினி?" என்றான்.

பின்னாலேயே கோமகனும், அமுதாவும் வந்தார்கள். "சார்! நீங்களே சொல்லுங்க...! என்று ஆரம்பித்தான் கோமகன்.

அதற்குள் மீனாட்சியம்மாள் வந்தார். பின்னாலேயே சுந்தரலிங்கம் வந்தார்.

"தமிழ்மதித் தம்பி! கொஞ்ச நேரம் நீங்க எங்க வீட்டுக்கு வாங்க. அங்க வச்சுப் பேசுவோம்," என்றார்.

என்னத்தைப் பேசறது? என்ற வியப்போடு எழுந்து போனான்.

குமுதினி ஒரு விதத் தயக்கத்தோடும், வெட்கம் இழையோடிய முகத்தோடும் நின்று கொண்டிருந்தாள்.

தமிழ்மதிக்கு அது கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது.

'என்ன!' என்பது போல் எல்லாருடைய முகங்களையும் மாறி மாறிப் பார்த்தான்.

"உட்காருங்க... தமிழ்மதி சார்!" என்று உபசரித்தான் கோமகன்.

அமுதாதான் படபடவென்று சொன்னாள். சீதாலட்சுமி ஒரு குழந்தையாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சார்! எங்க புக்காத்துல எல்லாரும் ஒரு
குடுத்திருக்காங்க! அக்கா ஒத்துக்க மாட்
என்றாள்.

"என்ன பொறுப்பு? குமுதினிதான் எல்
பையும் இழுத்துப் போட்டுட்டு செய்யறவங்
என்றான் தமிழ்மதி, வியப்புப் படிந்த முகத்

"அப்படிச் சொல்லுங்க.." என்று ஆர்ப்
சிரித்தான் கோமகன்.

விஷயம் இதுதான்.

மறுநாள் அமுதாவின் ஆண் குழந்தை
வைப்பதாக இருந்தது. பெயரைத் தேர்ந்தெ
டிய பொறுப்ப குமுதினியுடையது என்று
தீர்மானமாம். ஆனால் குமுதினி மறுத்தா
சொன்னார்கள்.

குமுதினி படபடப்பாகத் தமிழ்மதியை
சொன்னாள்.

"சார்! இதென்ன விளையாட்டுத் தனமாய்
மாப்பிள்ளையோட அம்மா, அப்பா இ
பெரியவங்க..! எங்க அம்மா... அப்பா... இ
என்றாள்.

சுந்தரலிங்கம் நடுவில் நுழைந்து சொன்

"இத பாரும்மா! நம்ம வீட்டுக்குப் பெரிய
நீ பேர் செலக்ட் பண்ணினா எனக்குச் சந்தே
என்றார்.

"அப்பா! வாழ்க்கையில ஒரே ஒரு தட
பேசியிருக்கே..." என்று கட்டை விரலை
சீதாலட்சுமி.

''ஏன்.. நா.. சும்மாயிருக்கணும்! குடும்பத்துல எல்லாருமா சேர்ந்து ஒரு ரெகக்னிஷன் குடுக்கறாங்க! அதையேன் நீ மறுக்கறே...'' என்றாள் அவள்.

''அதானே!'' என்றார்கள் அமுதாவும் கோமகனும்.

தமிழ்மதி சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சார்! என்ன சார் நீங்க எதுவுமே சொல்ல மாட்டேங்கறீங்க?'' என்றாள் குமுதினி.

''குமுதினி.. இதுல அவ்வளவு யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு?'' என்றான் தமிழ்மதி.

''உங்களுக்குப் புரியலே சார்! அமுதாவோட மாமனார்க்கும், மாமியாருக்கும் அவங்க வீட்டு வாரிசுக்குப் பேர் வைக்கணும்னு ஆசை இருக்காதா?''

''ஆமா.. அவங்க ஜோசியர்கிட்டே போய்க் கேட்பாங்க! அதைக் காட்டிலும் வெல்விஷர் நீங்க பேர் வைக்கறது நல்லது,'' என்றான் கோமகன்.

''பாத்தீங்களா? அவங்களுக்கு இந்த ஐடியா பிடிக்காமயும் போகலாம்...'' என்றாள் குமுதினி படபடப்பாக.

''இருங்க..! இருங்க! இப்பப் பிரச்சினை என்ன? அமுதாவோட மாமனார், மாமியாருக்கு இந்த ஐடியா பிடிச்சிருக்காங்கறதுதான். இல்லையா?'' என்றான் தமிழ்மதி.

எல்லாரும் அவசரமாகத் தலையாட்டினார்கள்.

''என்ன கோமகன்.. இது பெரிய விஷயமா! செல் போனை எடுங்க. ஒரு போன் அடிங்க...'' என்றான்

கோமகன் அப்பாவுக்கு ஒரு அழைப்பு விடு

அப்பா லைனில் வந்தவர் சொன்னா
குமுதினி..! நீ பேர் செலக்ட் பண்ணணும்
வங்களே நாங்கதான். நீயே பேர் வைம்மா
போலவே, அந்தக் குழந்தையும் பொறுப்பா
இவ்வளவு நல்ல மருமகளை எங்களு
திருக்கே...! வேற எப்படித்தான் நாங்க ந
தறது?'' என்றார்.

மாமியாரும் அப்படியே பேசக் குமுதினிய
விட்டாள்.

மாமனார் இன்னொன்றும் சொன்னார்.

''அம்மா...! அழகான தமிழ்ப் பேரா செல
பாத்தியா.. நான் அந்தக் காலத்துலயே கோ
மகனுக்குப் பேர் வச்சேன். அது மாதிரி அ
இருக்கணும்,'' என்றார்.

குமுதினிக்கு முகம் சிவந்து போனது.

''அப்புறம்... என்ன குமுதினி...! மேட்ட
என்று சிரித்தான் தமிழ்மதி.

''சார்... நீங்க இங்கேயே டிபன் சாப்பிடுங்
கீதாலட்சுமி.

கலகலவென்று சிரித்துக் கொண்டு சாப்

''அந்தத் தோசையை இங்கே போடு,''
ளுக்கு வாங்கிக் கொண்டு சாப்பிடுகிற அ
தமிழ்மதிக்கு மிகவும் பிடித்தது.

குமுதினி வார்த்துக் கொடுத்த முறுகல

என்ன வேண்டுமென்று அனுப்பி வைக்கிறாள் குமுதினி என்றும் புரிந்தது தமிழ்மதிக்கு.

"அமுதா.. இன்னைக்குக் குமுதினி ரொம்பக் குஷியா இருக்காங்க...!" என்றான் தமிழ்மதி.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?" என்றாள் அமுதா.

"தோசை ரொம்ப முறுகலா இருக்கு. அதான் சொல்றார்," என்றாள் கீதா.

"போடி.. தின்னிப் பண்டாரம்!" என்றாள் அமுதா.

"அது ஒரு பக்கம்! இன்னொரு விஷயம் என்னன்னா... உலக சாதனை செஞ்சிருக்கே, நீ!" என்றாள்.

அமுதா விழித்தாள்.

"ஆமாம்மா! நல்ல மருமகன்னு பேர் வாங்கியிருக்கே!" எனவும், எல்லாரும் சிரித்தார்கள்.

தோசைக் கரண்டியை அம்மாவிடம் கொடுத்து விட்டுச் சட்டென வெளியே வந்தாள் குமுதினி.

"சிரிக்காதீங்க! நிஜம்மாவே நான் சந்தோஷமாயிருக்கேன்!" என்று தங்கையைத் தோளோடு சேர்த்துக் கொண்டு கண் கலங்கினாள்.

எல்லாரும் கலாட்டாவை நிறுத்திவிட்டு அவர்களைப் பார்த்தார்கள்.

சட்டென்று கண்கள் கலங்க, அமுதாவும் அக்காவின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"பின்னே! எங்களுக்காக நீ எவ்வளவு கஷ்டப்படறே! உனக்கு நாங்க வேற என்ன செய்ய முடியும்? என்னால முடிஞ்சது நான் செஞ்சேன். அட்லீஸ்ட் என் விஷயத்

தழுதழுக்க.

கனமான உணர்வுகள் சூழ்ந்திருக்கக்
தமிழ்மதியும் ஒருவரையொருவர் பார்த்துக்
கள். கோமகன் முகத்தில் நிலவிய வ
புன்னகை பார்த்த தமிழ்மதிக்கு அந்தக்
தோன்றியது குடும்பம் என்ற அமைப்புக்கு
இருக்கிறது என்று.

'ஹல்லோ! போதும் சென்ட்டிமென்ட்.
காலி! முறுலாய் ஒரு தோசேய்!" என்று ஆ
போலத் தமிழ்மதி நடிக்கவும் எல்லாரும் சிரி

"எதுக்குச் சிரிக்கறீங்க! பாதிநாள் ஒட்ட
தானே... அந்தப் பழக்கம்," என்று மேலு
கூட்டினான்.

சகோதரிகள் இருவரும் வெட்கத்துட
கொண்டார்கள்.

அந்தக் குடும்பத்தில் நிலவிய அன்
நெஞ்சிலும் நிலைத்திருக்கத் தன் அறைக்
தமிழ்மதி.

இரவு பத்து மணியிருக்கும்.

ஏதோ புத்தகத்தைக் கையில் வைத்துக்
கடந்த இரண்டு மூன்று நாட்களின் அனு
மனதில் நிரப்பிக் கொண்டிருந்தான் தமிழ்ம

குமுதினி மெல்ல எட்டிப் பார்த்தாள்.

"சார்!" என்றாள்.

"வா குமுதினி!" என்றான்.

''மதி..! என்னதிது... எல்லாம் என் தலையில் பொறுப்பைப் போட்டுட்டாங்க.''

''ஏன் அப்படி எடுத்துக்கறே! இட்ஸ் அன் ஹானர் குமுதினி..!'' என்றான்.

தான் ஒருமையில் பேசத் துவங்கியிருக்கிறோம் என்பதை அவனும் உணரவில்லை. அவளும் அதைப் பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை.

''ம்.. வேற என்ன செய்ய? மதி.. உங்ககிட்டே எனக்கு ஒரு ஹெல்ப் வேணுமே,'' என்றாள்.

''ம்.. சொல்லு.''

''குட்டிப் பயலுக்கு அழகா ஒரு பேர் நீங்க சொல்லுங்க.''

''அட்டே! என்னதிது. அது உனக்குக் கொடுக்கப்பட்ட மரியாதை!''

''இருக்கட்டும்... மதி..! என்னை விட நீங்க அழகாப் பேர் சொல்வீங்கன்னு நினைக்கறேன்,'' என்றாள்.

''சரி, ரெண்டு பேரும் ஆலோசித்து முடிவு செய்வோம்.''

தமிழரசன், தமிழழகன், என்று பல பெயர்கள் சொன்னதற்குப் பிறகு, தமிழ்மதி சொன்ன அந்தப் பெயர் குமுதினிக்கு மிகவும் பிடித்தது.

''பைந்தமிழ்ப் பாரி..! ஐயோ... ரொம்ப நல்லாருக்கு!'' என்றாள்.

''ஓகே! அப்ப அதே பேர் சொல்லிரு,'' என்றான்.

''சரிங்க மதி...!'' என்று உற்சாகமாகப் புறப்பட்டபோது,

அவள் நின்று அவனைப் பார்த்தாள். மகிழ்ச் அந்த முகத்தில் தேவதையைப் பார்த்தாற்போ தான்.

''சொல்லுங்க சார்!'' என்றாள்.

''குடும்பம் அப்படீங்கற அமைப்பிலய இருக்குது போலத்தான் இருக்கு...'' என்றான்.

அவள் பிரமிப்பாய்ப் பார்த்தாள். பிறகு மகி கலகலவென்று சிரித்தபடி நகர்ந்தாள்.

அவனது புன்னகை உறைந்த பார்வை அவ தொடர்ந்தது.



23

''ஏன் மஞ்சுளா! கொஞ் வுடனே துர்காவைத் தமிழோட கட்டிடலாம்னு பிளான் டாங்க... பங்கஜாக்காவும் அக்காவும்,'' என்று சிரித்தாள்

''உங்க ஹீரோ நமு இல்லே!'' என்று சிரித்தாள்

''ஆமா... மஞ்சுளா. ஆனா... அதுக்கு ய போய் ஆலோசனை கேட்டிருக்கான் தெரியும

''தெரியும். வேற யாருகிட்டே கேட்டி குமுதினிகிட்டே தான் கேட்டிருப்பாரு..!'' என்று மஞ்சுளா.

விஜயன் திரும்பி மஞ்சுளாவைப் பார்த்தா

''நீ என்னமோ அர்த்தம் வச்சுகிட்டுத்தான்

மஞ்சுளா தன் சிரிப்பின் அர்த்தம் என்ன என்று விளக்கினாள்.

விஜயன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

தனது சகோதரிகளைத் தமிழ்மதி அழகாகச் சமாளித்த விதம் பற்றி விஜயனுக்கு ஆச்சரியம்தான்.

"துர்காவுக்கோ, வசந்திக்கோ எனது அன்பிலோ, பாசத்திலோ என்றும் குறைவிருக்காது. பங்கஜாக்கா குழந்தை என்றால் என்ன? தன்னுடைய குழந்தை என்றால் என்ன? நம்மளோட சொந்தம் கல்யாணத்துலதான் உறுதியாகணும்னு இருக்கா என்ன? நாளைக்கு அவங்களோட எல்லா நல்லது கெட்டதுக்கும் நான்தானே தாய்மாமனா முன்னால நிக்கப் போறேன்," என்று விதவிதமாகப் பேசிச் சமாளித்து விட்டான்.

இரண்டு மூன்று மாத காலத்திற்குள்ளாக இப்படியெல்லாம் மாற்றங்கள் ஏற்படுமா என்ன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டாள்.

குமுதினியின் தங்கை மகள் பெயர் சூட்டு விழாவுக்கு அவனுக்கும் அழைப்பு வந்தது. மஞ்சுளாவும் அவனும் போய் விட்டு வந்தார்கள்.

குமுதினிக்கு அந்த வீட்டில் கொடுக்கப்படுகிற வாஞ்சையான அன்பு அவர்கள் மனதிலும் நெகிழ்வை ஏற்படுத்தி இருந்தது.

தமிழ்மதி கூட அதையே நினைத்துக் கொண்டுதான் படுக்கையில் ஏதோ புத்தகம் பார்த்தபடி சாய்ந்திருந்தான்.

அறை வாசலில் நிழலாடியது. திரும்பிப் பார்த்தான்.

சுந்தரலிங்கம் நின்று கொண்டிருந்தார்.

"வாங்க.. சார்! வாங்க.. சார்!" என்று வரவேற்றான்.



எழுந்து நாற்காலியில் அமர்ந்தான். கூடை நாற்காலி போல வயர் நாற்காலிகள்தான் அந்த வீட்டில் நான்கைந்து வாங்கிப் போட்டிருந்தான்.

பெயர் சூட்டுவது காலையிலேயே முடிந்திருந்தது.

பிற்பகல் விருந்து என்று அமர்க்களப்பட்டது வீடு.

நிலைய இயக்குநர் வந்திருந்தார்.

"என்ன தமிழ்...! குடும்ப வாழ்க்கை அப்சர்வேஷன்ல ஐக்கியமாயிட்டீங்களோ!" என்று கேலி செய்தார்.

"அப்சர்வேஷன்லதானே ஐக்கியமாயிருக்கான். குடும்ப வாழ்க்கையில எப்ப ஐக்கியம்னு கேளுங்க," என்றான் விஜயன்.

தமிழ்மதி அந்தக் கேள்விக்கு நழுவலாகப் பதில் சொல்லுவதைக் கண்டு அவரும், விஜயனும் அர்த்தமுள்ள சிரிப்புச் சிரித்துக் கொண்டார்கள்.

குமாரவேலும், சியாமளாவும் கூட வந்திருந்தார்கள். எல்லாரும் மாலையில்தான் கிளம்பிப் போனார்கள்.

ஒரு நாள் முழுவதும் ஒரு குடும்ப விழாவில் பொருந்திச் செலவு செய்வது என்பது அவனுக்கு வித்தியாசமாக இருந்தது. அவனும் அதை ரசித்துக் கொண்ட மாதிரித்தான் இருந்தது.

விஜயனுடைய மகள் அவனிடம் ஒட்டிக் கொண்ட விதம் பார்த்துக் குமுதினியே கொஞ்சம் அதிசயித்துக் கொண்டாள்.

கலைச்செல்வி பாதி நேரம் அவனுடைய மடியில்தான் அமர்ந்திருந்தாள். அவனிடம் விரல்களை மடித்து விரித்து ஏதோ வித்தை செய்து காட்டிக் கொண்டிருந்தான் தமிழ்மதி.

கலைச்செல்வி அது மாதிரி முயன்று பார்த்தாள். வரவில்லை.

"போங்க.., மாமா!" என்று சண்டை போட்டாள்.

"ஹேய்..! நான் பாவம், விடு..." என்று அவள் செல்லப் பிறாண்டலுக்குத் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கையில் கீதா ஒரு போட்டோ எடுத்தாள்.

தமிழ்மதி தன்னுடைய டிஜிட்டல் கேமராவைத்தான் கொடுத்திருந்தான்.

அதே நேரம் அந்தப் பக்கம் வந்த குமுதினிக்கு அந்தக் காட்சி மனதில் பதிந்தது.

குழந்தை அவன் மேல் விழுந்தாற் போல் ரகளை செய்ய, அவன் மகிழ்ச்சியுடன் சிரிக்கிற அழகு.

ஆண்கள் ஐந்தாறு பேராக நாற்காலிகளைப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

விஜயன், கோமகன், சம்பந்தி என்று வட்டமாக அமர்ந்திருந்தார்கள்.

ஏதோ தங்கள் குடும்பத்தில் ஒருவன் போலத் தமிழ்மதி மிகவும் பாந்தமாகப் பொருந்திக் கொண்டது குமுதினிக்கு வியப்பாக இருந்தது.

அன்றைய விசேஷத்தில் இன்னொரு ஆச்சரியமும் நடந்தது.

சுந்தரலிங்கம் மிகவும் பொறுப்பாகக் காரியங்களில் பங்கெடுத்துக் கொண்டதுதான். காய்கறிகள் வாங்கிக் கொடுப்பது, பால் வாங்கிக் கொண்டு வருவது என்ற எல்லாவற்றிற்கும் மகளுடைய ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு போய் வந்தார்.



வழக்கம் போலப் பழைய பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்காமல், அமைதியாக இன்றைய காரியங் களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்னடி குமுதினி.. இது ஆச்சரியம்!" என்று முணுமுணுத்த தாயிடம்,

"அம்மா! எதுவும் கிண்டலாப் பேசிடாதே!" என்று சொன்னாள் குமுதினி.

எல்லாரும் கிளம்பிப் போனதற்குப் பிறகு தமிழ்மதி கூட ஒருவித மன நிறைவில் இருந்தான்.

அமுதாவை அடுத்த மாதம் வந்து அழைத்துப் போகிறோம் என்றார்கள். தமிழ்மதிகூட இப்போதெல்லாம் கீதாவிடம் சொல்லிக் குழந்தையை எடுத்து வரச் சொல்லித் தனது கட்டில் மேல் படுக்க வைத்துக் கொண்டு விளையாடுவான்.

குழந்தை சிரிக்கிற போது அவன் மனம் கொள்ளை யடிக்கப் பட்டாற் போல உணர்ந்தான். இன்றைக்குக் கூட விஜயனின் மகள் கலையும், அண்ணன் மகள் ராணியும் "எங்க சித்தப்பா...", "எங்க மாமா!" என்று போட்டுக் கொண்ட சண்டை மிகவும் இன்பமாக இருந்தது.

அவன் இரண்டு பேருக்குமிடையே பஞ்சாயத்துச் செய்வதை அவர்களுக்கெல்லாம் தேநீர் கொண்டு வந்த குமுதினி ஒருவிதச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு பேரும் தங்களை யறியாமல் பார்த்துக் கொண்டு சிரித்துக் கொண்டார்கள்.

இரவு படுக்கைக்கு வந்த பிறகும் ஒரு விதமான மகிழ்வும் நிறைவும் மனதில் பரவியிருக்க, ஒரு விதமான கிறக்க மனப்பான்மையில்தான் இருந்தான்.

இப்போது சுந்தரலிங்கம் வரவும் அவனுக்கு வியப்பு.

"என்ன.. சார்! ஃபங்ஷன் நல்லாப் போச்சு இல்லே...!" என்றான் தமிழ்மதி.

"ஆமாங்க தம்பி! நல்லாப் போச்சு..." என்றவர், அவன் முகத்தைப் பார்த்தார்.

பிறகு கேட்டார்.

"ஏன் தம்பி! இந்த மாதிரி ஒரு லாயக்கில்லாத ஒரு அப்பனுக்கு.. எப்படிக் குமுதினி மாதிரி ஒரு பொண்ணு பொறந்தது?" என்றார்.

தமிழ்மதி இதை எதிர்பார்க்கவில்லை. ஒரு கணம் திணறிப் போனான். ஆனால் அந்தக் கேள்விக்குப் பதில் எதிர்பார்க்காதவரைப் போல அவரே தொடர்ந்தார்.

"உலகத்துல இப்படி எத்தனையோ அதிசயங்கள் நடக்குது!" என்றார். பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

"என்ன இது திடீர் ஞானோதயம்!" என்று கேட்கலாமா என்று நினைத்தான். ஆனால் கேலி மாதிரித் தெரியுமோ என்று அடக்கிக் கொண்டான்.

சுந்தரலிங்கம் சட்டென்று வேறு "பாயின்டுக்கு"த் தாவினார்.

"சரி.. அதை விடுங்க! இப்ப நான் உங்ககிட்டே என்ன கேட்க வந்திருக்கேன் தெரியுமா? எனக்கு ஒரு வேலை வாங்கிக் குடுங்க," என்றார்.

தமிழ்மதி ஏதோ சொல்ல வருவதற்குள்ளே அவரே தொடர்ந்தார்.

"இல்லல்ல! கண்டிப்பா இனிமே தண்ணீ போட மாட்டேன். இன்னைக்கு வந்த சம்பந்தி குடும்பத்துக்கு



நம்ம பொண்ணோட அருமை தெரியுது. நமக்குப் புரியலே பாருங்க. அதான் நெத்தியடி மாதிரி இருக்கு...!"

"சார்! இனிமேப் போய் என்ன வேலை பார்க்கறது..."

"ஏன்... செக்யூரிட்டி மாதிரி ஏதோ ஒரு வேலை," என்றார்.

"சரிங்க.. சார்! நான் எழுத்து வெளி வேலைன்னு இருப்பேன். விஜயன்தான் இந்த ஏரியாவிலே நிறைய விஷயம் தெரிந்து வச்சிருப்பான்," என்றான்.

அப்போது சட்டென்று அந்த விஷயம் நினைவுக்கு வந்தது. அண்ணன் அன்று பிற்பகல் சொன்னது.

"வெளி வேலையும் பாக்க வேண்டியிருக்கு. நாம அப்படி வெளிய போகும்போது ஃபோன் கால்ஸ் வந்தா விவகாரமாப் போகுது. சில நேரங்கள்ல இந்த மாதிரி ஆளில்லாம ஃபோன் எடுக்கறதேயில்லை. பிரஸ்ல வேலை பாக்கறவங்க அங்கேயிருந்து வர்றதுக்குள்ளே.. கால் நின்னு போகுது. சும்மா ஃபோன் அட்டெண்ட் பண்ண ஆஃபீஸ்ல ஒரு ஆள் இருந்தா நல்லது! நான் வெளிய போய் ஆர்டர் பாத்துக்குவேன்," என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

அப்போதே அண்ணனிடம் பேசினான். குமரவேல், "இரண்டாயிரம் சம்பளம்தான் கொடுக்க முடியும்," என்றான்.

சுந்தரலிங்கம் முகமெல்லாம் பல்லாகச் சிரித்தார்.

"இந்த வெறும்பயலுக்கு இரண்டாயிரம் குடுக்கறேங்கறாரே. அதுவே பெரிய விஷயம்தான்," என்றார்.

"எதுக்கும் வீட்ல பேசி..." என்று தமிழ்மதி இழுக்க.

''அதெல்லாம்.. நான் பாத்துக்கறேன்,'' என்றார். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு உற்சாகமாகப் போனார்.

தமிழ்மதிக்கு அவரைப் பார்க்க ஒருவகையில் பாவமாக இருந்தது. இன்னொரு பக்கம் குமுதினியை நினைத்தால் பாவமாக இருந்தது.

இந்த மனிதன் மட்டும் ஆரம்ப காலத்திலேயே இப்படி இருந்திருந்தால் குமுதினிக்கு இந்நேரம் கல்யாணமாகி இருக்கும். குறைந்தபட்சம் தன் வாழ்க்கையைத் தனக்காக வாழ்ந்திருப்பாள்.

குடும்பம் என்ற நினைப்புத் தோன்றியவுடனே தன்மீது விழுந்து புரண்டு விளையாடிய குழந்தைகளின் நினைவு வந்தது. தனக்கும் குழந்தைகள் பிறந்தால்...

ரொம்பவெல்லாம் ஒன்றும் வேண்டாம், குமுதினியின் ஜாடையில் ஒன்று! தன்னைப் போல ஒன்று.

தமிழ்மதி திடுகிட்டு எழுந்து அமர்ந்தான். கொஞ்ச நேரம் படபடப்பாகப் போய்விட்டது.

ஆஹா! இந்த மனக் குரங்குக்கு மட்டும் இடம் கொடுத்தால் என்னென்ன வேலை செய்கிறது!

லேசாக முகம் வியர்த்தும் கூடப் போய்விட்டது.

'அது.. வேற ஒண்ணுமில்லை! அந்த மாதிரிக் குடும்ப ஃபங்ஷன்கள்ல அதிகமாக் கலந்துகிட்டதில்லையே! அதுதான்! அது மட்டுமில்ல...ரெண்டு நாளவே எல்லாரும் குமுதினி... குமுதினின்னு அவளைப் பத்தியே பேச றாங்க.. அதான்!' என்று சமாதானம் சொல்லிக் கொண்டான்.

மனதைக் கட்டாயப்படுத்திச் சுந்தரலிங்கத்தோடு பேசிய பேச்சில் திருப்பினான்.



அப்போதுதான் அது திடீரென்று உறைத்தது. பேச்சுக்கு நடுவே.

''என்ன செய்றது சார்! ஆண்பிள்ளைத் துணைன்னு நீங்க ஒருத்தர்தான் இருக்கீங்க!'' என்றான்.

''யார் சொன்னா? குமுதினிக்கும், அமுதாவுக்கும் இடையில பொறந்த ஒரு ஆம்பளைத் தடியன் இருக் கான்...''என்றார்.

''ஓ!'' என்று ஆச்சரியமானான்.

''ஆமா! அவனுக்கு அவ என்னென்னமோ செஞ்சு பாத்தா! கழுதைக்குப் புரியலை! வீட்டில் இருந்த பணத்தையும், கொஞ்ச நகையையும் எடுத்துகிட்டுக் கம்பி நீட்டிடைவன்தான். ஆளையே காணோம்,'' என்றார்.

''இப்ப எங்கேன்னு தெரியலையா?''

''ஒழுங்கா இருடான்னு மினிடோர் வண்டி வாங்கிக் குடுத்தா! கடன்காரன் சம்பாதிச்ச பணத்தையெல்லாம் வெட்டிச் செலவு செஞ்சான். கோபம் வந்து குமுதினி வண்டியை வித்துட்டா! அந்தக் கோபத்துல ஆர்ப்பாட்டம் பண்ணி வீட்டை விட்டு ஓடிவைன்தான். அதுக்கப்புறம் ஆளையே காணோம்!'' என்றார்.

குமுதினிக்காகத் தமிழ்மதியின் மனம் உருகிப் போனது. அவன் மனம் அவனைக் கேட்டது.

'உனக்குப் பொறுப்புகள் இல்லை! வெறுப்பு என்று சொல்லிக் கொண்டு வெளியே இருந்து கொண்டாய். அது பெரிதா? இல்லை, பொறுப்புகளைக் கையிலெடுத்துக் கொண்டு போராடுவது பெரிதா?'

அவன் மனம் ''ஈகோ'' என்ற தனது அகங்காரத்தை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுக் குமுதினியின் பொறுப் புணர்ச்சியே பெரிது என்று சொன்னது.

தனக்குள் சிரித்துக் கொண்டான். ஆனால் மனம் இன்னும் அந்தக் கேள்வியைக் கேட்கத்தான் செய்தது.

அது குமுதினியின் பண்பாட்டைக் காட்டியது. ஆனால் இந்தக் குடும்பம் அவளுக்கு என்ன செய்தது?

கேள்வி கடினமாகத்தான் தெரிந்தது. ஆனால் தன் மனம் குமுதினியை நோக்கிச் சாய ஆரம்பித்திருந்தது புரிந்தது. அது குறித்து மேலும் மேலும் யோசிக்கையில், அவனுக்குள்ளே கவலைதான் மிஞ்சியது.



## 24

''மதி!'' என்றாள் குமுதினி தயக்கமாக.

தனது அலுவலகத்துக்குக் கிளம்புவதற்காகச் சட்டையை மாற்றிக் கொண்டிருந்த தமிழ்மதி,

''வா.. குமுதினி...'' என்று மகிழ்ச்சியாக வரவேற்றான்.

''இல்லே! அப்பா வேலைக்குப் போறேன்னு உங்ககிட்டே சொன்னாராம். உங்க அண்ணாவோட அச்சகத்திலே வேலைக்குச் சொல்லியிருக்கீங்களாம்.''

''ஆமா... குமுதினி!''

''மதி...'' என்றாள் தயக்கமாக. ''உங்க நோக்கம் நல்ல நோக்கம்தான். ஆனா.. அப்பாகிட்டே பணம் புழங்கறது...'' என்றாள்.

''குமுதினி! நாம ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும். கொஞ்ச நாளா அந்தக் காலத்துல நாங்க மிராசுதார் குடும்பம்ன்னு பேசறதை விட்டுட்டார் பாத்தியா! சிந்திக்க

ஆரம்பிச்சுட்டார் குமுதினி. நேத்து மு
குமுதினி.. பாரம் சுமக்கறா!'ன்னு உன்னை
பேச்சு!'' என்றான்.

குமுதினி சமாதானம் ஆகாதவளாய் நின்
குமுதினி! நான் சொல்லியிருக்கேன். தொட
இருந்தவங்களுக்கு விட்டுட்டு இருக்க
நானே அரேன்ஜ் பண்ணித் தரேன். கொஞ்
துக்காக... சாப்பிட்டுப் படுத்தாலும். யா
தொந்தரவும் கூடாதுன்னு.''

குமுதினி தொடர்ந்து அதே அவநம்
வையைத்தான் செலுத்திக் கொண்டிருந்தா

''இல்ல, 'தம்பி! நான் அந்தப் பழக்கத்
துக்கு முயற்சி பண்றேன்'னு சொல்
என்றான்.

இப்போது லேசாகக் குமுதினியின் முக
தோன்றியது.

''வாய்ப்புக் குடுக்கணும் குமுதினி! வாய்
அவர் சரியா நடந்துக்கலைன்னா.. அ
செய்யறதுன்னு பாக்கலாம். அது
அண்ணன்கிட்டே சொல்லியிருக்கேன். பே
தனியா கொஞ்சம் குடுங்க. என்ன செ
பாக்கலாம்ன்னு.''

''இது தேவையா... மதி?'' என்றாள் குமு

''நான் இருக்கேன், குமுதினி! மலை
இருக்கேன். நீ ஏன் கவலைப்படறே...?'' எ

அந்த வார்த்தைகளில் அவளுக்குள் ஏ
மதி தோன்றியது. கண்கள் கலங்கின. இதம்

''தேங்க்ஸ்... மதி! இந்த வார்த்தை சொல்றதுக்குத்தான் இதுவரைக்கும் எனக்கு யாருமில்லை...!'' என்றாள்.

''அப்படி ஏன் நினைக்கறே? நம்மைப் படைத்த சக்தி, நம்மளை வாழ்விக்கிற சக்தி ஒண்ணு நமக்கெல்லாம் அப்பாலே இருந்து இயக்குது. அதுகிட்டேயிருந்து நமக்குத் தேவையான உதவி கிடைச்சுகிட்டேதான் இருக்கும்,'' என்றான்.

வாய் என்னவோ இப்படிப் பேசிக் கொண்டிருந்தாலும், மனம் மட்டும் குமுதினியை இழுத்து அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் என்று தவித்தது.

மட்டுப்படுத்திக் கொண்டான். இது வெறும் ஹார்மோனின் கோளாறு. தன்னையொத்த சிந்தனைகள் உள்ள ஒரு பெண் கிடைத்திருக்கிறாள் என்ற எண்ணத்தால் ஏற்பட்ட ஈர்ப்பு, மற்றப்படி தன்னால் எந்தக் காலத்திலும் ஒரு குடும்பம் என்ற வலைக்குள் கட்டுப்பட்டு இருக்கவே முடியாது என்று எண்ணிக் கொண்டான்.

''அதுசரி... இன்னைக்கு ட்யூட்டி எப்ப?'' என்றான்.

''இன்னைக்கு செகண்ட் டிரான்ஸ்மிஷன்,'' என்றாள்.

''சரி.. நான் வேண்ணா வந்து பிக்கப் பண்ணிட்டு வரட்டுமா?''என்றான்.

''ஐயோ..! எனக்காக உங்க வேலை கெடுமே!'' என்றாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே! எனக்கும் ஒரு வேலையிருக்கு. ஒரு கதை எழுதிக்கிட்டிருக்கேன். அதுல உங்க வானொலி நிலையம் பத்தின செய்திகள் வருது. அதனால நேரடியாக் கொஞ்சம் ''அப்சர்வ்'' பண்ணணும்,''

''வாங்கிட்டேன். அவர்தான் உன்கிட்டே
கேட்டுக்கச் சொன்னார்,'' என்றான்.

''ஓஹோ...!''

''ஆமா...! இன்னைக்கு ரெண்டு பேரு
போறோம். ஒண்ணா வர்றோம்...'' என்றான்

''சரி...! பஸ்ல தொங்கற வேலை மிச்ச
அவனைப் பார்த்துப் புன்னகைத்தபடி
கொஞ்சம் வீட்டு வேலை இருக்கு...!
புறப்படறேன்,'' என்றாள்.

இரண்டு எட்டு முன்னால் எடுத்து வைத்
வந்து,

''தாங்க்ஸ் மதி...!'' என்றாள்.

''எதுக்கு?'' என்றான் அவன், விசித்திரப்

''இல்லே... எனக்காகவும், எங்கப்பாவுக்காக
எடுத்ததுக்காக.''

''உனக்கும்... தாங்க்ஸ்!'' என்றான்.

''எதுக்கு...?''

''இல்லே.. மதி.. மதின்னு கூப்பிட்டு
ஏத்துக்கிட்டியே, அதுக்கு...'' என்றான்.

அவள் முகம் சிவந்தது. என்ன பதில் செ
யோசிக்கையிலேயே,

''ஓடு! வேலையை முடிச்சுட்டு ரெடியா
விஜயனும் ஒரு முக்கியமான லெட்டர்
யிருக்கு. முடிச்சுட்டு வந்துடறேன்..'' என்று

இரண்டு விதமான கருத்துக்களுக்கா
நிற்கிறவர்களாக இருந்த தங்களுக்குள்ளே

நட்பும் ஏற்பட்டிருந்தது குறித்து ஒரு விதமான மகிழ்ச்சியுடன் நடமாடிக் கொண்டிருந்தாள் குமுதினி. ஆனால் மறுபடியும் இரண்டு நாளைக்குள்ளாகச் சண்டைக் கோழிகளைப் போலச் சண்டை போடப் போகிறோம் என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை.

* * *

இரண்டு நாட்கள் போயிருக்கும்.

அன்றைக்குப் பிற்பகல் ட்யூட்டி முடித்து விட்டு வந்து கொண்டிருந்தாள் குமுதினி.

அதிசயமாக ஆட்டோவில் வந்தாள். அவளைப் பார்ப்பதற்காக வந்த கல்லூரித் தோழி ஆட்டோவில் வந்தாள். அவள் இறங்கிக் கொண்டு, ஆட்டோ டிரைவரிடம் குமுதினியைக் கொண்டு போய் வீட்டில் விடுமாறு சொல்லியிருந்தாள்.

குமுதினி எவ்வளவோ மறுத்தும் அவள் கேட்கவில்லை.

"சும்மா வாடி! ஒரு நாளைக்காவது இப்படி பஸ்ல தொங்கிட்டுப் போக வேண்டாம் இல்லே...!" என்றாள்.

குமுதினியும் மறுக்கவில்லை –

தங்கள் தெரு முனையில் திரும்பும்போது, அந்தக் காட்சியைக் கண்டாள்.

முதலில் தமிழ்மதியின் பைக் போனது. அதில் பின்புறம் கீதாலட்சுமி அமர்ந்திருந்தாள்.

பத்தடி தூரம் கூட ஆட்டோ போயிருக்காது. 'சரி, கீதாலட்சுமி ஏதாவது பொருள் வாங்க வேண்டும் என்று கேட்டிருப்பாள். அழைத்துப் போகிறான் போலும்' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் கொஞ்சம் பின்னாலேயே



விஜயனின் பைக் போனது. அதில் பின்னாலே ஒரு இளைஞன் அமர்ந்திருந்தான்.

குமுதினிக்கு ஏதோ வித்தியாசமாகப் பட்டது.

ஆட்டோவைத் திரும்பச் சொன்னாள்.

குமுதினி ஆட்டோவில் வரக்கூடும் என்று தமிழ்மதியோ, விஜயனோ எதிர்பார்க்கவேயில்லை.. அதனால் கவனிக்கவில்லை.

குமுதினியின் ஆட்டோவும் தொடர்ந்தது.

தமிழ்மதியின் அந்த வீட்டை நோக்கிப் போன பைக்கில் இருந்து அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே போனார்கள்.

குமுதினி ஒரு கணம் யோசித்தாள். பின்தொடர்ந்து போய் என்ன விஷயம் என்று கேட்கலாமா என்று நினைத்தாள்.

ஒருவேளை அந்தப் பையன் தமிழ்மதியின் வாசகனாயிருக்கலாம். கீதாலட்சுமிக்குத் தனது அந்த ஆஃபீஸில் இருந்து போனா என்று ஏதாவது கொடுப்பதற்காக அழைத்துப் போயிருக்கலாம் என்று எண்ணிக் கொண்டவள், திரும்பவும் வீட்டுக்கே ஆட்டோவைத் திரும்பச் சொல்லிப் போய் விட்டாள்.

அரை மணி நேரம் ஆயிற்று.

ஒரு மணி நேரம் ஆயிற்று.

அவர்கள் வரக் காணோம். அதற்கு மேல் பொறுமையில்லாதவளாய்த் தனது ஸ்கூட்டியை எடுத்தாள்.

* * *

"இது பாருப்பா பிரபஞ்சன், உனக்கு என்ன வேணும்? எதுக்காக எங்க பொண்ணை அடிக்கடி வந்து பாத்துப் பேசறே...?" என்று கேட்டான் விஜயன்.

தமிழ்மதி வயர் நாற்காலியில் எதிரே அமர்ந்து ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

."சார்! நீங்க எழுத்தாளர் தமிழ்மதிதானே!" என்றான் ஆர்வமாக.

தமிழ்மதி புன்னகைத்தான். "ஆமாப்பா! நாம அதைப் பத்தி அப்புறம் பேசலாம்! இப்ப விஜயன் கேட்கிற விஷயங்களுக்குப் பதில் சொல்லு!" என்றான்.

அன்றைக்கும் ஐந்து மணியளவில் தமிழ்மதியும், விஜயனும் வந்து கொண்டிருக்கையில், கீதாலட்சுமி மிரண்ட பார்வையுடன் நிற்பதையும், அந்தப் பையன் ஏதோ சொல்ல முயற்சிப்பதையும் கண்டார்கள். "வாப்பா.. நீ!" என்று இரண்டு பேரையும் அந்தப் பைக்கில் அமர்த்திக் கொண்டுதான் அலுவலகம் போனார்கள்.

"அங்கிள்..." என்ற மிரண்ட கீதாலட்சுமியை உள்ளே அழைத்துப் போய் விவரம் கேட்டான் தமிழ்மதி.

"அங்கிள்! இதோட இரண்டு மூன்று தடவையாச்சு...! 'கொஞ்சம் நில்லுங்க...! நான் உங்ககிட்டே பேசணும்'னு வழியை மறிக்கறாரு.." என்றாள் கலங்கிய குரலில்.

"சரி. நீ போய் மஞ்சுளா கூட இரு." என்று விட்டு விட்டு வந்தான் விஜயன்.

அதற்குப் பிறகுதான் விசாரணை நடந்து கொண் டிருந்தது.

"சார்! நான் பிரபஞ்சன். கீதாலட்சுமி படிக்கிற அதே ஸ்கூல் கேம்பஸ்ல காலேஜூம் இருக்கு. தெரியுமில்ல! அங்க நான் தேர்ட் இயர் படிக்கறேன்."

"ம்...! என்ன கோர்ஸ்!"

"பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயன்ஸ்!"



"ம்...!"

"சார்! நீங்க எழுத்தாளர். உங்களுக்கு மனுஷங்க மனசு புரியும். எனக்குக் கீதாலட்சுமியை ரொம்ப பிடிக்கும்," என்றான்.

விஜயனும், தமிழ்மதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, குபீரென்று சிரித்தார்கள்.

தமிழ்மதி புன்னகையுடன் கேட்டான்.

"காதலாக்கும்! உனக்கு என்ன வயசு?" என்று.

"சார்! என்னை மாதிரி ஒரு நிலைமையில இருக்கிற பையனைப் பாத்து உங்களை மாதிரி இருக்கறவங்க கேட்கிற கேள்விகள்தான் இதெல்லாமே. சார்! எனக்கு வயசு இருபத்தொண்ணு.. இன்னும் படிப்பையே முடிக்கலே! வேலை கிடைக்கலே! ஆனா... மனசுன்னு ஒண்ணு இருக்கு. அதுல தெளிவான முடிவுகள் இருக்கு...!" என்றான்.

தமிழ்மதியின் கண்களில் சுவாரசியம் ஏறியது.

"ம்..!" என்றான்.

"ஆமா... சார்! கீதாலட்சுமி ரொம்ப நல்ல பொண்ணு. ஸ்கூல் பீப்பிள் லீடர். எல்லாத்துலயும் திறமை இருக்கு. ஆனா அமைதியா இருக்கும். எனக்கு அந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு..."

"ம்...!" என்று இழுத்தபடி, தமிழ்மதி உள்வாங்கிக் கொண்டான்.

"அது சரி! ஆனா அந்த மாதிரி முடிவுகளை எடுக் கறதுக்கு உனக்கு அனுபவமும் போதாது. இது அதற்கான காலமும் இல்லே!"

''ஆமா... சார்! அதனாலதான் நான் அவங்க வீட்ல வந்து பேசலே! ஒரு ரெண்டு வார்த்தை பேசறதுக்குள்ளே கீதா பெருசா மிரண்டு போகுது...''

''சரி.. என்ன சொல்லணும்? என்கிட்டே சொல்லு.''

பிரபஞ்சன் முகத்தில் வெட்கம் படிந்தது.

''அதான் சார் விஷயம்! கீதாகிட்டே நான் என்ன சொல்லணும்னு நினைச்சேன்னா.... முதல்ல என்னோட விருப்பம்! இரண்டாவது ஒருவேளை கீதா எனக்கு அதுபத்தியெல்லாம் தெரியாதுன்னு சொன்னாக் கூட இப்ப இல்லேன்னாலும் எப்பவாவது ஒரு ஸ்டேஜ்ல அவங்க வீட்ல மேரேஜ் பத்தி முடிவெடுப்பாங்க! அப்ப நான் வந்து பொண்ணு கேட்கறேன்னு சொல்லணும்.''

தமிழ்மதி கடகடவென்று சிரித்தான்.

''அப்படிப் போடு!'' என்று மறுபடியும் சிரித்தான்.

பிரபஞ்சன் முகத்தில் தவிப்புத் தெரிந்தது.

''சார்! நான் ஒண்ணும் வெத்து வேட்டு இல்லை. எங்கப்பா எங்கம்மா ரெண்டு பேருமே ப்ரொஃபசர்ஸ். எனக்கும் ஸ்ட்ராங்கான முடிவுகள் இருக்கு...'' என்றான், ஒருவிதமான ஆதங்கம் நிறைந்த தொனியில்.

தமிழ்மதி சிரிப்பை நிறுத்திக் கொண்டான். ''அட... இல்லைப்பா! நான் இதுக்குச் சிரிக்கலே. இது சும்மா... காஃப் லவ், அப்படீம்பாங்க...! யு வில் ஓவர்கம் இட்...'' என்றான்.

அவன் சிந்தனையுடன் பார்த்தான். ''இல்ல சார், எனக்கு அப்படித் தோணலே...'' என்றான்.

தமிழ்மதியைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

''ஓ.கே...! இப்ப இதை எங்ககிட்டே சொல்லிட்டே இல்லே! நாங்க கீதாலட்சுமிகிட்டே சொல்லிடறோம்.



இப்ப நேராய்ப் போய் அந்தப் பொண்ணுகிட்டே சொல்லி அது மென்டலா டிஸ்டர்ப் ஆகும். அது சரி! நீ இந்த ஊர்லதானே இருக்கே, இப்ப சொல்றதுக்கு என்ன அவசரம்?''

''இல்ல... சார்! நான் மேற்படிப்புக்கு வெளியூர் போறேன். சென்னைக்குப் போறேன்.''

தமிழ்மதி தன்மையான குரலில் சொன்னான். ''சரிப்பா! இனிமே ரோட்ல வச்சு அந்தப் பொண்ணை டிஸ்டர்ப் செய்யாதே...! டைம் வரட்டும். பாக்கலாம்...! என்னைத் தெரியுமில்ல, தமிழ்மதி. ''காண்டாக்ட் பண்ணு...'' என்றான்.

சற்று நேரம் உரையாடிவிட்டு அனுப்பி விட்டான். அவன் போனதற்குப் பிறகு தமிழ்மதி விஜயனிடம் சொன்னான்.

''பையன் பொறுப்பாத்தான் தெரியறான்,'' என்று. மறுபடியும் சிரித்தான்.

விஜயன் வியப்பாகப் பார்க்க, ''எனக்கு மட்டும் ஏன்டா இப்படி யெல்லாம் தோணவே இல்லே...!'' என்று சிரித்தான்.

''யார் கண்டா? விழுந்தா தலை குப்புற விழுவியா இருக்கும்...'' என்றான் விஜயன்.

''பாக்கலாம்! பாக்கலாம்,'' என்று கீதாலட்சுமியை அழைத்து அவளுக்குத் தைரியமூட்டினார்கள்.

''ஐயோ! எனக்குப் படிக்கணும்! அக்கா எவ்வளவு பாரம் சுமக்கறா. அக்கா இதைக் கேட்டா எவ்வளவு வருத்தப் படுவா. அக்காவுக்குப் பிடிக்காத எதுவுமே செய்ய மாட்டேன்!'' என்று தேம்பியழுகிற கீதாவை ஆழப் பார்த்தான்.

ஒரு நாளும் குமுதினி தங்கையை மிரட்டிப் பார்த்ததே இல்லை. செல்லமாகவே வைத்துக் கொள்வாள். ஆனால் கீதாலட்சுமி தமக்கையைத் தெய்வமாக நினைக்கிறாள் என்று உணர்ந்த அந்தக் கணத்தில், அந்தக் குடும்பம் அவளை "எக்ஸ்ப்ளாய்ட்" செய்கிறது என்ற எண்ணம் மாறி, அந்தக் குடும்பம் அவளைத் தெய்வமாக நினைக்கிறது என்ற உணர்வு பிறந்தது.

அவள் மனதில் ஏனோ பெருமையும் பெருமிதமும் தோன்றியது. பேசிக் கொண்டே திரும்பினாள். குமுதினி அங்கே உக்கிரமான பார்வையுடன் நின்று கொண்டிருந்தாள்.



25

தமிழ்மதியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. குமுதினியின் கோபத்தை ரசிக்கிற மனப்பான்மைதான் தோன்றியது.

மூக்கு நுனி சிவக்க அவள் நின்றது ஏதோ சித்திரத்தில் நின்ற ஓவியம் மாதிரி இருந்தது.

நல்ல வேளையாக அந்த நேரத்தில் மஞ்சுளா அங்கே இருந்தாள்.

"வாங்க வாங்க, குமுதினி!" என்று தடபுடலாக மஞ்சுளா வரவேற்கவும், குமுதினி தன் முக பாவத்தை மாற்றிக் கொண்டாள்.

தன் முழுக்கைச் சட்டையை லேசாக மடித்து விட்டுக் கொண்டே தமிழ்மதி கண்களில் ஒரு சுவாரசியம் தோன்ற நின்றாள்.

குமுதினி உள்ளே வந்தாள்.



தன் உணர்வுகளை அடக்கி ஒரு பார்வையைக் கீதாலட்சுமியை நோக்கி வீசினாள்.

கீதாலட்சுமி விதிர் விதிர்த்துப் போனாள். லேசான நடுக்கத்துடன் ஏதோ சொல்லத் துவங்கினாள். அதற்குள்ளாக மஞ்சுளாவே இடை புகுந்தாள்.

"குமுதினி! ஒண்ணுமில்லே! ஏதோ ஒரு பையன் இரண்டு மூன்று தடவை கீதாலட்சுமியை வழியில பாத்து ஏதோ சொல்றதுக்கு டிரை பண்ணியிருக்கான். கீதா பயந்தாப்ல நின்றுகிட்டிருக்கவும் இவங்க ரெண்டு பேரும் அந்தப் பையனை பைக்ல அள்ளிப்போட்டுட்டு வந்துட்டாங்க! அங்க உங்க வீட்ல வச்சுப் பேசினா உங்கம்மா வொரி பண்ணிக்குவாங்கன்னு இங்க வச்சுப் பேசினாங்க," என்றாள்.

"ஓ!" என்றாள். கொஞ்சம் குளிர்ச்சியாகி விட்டாள்.

"வாங்க! எங்க வீட்டுக்கு வாங்க!" என்று மஞ்சுளா அழைக்கவும், தமிழ்மதி இடைபுகுந்தாள்.

"மஞ்சுளா! என் வீட்டுக்கு முதல் முதலா வந்திருக்காங்க! எல்லா உபசரிப்பும் இங்கதான். ஆனா.. இட்டமெல்லாம் மட்டும் கொண்டு வந்துடுவீங்களாம்," என்று சொல்லவும், மஞ்சுளா சிரித்தாள்.

"இப்ப வரேன்," என்று போனாள்.

"உட்காருங்க... குமுதினி!" என்று உபசரித்தாள். "மேடம் கீதா! நீங்களும் உட்காரலாமே..." என்று சொன்னாள்.

"அந்தப் பையன் என்ன சொன்னான்?" என்றாள் குமுதினி, அமர்ந்தபடியே.

"என்ன சொல்வான்! வழக்கம் போலத்தான். கீதாவை ரொம்பப் பிடிக்குதாம்."

''அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?'' என்றாள் கூர்மையான பார்வையுடன்.

விஜயனும், தமிழ்மதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள். பிறகு தமிழ்மதி சொன்னான்.

''இப்படித்தான் சிரிச்சோம்!'' என்று சொன்னவன், தன் முகபாவத்தைத் தீவிரமானதாக மாற்றிக் கொண்டான்.

''குமுதினி! டென்ஷனாக வேண்டாம். அந்தப் பையன் தெளிவாப் பேசறான். நீங்க நினைக்கிறாப் போல எங்க ரெண்டு பேரையும் பேசவே விடலை. கீதா விஜி வீட்லதான் இருந்தது. அந்தப் பையன் மேல் படிப்புக்குப் போறானாம். கீதாவுக்கு எப்ப சம்மந்தம் பேசினாலும் அவனுக்கு ஒரு தகவல் தெரிவிக்கணுமாம். அவன் அம்மா அப்பாவோட வந்து முறையாய்ப் பொண்ணு கேட்பானாம்,'' என்றான்.

மறுபடியும் விஜயனும், தமிழ்மதியும் சிரித்தார்கள். ''குமுதினி! டீன் ஏஜில ஈர்ப்பு சகஜம். நாம ரொம்ப அந்த விஷயத்தைப் பெரிசு பண்ணினாத்தான் அவங்களும் த்ரில்ன்னு நினைச்சுட்டு எதையெதையோ செய்வாங்க,'' என்றான்.

''சரி.. நீங்க என்ன பதில் சொன்னீங்க?''என்று கேட்டாள், குமுதினி. அதே பிடியில் நின்றாள்.

தமிழ்மதி மேலும் சொன்னான். ''ஒண்ணும் பெருசாச் சொல்லலே, எதையும் தீர்மானிக்கறதுக்கு இது வயசில்லே. உனக்கு ஒரு பொஸிஷன் வந்ததுக்கப்புறமும் இதே நினைப்பு இருந்தா என்னை வந்து பாரு. அவங்க ஃபேமிலியில போய் எதுவும் டிஸ்டர்ப் பண்ணாதே... அப்படீன்னு சொன்னேன்,'' என்றான்.



குமுதினியின் முகத்தில் நிம்மதி ஏற்பட்டது. அதற்குள்ளாக மஞ்சளா தட்டுகளில் ஜிலேபி, காராசேவு என்று எடுத்து வந்தாள்.

மறுபடியும், ''காபி போட்டுட்டு வரேன்,'' என்று போனாள்.

''குமுதினி! இதுல ஹைலைட்டான விஷயம் என்னன்னா உன் தங்கை என்கிட்டே சொன்ன பதில்தான்,'' என்றான்.

குமுதினி அமைதியாகத் தொடர்ந்து கேட்டாள்.

''ஐயோ! எனக்கு இதெல்லாம் வேண்டாம். எனக்குப் படிக்கணும். அக்கா எவ்வளவு பாரம் சுமக்கறா...! அக்காவுக்குப் பிடிக்காத எதுவுமே செய்ய மாட்டேன்!'' என்று ஒரே அழுகைதான்!'' என்று நடித்துக் காட்டினான் தமிழ்மதி.

''அங்கிள்! சும்மாயிருங்க!'' என்று வெட்கப்பட்டாள் கீதா.

குமுதினி தங்கையை வாஞ்சையாகப் பார்த்தாள். புன்னகை மலர்ந்தது.

''அந்தப் பையனை உனக்குப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்கலாமா என்று நினைத்தாள். பிறகு மாற்றிக் கொண்டாள். இப்போதிருந்தே அந்த மாதிரி நினைவுகள் எதையும் மனதிலே வளர்க்க வேண்டாம் என்று எண்ணிக் கொண்டாள்.

''தேங்க்ஸ்.. மதி...! தேங்க்ஸ் விஜி சார்!'' என்றாள்.

''அவங்க மட்டும் மதி! நாங்க விஜி சாரா?'' என்று ஒரு யுத்தத்திற்குத் தயாரானான் விஜி.

''ஓ..கே..! ஓ.கே...விஜி!'' என்றாள் குமுதினி.

தமிழ்மதி. "குமுதினி! வீட்டுக்குப் போன் பண்ணி லேட்டாகும்னு சொல்லிடுங்க," என்றான்.

சொன்னாள்.

சற்று நேரம் அங்கேயே இருந்து வேடிக்கையாகப் பேசினார்கள். அளவளாவினார்கள்.

அப்போது ஒரு விஷயம் நடந்தது. இரண்டு பெண்கள் அவர்களைப் பார்ப்பதற்காக வந்தார்கள். அதில் ஒருத்தியின் கண் தமிழ்மதியை ஏதோ பெட்டியில் அடைத்துக் கொள்கிறாற் போல விழுங்கிக் கொண்டது.

"சார்! உங்க எழுத்துன்னா எங்களுக்கு உசிரு..!" என்று அவனைக் கொண்டாடிக் கொண்டார்கள்.

"ரொம்ப நன்றிங்க!" என்றான் தமிழ்மதி.

"சார்... அந்தக் கதையில அந்தக் கேரக்டர்.. இந்தக் கதையில் இந்தக் கேரக்டர்..." என்று அவர்கள் அலசிய விதம் பார்த்துக் குமுதினி ஆச்சரியமானாள்.

"இவங்க என் ஃபிரண்டு!" என்று அவளை அந்தப் பெண்களுக்கு அறிமுகப்படுத்த. அதில் ஒருத்தி ஒரு பொறாமைப் பார்வையைக் குமுதினி மீது வீசினாள்.

குமுதினி புரியாதவள் போல அமர்ந்து கொண்டாள்.

தமிழ்மதி லேசாக அவளைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தான். அந்த நிமிடம் அந்தச் சிரிப்பில் தன் மனம் கொள்ளை போனாற் போல உணர்ந்த குமுதினி எழுந்து, "நான் மஞ்சுளாவைப் பாத்துட்டு வரேன்," என்று போய் விட்டாள்.

அந்தப் பெண்கள் மேலும் பத்து நிமிடம் இருந்து விட்டு நகர்ந்தார்கள்.

"தமிழு! அந்தப் பக்கம் பொறாமை போ
என்று கிசுகிசுத்தான், விஜயன்.

"போடா!" என்று தமிழ்மதி சிரித்தான். "ச
வீட்டுக்குப் போலாம்," என்று நகர்ந்தான்.

"வாங்க.. வாங்க! அண்ணா! அவ்வ
வரவே மாட்டார்! பாத்தீங்களா...! உங்களு
மானவங்க வந்தவுடனே வந்துட்டீங்க,"
செய்தாள் மஞ்சுளா.

"ஏம்மா! நீ எனக்கு முக்கியமில்லை
பிறவாச் சகோதரியாச்சே!" என்று சிரித்தான்

"என்ன... குமுதினி! திடீர்னு எழுந்து
என்றான் விஜி.

"ஆமா! அந்தப் பொண்ணுக வழியல
எரிச்சலா வந்துச்சு," என்றாள் குமுதினி.

"பின்னே! ஏதோ இந்த ஏழை எழுத்தா
ரெண்டு ரசிகைகள் இருக்க மாட்டார்களா.
தமிழ்மதி.

"எழுத்துக்கு ரசிகைகளா... இல்லே ஆ
கறவங்களான்னு பாத்துக்குங்க," என்றாள் குமு

விஜயனும், மஞ்சுளாவும் பார்வை பரிமா
அமைதியாகப் பார்த்துக் கொண்டு உரையா
கொள்ளாமல் நின்றார்கள்.

"பின்னே? உங்களாட்டமா எல்லா
வைப்பதும், சண்டை போடுவதுமா இ
என்றான் தமிழ்மதி.

"அப்படியும் ரெண்டு பேர் வேணும் மதி
ரொம்ப திளைப்பு இருக்காது," என்றாள் கு

"நினைப்பு மட்டுமா...?" என்று சிரித்த தமிழ்மதி, "அதுக்கு எதுக்கு ரெண்டு பேர்! நீ ஒருத்தியே போதுமே! உன்கிட்ட போட்ட சவால்லியே தோத்துப் போயிடுவேன் போல இருக்கு. இந்தப் பக்கத்துல எழுத்தாளர் நிராயுத பாணியா நிக்கறாரு.. தெரியலே," என்றான் தமிழ்மதி.

குமுதினி இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. சிரித்துக் கொண்டாள்.

"ஆமா... குமுதினி...! எதிரணியிலே சக்தி ரொம்ப பவர்தான்னு ரொம்பத் தெளிவாத் தெரியுது," என்றான் திரும்ப.

"விஜி...! விஷயம் தெரியுமா? சுந்தரலிங்கம் மாமா வேலைக்குப் போக ஆரம்பித்திருக்காரு," என்றான்.

"ஆமா! காசு உருப்படியா வீட்டுக்கு வருதோ இல்லியோ!" என்றாள் குமுதினி.

தமிழ்மதி ஆழமாகப் பார்த்தான். பிறகு சொன்னான்.

"வரும்.. குமுதினி! அவரோட முகத்துல நான் உண்மையான ஆர்வம் பார்த்தேன். பொண்ணை ரொம்ப வருத்தறோம்னு ஒரு ஆழ்ந்த வருத்தம் இருந்தது." என்றான்.

"அதுசரி! இப்ப வீட்டுக்குப் போனாத் தெரியுது." என்று மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வீட்டுக்குச் சென்றாள்.

"நீங்க... மதி?" என்றாள்.

"நீ போம்மா! ஒரு ஒன் அவர்ல வந்தர்றேன்," என்றான்.

புறப்படுவதற்கு இரண்டு எட்டு எடுத்து வைத்தவள்,

"எதுக்கு?" என்றான் மார்பை நீவியபடி.

"ஆச்சுவலா நான் வரும்போது கோபமா
ஏதோ உங்க கதைகள்ல சேத்து வைக்கற
மேக்கிங் பண்றீங்களோன்னு..."

தமிழ்மதி ஒன்றும் பேசாமல் பார்த்தான்.

"ஆனா.. கரெக்டாத்தான் புத்தி சொல்
யிருக்கீங்க!" என்றாள்.

"தாங்க்ஸ்!" என்றவன், "குமுதினி! அ
ரொம்ப தெளிவாகத்தான் இருக்கான் போ
என்று சுற்று முற்றும் பார்த்தான்.

நல்ல வேளை, சீதாலட்சுமி அவர்களை
வில்லை. கலைச்செல்வியுடன் விளையாடிக்
தாள்.

அதே நேரம்!

"பாரு... மாமா! இந்த அக்காவை..." என்று
ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்டாள். சட்டெ
கையில் ஏந்திக் கொண்டான். உட்கார்ந்து
கன்னத்தில் முத்தம் வைத்து விட்டுத்
பேசினான்.

"அவன் சொன்ன விவரங்கள் பாத்தா நல்
தான்," என்றான் தமிழ்மதி.

குமுதினி உச்சுக் கொட்டினாள். "அந்த
போது பாக்கலாம்," என்றாள்.

"ஆமா! அதுக்குள்ளே குமுதினி கல்யாண
விடும் இல்லே!" என்றாள் மஞ்சுளா.

"நீங்க ஏக்கா! நடக்கறதைப் பேசுங்க," என

தமிழ்மதியும் அந்தப் பேச்சை வளக்க விரும்பாதவன் போலக் கலைச்செல்வியுடன் கதை பேசிக்கொண்டே தன் போர்ஷன் நோக்கி நகர, விஜயனும், மஞ்சுளாவும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

மெல்லிய குரலில், "குமுதினி! நான் என்னோட கதைகள்ல விடலைத் தனமான காதல் பத்தி எழுதற தில்லை," என்றான்.

"தெரியும்! ஃபிரண்ட்ஸ் சொல்லுவாங்க," என்றாள்.

அன்றைக்குத் தமிழ்மதி தன் பைக்கில் உள்ளே நுழையும் போதே கவனித்தான்.

குமுதினி அவனுக்காகவே காத்திருப்பது போல் நின்றாள்.

"மதி...!" என்று ஆர்வமாக வந்தாள். அவன் பைக்கை நிறுத்தி விட்டு, "என்னம்மா?" என்றான்.

"மதி..!" என்று அவன் பின்னாலேயே அன்று அறைக்குள் வந்தாள். உற்சாகமாகச் சொன்னாள்.

"மதி...! உங்கண்ணன் பேட்டா முப்பது ரூபா குடுத்தாராம். அப்பா.. அப்பா...!" என்று பேச முடியாதவள் போலத் தவித்தாள். பிறகு சொன்னாள்.

"முப்பது ரூபாயையும் கொண்டு வந்து அம்மாகிட்டே குடுத்திட்டாராம். அப்புறம் அதுல இருபது ரூபாயைக் குடு. காய்கறி வாங்கிட்டு வரேன்னு போய்க் காய்கறி வாங்கிட்டு வந்தாராம். இருபது ரூபாய்க்கும் கணக்கு எழுதிப் பாக்கி தந்தாராம். மீதிப் பத்து ரூபாயை வீட்டுச் செலவுக்கு வச்சுக்கோன்னாராம். உங்களுக்குன்னு அம்மா கேட்க, 'எனக்கு எதுக்கு மீனாட்சி..! டீ, வடை எல்லாம் குமரவேல் தம்பியே வாங்கிக் குடுத்துருது. என்னையும்

...படி விஷயங்களை வாங்கிக் கொண்டான் ...
...தில் பரவியிருந்த மகிழ்ச்சியைப் பார்த்த ...
...தில் குமுதினி மிக அழகாகத் தெரிவதாக ...

"மதி... ரொம்பத் தாங்க்ஸ்! மதி..! ரொ...
எனக்கு விவரம் தெரிஞ்ச காலத்துல இரு...
முகத்தில கொஞ்சமே கொஞ்சம் பெரு...
இது எப்படி நடந்துச்சன்னே தெரியலை!"

பரபரப்பாக இருந்தாள்.

"எப்படி நடந்துச்சன்னு எனக்குத்தானே...
என்று தமிழ்மதி தனக்குள் சிரித்துக் கொ...

"ஓ.கே...! ஓ.கே...! ரிலாக்ஸ் குமுதினி! ...
காலம்ன்னு வச்சுக்கோ..." என்றான்.

"ஆமா.. சார்!" என்று மகிழ்வாகச் சற்று...
கொண்டிருந்தாள்.

"நான் டிபன் கொண்டு வரேன்," என்ற...
தமிழ்மதி சொன்னான்.

"குமுதினி! உன் முகம் பார்க்க ...
இருக்கு...!" என்றான்.

"அப்படியா?" என்பது போல அவனை ப...
குமுதினி! என் எழுத்தையும் என்னைய...
எத்தனையோ வாசகர்களைக் காட்டிலும்...
பத்தை நேசிக்கற நீ ரொம்ப அழகு குமுதினி...

வெட்கச் சிரிப்புடன் நின்று அவ...
ஆர்வமாகப் பார்த்தவள், "போங்க சார்!" எ...
அவள்.

# 26

குமுதினிதான் குழந்தைக்குப் பேர் வைக்க வேண்டும் என்று முடிவான மறுநாள், சுந்தரலிங்கம் தமிழ்மதியின் அறைக்கு வந்தார்.

"என்னமோ மனசே சரியில்லைப்பா!" என்று சலித்துக் கொண்டார்.

தமிழ்மதி ஒரு மாதிரியாக அவரைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"ஏன் சார்! தீர்த்தம், மருந்து, சரக்கு இப்படி ஏதாவது உள்ளே போனா மனசு சரியாப் போயிடுமோ?"

சுந்தரலிங்கத்தின் கண்கள் விரிந்தன. ஆனால் உடனே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்.

"போங்க தம்பி! இங்கதான் ரொம்ப எதிர்ப்பா இருக்கே...!" என்றார்.

"அது பாத்துக்கலாம்!" என்று தன் பீரோவைத் திறந்து பிராந்தி பாட்டில்கள் இரண்டை எடுத்து வைத்தான். கலப்பதற்குச் சோடா என்று அவன் தயாராகிக் கொண்டிருக்க, அவர் ஆவலாகப் பார்த்துக் கொண்டே கேட்டார்.

"அப்புறம் குமுதினி உன்னைக் கோவிச்சுக்காதா?"

"இல்ல சார்! நான் குமுதினிகிட்டே பர்மிஷன் வாங்கியிருக்கேன். ஏதோ பத்திருபது நாளைக்கு ஒரு முறை அனுமதிங்க, குமுதினி. நானே கூட இருந்து பாத்துக்கறேன்னு சொல்லியிருக்கேன்."

"அடப் போப்பா! இவங்கதான் இப்படிக் கலாட்டா பண்றாங்க.. இப்பல்லாம் எல்லா இடத்திலயும் இந்த மாதிரித் தண்ணி அடிக்கறது கலாச்சாரமாப் போச்சு..." என்றார்.

"அதாவது வெள்ளைக்காரன் இந்த நாட்
போயிட்டாலும், நம்மளைப் பல விதத்தி
யாத்தான் வச்சிருக்கான்," என்றான்.

சுந்தரலிங்கம் ஒரு நிமிடம் விழித்தார்.

"ஆமா.. சார்! மெக்காலேயின் கல்வித்
னோட நடை உடை, பாவனை, அதோட இ
அவன் நாடு குளிர் தேசம். அங்கே இ
பானங்கள் தேவைப்பட்டன. இங்கே எதுக்கு

"போங்க தம்பி! டாக்டரே ஒருத்தர் செ
முப்பது மில்லி நல்ல சரக்கு தினமும் சாப்
குழாயில அடைப்பு வராதுன்னு."

"அதுதான்.. விஷயமே! முப்பது மில்
சாப்பிட்டு நிறுத்த மாட்டமே நாம! க
குடிப்போம். அப்பத்தான் நம்ம வீரத்
காட்டுவோம்," என்று சிரித்தான்.

சுந்தரலிங்கத்தின் கண்கள் கண்ணாடி
அவன் ஊற்றி தரப்போகிற மதுவின் மேலே

"ஏன் தம்பி! நீங்க குடிக்கறதில்லையா?"

"இல்லை! எனக்கு அது அவசியமில்லை

"ஏன்?"

"ஆமா! முடிஞ்சவரைக்கும் நான் செய்
களை அலசி ஆராய்ந்து செய்யறேன், பழைய
பேசிக்கிட்டு நிகழ்காலத்துல இருந்து தப்பி
பழைய கஷ்டங்களைப் பற்றியே புலம்பி
காலத்தைச் சோகப்படுத்திக்கறதும் இல்லை
செயல் வேறன்னு இருந்தாத்தான் குழப்

அப்படிக் குழப்பம் வந்தாத்தானே இந்த மாதிரி தற்காலத்
தப்பித்தல்கள் தேவையிருக்கும்!'' என்றான்.

சுந்தரலிங்கத்துக்கு ஏனோ அவன் மறைமுகமாகத் தன்னைத் தாக்குகிற மாதிரி இருந்தது. அப்போதுதான் தமிழ்மதி அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''ஏன்... சார்! இப்போ அமுதாவோட குழந்தைக்குப் பேர் செலக்ட் பண்ணச் சொல்லிக் குமுதினிக்குப் பொறுப்புக் குடுத்தார்களே, அது பத்தி உங்களுக்குச் சந்தோஷமா வருத்தமா?''

''ம்...!'' என்று பெருமூச்சை இழுத்து விட்டார்.

''ஒரு பக்கம் சந்தோஷம். பரவாயில்லை. அமுதாவோட புக்காத்து மனுஷங்க நம்ம பொண்ணை இவ்வளவு தூரம் மதிக்கறாங்களேன்னு. ஆனா... இன்னொரு பக்கம் வருத்தம். வீட்டுக்குப் பெரியவன்னு நான் இருக்கேன். பேச்சுக்குக் கூட நீங்க ஒரு பேர் சொல்லுங்களேன்னு யாரும் கேக்கலியே...!'' என்றார்.

கண்ணாடி டம்ளரில் ஊற்றி வைத்த அயிட்டத்தை ஏன் இன்னும் தராமல் பேசிக் கொண்டிருக்கிறான் தமிழ்மதி என்று சுந்தரலிங்கத்துக்குப் புரியவில்லை.

புதிராகப் பார்த்தார். அடுத்ததாகத் தமிழ்மதி சொன்ன வார்த்தைகளில் கொஞ்சம் அதிர்ந்துதான் போனார்.

''எதுல பெரியவருன்னு சொல்லிக்கறீங்க?'' என்று.

''ஏன்... வயசுல... அனுபவத்துல...!''

''சார்! வயசென்ன சார்! ஆண்டொன்று போனால் வயதொன்று கூடும்ங்கறது எல்லாருக்கும்தான் பொது. உங்க வீட்டுக்கு முன்னாலே இருக்கற வேப்ப மரத்துக்குக் கூட ரொம்ப வயசாயிருச்சுன்னு குமுதினி சொல்லுச்சு.

அதுக்காக வேப்ப மரத்துகிட்டே போய்ப
முடியுமா?''

சுந்தரலிங்கம் தமிழ்மதியை வெறித்துப்
தன்னை ''மரம்'' என்கிறானோ என்று தோன்

''அப்புறம் இன்னொன்று சொன்னீங்க
பவத்திலே...! உங்ககிட்டே இருந்து இளைய
கத்துக்கற மாதிரி நீங்க உங்க வாழ்க்கை
அனுபவச் சரக்கு வச்சிருக்கீங்க?'' என்றான்.

''ம்... பேசுவீங்கப்பா! என் நிலைமை அப்ப
பெருமூச்சுடன்.

''சார்! உங்களைக் காயப்படுத்தணும்கி
சொல்லலை. உங்க அடிப்படைப் பிரச்சினை
நாம புரிஞ்சுக்கணும் இல்லே! நார்மன் வி
பீல்னு ஒரு அறிஞர் சொல்றாரு. ஒரு பிரச்சினை
காணணும்னா முதல்ல ஒரு டேபிள் மே
பிரச்சினையை அக்கு வேறு ஆணி வேறா
போடுங்க! அப்படிப் பிரிச்சு ஆராயும் போதே
யோட நுனி கிடைச்சுடும். தீர்வு கண்டு பிடிச்

சுந்தரலிங்கம் புதிராகப் பார்த்தார்.

''எனக்கென்னப்பா பிரச்சினை? ஒண்ணுமி

தமிழ்மதி சிரித்தான்.

''என்ன சார் இப்படிச் சொல்றீங்க! வீட்ல உ
சரியான மதிப்பில்லேனு வருத்தப்பட்டீங்களே!
பிரச்சினை... எப்படி மதிப்பு வரவைக்கணும்
வேண்டாமா? அதைத்தான் நான் செய்யதே
றான்.

சுந்தரலிங்கத்தின் [illegible]
வேளையில் அவன் பாட்டில்கள் இருந்த டீபாயை நகர்த்தி வைத்து விட்டு ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அவர் எதிரிலே அமர்ந்தான்.

''ஆமா.. சார்.. சொல்லுங்க! உங்ககிட்டே இருந்து கத்துக்கற மாதிரி எந்த அனுபவம் இருக்கு...?'' என்றான்.

சுந்தரலிங்கம் விழித்தார்.

''சார்...! இப்ப என்னையே எடுத்துக்குங்க! எனக்குச் சின்ன வயசுலயே அம்மா, அப்பா போயிட்டாங்க! எங்க அண்ணனுக்கு என்னை வளர்க்கறதுல பிரச்சினை. கொண்டு போய்த் தாமுமாமாகிட்டே விட்டுட்டாரு! வளர்ந்ததுக்கப்புறமும் நான் குடும்பத்தோட ஒட்டலை. ஏன் தெரியுமா? எனக்கு ரொம்பத் தேவைங்கற காலத்துல குடும்பங்கற அன்பு எனக்குக் கிடைக்கலே! இப்ப எதுக்கு நான் ஒட்டணும்னு. இப்பத்தான் உங்க மக குமுதினியைப் பாத்துத்தான் நான் கொஞ்சம் மாறியிருக்கேன்,'' என்றான்.

எப்படா பாட்டில் கையில் கிடைக்கும் என்ற நிலைமையில் இருந்த சுந்தரலிங்கம் இப்போது ஊன்றிக் கவனிக்கலானார்.

''நான் ஆம்பளை! எனக்கு எதுவுமே குடுக்காத இந்தக் குடும்பம் எதுக்குன்னு நான் வெளியே போயிட்டேன். அதே மாதிரி என்னை எல்லா விதத்திலும் சுரண்டற இந்தக் குடும்பம் எனக்கெதுக்குன்னு குமுதினி வெளியே போச்சுன்னு வைங்க. என்னாகும்?''

சுந்தரலிங்கம் ஏதோ சொல்ல வாயெடுக்கையில், மறுபடியும் சொன்னான்.

லேடீஸ் ஹாஸ்டல்ல போய் இருந்துகிட்டுத் தன்
தனக்கென்று மிச்சம் பண்ணிக்கிட்டு வாழல

''அப்படியெல்லாம் செய்யமாட்டா!'' என்ற
குரலில்.

''குமுதினி செய்யாது...! ஆனா.. செ
நிலைமை என்னவாகும்?''

சுந்தரலிங்கம் உறைந்தாற் போல அமர்ந்
''நீங்க சம்பாதிச்ச பணத்தையும் சேமிக்
சம்பாதிக்கறதும் இல்லே! குமுதினியா இருக்க
மீனாட்சியம்மாவா இருக்கக் கொண்டு
மரியாதையா நடத்தறாங்க!''

சுந்தரலிங்கத்தின் முகம் சுண்டிப் போனது

''சார்! என் மேல கோபப் படாதீங்க! இப்
களுக்கு.. கை கால் நல்லாருக்கு! உங்களா
ஒரு வேலைக்குப் போலாம். உங்களைக் கா
போன உங்க பையன் தேவலாம் சார்! ஏன்ன
சுமையாவது குமுதினிக்கு மிச்சம்! இ
உருவாக்கின குழந்தைகள் சுமையையும் இ
சின்னப் பொண்ணு சுமக்குது.''

''நீங்க பெத்துப் போட்ட!'' என்பதைத்தா
'உருவாக்கின' என்று சொல்கிறான் எ
குன்றிப் போய் அமர்ந்திருந்தார் சுந்தரலிங்க

அலட்டிக் கொள்ளாமல் இரண்டு கண்
களையும் எடுத்து வைத்தான்.

''சார்! நல்லாப் பாருங்க! இந்த ரெண்டு
இருப்பது விஸ்கியும் சோடாவும் மட்டும

வேதனை. உங்க கீதாலட்சுமியோட கவலை. எல்லாத்தையும் கலந்து குடிங்க சார்!" என்றான்.

சுந்தரலிங்கம் தொடவில்லை. அந்தக் கண்ணாடி டம்ளரை வெறித்துப் பார்த்தார்.

"கேவலம் ஒரு ஹாப்எச்.பி மோட்டாரை வித்து அதுல வந்த காசை வச்சு தண்ணி போடறதுன்னா... என்ன கேவலம் சார் அது! நடு வயதைத் தாண்டின இந்தக் காலத்துல மீனாட்சியம்மா குடம் தூக்கறாங்க..! என்ன சார் வாழ்க்கை உங்களுது..." என்றான்.

சுந்தரலிங்கத்தின் கண்கள் கலங்கியது.

"நேத்துச் சாப்பிட்ட சாப்பாடு போதும்னு நம்ம வயிறு இருக்கறதில்லையே சார்! அப்ப எப்படி நூறு வேலி நிலத்தைப் பத்தின வெத்துப் பெருமையையே பேசிகிட்டு உட்கார்றது?"என்றான்.

"நீ மூணாம் மனுஷன்! நீ யார் இதெல்லாம் பேசன்னு நீங்க கேக்கலாம். ஏதோ ஒரு பெருந்தன்மை, உங்களை அப்படிப் பேச விடாமல் தடுக்கிறது. என்னால உங்க பெரிய பொண்ணு சுமக்கற சுமையைப் பாத்துகிட்டு சும்மா இருக்க முடியல சார்! ஒரு எழுத்தாளனா, ஒரு நண்பனா... அதான் பேசிட்டேன். தப்பாய்ப் பேசிட்டேன். மன்னிச்சுருங்க சார்!" என்றான்.

சுந்தரலிங்கம் ஒன்றும் பேசவில்லை. எழுந்து போய் விட்டார்.

வேண்டுமென்றே அந்த இரண்டு டம்ளரையும் வெகு நேரம் அங்கேயே வைத்திருந்தான்.

சுந்தரலிங்கம் வரவேயில்லை. அதற்குப் பிறகுதான் வந்து வேலை வாங்கிக் கொடுக்கச் சொல்லிக் கேட்டார்

என்பதை மனதில் நினைத்துக் கொண்
குமுதினியின் மகிழ்ச்சியான முகம் மறுபடி
வந்தது.

ஓடி வந்து ஏதோ சின்னப் பெண்ணைப்
கொண்டு தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து
மனதுக்கு இதமாக இருந்தது.

அப்போதுதான் மனதில் பொறியாக அ
தோன்றியது.

உண்மையாக இருக்குமோ! கொ
விதிர்த்துப் போனான்.

அப்படி இல்லாமல் எதற்காக வானொலி
குத் தேடிக் கொண்டு போனோம். அடிக்க
காரணத்தை வைத்துக் கொண்டு போய்க்
கிறோம்!

கேள்விகள்!

கேள்விகள்!

அலையலையாய் எழும்பின!

மனதில் ஒரு பக்கம் மகிழ்ச்சி பொங்கவு
பக்கத்தில் மலைப்புமாக ஏன் நடமாடிக்
கிறோம் என்று இந்தக் கணத்தில் புரிந்தது.

அப்போது முடிவெடுத்தான்.

மெதுவாக ஓரிரு மாதங்களில் இந்த இட
நகர்ந்து விட வேண்டும்.

குமுதினியிடம் என்ன சொல்வது?

என்ன சொல்லுவது?

"நான் உன்னிடம் என் மனதைப் ப
விட்டேன்!" என்று சொல்ல முடியும்?

''சவாலில் தோற்றுவிட்டேன். குடும்பம் என்பது ஒரு மகத்தான அமைப்புத்தான். குடும்பம் என்ற அமைப்புக்குள்ளே பாசமும், அன்பும், நேசமும் விரவிக் கிடக்கிறது. அதை நான் ஒத்துக் கொள்கிறேன்,'' என்று சொல்லத்தான் வேண்டும்.

சொல்லி விட்டுக் கழன்று கெள்ள வேண்டும். இல்லாவிட்டால் குமுதினி ஏதாவது பேசக் கூடும்.

''கடைசியில்... நீங்களும் இவ்வளவுதானா..?'' என்று முகத்திலடித்தாற்போல அவள் கேட்டால் தன்னால் என்ன பதில் சொல்ல முடியும்?

எப்போதும் அவள் மனதில் உயர்வாகவே இருக்கிற மாதிரி இருக்கட்டும்.

நகர்ந்து விட வேண்டியதுதான் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

மனசுக்குள்ளே ஏதோ ஒரு உணர்வு புரட்டுகிறாற் போல அவஸ்தையை உணர்ந்தான். அவனால் அது குறித்து எதுவும் செய்யவும் முடியவில்லை.

உறக்கம் வராமல் புரண்டான்.

## 27

குமுதினி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். உறக்கம் வரவில்லை.

அப்பா அம்மாவிடம் சொன்னாராம். ''அந்த எழுத்தாளர் தம்பி என்னை வாங்கு வாங்குன்னு வாங்கிடுச்சு. எனக்கே மானக்கேடாப் போச்சு. ஏன் இதையெல்லாம் இத்தனை நாளா நான் யோசிக்க

லேன்னு..! நீயாவது எனக்குச் சொ லாமே...''ன்னு. அதற்கு அம்மா சொன்னாரா

''ஏதோ நீங்களாவது ஆம்பளைத் தூ இருக்கீங்க! உங்களையும் ஏதாவது சொ அழகுத் திருமகன் மாதிரி எங்காவது கி கன்னா... மூனுக்கும் கல்யாணம்னு ஒன்னு அதான் எதுவும் சொல்றதில்லே! தலையெ சகிச்சுக்கறது!'' என்று.

அப்பா என்னவோ கடந்த நான்கைந்து ந ஏதோ யோசனையிலேயே இருக்கிறாற் இருந்தது. நேற்றுப் போய் வேலை கேட்டிரு

நல்ல வேளை!

உடனடியாகத் தமிழ்மதியால் ஏற்பாடு செ முடிந்தது. இரண்டாயிரமோ, ஆயிரமோ விஷயம். வேலை என்று போய் விட்டு பொறுப்பு வந்தாகி விடுமல்லவா?

குமுதினியின் மனம் நிறைந்திருந்தது.

என்னதான் பொருமிக் கொண்டே தா கொண்டிருந்தாலும் இடித்துச் சொல்வதற் துணிவில்லாமல் போய்விட்டது. ரொம்ப பேசுவதற்குப் பயமாகவும் இருந்தது. அம்மாவையும் பார்க்க வேண்டியிருந்தது.

கணவரைப் பேசும்போது தான் பார்த்துக் வேண்டியிருக்கிறதே என்றோ, தன் நிலை யாகி விட்டதே என்றோ அம்மா வருத்த டாலோ தனக்குச் சங்கடமாகப் போய்விடும் எ குமுதினி அப்பாவை எதுவும் பேச மாட்டா

ஏதோ டி.வி., ஃப்ரிட்ஜ் மாதிரி அப்பாவும் ஒரு வசதிப் பொருள். அவ்வளவே! குடும்பத் தலைவர் என்று ஒருவர் இல்லாவிட்டால் அதனாலும் பிரச்சினைகள் ஏற்படு கிறதே என்று.

ஆண்மகனுக்கு ஆண்மகனாகத் தமிழ்மதி அப்பாவை நன்றாக ஏதோ சூடாகத்தான் கேட்டிருக்கிறார் போலும். அப்பாவே வேலை கேட்கிற அளவுக்குச் செய்து விட்டார் என்றால் கெட்டிக்காரர்தான்.

இன்றைக்கெல்லாம் அம்மா முகத்தில் தெரிந்த ஒரு பெருமை, சந்தோஷம் பார்ப்பதற்கு எவ்வளவு நன்றாக இருந்தது.

பாவம் அம்மா!

''சர்க்கரை தீர்ந்து போச்சுடி...! பருப்பு வாங்கணும்டி!'' என்று கேட்பதற்குள், கூனிக் குறுகிப் போய்விடுவார்.

ஆரம்ப நாட்களில் எல்லாம் குமுதினி கொஞ்சம் குத்தலாகப் பேசுவாள்.

''ஏன்... ஜமீந்தார் அப்பா ஒவ்வொரு கப் காபிக்கும் நாலு ஸ்பூன் அள்ளிப் போட்டுக்கறாராக்கும்!'' என்பாள்.

பிறகு கொஞ்சம் பக்குவம் வந்தது.

''எப்படியோ அம்மா இந்த ஆளிடம் காலம் தள்ளி இந்த வீட்டையாவது மிச்சம் செய்து வைத்திருக்கிறாரே...'' என்ற எண்ணம் தோன்றும். இந்த வீடும் இல்லாவிட்டால் வாடகைக்குப் போய் எங்கே குடியிருப்பது?

சரி.. தன் பங்குக்கு அப்பா இந்த வீட்டையாவது வைத்திருக்கிறாரே.. என்று சமாதானம் செய்து கொள்ளு வாள். அதைவிட இந்த அப்பிராணி அம்மா... ஒரு நாளும், ''ஏண்டி.. நாங்கதான் உங்களுக்குச் சொத்து

வச்சிருக்கோமே!'' என்று கேட்டதில்லை
நினைக்கும்போது அவளுக்குப் பாவமாக இ

அது மட்டுமல்ல! அம்மா எவ்வள
அவ்வளவு சிக்கனமாக இருக்கிறாள் என்பது
முடியுமோ அவ்வளவு தன் குடும்பத்துக்கு
என்பதும் புரிய, அம்மாவிடம் மிகவும் அன்ப
கொண்டாள்.

நம்ம தங்கை, நம்ம அம்மா, நம்ம அப்பா
வளர்த்துக் கொண்டதால் அந்தச் சு
அவளுக்குப் பெரிய விஷயமாகவே இரு
ஆனால் அமுதாவின் வீட்டார் தன்
அவன்தான் பெயர் வைக்க வேண்டும் எ
தும், அக்காவுக்குப் பிடிச்சது மட்டும்தா
என்ற தன் சின்னத் தங்கை தெளிவாகச்
அவளுக்குள் பெருமையுணர்வை ஏற்படுத்

தமிழ்மதியுடனான பந்தயத்தில் தா
விட்டதாகவே உணர்ந்தாள்.

அதிலும் தமிழ்மதி சமீப காலமாக இர
முறை, ''உங்கள் குடும்பத்தினர் உங்களை
பண்றாங்க! உங்க கன்ஸர்ன் ஒரு வழிப் பா
இருக்கு!'' என்றே இரண்டு மூன்று முறை
அவளுக்குள்ளும் லேசான சந்தேகம்
ஆனால் தமிழ்மதியே தன் வாயால்,

''குமுதினி...! குடும்பம்ங்கற அமைப்ப
ஏதோ விஷயம் இருக்கத்தான் செய்யுது...''
கொண்டபோது, அவளுக்குள்ளே
சந்தோஷமும் ''குப்''பென்று பற்றிக் கொள

மனமெல்லாம் உற்சாகம் பொங்க நடமாடிக் கொண்டிருந்தாள்.

இன்னொரு விஷயமும் அவனுடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. கடந்த வாரத்தில் இரண்டு மூன்று முறை அவன் தனது பணியிடத்துக்கு வந்திருந்ததும், அவளது அறையில் அமர்ந்து அவளது பணியைப் பார்வையிட்டதும், கேள்விகள் கேட்டதும்தான்.

அதெல்லாம் இப்போது நினைவுக்கு வந்தது.

வானொலி நிலையத்தை மையமாக வைத்து ஒரு புத்தகம் எழுதுகிறாராம். அதற்காகப் பார்க்க வந்தேன் என்று வந்திருந்தான்.

"குமுதினி! இன்னைக்கு நான் மூன்று நாலு மணி நேரத்துக்கு மேலே இங்கே செலவழிக்கப் போகிறேன்," என்றான்.

அவள் கண்கள் மலர்த்தி வியப்பாகப் பார்ப்பதை அவன் கண்கள் விழுங்கிக் கொண்டன.

"இது என்ன? அது என்ன?" என்றெல்லாம் விசாரித்தான்.

அவள் சுற்றிக் காண்பித்தாள்.

"சார்! இது டியூட்டி ரூம். இங்கேதான் அனவுன்சரும், டியூட்டி ஆஃபீசரும் இருப்போம்," என்றாள்.

"ம்..." என்று அவன் கையேடு ஒன்றில் குறித்துக் கொள்ள ஆரம்பித்தான்.

அவள் புன்னகையுடன் சொன்னாள். "சார்! இந்த மாதிரி அரசு வானொலி நிலையங்கள்ல மட்டும்தான் டியூட்டி ஆஃபீசர்னு ஒருத்தர் இருப்பாரு. இது ஆங்கிலேயர் காலத்துல செய்யப்பட்ட ஏற்பாடு. ஒவ்வொரு நாளும்



என்னென்ன விஷயங்கள் ஒலிபரப்பாகுதுன்னு தினமும் ரிப்போர்ட் எழுதணும்... இன்னைக்கும் அது தொடருது..." என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

"டிரான்ஸ்மிட்டிங் வேறொரு இடத்துல நடக்குது. ஆனா, நிகழ்ச்சிகள் எல்லாம் இங்க இருந்துதான் போகும். காலைல ஒலிபரப்பு இருந்துச்சுன்னா நேரத்துல வரணும். காலைல சிக்னேச்சர் ட்யூன் ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி அரை மணி நேரத்துக்கு முன்னாடியே நாங்க இங்க இருக்கணும்."

பேசிக் கொண்டே ஒரு அறைக்கு அழைத்துப் போனாள்.

"இங்கதான் நிலையப் பொறியாளர்கள் இருப்பாங்க..." என்று அறிமுகப்படுத்தினாள்.

சக ஊழியர்களிடம் கலகலவென்று சிரித்துக் கொண்டே அவள் பேசுவதை அவன் கவனித்துக் கொண்டான்.

அவர்கள் அங்கிருந்து நகர்ந்தவுடனே, எதிரே இருந்த ரெக்கார்டிங் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

உரைகள் நிகழ்த்தும் போது இங்கே ரெக்கார்டிங் இருக்கும். கச்சேரிகளுக்கு இந்த அறை என்று காண்பித்தாள்.

"மூணு பிரிவுகள் இருக்கும், மதி! நிகழ்ச்சித் தயாரிப்பு, பொறியாளர் பிரிவு, நிர்வாகம்னு. நிகழ்ச்சித் தயாரிப்புல நாங்கள்லாம் வருவோம். எங்களுக்கும் மேலே "பெக்ஸ்"ன்னு சொல்வோம். அதாவது ப்ரொகிராம் எக்ஸிக்யூட்டிவ்ஸ், அனவுன்ஸர்ஸ், ட்ரான்ஸ்மிஷன் எக்ஸிக்யூடிவ்னு. ட்யூட்டி ஆஃபீஸர்ஸ் எல்லாரும் அவர்களுக்குக் கீழே." என்றாள்.

"நோட்டீஸ் போர்டு பார்த்தேன்," என்றான்.

"ஆமா.. மதி! நோட்டீஸ் போர்டில் முக்கிய அறிவிப்புகள் இருக்கும். டியூட்டி சார்ட் இருக்கும். முதல்ல க்யூ சார்ட்ன்னு ஒண்ணு இருக்கும். அதிலே செய்யப் போற வேலைகளோட பட்டியல் இருக்கும்."

தமிழ்மதி அடுத்துக் கேட்டான்.

"ஆமா.. உங்க வானொலி நிலையத்தோட நோக்கம் என்ன?"

"முக்கியமான நோக்கங்கள் என்னன்னா...

1. நிகழ்ச்சிகளை அளிப்பது. 2. இனிமையான தரமான பேச்சு. 3. எந்த இனமக்களையும் புண்படுத்தாம நிகழ்ச்சிகள் கொடுப்பது..." என்று அவள் விரல் விட்டு எண்ணவும், அவன் ஆழ்ந்து கவனித்தான்.

தான் வேலை செய்கிற இடத்தைப் பற்றிப் பேசும்போது ஒரு பெருமையோடும், பெருமிதத்தோடும் பேசுவது அவனை ஆர்வப்படுத்தியது.

அவள் தொடர்ந்தாள்.

"எங்களோட மோட்டோ என்னன்னா 'பகுஜன சகாய பகுஜன ஹிதயா" என்ற ரிக் வேத வாக்கியம்தான். அதாவது மக்களுக்கு உதவுதல். அவர்கள் இதயங்களை அடையறது!" என்றாள்.

அவர்கள் ரெக்கார்டிங் ஸ்டுடியோவில் இருந்து வெளியே வரும்போது, ஒருவர் வந்து, "மேடம்! அடுத்த ப்ரொகிராமப்ப 'ஸ்பாட்', 'ப்ரோமோ' ரெண்டையும் மறக்க வேண்டாம்னு சார் சொன்னாங்க," என்றார்.

தமிழ்மதி கேட்டான்.



"அதென்ன 'ஸ்பாட்', அதென்ன 'ப்ரோமோ?" என்று.

"அது வேற ஒண்ணுமில்லே! ஸ்பாட்ன்னா கமர்ஷியல் அட்வர்டைஸ்மென்ட், ப்ரோமோன்னா அன்றைக்கு ஒலிபரப்ப இருக்கற நிகழ்ச்சிகளோட ஹைலைட்ஸ்," என்றாள்.

தமிழ்மதி தொடர்ந்து கேட்டான்.

"ரெக்கார்டிங் பண்ணினா அப்படியே ஒலிபரப்புவீங்களா?"

"சில நேரம் எடிட் பண்ணுவோம். இந்த எடிட்டிங், டப்பிங் இதெல்லாம் தயாரிப்பு சைடில வரும். 'உங்களோட நாவல் கூட ஒன்று படிச்சோமே!" என்றாள்.

"ஆமா! நானும் தொடர்ந்து கேட்டேன்!"

எஃப்.எம் ஒலிபரப்புப் பகுதிக்கு அழைத்துச் சென்றாள்.

வாசகர்களின் விருப்பத்திற்கேற்ப பாடல்கள் ஒலிபரப்பப்படுவதை நின்று பார்த்தான். ரேடியோ ஜாக்கிகள் வணக்கம் சொல்லி விட்டுத் தங்கள் பணிகளைத் தொடர்ந்தார்கள்.

"ப்ளீஸ்! என்னைக் கண்டுக்காதீங்க. நான் ஜஸ்ட் உங்க வொர்க்கை அப்ஸர்வ் பண்ண வந்திருக்கேன்," என்றான்.

அவர்கள் தொடர்ந்தார்கள்.

அங்கேயிருந்த கருவியைக் காட்டி இது என்ன என்று கேட்க,

"இதை ஃபாடர் ஆபரேஷன்னு சொல்வாங்க. இந்த கன்ஸோல் அளவுள்ஸரோட குரலுக்கு. இது பாடல்களுக்காக. இது டெலிபோன் கன்சோல் ரேடியோ வாசகர் தொடர்பு கொள்ளும்போது இதை உபயோகிப்போம்," என்று தனது அறைக்கு அழைத்து வந்தாள்.

''இங்கிருந்துதான் நான் அனவுன்ஸ் பண்ணுவேன்,'' என்று தனது பணிகளைத் தொடர்ந்தாள். அந்த நேரம் மெல்லிசை போய்க் கொண்டிருந்தது.

''அதோ அந்த ரெட் லைட் எரிஞ்சா.. ப்ரொகிராம் ஏர்ல போயிட்டிருக்குன்னு அர்த்தம் என்று ரேடியோ ஜாக்கிகள் காட்டியதையும் குறிச்சக்குங்க,'' என்றாள்.

''அப்புறம் குமுதினி, இந்த ஜங்க்ன்னு சொல்றாங்களே. அது...'' என்று கேட்க,

''ஜங்க்ன்னா' குறிப்பிட்ட கால அளவிலே கொடுக்கக் கூடிய நிகழ்ச்சிகள். அதே மாதிரி ஆங்கர்ன்னா பிரோக்ஸ் பர்ஸன், அதாவது நடத்துநர், காம்பியர்ங்கற மாதிரி.''

அவன் அந்த அறிவிப்புகள் முடிக்கும்வரை அமர்ந்து கவனித்தான். இடையிடையே அவனுக்குத் தேவையான தகவல்களைக் கொடுப்பதோடு மிகப் பெரிய அறிஞர்களின் கருத்துக்களை இடையிடையே கொடுப்பதையும் கவனித்தான்.

''எங்களோட ஒலிபரப்பை பிராட்காஸ்டிங்ன்னு சொல்றோம். உயர்வான எண்ணங்கள் எல்லாத் திசைகளில் இருந்தும் எங்களுக்கு வருகின்றன என்பதுதான் இந்தத் தயாரிப்புகளுக்கு அடிநாதம்.''

''ம்...!'' என்று உள்வாங்கிக் கொண்டான். டப்பிங் ரூம், டாக்ஸ் ஸ்டுடியோ, கன்சோல் என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே குறித்துக் கொண்டதை அவள் புன்னகையுடன் பார்த்தாள்.

''ஓ..! ஃபில்லர் ஒன்னு இருக்கு!'' என்று சொல்லிக் கொண்டாள்.



''ஃபில்லர்ன்னு பத்திரிகைத் துறையில் கூடச் சொல் வாங்க,'' என்றான்.

''அது துணுக்குகள் மாதிரி.. இல்லே! இது வந்த இடையில போகிற கேப் ம்யூசிக்,'' என்றாள்.

''என் குமுதினி, இந்த வேலை ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருக்கும் இல்லே!'' என்றான்.

''ஆமா..! எல்லா விதமான அனுபவங்களும் இருக்கும்! இசை, கர்நாடக இசை, இலக்கியப் பேருரை, சிற்றுரை, விளையாட்டு, மாதர் நிகழ்ச்சி, அப்படின்னு வித விதமான நிகழ்ச்சிகள், அதுக்கான தயாரிப்புகள்.''

''ஆமா! பொதுவா உங்க நிகழ்ச்சிகள் தரமா இருக்கு நம்ம கலாச்சாரம் ஒரு விதமாப் போயிட்டிருக்கோன்னு ஒரு கவலை வருது. எப்பப் பாரு, திரைப்படப் பாடல் கள்னு அடிக்ட் ஆயிடுவோமோன்னு இருக்கு...''

''ஆமா! எனக்கும் அந்தக் கவலை இருக்கு! என்ன செய்ய முடியும்? நல்ல விஷயங்கள் குடுக்கறதுக்கு எப்பவுமே போராட வேண்டியிருக்கு!'' என்றாள்.

மேலும் புன்னகையுடன் சொன்னான். ''நான் கல்லூரியில படிக்கும்போது இளைய பாரதத்துல நிறைய நிகழ்ச்சிகள் குடுத்திருக்கேன்,'' என்று. அதெல்லாம் இப்போது நினைவுக்கு வரக், குமுதினி புரண்டு படுத் தாள்.

''என்னடி... தூங்கலையா?'' என்றார் அம்மா. அதற் காகக் கண்களை மூடிக் கொண்டாள். ஆனால் அடுத்த இரண்டு நாட்களும்கூட மனதில் அவன் நிலையத்துக்கு வந்து சென்றதே ஓடிக் கொண்டிருந்தது.

# 28

சமையல் பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தது.

சாம்பாரை எடுத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றினாள் குமுதினி. ரசம் கூட்டி வைக்கத் தயாரானாள்.

பிற்பகல் பணி இருக்கையில் மட்டும் சாவதானமாகச் சமையலில் அம்மாவுக்கு உதவி செய்வாள். இன்றைக்கு ஏனோ முழுச் சமையலையும் அவளே செய்தாள்.

கடந்த வாரத்தில் பேச்சு வாக்கில் தமிழ்மதிக்குப் பிடித்த வகையறாக்கள் என்னவென்று விசாரித்து வைத்திருந்தாள். அதற்கேற்றபடி மெனு போட்டு வைத்திருந்தாள்.

பூசணிக்காய்ச் சாம்பார், புடலங்காய்க் கூட்டு, அப்பளம் என்று தயாரித்துக் கொண்டிருந்தாள். "அம்மா...! தமிழ்மதி சார் வீட்டுச் சாப்பாடு தொடர்ந்து சாப்பிடறதே நம்ம வீட்டுக்கு வந்ததுக்கப்புறம்தானாம்."

"ம்.. ஏன், விஜயன் வீட்ல இருந்து சாப்பாடு வராதா?"

"ம்... மஞ்சுளா அக்கா சாப்பாடு குடுத்தனுப்பறேன்னு தான் சொல்லுவாங்களாம். ஆனா... எதுக்குத் தொந்தரவுன்னு மறுத்துடுவாராம். சில நேரங்கள்ல சாதம் மட்டும் வடிச்சுக்குவாராம். மத்ததெல்லாம் விஜயன் வீட்ல இருந்து வருமாம்."

"ம்...!"

"ஏம்மா, பெரும்பாலும் ஆண்பிள்ளைகளுக்கு இந்தச் சோத்துக் கவலையெல்லாம் பழக்கமில்லாத விஷயமாத் தான் இருக்கும்," என்றாள்.



"ம்...!"

"குடும்பத்துல இருந்து, குடும்பத்தோட பாசம், பரிவு இதெல்லாம் பகிர்ந்து வாழ்றதுக்கான வாய்ப்பு அமையாதது எவ்வளவு பெரிய துரதிர்ஷ்டம்... இல்லே!"

"ம்....!"

குமுதினிக்கே தான் தமிழ்மதியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறோம் என்று புரிந்தது.

மீண்டும் அவன் வானொலி நிலையத்துக்கு வந்த போது சுவாரசியமாக ஒவ்வொன்றையும் பற்றிக் கேட்டுக் கொண்டது நினைவுக்கு வந்தது.

நாடகம் தயாரிப்பது எப்படி. இசை நிகழ்ச்சிகளை எப்படித் தயாரிப்பீர்கள் என்று ஒவ்வொன்றையும் கேட்டுக் கொண்டான்.

குமுதினிக்கு ட்யூட்டி முடியும் வரை காத்திருந்து அழைத்துக் கொண்டு வந்தான்.

வீட்டிற்குள் நுழையும்போது, "குமுதினி! நீங்க ஃப்ரீயா இருந்தா எனக்கு இன்னும் சில விஷயங்கள் சொல்லணும்," என்றான்.

அவளும் அரைமணி நேரம் கழித்து அவனது அறையை எட்டிப் பார்த்து, "நான் ஃப்ரீதான்," என்றாள்.

"இந்திய வானொலியின் வரலாறு பற்றிச் சொல்லுங் களேன்," என்றான்.

குறிப்பெடுக்கத் தயாரானான்.

அவள் ஆர்வமாகச் சொன்னாள்.

"சார்! 1926ஆம் ஆண்டில்தான் வானொலி நம் நாட்டுக்கு வந்தது. 1950ஆம் ஆண்டில் வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை 50 லட்சத்துக்கு மேல் இருந்தது.

''இந்திய ஒலிபரப்பு நிறுவனம் 1927ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆனா 1924ஆம் வருடத்திலேயே சென்னையில் ரேடியோ கிளப் அமைச்சாச்சு. 1924 ஜூலை 31ஆம் நாள் ''மெட்ராஸ் பிரஸிடென்சி ரேடியோ கிளப்'' தன்னோட சேவையைத் தொடங்கியது. ஆனா ஆர்கனைஸ்டான ஒலிபரப்பு 1927ஆம் வருஷம் பம்பாய்ல ஆரம்பிச்சது.''

''புள்ளி விவரமா வச்சிருக்கியே!''

''ஆமா.. மதி! என்னோட துறையாச்சே!''

''குட்!''

''நாம சார்ந்திருக்கிற இடத்தைப் பத்தின வரலாற்றை நாம தெரிஞ்சுக்கணும் இல்லே!'' என்று சொன்னவள் தொடர்ந்தாள். ''இடையில் இந்தியன் பிராட்காஸ்டிங் கம்பெனியால நடத்த முடியாமப் போனது. ஆனா, மக்களிடமிருந்து வானொலியைத் தொடர்ந்து நடத்தணும்னு பிரஷர் வந்ததாலே அரசே நடத்துவது என்று முடிவு செய்தது. 1935இல் 20 இலட்ச ரூபாய் ஒலிபரப்புக்காக வழங்கப்பட்டது. பி.பி.சி.யோட ஆராய்ச்சித் தலைவரான எச்.எல்.கிர்க்கே அப்படீங்கறவரை பி.பி.சி நிறுவனம் அனுப்ப ஒப்புக் கொண்டு அவரும் 1936இல் வந்து சேர்ந்தார். புதிய மத்திய அலை வரிசை நிறுவனங்களைத் தொடங்கப் பரிந்துரைச்சார்.

''1935இல் ஆகாசவாணி நிலையம் மைசூரில் தொடங்கினாங்க. 1936 ஜனவரி முதல் நாள்ல டெல்லியில் ஒலிபரப்பை ஆரம்பிச்சாங்க. 1936 ஜூன் 8-இல் ஆல் இந்தியா ரேடியோ அறிமுகமாச்சு. 1938இல் மதராஸ்ல ஆரம்பித்தது.'' என்றாள்.

''அம்மா.. தாயே! கொஞ்சம் மூச்சு விடு,'' என்ற தமிழ்மதி தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டு கலகலவெனச் சிரித்ததற்குப் பிறகுதான் நிறுத்தினாள்.



''ம்.. கிண்டல் செய்யறீங்க!'' என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

''இல்லல்லே! சொல்லு!'' என்றான்.

''அப்புறம்... என்ன? டெல்லியில இருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள், மாநிலத் தலைநகரங்கள்ல இருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள், அந்தந்தப் பகுதிக்கேற்ப ஒலிபரப்பாகும் உள்ளூர் நிகழ்ச்சிகள் எல்லாம் இருக்கு,'' என்றாள்.

''ம்...!''

''ஆனா.. என்ன? இன்றைக்குத் தனியார் வானொலி நிலையங்களுக்கு வந்தாச்சு. வாசகர்களுக்கு உயர்வான விஷயங்களைக் குடுக்கணும், பலதரப்பட்ட விஷயங்களையும் குடுக்கணும்கறதுக்காகப் போராட வேண்டியிருக்கு!'' என்றாள்.

தமிழ்மதியின் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை தோன்றியது.

''ஆமா.. குமுதினி! இன்றைய தலைமுறைக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு. எது உண்மையான சுதந்திரம், எது உண்மையான கேளிக்கை, ஏன்.. எது வாழ்க்கைன்னெல்லாம் சொல்ல வேண்டி இருக்கு,'' என்றாள்.அப்போது குமுதினி அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''இவ்வளவு பேசற நீங்க ஏன் பெண்களை வெறுக்கிறீங்க?'' என்றாள்.

அவன் மறுபடியும் அதே போலத் தலை சாய்த்துச் சிரித்தான்.

''பெண்களை வெறுக்கறேன்னு யார் சொன்னா?'' என்றான்.

''பின்னே?''

''பெண்கள் ஆண்களோட வாழ்க்கையில தவிர்க்க முடியாத சக்திகள் குமுதினி...''

அவள் புரியாதவளைப் போலப் பார்த்தாள்.

''ஆனா பெண்களை நான் வெறுக்கவே இல்லை! பெண்கள் தங்களை நிலைநிறுத்திக்கறதுக்காகக் கையாள்கிற வழிமுறைகள் மேலே நம்பிக்கையில்லை!''

''புரியலே!''

''புரியற மாதிரிச் சொல்றேன். பெண்கள் நீங்க இயல்பா இருக்கறது இல்லை, குமுதினி. எதிர்ப்புக் காட்ட முடியாத இடத்துல அடங்கிப் போற மாதிரி நடிக்கறீங்க! ஆனா வேற விதத்துல ஆண்கள் பலவீனங்களைப் பயன்படுத்திக்கிட்டு உயிர் வாழறீங்க. இது வெறும் ''இருத்தல்'' மட்டும்தான், குமுதினி. மியர் எக்ஸிஸ்டென்ஸ். நீங்க நீங்களா இருங்க. அதைத்தான் சொல்றேன்.''

''புரியாமப் பேசறீங்க, மதி! அதுக்குக் காரணம் என்ன தெரியுமா? பொருளாதாரச் சுதந்திரம் இல்லாததுதான். பொருளாதாரத் தேவைகளுக்காக அவள் ஆணைச் சார்ந்து இருக்க வேண்டியிருந்தது. அதே சமயத்துல ஆணைத் தன் பிடியில் இருந்து விடாம இருக்கவும் வேண்டி இருந்தது. அதனால அவள் சாகசங்கள் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம்.''

''ஆமா! அதைத்தான் சொல்றேன். ஏன் யோசிக்க மாட்டேங்கறீங்க? மாமியார் பிரச்சினையெல்லாம் ஏன் வருது தெரியுமா? ஒரு ஆணைத் தன் கைப்பிடியில் வச்சுக்கணும்கிற எண்ணத்தாலதான். மாமியாராகவும், மருமகளாகவும் ஆணோட அன்பை ஜெயிக்கலாம்.



எப்படித் தெரியுமா? உங்க அம்மாவோட மகன்ங்கறதை மனசார ஏத்துக்கறேன்னு ஒரு மருமகள் நினைக்கறப்ப, அதே போல நீ என்னோட மகனுடைய மனைவிங்கறதை ஒரு மாமியார் புரிஞ்சுக்கறப்ப...''

குமுதினி ஒத்துக் கொண்டாள்.

''ஏன் மதி! அதனாலதான் கல்யாணத்துக்கு யோசிக்கறீங்களோ!''

அவன் அவளை விசித்திரமாகப் பார்த்தபடி சொன்னான்.

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கற பொண்ணுக்கு கண்டிப்பா மாமியார் பிரச்சினை இருக்காது. ஆனா... நானே பிரச்சினையாய் இருப்பேன்.''

குமுதினியின் கண்ணிலும் ஆர்வம் ஏற்பட்டது. ''எப்படி?'' என்றாள்.

''ஆமா! என் மனைவியா வர்ற பெண் கண்டிப்பா சுயமரியாதை உள்ள பெண்ணா, சுய சார்புள்ள பெண்ணா இருக்கணும்னு நினைப்பேன். அத விட்டுட்டு என்னைக் கட்டுக்குள் வைக்கணும்னு சாகசமெல்லாம் செஞ்சா... என் மதிப்பில கீழே போக வேண்டி வரும். பரஸ்பரம் மரியாதை இல்லாத வாழ்க்கையில என்ன இருக்கும்?''

குமுதினி அவனைப் பார்த்து வாஞ்சையாகப் புன்னகைத்தாள்.

''அது சரி! ரெண்டு பேரும் சுய மரியாதையோட இருந்தா சோறு யாரு ஆக்கறதாம்! துணி யாரு துவைக்கறதாம்?''

''ரெண்டு பேருந்தான்!''

''அப்படியா? நீங்க சமையல்ல ஷேர் பண்ணிப்பீங்களா?''

பின்னே! அஃபக்கோஸ் குழந்தை சுமக்கறதுல என்னால ஷேர் பண்ணிக்க முடியாது..."

குமுதினி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"மதி! நீங்க குடும்ப வாழ்க்கையை அறிவு பூர்வமாகவே அலசறீங்க! ஆனா, வாழ்க்கையை அலசிகிட்டிருக்க வேண்டிய அவசியமில்லை மதி! எப்ப அறிவு பூர்வமா அலசலாம்னா... அடுத்தவங்க நிலையில நம்மைவச்சுப் பாக்கும்போது அறிவு பூர்வமா அலசலாம். ஆனா, குடும்பங்கிற அமைப்பு அன்பின் அடிப்படையிலானது, மதி!" என்று ஒரு நிமிடம் நிறுத்தினாள்.

"மேலே சொல்லு!" என்பது போல, அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"குடும்பங்கறது உணர்வு ரீதியா பார்க்கப்படவேண்டிய விஷயம். உண்மையான அன்பு... நல்லாப் புரிஞ்சுக்குங்க மதி... காரியத்தின் அடிப்படையிலான உறவு இல்லாம உண்மையான அன்பு, காதல், இதெல்லாம் இருந்தா... விட்டுக் கொடுத்தல் இருக்கும். யோசிச்சுப் புரிஞ்சுக்கற பக்குவம் இருக்கும்."

"குட். நானும் அதேதான் சொல்றேன். உண்மையான உணர்வு ரீதியான அன்புல கொஞ்சம் இடைவெளி இருக்கும். நீ நீயா இரு! நான் நானா இருக்கேன்ங்கற புரிதல் இருக்கும். அப்படிப் பெண் கிடைக்குமான்னு தெரியலேயே, குமுதினி!" என்றான்.

அவன் நூல் விட்டுப் பார்க்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாளோ இல்லையோ... குமுதினி புன்னகைத்தாள்.

"அப்ப நீங்க குடும்பத்தை வெறுக்கலே?"

"இல்லே! குடும்ப அமைப்பு பற்றிச் சந்தேகம் இருந்தது. ஆனா.. உங்க குடும்பத்துல உன்னோட பங்கைப்

ஆனாலும் எப்படிப்பட்ட பெண்ணுக்கும்
பெண்ணுக்கும் கூட என்னோட வாழ்க்கை
கஷ்டமா இருக்கும்."

"ஏனாம்?"

"நான் எழுத்தாளன், குமுதினி! சமயத்து
பண்ணுவேன்... எழுத்தாளன்ங்கற மதப்
திடீர்னு பையைத் தூக்கித் தோள்ல போ
வேன். அதெல்லாம் அவள் பொறுத்துக்கனு

குமுதினி சிரித்தாள்.

"கஷ்டம்தான்!"

"ஆமா.. நான் இலக்கியம் பேசுவேன். ச
காதைச் சுத்தி மூக்கைத் தொடற மாதிரி
சொல்லுவேன். அவ புரிஞ்சுக்கக் கூடச் செ
எப்படியிருக்கும்?"

"எங்க சுத்தினா என்ன? பறவை கூடு வ
நம்பிக்கை அவளுக்கு இருக்கணும். அ
உலகத்துல எப்பேர்ப்பட்ட அறிவாளியும்
இடம் ஒண்ணு இருக்கும் மதி! அது மனச
பெண்ணோட அன்புப் பிடி, மதி..!" என்றா

அவன் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை மல

"இருக்கலாம்... குமுதினி..." என்றான்.

அந்தக் கணத்தில் குமுதினி தான் ஜெ
உணர்ந்தாள். அதே கணத்தில் தமிழ்
தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை

"ஏண்டி! நான் கேட்டுகிட்டே இருக்கே
என்று அம்மா ஏதோ கேட்டுக் கொ
உணர்ந்தவளாய்க் குமுதினி திரும்பினாள்.

''அம்மா..! என்ன கேட்டே?'' என்றாள்.

''குழம்பில உப்புப் போட்டியான்னு கேட்டேன்,'' என்றார்.

''ம்.. போட்டேன்,'' என்று குமுதினி திரும்பிக் கொள்கையில், அவள் முகம் சிவந்து கிடந்ததைப் பார்த்த அம்மா சிந்தனையில் ஆழ்ந்தார்.



## 29

ஒரு வாரம் ஓடியிருந்தது.

தமிழ்மதியைப் பார்த்தே ஒரு வாரமாகிவிட்டது என்பதையே குமுதினியால் நம்ப முடியவில்லை. இந்த வீட்டுக்குத் தமிழ்மதி குடிவந்தே நான்கு மாதங்கள்தான் ஆகி இருந்தது.

அதற்கு முன்னே என்னவோ தமிழ்மதியைத் தினமும் பார்த்துக் கொண்டிருந்தாற்போல இது என்ன பரிதவிப்பு என்று தன்னைக் குறித்தே அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'நீ நினைக்கிற மாதிரி எல்லாம் ஒன்றும் இல்லை, பெண்ணே! இந்த வயது ஆண்பிள்ளைகளிடம் இந்த அளவுக்குப் பழக்கம் இல்லை என்பதால் உனக்கு இந்த மாதிரி ஒரு உணர்வு தோன்றுகிறது. இரவும், பகலும் இப்படி ஒரு இளைஞன் அருகிலேயே இருந்தால்... எப்படி இருக்கும்! அப்படித்தான் உனக்கு இருக்கிறது!' என்று அவளே சமாதானம் செய்து கொண்டாள்.

போயும் போயும் இப்படி ஒரு மனிதரிடம் அதாவது குடும்பம் என்கிற அமைப்புப் பொய்யாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று நினைப்பவனிடமா தன் மனம் பறி போக வேண்டும்?



வேண்டாம்!

வேண்டவே வேண்டாம்!

தானாகப் போய் மேலே விழுந்து அதை அவன் நிராகரித்து விட்டால் அதை விடக் கேவலம் வேறு இல்லை!

தன் மனதுக்குள் பூத்த இந்த நிலாக் குளிர்ச்சி மனத்துக்குள்ளேயே புதைந்து கிடக்கட்டும்.

பனிப் பிரதேசங்களில் புதைந்து கிடக்கும் கனிகள் எத்தனை ஆண்டுகளானாலும் கெடாமல் இருக்குமாமே! அதே போல இந்த உணர்வும் அப்படியே புதைந்து கிடக்கட்டும்.

சே.. என்ன உதாரணம் இது? வேண்டாம்! பொக்கிஷ அறையில் பூட்டி வைத்திருக்கும் பெரியதொரு வைரம் போல, அவன் நினைப்பு தனக்குள்ளேயே கிடக்கட்டும் என்று அவள் முடிவெடுத்துக் கொண்டதற்குப் பிறகு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவனோடு இருப்பதை விரும்பினாள்.

''சார்... இது எப்படி? அது எப்படி?'' என்று எதையாவது கேட்டுக் கொண்டு, அவனது அறைக்குச் சென்றாள்.

அப்படி ஒவ்வொரு முறை வந்து கேட்டு விட்டுச் செல்லும் போதும், அவன் பார்வை தன் முதுகைத் துளைப்பதை அவள் உணரவில்லை.

குமுதினியை இத்தகைய எண்ணங்கள் தாக்கிக் கொண்டிருந்தன என்றால், தமிழ்மதி வேறு மாதிரியாக மாறிப் போனான்.

இப்போதெல்லாம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

பேச்சுக் குறைவாக இருந்தது.

அடிக்கடி தனிமையை நாடினான். விஜயன் தலை விடாமல் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான்.

அது மட்டுமல்ல!

குமுதினி வீட்டுப் போர்ஷனில் இருப்பதையே குறைத்துக் கொள்ள ஆரம்பித்தான். அதிலும் குமுதினி இருக்கும்போது தானும் இருப்பதை அறவே தவிர்த்தான்.

ஒரு நாள் விஜயனிடம் குமுதினி கேட்டேவிட்டாள்.

"விஜி சார்! என்ன உங்க எழுத்தாளர் கண்ணிலேயே காணோம்," என்றாள்.

விஜயன் சமாளிப்பதற்குள் கொஞ்சம் திணறித்தான் போனான்.

"அதும்மா.... ஒரு சரித்திர நாவல் எழுதறான். அந்த மாதிரி நாவல்கள் எழுதும்போது கொஞ்சம் சிந்தனையில் இருப்பான். அதிகமாப் பேச மாட்டான். நிறையப் புத்தகங்களை ரெஃபர் பண்ணுவான். ரொம்ப டிஸ்டர்ப் ஆகறதை விரும்பமாட்டான்!" என்று பொருத்தமான ஒரு பதிலைச் சொல்லி வைத்தான்.

சொன்னவன் சும்மாயிருக்கவில்லை. அன்று மாலை ஏழுமணியிருக்கும்.

"எம்ப்பா தமிழ்மதி, எப்ப சரித்திர நாவலை முடிக்கப் போறே?" என்றான் தமிழ்மதியிடம்.

"சரித்திர நாவலா?" என்று விழித்தான் தமிழ்மதி.

"ஆமாப்பா! சரித்திர நாவல் வரலாற்றுல மூழ்கி யிருக்கே, நீ அப்படியொன்று எழுதிகிட்டிருக்கிறதா சொல் லித்தானே அவங்களையெல்லாம் சமாளிச்சிருக்கேன்..."

"எவங்களை?"

"குமுதினி மாதிரி விசாரிக்கறாங்களே..அவங்களை."



"குமுதினி விசாரிச்சாப்லயா?"

"ஆமாப்பா! என்ன எழுத்தாளர் சாரைக் கண்லயே காணோம்னு கேட்டாப்ல."

"ம்...!"

"அதான். என்னவோ... தெரியல... தமிழ்மதி இப்பல் லாம் ரொம்ப யோசனையில இருக்கான்னு சொல்ல முடியுமா? அதான் சரித்திர நாவல் எழுதறான்னு சொன் னேன்..." என்றான்.

குறும்பாகச் சிரித்தான்.

தமிழ்மதியின் முகம் லேசாகச் சிவந்தது. ஆனால் காட்டிக்காத் தனமாக மறைத்துக் கொண்டான்.

விஜயன் ஒரு விதக் குறும்போடு பார்த்துக் கொண் டிருந்தான்.

நண்பனை நன்றியோடு பார்த்தான் தமிழ்மதி. "இந்தக் காரணம் நல்லா இருக்கு. இதையே மெயின்டெயின் பண்ணிக்குவோம்..." என்றான்.

"பண்ணிக்கலாம்..." என்ற விஜயன் ஒரு நிமிட இடைவெளி கொடுத்து. "ஆனா.. உண்மையான காரணம் என்ன தமிழு? வாட் இஸ் ஈட்டிங் யூ..?" என்றான்.

தமிழ்மதி ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான். பிறகு நண்பனைப் பார்த்துச் சொன்னான்.

"தெரியலே! ஆனா.. குமுதினி வீட்ல இருந்து காலி பண்ணிடலாமான்னு யோசிக்கறேன்," என்றான்.

விஜயனுக்கு நண்பனின் மனம் புரிகிறாற் போல இருந்தது. நண்பனுக்கே அது புரியவில்லை என்பதும் புரிந்தது. அதனால் புரிந்து கொள்ளாதவன் போலவே பேசினான்.

"மதி! அவசரப்படாதே! குடிபோன மூணே மாசத்துல காலி பண்ணிட்டு வந்தோம்னா வேற விதமா பேச்சுக் கிளம்பும். அது உனக்கும் நல்லதில்லே! குமுதினி குடும்பத்துக்கும் நல்லதில்லே...!" என்றான்.

தமிழ்மதி அமைதியாக இருப்பதைப் பார்த்து மறுபடியும் கேட்டான்.

"என்னப்பா பிரச்னை?"

தமிழ்மதி ஒருவிதமான கையாலாகத் தனத்துடன் பார்த்தான்.

"விஜி! எனக்கு மனகல குழப்பம் வருது! அவங்க பிரச்சினைகள்ல ரொம்பத் தலையிட்றேன்னு தோணுது. அது எனக்குத் தேவையான்னு தோணுது."

விஜயன் புன்னகைத்தான்.

"தமிழு! எதுக்கு உன்னை நீயே கஷ்டப்படுத்திக்கறே! அந்தக் குடும்பத்தின் மேல உனக்குப் பாசம் விழுதுங் கறதை இயற்கையா எடுத்துக்க! ஏன் ஃபைட் பண்றே!" என்றான்.

தமிழ்மதியை அது குறித்து யோசிக்க விட்டவன் போல விட்டு விட்டு ஏதோ அவசர வேலையிருப்பவன் போலக் கிளம்பினான்.

இரவு ஒன்பது மணிக்கு அன்று வீட்டுக்குப் போன போது மீனாட்சியம்மாள் வாசற்புறத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

"வாங்க தம்பி! என்ன இன்னும் காணமேன்னு பாத்துகிட்டிருக்கேன். இப்பல்லாம்.. நேரத்துக்குச் சாப்பிட மாட்டேங்கறீங்க!" என்றார் ஆதூரத்துடன்.

"அம்மா! நான்தான் ஹோட்டேல்கில வச்சுரச் சொல் றேனே..."



"என்ன தம்பி! சூடாச் சாப்பிட்டா நல்லா இருக்கு மில்லே... கை கால் அலம்பிட்டு வா...! நான் சூடா ஆப்பம் வார்த்துத் தரேன்," என்றார்.

அந்த அன்பில் நெகிழ்ந்து போனான்.

அவர்கள் வீட்டு டைனிங் டேபிளில் அமர்ந்து உண்டான்.

கண்கள் குமுதினிக்காக அலை பாய்ந்தன. ஆனால் குமுதினி கண்ணில் படவில்லை.

அன்றைக்குக் குமுதினிக்கு மூன்றாவது ட்ரான்ஸ்மிஷன் பணி போலும்.

பதினொரு மணிக்குத்தான் வேனில் வந்து இறங்கினாள்.

தமிழ்மதி உறங்கவில்லை. ஆனாலும் அவள் வந்தது தெரியாதவன் போல உள்ளேயே இருந்து கொண்டான்.

இரவு ஒரு மணியிருக்கும்.

மடமடவென்று இடி இடித்தது. குமுதினி தன் போர்ஷனில் திடுக்கிட்டுப் போய் எழுந்து அமர்ந்தாள். "பட்பட்" என்று விளக்குகள் எரிவதும் குமுதினி எழுந்து வருவதும் அவனுக்குக் கனவு போல் தெரிந்தது.

"மதி.. மதி.. என்ன? என்ன?" என்று அவன் கேட்கக் கேட்க... "அம்மா.. இடி.. இடி..." என்று அவள் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

அவன் ஒரு கணம் திணறிப் போனான்.

அம்மா வரும் ஓசை கேட்டு மெல்ல விடுவித்துக் கொண்டாள்.

லைட்டைப் போட்டாள்.

அவன் மலங்க மலங்க விழித்தான்.

"மதி... என்ன ஆச்சு?" என்றான்.

"கனவு.. ஏதோ.. கனவு...!" என்று கண்களைக் கசக்கிக் கொண்டு அவன் விழித்த அந்தக் கணத்தில் அவளுக்குப் புரிந்தது.

தன் மனம் கொள்ளை போயிருக்கிறது என்று -

"என்னடி!" என்று கொட்டாவி விட்ட அம்மாவிடம்,

"நீ போம்மா! நான் பாத்துக்கறேன்," என்றாள்.

தமிழ்மதிக்கு இப்போது நினைவு முழுமையாக வந்தது.

மறுபடியும் இடி இடித்தபோது அவன் அலட்டிக் கொள்ளவில்லை!

"என்ன ஆச்சு, குமுதினி?" என்றான்.

"என்ன ஆச்சா? அம்மான்னு ரெண்டு மூன்று தரம் அலறிட்டீங்க..." என்றாள்.

"ஓ...!"

"அது மட்டுமில்ல! தூக்கத்துல... என்னை..." என்று தடுமாறினாள்.

"ஓ.. ஐ'ம் சாரி!" என்றான்.

"அது பரவால்லே!" என்றாள். வாஞ்சையாக அவனைப் பார்த்தாள்.

"மதி! இடின்னா... பயமோ?" என்றான்.

"ஆமா! சின்ன வயசுல! ஏதோ சின்ன வயசுக் கனவு போல."

"இருக்கும்!" என்றாள்.

அவன் தன்னை மீட்டுக் கொண்டவன் போலச் சிரித்தான்.



"சாரி, குமுதினி...!"

"பரவால்லே.... சார்!"

அந்தக் கணத்தில் தன்னை மறந்த நிலையில் தனது இளமைக் கால அனுபவங்களைச் சுருக்கமாகச் சொன்னான் தமிழ்மதி.

அவள் முகத்தில் அன்பு பொங்கியது. சற்று நேரம் அவன் மனத்தில் பதிகிற வண்ணம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

இப்போது மனம் தேறினாற் போல உணர்ந்தான் தமிழ்மதி.

"சரி, நான் போகட்டுமா?" என்று அவள் கிளம்பிப் போக, அவன் படுக்கையில் படுத்து விட்டான்.

குமுதினியோ படுக்கையில் படுத்தவள் உறங்கவே யில்லை!

தன் மனம் கவர்ந்தவன் இந்த வயது வரையிலும் வாழ்க்கையில் தனிமையையே அனுபவித்திருக்கிறான் என்று புரிய, ஒரு விதமான நெகிழ்வில் இருந்தாள்.

மூன்று மணியிருக்கும். மறுபடியும் ஒரு இடி இடிக்க.. ஓடிப் போய்த் தமிழ்மதியின் போர்ஷன் ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

அவன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

குமுதினி சிந்தனையோடு தனது அறைக்குப் போனாள்.

மறுநாள் மாலை அவன் சந்திப்பைத் தேடி ஆவலுடன் வந்தாள். ஆனால் வரும் நாட்களில் தமிழ்மதி அவளைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கினான்.



# 30

''ஹாய்..! ப்ரவீணா!'' என்று வந்தாள் ரத்னபிரபா.

''ஹாய்!'' என்று கையாட்டினாள், ப்ரவீணா!

தமிழ்மதி பட்டமேற்படிப்புப் படித்துக் கொண்டிருந்த அதே கல்லூரியில் ப்ரவீணா பட்டப்படிப்பில் இரண்டா மாண்டில் இருந்தாள்.

தமிழ்மதியிடம் தோழமையுடன் இருந்தாள்.

தமு மாமா மறைவிற்குப் பிறகு ஒருவிதத் தனிமையை உணர ஆரம்பித்திருந்தாள் தமிழ்மதி.

அண்ணனிடமும் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. உடனே, ''என்னோட வந்துரு.'' என்பார்.

மீண்டும் அண்ணன் குடும்பத்தோடு போய்ச் சேர்ந்து கொள்கிற எண்ணமே தமிழ்மதிக்குக் கிஞ்சித்தும் இல்லை.

அச்சகப் பொறுப்பு வேறு சேர்ந்து கொண்டது. தாமோதரன் மாமா அச்சகத்தையும், அது சார்ந்த கட்டடம், இடம் எல்லாவற்றையும் தமிழ்மதியின் பேருக்கே எழுதி வைத்திருந்தார்.

அந்தச் செய்கை தமிழ்மதியின் மனத்தில் பெரும் நெகிழ்வை ஏற்படுத்தி இருந்தது.

குடும்பம் என்று இல்லாவிட்டாலும் மாமாவும், அவளுக்கும் இடையே ஒரு பெரிய உறவுப் பாலம் இருந்தது.

தனது இறுதிக் காலத்தில் குடும்பம் ஒன்று தேவை என்று வலியுறுத்த ஆரம்பித்தார் தாமோதரன்.

''முருகேசா! உன்கிட்டயிருந்து நான் ஒரு மகனோட பாசத்தை உணர்ந்தேன்.'' என்பார்.



தினமும் மாலை நேரங்களில் ஊரில் இருக்கும்போது கண்டிப்பாக ஒரு மணி நேரமாவது அமர்ந்து அளவளாவுவாள்.

''மாமா! காலேஜ்ல அது நடந்தது. இது நடந்தது. அந்த லெக்சரர் கிளாஸ்ல இப்படிச் சொன்னாரு.. அப்படிச் சொன்னாரு.'' என்று எல்லாவற்றையும் ஒப்பிப்பாள்.

நாடறிந்த எழுத்தாளர் என்ற முறையில் பெண்கள் தன் கவனத்தைக் கவர எடுக்கிற முயற்சிகளையெல்லாம் கேலியாகப் பகிர்ந்து கொள்வான்.

சிரிப்பார்கள்!

அப்படி அவன் மேல் விழுந்து பிடுங்குபவர்களில் ப்ரவீணா கொஞ்சம் வித்தியாசமாக இருந்தாள்.

நடுத்தரக் குடும்பத்தில் இருந்து வந்திருந்தாள்.

நவநாகரிகமாக உடையணிவாள். ஆனால் தெளிவான சிந்தனைகள் உடையவளாக இருந்தாள்.

தமிழ்மதியின் கதைகளையும், கவிதைகளையும் ஆழப் படிப்பாள், விமர்சனம் செய்வாள்.

அவளது விமர்சனங்கள் பல தமிழ்மதிக்கு உதவியாக இருந்தது.

''ஓ.. இப்படியொரு நோக்கு உண்டோ?'' என்று யோசிக்கவும், அலசுதல் செய்யவும் உதவியது.

ப்ரவீணாவின் அறிவார்ந்த பேச்சை அவன் மதித்தான்.

அப்போது கோவையில் நடைபெறும் இலக்கியக் கூட்டங்களுக்குக் கல்லூரி மாணவிகள், ஒத்த சிந்தனையாளர்கள் குழுவாகச் செல்வார்கள். அந்தக் குழுவில் ப்ரவீணாவும் இருப்பாள்.

கேட்ட பேச்சுக்களைப் பற்றி அலசுவார்கள். ஒரு குறிப்பிட்ட பேச்சாளரைப் பற்றித் தமிழ்மதி கிண்டலாகச் சிரிப்பான்.

"எந்தக் கூட்டத்துல பேசினாலும் ஒருவரை இந்திரனே சந்திரனே..! அப்படீன்னு புகழ்றது ரொம்பக் காக்கா!" என்பான்.

"ஏன் அப்படி நினைக்கறீங்க... அதெல்லாம் மேடை மரபு! நமக்கு நாலு கருத்து இருக்கு! அதை மேடையில சொல்லணும்னு வச்சுக்குங்க. அந்த மேடையில இருக்கறவங்களை நாலு வார்த்தை புகழ்ந்தா என்ன? இன்னும் நாலு மேடை கிடைக்குமில்ல!" என்பாள்.

"இப்படி ஒரு கோணம் இருக்கோ?" என்று சிரிப்பான்.

"தமிழ்மதி! ரொம்ப ரிஜிடா... ரொம்ப இறுக்கமா இருந்துதான் நல்ல கருத்துக்களைச் சொல்லணும்னு இல்லே..!" என்பாள்.

"தட்ஸ் ட்ரூ!" என்பான் தமிழ்மதி.

நட்பு கொஞ்சம் ஆழ்ந்த நட்பாக மாறியது.

தாமோதரனின் மறைவுக்குப் பிறகு கொஞ்சம் தனிமையை உணர்ந்த தமிழ்மதி ப்ரவீணாவின் நட்பை மிகவும் விரும்பினான்.

நேரம் கிடைக்கும்போது அவளுடன் கழித்தான். ப்ரவீணாவும் அதை விரும்பினாள் போலத்தான் தோன்றியது.

பட்ட மேற்படிப்பு என்ற நிலையை எட்டும்போது மாணவப் பருவத்தில் ஓரளவு பக்குவ நிலையும் ஏற்பட்டு விடுகிறது என்ற கருத்து அவனுக்குள் இருந்தது.

வாழ்நாள் முழுவதும் அவள் தன்னோடு இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. தன் மனதைத் திறந்து காட்டி விடலாம் என்று முடிவெடுக்கிற நிலையில் தனது இன்னொரு நெருங்கிய தோழன் ஜெகன்னாத்திடம் தனது கருத்தைத் தெரிவித்தான்.



ஜெகன்னாத் அப்படியொன்றும் உடனே அதை ஆமோதிக்கவில்லை.

"தமிழு! ப்ரவீணா... உன்னோட பழகுது. ஆனா... அது எவ்வளவுக்கெவ்வளவு அறிவான பொண்ணோ... அந்த அளவுக்கு பிராக்டிகல் ஆட்டிட்யூட் உள்ள பொண்ணு..." என்றான்.

"இருந்துட்டுப் போகட்டுமே," என்றான்.

"இல்ல.. தமிழு! உனக்கு ஏற்பட்டிருக்கிறது காதல்னு எனக்குத் தோணலே. வெறும் அட்ராக்ஷன்னுதான் தோணுது..!" என்றான்.

"போடா! சில விஷயங்களையெல்லாம் பிரிச்சுப் போட்டு ஆராயக் கூடாது..." என்றான்.

"இருக்கலாம்! ஆனா.. வாழ்க்கை பற்றிய ஒரு முடிவு எடுக்கறதுக்கு முன்னால ஒரு தெளிவான முடிவு வேணுமில்ல...!" என்றான்.

"சரி, என்ன செய்யலாம்?" என்றான் தமிழ்மதி.

"பொறு..! நான் ஒரு வழி செய்யறேன்," என்றான்.

என்ன வழி என்றும் சொன்னான்.

"போடா! இதெல்லாம் டிராமா மாதிரித் தெரியலே!"

"இருக்கட்டுமேடா! என்ன தப்பு! வாழ்க்கையிலயும் சில டிராமாக்கள் அவசியம்தான்டா. ஒண்ணுமில்லே! ஒரு குழந்தைக்குச் சோறூட்டறதுக்குள்ளே ஒரு அம்மா என்னென்ன டிராமாவெல்லாம் போட வேண்டியிருக்கு!" என்றான்.

தமிழ்மதி சிரித்தாள்.

"உதாரணம் ரொம்ப நல்லாருக்கு..." என்றாள். திட்டமிட்டபடி அந்த நாடகத்தை நடத்தினார்கள்.

நூலகத்தின் வெளிப்பக்கமாக நின்றபடி ப்ரவீணாவிடம் பேசினான் ஜெகன்னாத்.

தமிழ்மதி சற்றுத் தள்ளி அவர்கள் கண்களில் படாத வண்ணம் ஆனால் அவர்கள் பேச்சுக் கேட்கும் வண்ணம் நின்றான்.

"ஹாய்! ப்ரவீணா..! என்ன ஃப்ரீயா நிக்கறே..." என்று கேட்டான் ஜெகன்னாத்.

"சும்மாதான்! லல்லி வர்றேன்னா... இன்னும் ஃபைவ் மினிட்ஸ்ல வந்துருவா..! அதான் நிக்கறேன்," என்றாள்.

"இல்லே! நான் அதைக் கேக்கலே! எப்பவும் தமிழ்மதி கூடவே இருக்கயே! எங்கே அவனைக் காணோம்னு கேட்டேன்," என்றான்.

ப்ரவீணா சிரித்தாள்.

"ஆமா! ஐ என்ஜாய் ஹிஸ் கம்பெனி!" என்றாள்.

"அதை நீ வேற சொல்லணுமா? உன்னைப் பாத்தாலே அவன் முகத்திலே லைட் எரியுது. உன் முகத்துல அதுக்கு மேலே ஜோதியே தெரியுது!" என்றான்.

ப்ரவீணா கலகலவென சிரித்தாள்.

"ஆமா! தமிழ்மதி என்ன பேசறான்னு எனக்குப் புரியுது. உங்களுக்கெல்லாம் அவர் பேசறது ஏதாவது புரியுமா என்ன?" என்று தன் பங்குக்கு அவளும் வாரினாள்.

"அம்மணி! எங்களுக்கும் மேல் மாடியில் மசால் இருக்கு! ரொம்ப அலட்டிக்க வேண்டாம். என்ன இருந்தாலும் உங்க ஃப்ரெண்ட்ஷிப் மாதிரி வருமா? எப்ப நீங்க



கல்யாணப் பத்திரிகை குடுக்கப் போறீங்கன்னு பாத்த
கிட்டிருக்கோம். தமிழ்மதியையே புடிச்சுப் போடணும்னா
நீ லேசுப்பட்ட ஆளா? சொந்தமா அச்சகம் வேற இருக்கு
இன்னைக்கு முடிவு பண்ணினா நாளைக்கே இன்வி
டேஷன் அடிச்சிரலாம்!" என்று வாயைப் பிடுங்கினான்
ஜெகன்னாத்.

ப்ரவீணாவின் முகம் சிந்தனையில் ஆழ்ந்தது
ஜெகன்னாத்தைப் பார்த்தாள். பிறகு ஆழ்ந்த குரலில்
சொன்னாள்.

"ஜெகன்னாத்! நீ சொல்றது கற்பனைக்கு வேண்ண
நல்லா இருக்கலாம்! ஆனா, வாழ்க்கைக்கு ஒத்து வராது...

"ஏன்?" என்றான் ஜெகன்னாத்.

"தமிழ்மதி ரொம்ப ரிஜிட்டான பேர்வழி. அவர் பேச
வார்த்தை ஒவ்வொன்றும் பொறுக்கி எடுத்து ரசிக்
வேண்டிய மாதிரி வார்த்தைகள்தான். ஆனா... வாழ்
கைக்கும் ஐடியலிசத்துக்கும் ஒத்துவராது."

"ம்...!" என்றான் ஜெகன்னாத்.

தமிழ்மதி கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். ப்ரவீண
தொடர்ந்தாள்.

"ஜெகன்னாத்! தமிழு கூட வாழ்க்கை நடத்தற
கஷ்டம்! எந்த விதமான நிபந்தனையும் இல்லா
அவனை நேசிக்கற பொண்ணால மட்டும்தான் அவனை
நேசிக்க முடியும். எந்த நேரம் வேண்ணாலும் அவன் ஒ
ஜோல்னாப் பையைத் தூக்கித் தோள்ல போட்டுட்
உலகம் பார்க்கக் கிளம்பிடுவான். முற்றிலும் அவனை
சார்ந்திருக்கிற ஒரு பொண்ணுக்கு அது எவ்வளவு பெ
ஏமாற்றமா இருக்கும்னு யோசிச்சுப் பாரு! அது மட்
மில்ல...! எழுத்தை மட்டுமே வச்சு சம்பாதிச்

எகனாமிக்கலா நிறைவா இருக்க முடியுமா... ஊஹூம்; முடியவே முடியாது..."

"ம்...!" என்றான் ஜெகன்னாத்.

"என்னுடைய தேவைக்காகப் பைசாவை எண்ணி எண்ணிப் பாத்துகிட்டிருக்கிற வாழ்க்கையை என்னால நினைச்சுப் பாக்கவே முடியாது. என்னைப் பாராட்டிச் சீராட்டி வச்சுக்கிற ஒரு ஹஸ்பெண்ட்தான் எனக்கு வேணும்."

"ஏய்! நிஜமா சொல்லு! உனக்குத் தமிழ் மேல ஒரு இன்ட்ரஸ்ட் இருக்கில்ல..."

"இருக்குது. இப்பவும் அவர் மேல மதிப்பு இருக்கு. ஆனா அது காதலா மாறாது. என்னா அவரோட ஒரு பொண்ணு வாழப் போற வாழ்க்கையை நினைச்சாலே அந்தப் பொண்ணு மேல பரிதாபம்தான் வருது. ஹி இஸ் நாட் எ மேன் ஃபார் பேமிலி!" என்றாள்.

ஜெகன்னாத்துக்கு இதெல்லாம் ஒரு புறத்தில் நின்று தமிழ்மதி கேட்டுக் கொண்டிருக்கிறான் என்று நினைத்த போது சங்கடமாக இருந்தது.

"ப்ரவீணா! நீ நினைக்கிற மாதிரி இல்ல! எனக் கென்னமோ தமிழ்மதியின் மனசுல காதல் வந்தா அது அவனைப் புரட்டிப் போடும்னு நினைக்கிறேன். அவ னோட காதல்ங்கறது அலாவுதீன் விளக்கு மாதிரி. அடைச்சு வச்சிருக்கிற பூதம் மட்டும் வெளியே வந்தா.. அது வாய்க்கிற பொண்ணுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும்," என்றான்.

ப்ரவீணா மறுபடியும் சிந்தனையுடன் ஜெகன் னாத்தைப் பார்த்தாள்.



"இருக்கலாம்! ஆனா அப்படியாரு பொறியைக் கிளப்பற ஆள் நான் இல்லே! என்னா... ஒரு விதத்துல நான் சுயநலவாதி. என்னைச் சகிச்சுக்கத் தமிழ்மதியால முடியாது!" என்றாள்.

அதே நேரம் லல்லி வரவும் விடை சொல்லிப் பிரிந்தார்கள்.

ஜெகன்னாத் வந்து தமிழ்மதியைப் பார்த்தால் அவனும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

"பாத்தியா.. நான் சொன்னேன் இல்லே!" என்றான் ஜெகன்னாத்.

தமிழ்மதி ஒரு வறண்ட புன்னகையை விட்டான்.

"நல்லவேளை! நான் வாய் திறக்கலே!" என்றான்.

உள்ளத்துள் ஒரு பெரிய அடி விழுந்தாற் போல இருந்தாலும், அவன் காட்டிக் கொள்ளவில்லை.

காஸ்டீன் போனார்கள்.

ஜெகன்னாத்திடம் தமிழ்மதி சொன்னான்.

"தெளிவாச் சிந்திக்கிறாங்கறதுனாலதான் ப்ரவீணா மேல எனக்கு ஒரு ஈர்ப்பு வந்துச்சுன்னு நினைக்கறேன்."

"ஆமாப்பா! ரொம்பத் தெளிவாச் சிந்திக்கறா. வாழ்க் கையை இப்படி அக்கு வேறு ஆணி வேறா அலசுனா வாழ்க்கை இனிக்காதுடா! இந்தப் பொண்ணு கல்யாணத் துக்குப்புறமும் யாரையும் முழுமையா நேசிக்காது!" என்றான் ஜெகன்னாத்.

"ஆமா! அவளோட தெளிவான சிந்தனையினாலேயே எனக்கும் புரிந்து போச்சு!" என்றாலும் அந்தப் பாதிப்பி லிருந்து மீள வெகுவாகச் சிரமப்பட்டுப் போனான் தமிழ்மதி.

தெரிந்தோ தெரியாமலோ, "ஹி இஸ் நாட் எ மேன் ஃபார் பேமிலி..." என்று அவள் சொன்னது அவன் மனதில் பதிந்துவிட்டது.

அந்தப் பழைய எண்ணங்கள் மனதில் ஓடத் தனிமையில் நடந்து கொண்டிருந்தான் தமிழ்மதி.

கொடைக்கானலுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்தான்.

வந்து ஒரு வாரமாகி இருந்தது. நிறைய.. நிறைய... யோசிக்க வேண்டியிருந்தது!

எதிலிருந்தோ தப்பிக்கிறாற் போல இங்கே வந்து விட்டான்.

விஜயனுக்கு மட்டும் சொன்னான்.

"யாருக்கும் சொல்ல வேண்டாம். குறிப்பாகக் குமுதினிக்குச் சொல்ல வேண்டாம்!" என்று ஏன் சொன்னோம் என்று இப்போது யோசித்துக் கொண்டிருந்தான்.



## 31

அவரைக்காயைத் துண்டுகளாக நறுக்கி வைத்திருந்த பாத்திரத்தை அடுப்பு மேடை மேல் வைத்து விட்டுத் திரும்பினாள் குமுதினி.

"ஹலோ! அங்கிள்!" என்ற கீதலட்சுமியின் உற்சாகக் குரல் கேட்டது.

"ஹாய்!" என்று பதிலுக்குக் கேட்ட குரல் தமிழ்மதியுடையது.

ஒரு நிமிடம் உறைந்து நின்றாள் குமுதினி. கைகளில் லேசான நடுக்கத்தை உணர்ந்தாள்.



இரண்டு பேரும் ஏதோ கலகலவென்று பேசிக் கொண்டு சிரிப்பது அவள் காதுகளில் கேட்டது.

"குமுதினி..! தமிழ்மதித் தம்பி வந்துட்டாப்ல போல இருக்கு." என்று உற்சாகமாகப் போனார் மீனாட்சியம்மாள்.

குமுதினிக்கும் கூட ஓடிப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் கால்கள் தடுத்தன.

உள்ளே ஒரு கோபம் இருந்தது.

'என்னமோ பெரிய இவராட்டம் போகிற இடத்தைக் கூடச் சொல்லாமப் போயிட்டாரு...! இப்ப வந்தவுடனே ஓடிப் போய்ப் பாக்கணுமாக்கும்,' என்று.

அவசரமாக வேலையிருப்பவள் போல் உள்ளேயே இருந்து கொண்டாள்.

சுந்தரலிங்கம் கூட எழுந்து போனார்.

இப்போதெல்லாம் அப்பா ஒழுங்காக வேலைக்குப் போய்க் கொண்டிருந்தார்.

சம்பளம் குறைவாக இருந்தாலும் வேலைக்குப் போகிறோம் என்ற தெம்பு தெரிந்தது. அதைக் காட்டிலும் ஆச்சரியம், வாங்குகிற சம்பளத்தை அப்படியே கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தார். செலவுக்குக் கேட்டு வாங்கிக் கொண்டு போனார். என்ன செலவு செய்தேன் என்றும் ஒப்பித்தார். இப்படியொரு மாற்றத்தை ஏற்படுத்தியவன் என்ற முறையில் தமிழ்மதியின் மீது மீனாட்சியம்மாளுக்கு அப்படியொரு மதிப்பு!

தமிழ்மதி இந்த வீட்டுக்கு வந்ததில் இருந்து எல்லாம் நல்லதாகத்தான் செய்து கொண்டிருந்தார். ஆனால் நாம் ஏன் கோபித்துக் கொள்கிறோம் என்று தன்மீதே அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

திடீரென்று கிளம்பிப் போயிருப்பார். அதனால் சொல்ல முடியாமலிருந்திருக்கும். ஒருவேளை யாருடைய தொந்தரவும் இல்லாமல் எழுத வேண்டும் என்பதற்காகக் கூடச் சொல்லாமல் இருந்திருக்கலாம் என்று அவளுடைய மனம் சமாதானம் சொல்ல ஆரம்பித்திருந்தது. இப்போது அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்பதற்காக இந்தப் பாழும் மனது என்னவெல்லாம் செய்கிறது என்று அவளுக்குச் சிரிப்பாக வந்தது.

"இருடி! காயை அப்புறம் வைக்கலாம். தம்பி காபி கேட்குது." என்று பரபரப்பாக வந்தார் மீனாட்சியம்மாள்.

குமுதினி மௌனமாக நகர்ந்து கொண்டாள். "தம்பி இல்லாம நல்லாவே இல்லை.. இல்லடி?" என்று கலகல வென்று பேசிக் கொண்டு காபி தயாரிக்கிற அம்மாவின் வெளிப்படையான உற்சாகம் தனக்கு ஏன் இல்லாமல் போனது?

ஏன் இப்படி? ஒரு பாறாங்கல்லை நெஞ்சுக்கு நடுவில வைத்தாற் போல இருக்கிறது என்று புரியவில்லை.

"குமுதினி இல்லையானு கேட்டாப்ல! நீயே காபியைக் குடுத்துட்டு ரெண்டு வார்த்தை பேசிட்டு வந்துரு. நான் அதுக்குள்ளே அவரைக் காயைத் தாளிச்சு வச்சிடறேன்," என்று அம்மா சொல்லவும். வேறு வழியே இல்லாதவள் போல் சென்றாள்.

சூட்கேஸைப் பிரித்துத் துணிமணிகளைப் பரத்திக் கொண்டிருந்த தமிழ்மதி, குமுதினி வாசலுக்கு அருகில் வரவும் திரும்பிப் பார்த்தான்.

"ஹல்லோ...'குமுதினி!" என்றான், மகிழ்ச்சியாய்ச் சிரித்தான்.



அவன் மகிழ்ச்சி பார்த்து அவளுக்குள்ளும் ஒரு பரவசம் பொங்கியது.

முகம் மலரப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகையால் கவரப்பட்டாற் போல் ஒரு நிமிடம் விழித்துப் பார்த்தான், தமிழ்மதி.

சட்டென்று பார்வையை மாற்றிக் கொண்டு,

"காபி.. குட்..! குட்...!" என்று கையால் வாங்கிக் கொண்டான்.

அவன் கட்டிலின் மேல் கிடக்கிற அழுக்குத் துணிகளைப் பார்த்து,

"துணி நிறைய இருக்கும் போல இருக்கே?" என்றாள்.

"துவைப்போம்! இந்தத் தடியப்பயலுக்கு அப்புறம் என்னதான் வேலை! கொஞ்சமாவது உடலுழைப்பு வேணுமில்லே!" என்றான்.

கபகபவென்று சிரித்தாள்.

அவளது முகத்திலும் புன்னகை மலர்ந்தது. "நீங்க ஒண்ணும் தடிப்பயல் இல்லே! கரெக்டா உடம்பை வச்சிருக்கீங்க," என்றாள்.

"தாங்க்ஸ்... ஃபார் தி காம்ப்ளிமெண்ட்! தாமு மாமா கிட்டே இருந்து வந்த பழக்கம். என் துணியை நானேதான் துவைச்சுப் போட்டுக்கணும்."

"நல்ல பழக்கம்!" என்றாள் குமுதினி.

"தெரியும் குமுதினி நீ பாராட்டுவேன்னு," என்றான். அவள் வியப்பாகப் பார்க்க,

"குடும்பத்துல எல்லா ஆம்பளைங்களும் இப்படி இருந்துட்டா, பெண்களுக்கு வேலைப் பளு மிச்சமாகு மில்லே!"

''ஹலோ... அது வேறு டாபிக். அப்புறம் பேசலாம்,'' என்று கழன்று கொண்டு வந்து விட்டாள்.

அலுவலகம் போய்ச் சேரும்வரை தமிழ்மதியின் நினைவாகவே இருந்தது. ஆனால் வேலை என்று ஆரம்பித்து விட்டால் எல்லாவற்றையும் மறந்து விடுவாள்.

நேயர்களிடம் பேசுவதிலும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதிலும், அவளுக்குப் பெருத்த ஈடுபாடு. உலகத்தையே மறந்து விடுவாள்.

இன்றைக்கு மாதர் நிகழ்ச்சி என்ற ரெகார்டிங் இருந்தது. ஆர்வமாகப் பதிவு செய்து கொண்டாள். ரெகார்டிங் முடிந்தவுடன் வந்திருந்த இரண்டு பெண்மணிகள் தமிழ்மதியின் கதை பிடிக்கும் என்று சொல்ல, மீண்டும் அவன் நினைவு.

அப்போதுதான் அந்த முடிவைச் செய்தாள்.

* * *

''அய்யா! வாங்கய்யா!'' என்று விஜயனின் கலாட்டாவான வரவேற்போடு உள்ளே நுழைந்தான் தமிழ்மதி.

''அங்கிள்!'' என்று ஓடி வந்து கட்டிக் கொண்ட கலைச்செல்வியைத் தூக்கிக் கொண்டான்.

''ராஜாத்தி.. செல்லம்..!'' என்று முகத்தில் முகம் தேய்த்துக் கொண்டு தன் வலது பாக்கெட்டில் இருந்து ஒரு ஃபைவ் ஸ்டார் சாக்லேட்டை எடுத்து நீட்டி அவன் செய்கிற அலம்பலை விஜயன் ஒரு சிரிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

''அந்த நாவலை முடிச்சுட்டியா?'' என்றான் விஜயன்.

''ப்ச்!'' என்று உச்சுக் கொட்டினான் தமிழ்மதி.

சேரில் அமர்ந்து கலைச்செல்வியை மடியில் அமர்த்திக் கொண்டான்.



''ஏன்?'' என்று இழுத்தான் விஜயன்.

''எங்கே? என்னமோ மைண்ட் சரியில்லை...'' என்றான்.

விஜயன் ஒன்றும் பேசவில்லை. மேலும் சற்று நேரம் பொதுப் படையாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தனிமை கொடுத்துப் போனான்.

கடந்த ஒரு வாரமாகக் கொடைக்கானலுக்குப் பக்கத்தில் இருந்த அந்தக் கிராமத்தில் தான் நாட்களைச் செலவு செய்த விதம் குறித்து அலசலில் ஆழ்ந்தான்.

சிந்தனை.. சுயசிந்தனை.. அலசல்! எல்லாவற்றிலும் அவனுக்கு ஒரு முடிவு தெரிந்திருந்தது.

குமுதினியின்பால் தன் மனம் சென்று விட்டது என்று. அவளது நினைவுகளில் முழுகிக் கிடக்கிறது என்ற உண்மை அவனுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. ஆனால் அதை எப்படிக் குமுதினியிடம் சொல்வது?

தன்னைக் கண்ணியமானவனாக நினைத்து உள்ளே அனுமதித்திருக்கிற அந்தக் குடும்பத்திடம் எப்படிச் சொல்வது?

தலையைக் குடைந்த சிந்தனைகளில் இருந்து விலகி கம்ப்யூட்டரில் விஜயன் அடித்து வைத்திருந்த கதையின் முற்பகுதியைப் பார்க்க ஆரம்பித்தான்.

காலையில் கொஞ்ச நேரம் படுக்கலாம் என்று படுத்துப் பார்த்தான்.

உறக்கம் வரவில்லை.

மீனாட்சியம்மாள் சமைத்து வைத்திருந்த பிற்பகல் உணவைச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பி வந்தவனைத்தான் விஜயன் வரவேற்றது.

ஊருக்கு வந்து விட்டோம் என்பதைக்கூட அவன் விஜயனிடம் தெரிவிக்கவில்லை.

அங்கே இருந்த கொஞ்ச நேரம் தன்னை ஆழ்ந்து அளவெடுத்துக் கொண்டிருந்த விஜயனின் பார்வையை அவனால் சந்திக்கவும் முடியவில்லை.

ஒருவிதமான குறுஞ்சிரிப்புடன்தான் விஜயன் கிளம்பிப் போனான் என்பது அவனுக்குப் புரிந்தது.

சிந்தனையுடன் போன விஜயன் சும்மாயிருக்க வில்லை.

குறிப்பிட்ட ஒரு நபருக்குப் போன் செய்து பெரியதொரு வெடிகுண்டாகப் போட்டு வைத்தான் என்பது தமிழ் மதிக்குத் தெரிந்திருக்கவில்லை.

நான்கு மணியிருக்கும்.

செல்போனில் மஞ்சுளாவிடம் பேசி,

"அம்மா! ஏதாவது ஸ்நாக்ஸும் டீயும் அனுப்புங் கம்மா.." என்று சொல்லிவிட்டுத் திரும்பினான்.

குமுதினி நின்று கொண்டிருந்தாள்.

"குமுதினி...!" என்றான் குரலே எழும்பாத ஒரு குரலில்.

"எங்கே ஓடறதா உத்தேசம்?" என்றாள் குமுதினி, காட்டமாக.

"ஓடறதா..?" என்று விழித்தான் தமிழ்மதி.

"பின்னே? விஜயன் சொன்னாரு... சென்னைக்குப் போயிடறதா சொன்னீங்களாம்," என்றாள்.

விஜயன் ஏதோ விளையாடியிருக்கிறான் என்று புரிந்து கொண்ட தமிழ்மதி தானும் அதே பாதையில் போக முடிவெடுத்தான்.



"ம்.. சொன்னேன்!" என்றான் அடங்கிய குரலில்.

"ம்..! எதிலிருந்து தப்பிச்சுக்கிட்டுப் போறீங்க.. தமிழ்மதி..?" என்றாள் மறுபடியும் காட்டமாக.

அவன் நின்றான். சுவாரசியமாகப் பார்க்க ஆரம்பித் தான்.

அந்த நேரம் மஞ்சுளா டீ கோப்பைகளுடன் வந்தாள்.

அவள் வெளியே போகும்வரை சாதாரணமாகப் பேசி அனுப்பிய குமுதினி, மறுபடியும் அவனைக் கோபமாகப் பார்த்தாள்.

"எத்தனை நாளைக்கு உண்மைகிட்டேயிருந்து பயந்து ஓடுவீங்க, தமிழ்மதி...?" என்றாள்.

அவளது குரலில் கலந்திருந்த உணர்வுகள் புரிய விக்கித்துப் போய்ப் பார்த்துக் கொண்டு நின்றான். அவள் எதைப் பற்றியும் கவலைப் படாதவள் போலத் தொடர்ந் தாள்.

"பரவாயில்லே! குடும்பம்ன்னா.. என்னன்னு தெரியாத வங்க ஓடலாம்! ஆனா நான் ஓட மாட்டேன். உண் மையைச் சந்திப்பேன். அதனாலதான் இப்ப நானே உங்களைப் பார்க்க வந்திருக்கேன்," என்றாள்.

அவன் தீர்க்கமான பார்வையுடன் நின்று கொண்டிருந் தான்.

"மதி! எனக்கு என் மனசோட போராடி அலுத்துப் போச்சு..." என்றவள் தன் நினைவுகளின் கனம் தாங்காதவள் போல, ஹாலில் உள்ள ஜன்னலில் சாய்ந்து கொண்டாள்.

உடலெல்லாம் தளர்ந்தாற் போல நின்றவள் நேராகப் பார்த்தாள்.

"மதி..! ஐ திங்க்... நான் உங்களை நேசிக்கறேன்..! அதை நீங்க ஒத்துக்கிட்டாலும் சரி.. இல்லேன்னாலும் சரி..

அதைப் பத்தி எனக்குக் கவலையில்லே! ஆனா.. என் மனசக்கு நான் உண்மையா இருக்கனும்னு நினைக்கிறேன். அதுக்குள்ளே நீங்க என்னமோ ஒன்ஸ் அன்ட் ஃபார் ஆல் சென்னை போறதாய்..." என்றாள். சற்றுச் சோகமாக உதடுகள் பிதுங்கிக் கண்ணீர் வழிய நின்றபடி பார்த்த அந்தக் கணம் அவன் தன்னை மறந்தான்.

"இல்ல... குமுதினி! நான் எங்கயும் போகலை. அவன் சும்மா..!" என்று சொல்ல, நெருங்கிய அவள், அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டு தேம்பினாள்.

எல்லையற்ற நிம்மதி படர, மெல்ல இடக்கையால் அவளை அணைத்துக் கொண்ட தமிழ்மதி, சற்று நேரம் கண் மூடி நின்றான். அவள் தேம்பல் நிற்கும்வரை அமைதியாக நின்றான்.

"சரி.. கண்ட்ரோல் யுவர்செல்ஃப்," என்று தட்டிக் கொடுத்தான்.

அவளை மெல்ல விலக்கிக் கொண்டான்.

"குமுதினி..! நீ கிளம்பு! நாம அப்புறம் பேசுவோம்," என்று கதவைத் திறந்து வெளியே வர, விஜயன் முன்னாலே இதை எதிர்பார்த்தவன் போல் அமர்ந்திருந்தான்.

"விஜி..!" என்று அமைதியாக அழைத்து, ஏதோ சொல்ல, விஜயன் தலையாட்டினான்.

"குமுதினி! இப்ப இமோஷனலா இருக்கே..! அப்புறம் பேசுவோம்," என்று அனுப்ப, குமுதினி போனாள்.

"சே! இப்படிப் போட்டு உடைத்திருக்கவே வேண்டாம்," என்பது போன்ற மௌனத்தில் விஜயனின் பைக்கில் பின்னால் அமர்ந்திருந்தான்.

கனவில் இருப்பவள் போல இறங்கி, அவள் உள்ளே நுழைய, விஜயன் சுந்தரலிங்கத்திடம் சொன்ன வார்த்தைகள் கேட்டுத் திகைத்து நின்றாள்.



"சார்! நம்ம தமிழ்மதி குமுதினியைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு ஆசைப்படறான். இன்னைக்குச் சாயங்காலம் அவங்க அண்ணனும், அண்ணியும் பொண்ணு கேட்க வருவாங்க," என்று அவன் சொல்லிய வார்த்தைகள் காதுகளில் தேனாய்ப் பாயத் திகைத்து நின்றாள் குமுதினி.

## 32

மிக எளிமையான அளவில் நிச்சய தார்த்தம் நடந்து முடிந்தது.

குமுதினியின் ஆதாவில்தானே குடும்பமே நடக்கிறது. திருமணமானால் என்ன செய்வது என்ற பேச்சையே மீனாட்சியம்மாளும், சுந்தரலிங்கமும் குமுதினியிடம் பேசவேயில்லை.

பெண் கேட்க வருகிறார்கள் என்றவுடனே மீனாட்சியம்மாளிடம் போய்ச் சமையலறையில் குசுகுசுவென்று பேசினார் சுந்தரலிங்கம்.

மீனாட்சியம்மாள் ஒரே முடிவாகச் சொன்னார். "சரின்னு சொல்லுங்க," என்று.

திருமணம் பேச வருகிறார்கள் என்றவுடனே மகளின் கண்களில் தோன்றிய மின்னலைக் கவனித்து விட்டார்.

மகளின் மகிழ்ச்சி மட்டுமே முக்கியம் என்ற எண்ணம் தான் அந்தத் தாயின் முகத்தில் உறுதியாகத் தெரிவதைப் பார்த்த சுந்தரலிங்கம் மறு பேச்சுப் பேசாமல் சமையலறையை விட்டு வெளியே வந்தார்.

அதற்குள்ளாக, 'உட்காருங்க,' என்ற குமுதினியின் உச்சரிப்பில் அமர்ந்தான் விஜயன்.

சுந்தரலிங்கம் வாய் கொள்ளாப் புன்னகையுடன் வந்தார்.

''வரச் சொல்லுங்க, தம்பி...!'' என்றார்.

மீனாட்சியம்மாள் மகளிடம், ''ஏண்டி... உன்கிட்ட எதுவும் சொன்னாரா... தம்பி?'' என்று கேட்டார்.

''இல்லம்மா!'' என்றாள். ஆனால் பார்வை அவர் முகம் பார்க்கவில்லை.

குமுதினியின் வீட்டில் காபி உபசரிப்பைப் பெற்றுக் கொண்ட விஜயனுக்குத் தமிழ்மதியிடம் இருந்து போனில் அழைப்பு!

ஒரு விதச் சிரிப்புடன் உள்ளே நுழைந்தவனிடம் தமிழ்மதி கேள்விக்குறியாகப் பார்த்தபடி கேட்டான். ''நான் எப்படா சொன்னேன். சென்னை போறேன்னு, யார் கிட்டே சொன்னேன்?'' என்று.

''நீ சொன்னதா நான் சொன்னேன்,'' என்றான் விஜயன் - அலட்டிக் கொள்ளாமல்.

மேஜை மேல் தமிழ்மதிக்கென்று மனைவி கொண்டு வந்து வைத்திருந்த காராசேவைக் கொஞ்சம் அள்ளி வாயில் போட்டபடி.

''ஒஹ்ஹோ..? ஏன் அப்படிச் சொன்னே?'' என்றான் தமிழ்மதி.

''ஆமா..! பெரிய.. எழுத்தாளர்..! உண்மையைச் சந்திக்கப் பயந்துகிட்டு எத்தனை நாள்தான் வெளியூருக்கு ஓடுவே! அந்தப் பொண்ணு வேற ஒரு பக்கம்..! எல்லாம் ஒரு முடிவுக்கு வரட்டும்னுதான் சொன்னேன். இப்பப் பாரு..! நிரந்தரமா வெளியூர் போகப் போறேன்னு சொன்னவுடனே... நாணம், மடம், அச்சம் எல்லாத்தையும் தூக்கி வச்சுட்டு விஷயத்தைப் போட்டு உடைச்சதில்லை! நீயும் உடனே கல்யாணத்துக்கு நாள் பாக்கச் சொல்லி யாச்சு..!'' என்றான்.



தமிழ்மதியின் முகத்தில் அவன் பேசுவதைக் கேட்கக் கேட்கவே மாற்றங்கள் ஏற்பட்டன. லேசாக முகம் சிவந்து பின் தெளிவடைந்தது.

''தாங்க்ஸ் விஜயன்!'' என்றான். மகிழ்ச்சியாய்ச் சிரித்தான்.

அதன் பிறகு இரண்டு நாட்களுக்குள்ளாகவே நிச்சய தார்த்தம் என்று முடிவு செய்தார்கள்.

எளிமையாக நிச்சயதார்த்தமும் நிறைவேறி இருந்தது.

அடுத்த நாள்!

குமுதினி விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்தாள் என்று தகவல் கசியத் தமிழ்மதி வீட்டுக்குப் போனான்.

மீனாட்சியம்மாளும் கோவிலுக்குப் போகிறேன் என்று கிளம்பியிருந்தார்.

''ஹலோ!'' என்று எட்டிப் பார்த்தான் தமிழ்மதி.

குமுதினி ஒருவித எதிர்பார்ப்புடன் இருந்தவள் போல, ''வாங்க!'' என்று வரவேற்றாள்.

முகத்தில் லேசாக நாணம் கோலமிட்டிருந்தது.

தமிழ்மதி குறும்புச் சிரிப்புடன் உள்ளே நுழைந்தான்.

''சும்மா... கொஞ்ச நேரம் பேசலாம்னு வந்தேன்...'' என்றான்.

''ம்..! கொஞ்சம் காபி...'' என்றாள்.

''ம்.. கிடைச்சாத் தேவலைதான்!'' என்றான்.

தனது பகுதியில் போய்க் காத்திருந்தான். காபிக் கோப்பையுடன் வந்தாள்.

வாங்கிக் கொண்டான். மெல்லப் பருகியபடியே அவளையும் விழுங்குகிறாற் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் கண்கள் படபடக்க அந்தப்புறமும் இந்தப் புறமும் பார்த்தவள், பின் லேசாக விழியுயர்த்தி,

''என்ன இப்படிப் பார்க்கறீங்க?'' என்றாள். அவன் குறும்பாகச் சிரித்தபடி பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

''என்ன குமுதினி! விஜயனை அனுப்பின அன்னைக்கு நல்லா டோஸ் கிடைக்கும்னு நினைச்சேன்,'' என்றான்.

அவள் கேள்விக் குறியாகப் பார்த்தாள்.

''பின்னே? இப்படி ஒரு ஐடியாவை மனசுல வச்சுகிட்டு அப்புறம் எதுக்குப்பா பெருசா சஸ்பென்ஸ் வச்சேன்னு போன்ல ஒரு வாங்கு வாங்குவேன்னு பாத்தேன்,'' என்றான்.

அவள் 'களுக்'கென்று சிரித்தாள். மெல்ல அவன் முகம் பார்த்து இயல்பாகப் பேச ஆரம்பித்தாள்.

''ஆமா! ஆக்சுவலா திட்டணும்னுதான் நினைச்சேன். ஆனா... முதல் முதலா என் திட்டணும்னுதான்,'' என்றாள்.

அவன் பக்கத்தில் வந்து நிற்கவும், இயல்புக்கு மாறாகப் படபடத்தாள்.

''ம்..! குமுதினி... ஒரு சேலன்ஜ் என்னோட வாழ்க்கையையே தலைகீழாய்ப் புரட்டிப் போட்டுடுச்சு.. இல்லே..!'' என்றான்.

மெல்லக் கைகளால் வளைத்தான். அவள் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அவன் கண் மூடி நின்றான். ஒரு நிமிடம் ஒன்றுமே பேசவில்லை.

அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண் மூடி நின்ற விதம் பார்த்து விட்டு மறுபடியும் மௌனம் காத்தாள்.

''குமுதினி!'' என்று பெருமூச்சு விட்டான்.



''பத்து வயசுக்கப்புறம் என் மேல் படுகிற இயல்பா பெண்ணின் தொடுகை இது..!'' என்றான் முணுமுணு பாக.

ஒருவிதத் தயக்கத்துடன் குமுதினியை மெல்ல திருப்பிப் பின்புறமிருந்து கட்டியபடி அவள் தோளி முகம் பதித்துக் கொண்டான்.

அவளும் அமைதியாகவே இடம் கொடுத்து நின்றா

மெல்லத் திரும்பி அவன் மார்பில் முகம் புதைத்து கொண்டாள்.

''குமுதா! அம்மாவுக்கப்புறம் என் மேல ஒரு பிரி மான பெண்ணின் தொடுகை இருக்கலை... தெரியுமா?

கட்டிலில் அமர்ந்து கொண்ட அவனைச் சற்றும் தய காமல் மார்போடு அணைத்துக் கொண்டாள் குமுதினி.

தலை கோதிக் கொடுத்தாள்.

''புரியுது... மதி!'' என்றாள். ''மதி..! நான் உங்களுக் ஒரு மனைவியா மட்டுமில்லே. ஒரு தாய் போலவு இருப்பேன். இதுவரைக்கும் உங்களுக்குக் கிடைக்கா அன்பையும், பிரியத்தையும் வாரி வாரிக் கொடுப்பேன் என்றாள், தன்னை மறந்து.

''கஷ்டம்... குமுதினி! ரொம்பக் கஷ்டம்! என்னை மாதிரி ஆளோட - வாழ்க்கையின் எல்லாப் பரிமாண களையும் அறிவு ரீதியா ஆராய்கிற கூறு போட்டு அல என்னை மாதிரி ஆளோட வாழ்க்கை நடத்தறது கஷ்டம் என்றான் தமிழ்மதி.

குமுதினி சிரித்தாள்.

''அது உண்மைதான்! ஆனா, நான் சமாளிப்பேன் அவள் அவன் தன்னை வளைத்திருக்கிற கைப்பிடியி இருந்து நழுவாமலே சொன்னாள்.

''எழுத்தாளன்னு சொன்னா நிரந்தர வருமானம் இருக்காது.. குமுதினி! எப்பவுமே இப்படி வாழ்க்கை போகாது..''

''நோ பிராப்ளம்.! நான் நிரந்தர வேலையில இருக்கேனே! எப்ப வருமானம் வருதோ அப்ப விவரமா இன்வெஸ்ட் செஞ்சு வப்போம்,'' என்றான்.

''ஆமா! அதெல்லாம் எனக்குத் தெரியாது. குமுதினி! எனக்குத் தெரிந்ததெல்லாம் ஆ ஊன்னா ஜோல்னாப் பையத் தூக்கித் தோள்ல போட்டுக்கிட்டு ஊர் உலகம் சுத்தறதுதான்.''

''தாராளமா சுத்துங்க! எனக்கும் லீவு கிடைக்கும்போது நானும் வரேன். ரெண்டு பேரும் சுத்துவோம்.''

''ரியலி!''

''ஆமா! எனக்கும் அந்த விஷயத்துல ஆம்பளைங்க மேல ரொம்பப் பொறாமை உண்டு. இப்ப எனக்கு விடுமுறை கிடைக்கற நாட்கள்ல நானும் வரேன்.''

''அப்படி மட்டும் போனா நல்லாருக்கும் இல்லே! அப்புறம் குமுதினி நாம பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு,'' என்று இழுத்து எதிரில் அமர்த்திக் கொண்டான்.

அமர்ந்தாள்.

''குமுதா! நான் பொண்ணு கேட்டவுடனே உங்க வீட்ல கொஞ்சம் யோசிப்பாங்கன்னு நெனைச்சேன். உன்னை மையமா வச்சுத்தான் குடும்பமே இருந்துகிட்டிருக்கு.''

''ஆமா... மதி! எங்க வீட்ல அதைப் பத்தியெல்லாம் பேசவே இல்லை! முதல்ல சரின்னு சொல்லுங்கன்னு அம்மா சொன்னாப்ல..! அப்பாவும் மறு பேச்சுப் பேசலே..!'' என்றாள், கண்களில் ஆச்சரியம் பொங்க.



தமிழ்மதி சிந்தனையுடன் அவளைப் பார்த்தான். ''அதுக்குக் காரணம் என்ன தெரியுமா, குமுதா..? நம்ம மேல வச்ச நம்பிக்கை..!'' என்றான்.

அவளும் சிந்தனையுடன் சொன்னாள். ''ஆமா!''

''அதான் குமுதினி, நானும் விஜயனும் உட்கார்ந்து பேசினோம். ஒருவிதமா முடிவு பண்ணினோம்,'' என்றான்.

அவளும் ஆர்வமாகப் பார்க்கலானாள்.

''எப்படியும் நான் அடிக்கடி வெளியூர் போவேன். உனக்கும் துணை இருக்கணும். அதனால் நாம இந்த வீட்லயே தொடர்ந்து குடியிருக்கலாம். அளவா இந்தப் பக்கமா ரெண்டு ரூம் போடுவோம். நமக்கு இந்த நாலு அறைகளும்! காலனி வீடு ஆஃபீஸ்! நாம இந்தப் போர்ஷனுக்கு ஒரு நல்ல வாடகை கொடுத்தர்லாம்! உன் சம்பளத்தை நீ பிளான் பண்ணிக்க! உன் குடும்பத்துக்கு நீ எவ்வளவு குடுக்கணும்னு நினைக்கறயோ அதைத் தாராளமா செய்யலாம்,'' என்றான்.

''தேங்க்ஸ்!'' என்றாள். எழுந்து மறுபடியும் கட்டிக் கொண்டாள்.

அவனும் மெல்ல எழுந்து நின்றான். மெல்ல அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

''என் மதி..?'' என்றாள்.

''ம்..!''

''பெண்கள் யாருமே உங்களை அப்ரோச் பண்ணலையா?''

''நிறைய.. நிறையப் பேர் பண்ணினாங்க. ஒண்ணு அமெச்சூர்த்தனமா இருக்கும்! இல்ல, ஓவர் அட்மிரேஷனா... இருக்கும்! ரெண்டுமே வாழ்க்கைக்கு உதவாது. அதனாலயோ என்னமோ, நீ போட்ட சண்டை எனக்குப் பிடிச்சிருந்தது,'' என்றான்.

அவள் 'களுக்'கென்று சிரித்தாள்.

''ஆமா... இப்ப என்ன? ஐடியா மாறியிருக்கா?''

''தெரியலே. அது நாம குடும்பம் எப்படி நடத்தப் போறோம்கறதைப் பொறுத்து மாறும்னு நினைக்கிறேன்.''

''மதி! பயங்கரமான ஆளு நீங்க!'' என்று கலகலவெனச் சிரித்தாள்.

''தோல்வியை ஏத்துக்குங்க!'' என்றாள்.

''உன்கிட்டே தோத்துட்டேன். ஒத்துக்கறேன். ஆனா... சவால்ல தோத்தேனாங்கறதைக் காலமும் நம்ம வாழ்க்கையும் முடிவு பண்ணும்.''

''ம்..!'' என்று அவள் வியப்பாகப் பார்க்க,

''இப்பக்கூட முடிவெடுக்கலாம்! அது என் கூட எப்படிக் குடும்பம் நடத்தப் போறேன்னு கொஞ்சம் சாம்பிள் காட்டினேன்னா முடிவு செய்யலாம்.''

''ம்.. ஆசைதான்!'' என்றாள். மறுபடியும் அவன் கை வளையத்துள் சிக்கிக் கொண்டாள்.

''ஆமா..! ஆசைதான்.''

''அதெல்லாம்.. நீங்க கற்பனையிலேயே பார்த்துக்க வேண்டியதுதான்! நீங்கதான் நாவல்கள்ல காதலைப் பிழிஞ்சு பிழிஞ்சு எழுதுவீங்களாச்சே.''

''என்ன இருந்தாலும் அதெல்லாம் தியரிட்டிகல் நாலெட்ஜ்தானே.. கொஞ்சம் கவனிக்கலாமில்லே!''

''என்ன கவனிக்கணும்?'' - கேட்டாள்.

கவனித்தாள்.

கிறக்கமான குரலில் கேட்டான்.

''அப்புறம் நம்ம குடும்பத்தைப் பத்தின சண்டையை எப்ப வச்சுக்கறது?''



அவள் யோசிப்பவள் போல நடித்தாள். பிறகு சொன்னாள்.

''முதலிரவன்னைக்கு வச்சுக்கலாம்.''

''ஹேய்!'' என்று சிரித்தான். ''அன்னைக்கு வேற வேலையிருக்குப்பா!'' என்றான்.

அவள் அவன் முகம் பார்க்காமல் விட்டம் பார்த்து யோசிப்பவள் போல் நடித்தாள்.

''சரி.. அப்பத் தேனிலவுப்ப வச்சுக்கலாம்,'' என்றாள்.

மீனாட்சியம்மாளின் குரலும், சுந்தரலிங்கத்தின் குரலும் கேட்க, அவன் விலகினான்.

அறை வாசல் வரை சென்றவள், திரும்பி வந்தவள், மெல்லிய குரலில் சொன்னாள். இல்லை, மிரட்டினாள்.

''ஹல்லோ... மிஸ்டர் மதி! பெரிய புயல் ஒன்று உங்க வாழ்க்கையில வீசப் போகுது. தயாராயிருங்க! குடும்ப வாழ்க்கையில ஒரே பெண்ணோட வடிவத்திலே எப்படித் தாய், காதலி, மனைவி, தோழின்னு இத்தனை கேரக்டரையும் பார்க்கப் போறீங்கன்னு இனிமே உங்களுக்குப் புரியும், எழுத்தாளரே.. கெட் ரெடி..!'' என்று சொல்லி விட்டுப் போனாள்.

அவள் போன பாதையை அவன் நெகிழ்ந்து போய்ப் பார்த்துக் கொண்டு நின்றான்.



33

''டீ.. கீதா! இங்க வாடி!'' என்று வாயிலோரமாக நின்ற மீனாட்சியம்மாள் குசுகுசுவென்று அழைத்தது கேட்ட தமிழ்மதி திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

''இருக்கட்டும் விடுங்கத்தே!'' என்றான்.

''இல்ல.. மாப்பிளே!'' என்று விளக்கம் சொல்ல,

''அம்மா.. இரும்மா..! மாமா.. உப்புமா செய்யறாரு.. பாக்கறேன்,'' என்று சிரித்தாள் கீதாலட்சுமி.

அம்மாவின் கண்களில் மேலும் கோபம் தெரிய,

''இதோ.. வர்றேன் மாமா!'' என்று கிளம்பினாள்.

போகும்போது, ''என்னம்மா.. நீ! தமிழ்மதி தயாரித்த உப்புமான்னு பத்திரிகைக்கு ஸ்கூப் குடுக்கலாம்னு பாத்தேன்,'' என்று முனகிக் கொண்டே அவள் நகரவும் தமிழ்மதி தன் மனைவி குமுதினியைப் பார்த்துச் சிரித்தான்.

''நான் உப்புமா செய்யறதென்ன... அவ்வளவு பெரிசா, கும்ஸ்...!'' என்றான்.

''என்.. மதி! அழகான பேரை இப்படிக் கும்ஸ்ன்னு கிம்ஸ்ன்னு கொலை பண்றீங்க?'' என்று சிரித்தாள் குமுதினி.

''ம்.. சரி..! விடு! குமுதான்னே ராகமே பாடறேன்!'' என்றான் சோகமாக.

குமுதினி இயல்பாக அவன் தலையைக் கலைத்து விட்டுச் சிரித்தாள்.

''என்ன சொன்னீங்க?'' என்றாள்.

''இல்லே! நான் உப்புமா தயாரிக்கறதென்ன... பெரிய விஷயமா?''

''அது தெரியலை! ஆனா... நாங்க சாப்பிடப் போறோமே, அது பெரிய விஷயம்!'' என்று அவள் கலகலவெனச் சிரிக்கவும், அவன் பார்வை கிறக்கப் பார்வையாக மாறியது.

''ஹேய்! வேண்டாம்!'' என்று அடிக்குரலில் சிரித்தான்.

''என்... என்ன செய்வீங்களாம்?'' என்று அவள் சீண்டவும்,

''ஒன்றுமோ! இன்னைக்கு உப்புமா ஆன மாதிரித்தான்!'' என்று நெருங்கி இழைந்தான்.

சற்று நேரம் கொடுக்கல் வாங்கலுக்குப் பிறகு.



''போதும்! இனிச் சமையலைக் கவனிங்க!'' என்றாள், குமுதினி.

தூய்மை செய்து கொண்டு வந்து மறுபடியும் உப்புமாப் பாடத்தை ஆரம்பித்தார்கள்.

அன்றைக்கு இரவு உணவுக்கு நிலைய இயக்குநரை அழைத்திருந்தார்கள்.

குமுதினி இரண்டு மூன்று ஐட்டங்கள் ஏற்கெனவே செய்து வைத்துவிட்டாள்.

அப்படி இப்படி என்று ஏழெட்டுப் பேருக்கு மேல் ஆகி விடும் என்று அவளுக்குத் தெரியும்.

கொத்தமல்லிப் பிரியாணி, ராய்த்தா, சப்பாத்தி குருமா, இட்லி சாம்பார் என்று வகைகள் செய்திருந்தாள்.

அப்போதுதான் தமிழ்மதி தானும் சமையல் செய் கிறேன் என்று துவங்கினான்.

''குமுதா! ஈஸியா டிபன் ஐட்டங்கள் கத்துக்கறேன். நீ நைட் ட்யூட்டி பாத்துட்டு லேட்டா வரும்போது நானும் உனக்குச் சூடா டிபன் தரலாமில்லே...!'' என்றான்.

வீட்டில் இருந்தால் வேலைகளைப் பங்கு போட்டுக் கொண்டான்.

''குமுதா! முன்னேயெல்லாம் பெண்கள் வீட்டில் இருந் தார்கள். ஆண்கள் வேலைக்குப் போனார்கள். வீட்டுப் பொறுப்பைப் பெண்கள் பார்த்துக் கிட்டாங்க. ஆனா... இப்ப அப்படியில்லே! ரெண்டு பேரும் வேலைக்குப் போகும்போது ரெண்டு பேரும் வேலைகளைப் பங்கு போட்டுக்கறதுதான் நியாயம்!'' என்பான்.

திருமணம் முடிந்து ஒரு வாரம்தான் ஆகியிருந்தது.

''எங்காவது போயிட்டு வாங்களேன்,'' என்றான் விஜயன்.

"வேண்டாம்பா! கொஞ்ச நாளாவது எனக்கு இந்தக் குடும்ப வாழ்க்கை பிடிபடட்டும். அப்புறம் போய்க்கறோம்," என்றாள் தமிழ்மதி.

குமுதினி புரிந்து கொண்டாள்.

ஒரு மாதம் மட்டும் இந்த வீட்டில் இருந்துவிட்டு மேலும் அறைகள் இரண்டு தயாராகிறவரை காலனி வீட்டில் இருப்பதென்று ஏற்பாடு.

"இத பாரு! இவ்வளவு தண்ணீர் போதுமான்னு பாரு!" என்று கேட்டான்.

"மதி! ரொம்ப சிம்பிள், மதி! ஒரு கப் ரவைக்கு மூன்று பங்குத் தண்ணீர்...! தாளிப்பு செய்து இந்தத் தண்ணீரை ஊத்திட்டா... கொதி வரும்போது ரவையைப் போட வேண்டியதுதான்," என்று விளக்கினாள். அதே கையோடு கிச்சடிக்கு, பட்டண ரவைக்குத் தண்ணீரின் அளவு வேறுபடுவதையும் விளக்கினாள்.

"பரவால்லையே! சமையல் கூட சுவாரசியமாத்தான் இருக்கும் போல இருக்கு!" என்றான்.

"மதி..! எதையுமே ரசிச்சச் செஞ்சா வாழ்க்கையே சுவாரசியம்தான்..!" என்றாள் குமுதினி.

"குட்... தட்ஸ் வெல் செட்!" என்று பாராட்டிக் கொண்டான்.

நிலைய இயக்குநர் வந்தவுடனே இன்னும் கூடக் கலாட்டவாக இருந்தது.

"மதி! நீ இப்படி வந்து எங்க வானொலிக் குடும்பத்துலயே இணைஞ்சக்குவேன்னு நான் நினைக்கவே இல்லை!" என்று கேலி செய்து சிரித்தார்.

"நான்தான் உங்களுக்கு தேங்க் பண்ணணும்!" என்றான் தமிழ்மதி.



"தமிழ்! நம்ம கலாசாரத்தில் இருக்கற நிறைய விஷயங்கள் ரொம்ப அற்புதமானது. ஆனா.... என்ன, எல்லாத்தையும் சடங்குகளாக மாத்திட்டாங்க! அதனால இளைஞர்களுக்கு அது பத்தின சந்தேகங்கள் வருது..."

"ஆமா... சார்!"

"உன்னை மாதிரி அறிவார்ந்த இளைஞர்கள்தான் அதுக்குச் சரியான முறையில பொருள் கண்டு பிடிக்கச் சொல்லணும்."

"செய்யணும் சார்!" என்றான்.

"பரவாயில்லை! ஒரு விதமான சவால்ல ஆரம்பிச்ச... சரண்டர்ல முடிஞ்சிருக்கு..." என்று சிரித்தார்.

சற்று நேரம் அளவளாவி விட்டு அவர் கிளம்ப, குமுதினியின் குடும்பமும், விஜயனின் குடும்பமும், குமரவேலின் குடும்பமும் வந்து விட்டுப் போனார்கள்.

எல்லாருடனும் நேரம் செலவழித்து விட்டுச் சாப்பிட வைத்து அனுப்பிய பிறகு.

"வா.. குமுதினி! நாம சாப்பிடலாம்," என்று அமர்ந்தார்கள்.

அப்போது தமிழ்மதி அவள் தட்டில் இருந்து கொஞ்சம் அள்ளி வாயில் போட்டுக் கொண்டு, பிறகு சொன்னான்.

"இப்பத்தான் வீடு மாதிரி இருக்கு இல்லே! இதையெல்லாம் ரசிச்சு அனுபவிக்கணும்னு தோணுச்சு! அதான்.. வெளியூர்ப் பயணம் தள்ளிப் போட்டேன்," என்றான்.

"பேசாம... பங்கஜக்கா வீட்டுக்குப் போய் நாலு நாள் இருந்துட்டு வருவோமா?" என்றாள் குமுதினி.

"அது கூட நல்ல ஐடியாதான்! ம்...! பங்கஜக்காவைப் பத்திச் சொன்னவுடனே ஞாபகம் வருது.. துர்காவை எனக்குக் கல்யாணம் பண்ணலாம்னு பேச்சு வந்ததே...

அப்ப.. நான் உன்கிட்டே வந்து ஆலோசனை கேட்டேன். ஞாபகம் இருக்குதா?''

''ம்...!''

''ஆனா அதுக்கு முன்னாலேயே பதில் ரெடி பண்ணி வச்சிருந்தேன். ஆனாலும் உன் ரியாக்ஷன் என்னன்னு பாக்கணும்னு நெனைச்சேன் போல இருக்கு... அதான். அதுக்கு விஜயனும், மஞ்சுளாவும் என்ன கேலி தெரியுமா?'' என்று சிரித்தான்.

குமுதினியும் புன்னகைத்தாள்.

''பங்கஜக்காவையும் குறை சொல்ல முடியாது. இப்பத்தான் கொஞ்சம் ஒட்டறீங்கன்னவுடனே எப்படி யாவது உறவைத் தக்க வைக்கணும்னு...''

தமிழ்மதி பெருமூச்சு விட்டான். பிறகு, ''எல்லார் மேலயும் எனக்கு உள்ளூரக் கோபம் இருந்திருக்கும் போல இருக்கு! உன்னைப் போல விஷயங்களை ஜீரணிக்கிற பக்குவம் இல்லைன்னு நினைக்கறேன். ஒரு சமயம் குமாரண்ணா சொன்ன மாதிரி அப்படியெல்லாம் நடக்க லேன்னா... நான் தாமு மாமாகிட்டே போயிருக்க மாட் டேன். எழுத்தாளனாகி இருக்க மாட்டேன். அப்புறம் நீ கிடைச்சிருக்க மாட்டாயோ என்னமோ...'' என்றான்.

வாஷ்பேசினில் கை கழுவிக் கொண்டிருந்த அவளைப் பின்புறமிருந்து அணைத்துக் கொண்டான்.

''சொல்லு! எப்ப நீ என்னை நேசிக்க ஆரம்பிச்சேன்னு சொல்லு...!'' என்றான்.

அவன் கன்னம் தன் கன்னத்தில் இழைய இடம் கொடுத்துக் கொண்டே சொன்னாள்.

''தெரியலே! ஒரு வேளை நீங்க தண்ணி சுமந்த கதையை உருக்கமா விஜியண்ணாகிட்டே சொல்லிகிட்



டிருந்தது காதுல விழுந்த அந்தக் கணத்துலயோ...!'' என்றாள்.

''ம்.. அனுதாபமோ...!'' என்றான் கரியத்தில் கண்ணாக...

''இருக்கலாம்! ஆனா.. என்னன்னா, சின்ன விஷயத் துக்கெல்லாம் பொறாமைப் பட ஆரம்பிச்சுட்டேன். தீராகூட கலகலன்னு பேசினா...! ஒருவேளை தூர்காவைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்குவீங்களோன்னு பயம்! அதான் அவங்க ஆரம்பிக்கறதுக்கு முன்னாலே நானே சொல்லிட்டேன்.''

''ம்..! அப்ப என்னைப் பத்தி நானே கொஞ்சம் புரிஞ்சுக்க ஆரம்பிச்சேன்னு நினைக்கிறேன். வேணும்னு தான் எப்படி மறுக்கலாம்னு உன்கிட்டே ஆலோசனை கேட்டேன்,'' என்றான். குபீரென்று சிரித்தான்.

''நம்ம ரெண்டு பேருமே விஜயனுக்குத்தான் ரொம்பத் தேங்க்ஸ் சொல்லணும்,'' என்றான்.

''ஆமா! அண்ணா மட்டும் ஒரு சின்ன ''ப்ளே'' பண்ணி யிருக்கலேன்னா.. நாம ரெண்டு பேரும் இன்னுமே கூட யாரு ஆரம்பிக்கறதுன்னு நினைச்சு முழிச்சுகிட்டிருப் போம்னு நினைக்கறேன்...'' என்றாள் குமுதினி.

''சென்னை போகணும்னெல்லாம் நினைக்கவே இல்லை. ஆனா... உன்னைச் சந்திக்கிற துணிவில்லாம கொடைக்கானல் போய் ஒரு கிராமத்துல ஒளிஞ்சுக்கிட்டது நிஜம். இப்பக் கூட அடுத்த மாசத்துல நாம அங்கதான் தேனிலவுக்குப் போறோம்.''

''எதுக்காம்?'' என்றாள்.

''இத பார்றா! தேனிலவுக்கு எதுக்குப் போவாங்க! ஆனா... நான் எந்தெந்த இடத்துல பைத்தியக்காரன் மாதிரி

உன் நினைப்போட அலைஞ்சுகிட்டிருந்தேன்னு காட்டணும்...''என்றான்.

அவள் பெருமையுடன் சிரித்தாள்.

''மதி! நான் இப்ப ரொம்பக் கர்வத்தோட இருக்கேன்!'' என்றாள்.

''இரு இரு! எனக்கு அதைப் பத்தி ஒரு கவலையும் இல்லே! ஏன் தெரியுமா? நிலைய இயக்குநர் சொன்ன மாதிரி... ஒரு சவால்ல இருந்து சரணாகதிக்கு வந்திருக்கேன்,'' என்றான்.

அவளது அந்தப் பதிலுக்குத் தேவையான பரிசுகள் அவனுக்குக் கிடைத்தன.

''மதி! குடும்பம்ன்னா என்ன தெரியுமா? ஒரு அமைப்பு! இரத்த உறவுகளாலான நெருங்கிய பந்துக்கள் வாழற அந்த அமைப்பில் ஈகோவுக்கு இடமில்லை. உறவுகள் தங்களோட ஈகோவை விட்டுக் கொடுத்து... ஒருவர் மற்றவரோட நன்மைக்காக வாழும்போதுதான் குடும்பம் பலப்படுது...''

''உண்மைதான், கண்ணம்மா! உங்க வீட்டைப் பொறுத்த வரைக்கும் கூட எல்லாரும் உன்னை எக்ஸ்ப்ளாய்ட் பண்றதாத்தான் நான் நினைச்சேன். ஆனா... எல்லாரும் உன்னை நெஞ்சில வச்சுப் பூஜை செய்யறாங்கன்னு புரிஞ்சப்பத்தான் லேசா யோசிக்க ஆரம்பிச்சேன்...''

''ம்.. யோசிப்பீங்களா? அதெல்லாம் கூட உங்களுக்குச் செய்யத் தெரியுமா?'' என்று அவள் சிரிக்க,

''ச்சே! ஒரு எழுத்தாளனைப் பாத்து அவன் ஒய்ஃப் கேக்கற கேள்வியைப் பார்றா! ஒண்ணு வேடண்ணா சொல்ல



லாம்! நீ என் வாழ்க்கையில வந்ததுக்கப்புறம் வேண்ணா.. எனக்குச் சுயசிந்தனை இல்லாமப் போச்சு...!''

அவள் வாஞ்சையாக அவனைப் பார்த்தாள். ''ஆமா! எப்பவும் உன் சிந்தனைகள், இதுல மஞ்சுளாவுக்கு வேற ஒரு ஜாலி! என்னை வச்சு... விஜிகிட்ட கலாட்டா! பாருங்க...! உங்க ஹீரோ இந்தக் குமுதினிகிட்டே விழுந்தான் போறாருன்னு...''

குமுதினி சிரித்தாள்.

''ஆனா.. ஒரு விஷயம்! எங்க பேரண்ட்ஸ் அவ்வளவு லேட்டான காலத்தில என்னைப் பெத்துட்டாங்களேன்னு பச்சாதாபம்.''

''மதி! நடந்தது போனதெல்லாம் நம்மை மீறின விஷயம்! ஆனா... நடக்கப் போறதை நாம தீர்மானிக்கலாம்,'' என்றான்.

''ஆமா! எப்பவும் போல எனக்கு செக்ரட்டரி விஜயன்! நீ உன் வேலைகளைத் தொடர்ந்து செய்யலாம். நான் என் உலகத்துல தொடர்ந்து இருப்பேன்.''

குமுதினி எழுந்து நின்றாள். தன் கணவனை மார்போடணைத்துக் கொண்டாள். அவன் தலை கோதி விட்டாள். பிறகு கேட்டாள்.

''மதி..! இப்பவும் உங்க ஐடியா மாறலையா?''

''பெருசா மாறிடலை குமுதினி! ரெண்டு உதாரணம் சொல்றேன் கேளு! உங்கம்மா... மாதிரி வாயில்லாப் பூச்சியா எக்ஸ்பிளாயிட்டேஷனுக்கு இடம் கொடுக்கக் கூடாது. எங்கண்ணி மாதிரி சாகசம் பண்ணிக் கணவனைக் கைக்குள்ள போட்டுக்கக் கூடாது. இந்த மாதிரி விஷ

யங்கள் பத்தி முதல்ல எனக்கு ஒரு வெறுப்பு இருந்தது. ஆனா... ஒரு நாள் நீ சொன்னயே! அந்த மாதிரி... இதுக்கெல்லாம் காரணம் பொருளாதாரச் சுதந்திரம் இல்லாமப் போனதுதான். அப்படி இருக்கலாம்னு யோசிச்சதுக்கப்புறம் உங்க அம்மா மேலயும் சரி... எங்கண்ணி பேர்லயும் சரி... எனக்கு ஒரு அனுதாபம்தான் தோணுச்சு...! அப்ப இருந்து என் சிந்தனைகள்ல ஒரு மாற்றம் ஏற்பட்டது."

குமுதினி அவன் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் இதழ் பதித்தாள்.

"ஆனா இப்ப பொருளாதார சுதந்திரத்தாலேயே கூட குடும்பங்கள் குறைபடுதோன்னு எனக்குக் கவலையாருக்கு மதி! இல்லேன்னா... நம்ம கலாசாரத்துல இப்படி முதியோர் இல்லங்கள் வந்திருக்கக் கூடாது... மதி!"

"அது நம்ம கலாச்சாரத்தால மட்டும் இல்லே, குமுத்ஸ்! மேலை நாட்டுக் கலாச்சாரத்தோட ஊடுருவல்! சௌகரியங்கள் அதிகமாக ஆக... பொறுப்புக்களைச் சந்திக்கப் பயப்படறோம்...! பெரியவங்களைச் சுமையா நினைக்கிறோம்!"

"ஹைய்யோ! மதி குடும்பங்களுக்கு ஆதரவாப் பேச ஆரம்பிச்சுட்டாங்க!" என்று சிரித்தாள் குமுதினி.

"ஹேய்! என்ன மக்கட்டமா பேசறே! குடும்பமே ஏற்படுத்திக்கிட்டாச்சன்னா... என்ன அர்த்தம்?"

"அதானே! ஆனா என் மனசு எப்பவுமே ஒரு விஷயம் சொல்லிக்கிட்டே இருந்துச்சு.. மதிக்குப் பெண்கள் மேலே இருக்கறது வெறுப்பில்லே! கவலைன்னு!"



"ஆமா! குமுதினி! பெண்கள் தங்களைத் தாங்கள் நேசிக்கப் பழகிக்கணும்! எதுக்காக ஹஸ்பெண்ட்கிட்டே அஃபெக்ஷன் குடுங்கன்னு யாசிக்கணும்? ஒவ்வொரு பெண்ணும் தான் ஒரு முழுமையான மனுஷின்னு புரிஞ்சுகிட்டா தன்னைச் சுத்தியிருக்கறவங்களை இயல்பா ஏத்துக்குவா...! "ஐயா...! அன்பைக் குடுங்க!"ன்னு யாசிக்க மாட்டா! அது மட்டுமல்ல, குமுதினி! பெண்களுக்கு இன்னொரு குணமும் இருக்கு! வார்த்தைகளுக்கு விதவிதமா அர்த்தம் கற்பிக்கறது. அப்புறம், ஆஹா... இப்படிச் சொல்லிட்டாங்களேன்னு அலைபாயறது. அது மட்டுமில்ல.... கொஞ்சம் இடம் குடுத்தா எல்லாத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள்ளே வைக்கணும்னு நினைக்கறது... ஏன்... வாழ்க்கையை இயல்பா எடுத்துகிட்டு வாழக் கூடாது? எங்கண்ணியையே எடுத்துக்க. என்னையும் ஒரு மகனா ஏத்துகிட்டு இயல்பா இருந்திருந்தாங்கன்னா.. எவ்வளவு நல்லா இருந்திருக்கும். தன்னோடதுன்னா உயிரையே கொடுக்கற பெண் ஏன் கணவனுடைய உறவுகளையும் தன்னோடதா நினைக்க மாட்டேங்கறா...! அதுதான் விவகாரமே!" என்றான்.

"மதி! நீங்க கவலைப்பட வேண்டாம்! நான் எல்லார்கிட்டயும் ஒன்னு போலத்தான் இருப்பேன். என்னா.. எதுல வேண்ணா கலப்படம் செய்யலாம். அன்பிலே கலப்படம் செய்யக் கூடாதுன்னு நினைக்கறவ... நான்."

"தேங்க்ஸ்... தங்கம்! எனக்குத் தெரியும்! உன்னோட சுயநலமில்லாத அன்புதானே என்னைக் கவிழ்த்தது!"

"அப்ப ஆள் மோசம்கறீங்களா?"

"ம்..! எதுக்கும் ஒரு தடவை செக் பண்ணிரலாமா?" என்றான். அவளைச் சற்றே விலக்கி நிறுத்தி மேலிருந்து

கீழாக ஒரு பார்வை பார்த்தான். அந்தப் பார்வையில் தெரிந்த இரக்கப் பார்வையில் இன்னும் ஏதோ விஷயங்களும் கலந்திருக்க,

''சரியான வில்லன் நீங்க!'' என்று செல்லமாக 'நாலு' வைத்தாள் குமுதினி.

மகிழ்ச்சியாக வாங்கிக் கொண்டான்.

''ம்... இப்படி அடிச்சு மிரட்டி... திருத்தத்தான் இதுவரை ஆள் இல்லாம இருந்துச்சு...'' என்றான் தமிழ்மதி.

அவள் அவன் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள்.

''அப்ப என்னை என்ன மிரட்டல் பேர்வழிங்கறீங்களா?''

''இல்லடி... பொண்ணே! நீ நிலா...! முதன் முதலா உன்னைப் பார்த்ததிலே இருந்தே நீ என்னைத் தொல்லை பண்ணிகிட்டிருக்கே.. தெரியுமா! ஏன்னா நீ என் கண்ணுக்குள் பாய்ந்த நிலவு! கருத்துக்குள் நிறைந்த கனவு...!'' என்றான்.

அவள் கலகலவெனச் சிரித்தாள்.

''அதென்ன.. பாய்ந்த நிலவு...!''

''ஆமா...! பாயுமொளி நீயெனக்குன்னு பாரதியார் பாடலே! அது மாதிரி.. எனக்குள் பாய்ந்த நிலவு...! குளிர்ச்சி..! காதல்..! அன்பு.. நேசம்!'' என்று அவன் மேலும் மேலும் பேச, அவள் காதல் பார்வையைப் பாய்ச்சி நின்றாள்.

அவன் மீண்டும் சொன்னான். ''என் கண்ணுக்குள் பாய்ந்த நிலவு!'' என்று. அவள் மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டாள். அவன் வாழ்வில் குளிர் நிலவாய் அன்பைப் பொழிய மனம் பூத்து நின்றாள்.